
# ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய
# ஸ்ரீ காயத்ரி பீடம்



University of Jaffna
235.305
MUR
161538(AR)

கும்பாபிஷேக சிறப்புமலர் - 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161538

# ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய
# ஸ்ரீ காயத்ரீ பீடம்

2007

235:305
MUR
AR

## கும்பாபிஷேக சிறப்பு மலர்
## 1996

ARCHIVES

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
2005
PERIODICALS DIVISION

ஆசிரியர்

ஆர்.கே. முருகேசு ஸ்வாமிகள்

161538

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

ஸ்ரீ காயத்ரீ பீடம்
"ஸ்ரீநகர்"
82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ்
நுவரெலியா
இலங்கை

University of Jaffna
161538
Main Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


பக்கம்

1. டாக்டர் பண்டிட் ஸ்ரீ கண்ணையா யோகியின் வாழ்த்துரை ........ 1-2
2. ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய வரலாறு ........ 3-4
3. மனிதனைத் தெய்வமாக்கவல்ல ஸ்ரீ காயத்ரீ மந்திரம் ........ 5-7
4. காயத்ரீ ஜபத்தின் ப்ரபாவம் (சில மஹான்களின் அநுபவங்கள்) ........ 8-11
5. சக்தி வாய்ந்த போட்டோ யந்திரங்கள் ........ 12
6. காயத்ரீ ........ 13
7. காயத்ரீ மகிமை ........ 14
8. காயத்ரி உபாச்னை ........ 15-17
9. காயத்ரீ - விஞ்ஞான விளக்கம் ........ 18-21
10. மகா மிருத்யுஞ்ஜய மந்திரம் ........ 22-23
11. மகரிஷிகளின் மர்மவாசம் ........ 24-26
12. ஆன்ம விஞ்ஞானம் ........ 27-29
13. தீக்ஷா விஞ்ஞானம் ........ 30-33
14. கர்ம விஞ்ஞானம் ........ 34-36
15. பராசக்தி விஞ்ஞானம் ........ 37-38
16. கல்ப விஞ்ஞானம் ........ 39-40
17. புனர் ஜன்ம விஞ்ஞானம் ........ 41-43
18. ஆண்பெண் விஞ்ஞானம் ........ 44-46
19. மனப்பொருளாக்கள் விஞ்ஞானம் ........ 47-48
20. அஞ்சன விஞ்ஞானம் ........ 49-52
21. யந்திர விஞ்ஞானம் ........ 53-55
22. மணிபூரக விஞ்ஞானம் ........ 56-58
23. மந்திர விஞ்ஞானம் ........ 59-61
24. சூக்ஷ்ம யாத்திரை விஞ்ஞானம் ........ 62-64
25. யாக விஞ்ஞானம் ........ 65-67



University of Jaffna
161538
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மரண விஞ்ஞானம் ........ 68-69
27. சகஸ்ராார சக்ர விஞ்ஞானம் ........ 70-72
28. உணர்வின் ஆய்வு ........ 73-74
29. யக்ஞ சிகிச்சா ........ 75-76
30. பெருவாழ்வு முயற்சிக்குத் துணை! ........ 77-80
31. மனித காந்த சிகிச்சை ........ 79-80
32. உள் மனமும் புற மனமும் ........ 81-83
33. தோட்டக்கலையில் மனோ சக்தி ........ 84-85
34. இயற்கையின் முதற்பொருளாம்
அண்ட ஆகாயத்தின் தன்மை? ........ 86-87
35. இறந்தவர் வருகிறார் ........ 88-90
36. விரும்பும் போது கனவு காணல் ........ 91-92
37. பாவங்களை இங்கே அகற்றுக ........ 93-94
38. மானதத் தந்திக்குப் பரீட்சை ........ 95-96
39. கடவுள் எங்கே இருக்கின்றார் ........ 97-98
40. ஆன்மாவும் சமூக அமைப்பும் ........ 99-100
41. நிர்வாண சோதி ........ 101-102
42. உண்மை ஞானத் திறவு கோல் ........ 103-104
43. சகுன இரகசியம் ........ 105-109
44. நறுமணங்களின் இரகசியம் ........ 110-111
45. உபவாச மகிமை ........ 112-114
46. யந்திரங்களின் சக்திக் கிரணங்கள் ........ 115-117
47. தந்த்ர சாதனைகள் ........ 118-121
48. முற்பிறவியை அறியும் முறை ........ 122-124
49. பிறர் மனம் அறிதல் ........ 125-127
50. மௌன விஞ்ஞானம் ........ 128-130
51. சிறிய பிரமிதங்கள் ........ 131-133
52. சூரிய சிகிச்சை ........ 134-136
53. அன்பின் அரிய சக்தி ........ 137-138
54. மன ஆகாயத்தின் மாமர்மம் ........ 139-148
55. பிரபஞ்சம் இன்பமயம் ........ 149-156
56. கடவுள் பியாங்கு ........ 157-178
57. விண்ணுலக சக்திகள்
மண்ணுலகுக்கு வருகின்றன ........ 179


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் நமோ பகவதே ஏக தன்ஸ்ராய ஹஸ்தி முகாய லம் போதராய கணேஸாய நமஹ

கணேஸ காயத்ரி

ஓம் ஏகதன்ஸ்ராய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி, தன்னோ புத்தி ப்ரசோதயாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

என்னை பிள்ளையாக ஈன்ற அன்னை, பிதா இருவருக்கும் முதல்வணக்கம் கூறி, அடியேனை ஆட்கொண்டு ஆன்ம ஞானம் பெற வழிகாட்டி வரும் ஸத்குரு மூர்த்தியின் திருவடிகளுக்கு பலகோடி வணக்கங்கள் செய்து, ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம், ஸ்ரீ காயத்ரி பீட கும்பாபிஷேக சிறப்பு மலரை வெளியிடுகிறேன்.

ஆன்ம ஞானம் பெறஅருள்தாகம் கொண்டு பாரத நாட்டில் இமயம் முதல் குமரி வரை இறையருளைப் பெற வழிகாட்டக்கூடிய தகுந்த குருவைத் தேடி, அலைந்தேன். பூர்வ புண்ணியத் தவப்பயனாய் ரிஷிப் பரம்பரம்பரையின ரோடு தொடர்பு கொண்டு, மாபெரும் தவ ஆற்றலைப் பெற்ற, அருந்தவ யோகி எனக்கு ஞான குருவாக அமைந்து, அவர் கண்காணிப்பில் பல்லாண்டு காலம் காயத்ரி உபாசனை செய்து, அகிலமனைத்தையும் ஆக்கி,அமைந்தளிக்கும் ஆதி ஸக்தி அன்னை காயத்ரி தேவியின் பரிபூர்ண அனுக்ரக கடாக்ஷத்தைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றேன். அன்னை காயத்ரி தேவியின் பேரருளால், மண்ணுலகில் மறைமுகமாய் வாழ்ந்து வழிகாட்டி வரும் மகிரிஷிகள், முனிவர்கள் ஆகியோரின் தொடர்பு கிட்டி, அவர்களின் அருளாசியும் கிடைக்கப் பெற்றது.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற ஆன்றோரின் வாக்குப்படி, இம்மண்ணுலக மக்கள் மாண்புற அன்னை காய்த்ரி தேவியின் மந்திர மகிமையை போதிக்க விரும்பி, தியானத்தில் ஆழ்ந்தபோது, அன்னையின் ஆணையும், மகரிஷிகளின் அருளாசியும்கிட்டி, 30 ஆண்டுகளுக்கு முன் என் அருள் பணியை ஆரம்பித்து, 1974ம்ஆண்டு, நுவரெலியாவில் ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் உதயமாகி,புனித நர்மதா நதியில் கண்டெடுத்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, 1986ஆம் ஆண்டு மகரிஷி ஒருவரின் உத்தரவின் பேரில்அன்னை காயத்ரி தேவியும் பிரதிஷ்டை செய்து, இன்று உலகில் பல பாகங்களிலுமுள்ள லட்சக் கணக்கான மக்களுக்கு, ஜாதி, மத, இன, பேதமின்றி ஆன்மீக சேவை செய்து வருவது அனைவரும் அறிந்த உண்மை.

மகரிஷிகளின் கண்காணிப்பில் இயங்கி வரும் ஸ்ரீ இலங்காதீஸ்வரர்ஆலயம், ஸ்ரீ காயத்ரி பீடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு, ஸத்குரு மூர்த்தியிடமும், மகரிஷிகளிடமும் கற்று பெற்ற ஆன்ம இரகசியங்களையே கட்டுரைகளாக, பாடங்களாகத் தொகுத்து இந்த கும்பாபிஷேக சிறப்பு மலரை, மகரிஷிகளின் அருளாசியோடு வெளியிடுகிறோம்.

உலகமாம், துயரக் கடலைத் தாண்டி பேரானந்தமெனும் அக்கரைக்கு அழைத்துச் செல்லும் படகு போன்றது இம்மலர்.இதை வாசிக்கும் ஒவ்வொருவரும், நிச்சயம் இறையின்பத்தைப் பெற்று பிறவா பேரின்ப பெருநிலையை அடைவார்கள்.

ஓம் சாந்தி

இங்ஙனம்

**ஆர்.கே. முருகேசு சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கண்ணைய யோகி

நீலகிரி, அடர்ந்த காட்டில் அமைந்துள்ள அகஸ்தியர் ஆஸ்ரமத்தில் அகஸ்திய மகரிஷியோடு 14 வருடங்கள் அகஸ்தியர் மகரிஷியிடம் ஆன்ம சாதனை பயின்று மாபெரும் தவ ஆற்றலைப் பெற்றவர். முருகேசு ஸ்வாமி அவர்களின் குரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் பண்டிட் ஸ்ரீ கண்ணையா யோகியின் வாழ்த்துரை

காயத்ரீ மிகப் பழங்கால முதல் ரிஷிகளின் சக்திக்கு ஆதாரமான சாதனையாயிருந்து வருகிறது. ரிஷிகளின் ஆக்கங்களின் மறைவில் இந்த உண்மை பொதிந்திருக்கிறது யோக வாசிஷ்டத்தின் ஒவ்வொரு உபதேசத்தின் மறைவிலும் காயத்ரீயின் தன்மை அடங்கியிருக்கிறது.

புற்றால் மூடப்படும் அளவுக்குத் தவத்தைச் செய்த வால்மீகி முனிவருக்கு காயத்ரீ தத்துவம் தெரியாமல் இருக்குமா? நாரதர் வால்மீகிக்கு ராம மந்திரத்தை மட்டுமா, ராம காதையை மட்டுமா உபதேசித்தார்? இல்லாவிட்டால் வேடுவ இனத்தவரான வால்மீகி மிகப்பெரிய ராமாயணத்தைச் செய்திருக்க முடியுமா? அவர் ராம காதை செய்தது காயத்ரீ சக்தியால்தான். வேறு வகையில் அவருக்கு ராமாயணம் செய்யும் திறமை வந்திருக்க முடியாது.

வால்மீகி 24 ஆயிரம் சுலோகங்களில் ராமாயணம் பாடியிருக்கிறார். தற்போதைய பல பதிப்புகளில் இக்கணக்குக் கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் அந்நிய ஆட்சியின்போது நடந்த இடைப்பிரிவு, இடைச்செருகல். இது எல்லா நூல்களிலும் காணக்கிடைக்கிறது. மூலமான வால்மீகி ராமாயணம் 24 ஆயிரம் சுலோகங்களைக் கொண்டதுதான்.

வால்மீகி ஏன் 24 ஆயிரம் சுலோகங்களில் ராமாயணத்தைச் செய்தார் என்பதில் ஓர் ரகசியமுண்டு. அவர் காயத்ரீ மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் ஓராயிரம் சுலோகமாக 24 எழுத்துகளுக்கு 24 ஆயிரம் சுலோகங்களைச் செய்தார் என்பது ஆன்றோர் கருத்து. காயத்ரீ மந்திரத்தின் 24 எழுத்துகள் முன்னுள்ள வ்யாஹ்ருதிகள் இல்லாமல் — தத்ஸவிதுர் வரேண்யம் பர் கோ தேவஸ்ய தீமஹி யோ, யோ ந; ப்ரசோ தயாத் — என்பவையாகும்.

இந்த ஒவ்வொரு எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு ஒரு சுலோகமியற்றி, பின் அதைத் தொடர்ந்து பல சுலோகங்களை இயற்றினார். "இந்த காயத்ரீ ராமாயணம்" என்பது காயத்ரீயின் 24 எழுத்துக்களை முதன்மையாகக் கொண்டு அமைந்த சுலோகங்களின் தொகுப்பாகும்.

இந்த சுலோகங்களின் தொகுப்பை "காயத்ரீ ராமாயணம்" என்று சொல்லுவதற்குக் காரணம், இந்தத் தொகுப்பு சுலோகங்களைப் பாராயணம் செய்தால் ராமாயணம் முழுவதையும் பாராயணம் செய்த பலன் உண்டாகிறது. ராம காதையை முற்றும் விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் முழு ராமாயணத்தைப் பாராயணம் செய்தாக வேண்டும். இராமாயணத்தைப் பாராயணம் செய்த பலனை மட்டும் பெறவேண்டுமானால் ராமாயணம் முழுவதையும் பாராயணம் செய்ய வேண்டியதில்லை. காயத்ரீயின் எழுத்துக்களை முதன்மையாகக் கொண்ட சுலோகங்களை மட்டும் பாராயணம் செய்தால் போதும். இது எப்படி அமைகிறதென்றால் காயத்ரீ ராமாயண சுலோகங்களைப் பாராயணம், செய்யும்போது காயத்ரீயைப் பாராயணம் செய்ததாகவும், அதே சமயம் அதன் தொடர்பால்தான் மற்ற ஆயிரம் சுலோகங்கள் உண்டாயிற்றாகையால் அவைகளின் பாராயணமும் உள்ளடங்கியதாக அமைகிறது.

பல காரணங்களால் பாரதத்தில் பழம் பெரும் தந்திர மந்திர, வேத சாஸ்திர மகிமைகளைத் தெரிவிக்காமல் எப்படியோ தமிழர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வஞ்சிக்கப்பட்டவர்களானார்கள், தமிழ்ச் சங்கம் இருந்த காலத்தில் இப்பாகுபாடு இருக்கவில்லை. அச்சங்கத் தலைவர்களில் பெரும்பாலோர் நல்ல வடமொழி ஞானம் பெற்றவர்கள். வேத மந்திர ரிஷிகளில் சிலர் தமிழர்கள். யோக நூல் ஆசிரியரான பதஞ்சலர் தமிழர் என ஓர் கருத்துண்டு. தொல் காப்பியமும் பாணினி இலக்கணமும் பல வகையில் ஒற்றுமையுள்ளவை.

இவ்வளவிருந்தும் இடைக்காலத்தில் வேத, மந்திர, தந்திர நூல்களைத் தமிழர்கள் படிக்கக் கூடாது என்று எப்படியோ ஏமாற்றப்பட்டு விட்டார்கள். தமிழ் மூவேந்தர் யாகங்களைச் செய்தவர்கள். ஓர் ஆராய்ச்சியின் கருத்துப்படி பாண்டியர்கள் பாண்டுவின் வம்சத்தவர்கள் என்பதுண்டு. இவ்வளவிருந்தும் இன்று சக்தி வாய்ந்த மந்திர சாஸ்திரங்களில் தமிழர்களுக்கு வெறுப்பையே உண்டாக்கிவிட்டார்கள் சமயச் சுயநலவாதிகள். தமிழர்களுக்கு வஞ்சிக்கப்பட்ட இச்சாத்திரங்களை இன்று ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாட்டு மக்கள் ஆராய்ந்து, பயின்று, விஞ்ஞானம் முதல் அரிய நன்மைகளைப் பெற்றுவருகிறார்கள். 64 கலைஞானம் ஜெர்மனியில் இருக்கின்றன. நான்கு வேதங்களின் 'மூலம்' ஜெர்மனியில்தான் இருக்கிறது. ஆரிய சமாஜ் ஸ்தாபகர் ரிஷி தயானந்தர் அவற்றைக் கேட்டுப்பெற்று மறுநகல் எழுதிக் கொண்ட பிறகுதான் நம் பாரதத்தில் நான்கு வேதங்களும் முழுமையாகக் கிடைக்கத் தொடங்கின. இந்த நிலையில் பிரபஞ்சமனைத்தையும் ஆக்கியமைத்தளிக்கும் மகா-சக்தி ஸ்ரீ காயத்ரீ உயர் தீட்சைபெற்று இடையறாது உபாசனை செய்து அரும்பெரும் சித்திகளைப் பெற்று பிறவியின் குறிக்கோள் பெற்ற அருட்திரு முருகேசு சுவாமிகள் இலங்கையில் ஸ்ரீ காயத்ரீ தேவிக்கு முதலாவது ஆலயம் அமைத்து தேவியை பிரதிஷ்டை செய்வது குறித்து எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு ஸ்ரீ முருகேசு சுவாமிகளின் முயற்சி பரிபூரண வெற்றி பெற்று இலங்கையில் சாந்தியும் சமாதானமும் நிலவிடப் பிரார்த்திக்கிறேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ காயத்ரி சித்தர்
ஆர். கே. முருகேசு ஸ்வாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய வரலாறு

இந்துக்களின் வாழ்க்கை சமயத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. இத்த கைய சமய வாழ்க்கை ஆலய வழிபாடோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. இலங் கையில் ஐந்து பழைமை வாய்ந்த சிவாலயங் கள் வட, கிழக்கு, வட மேற்குக் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவ்வைந்து ஆலயங்களோடு இன்று நுவரேலியாவில் அமைந்துள்ள ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயமும் மிகச் சிறப்பு மிகு ஆலயமாகக் கணிக்கப்படு கின்றது. இவ்வாலயம் நுவரேலியாவில் 82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் சிறப்புக்கும், பெருமைக்கும் காரணம் இவ்வாலயம் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளமையே, இத்துடன் இவ்வாலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். இவ்வாலயம் அமைந் துள்ள பகுதி முன்னொரு காலத்தில் இலங் கையை ஆட்சி புரிந்த இராவணனது இராசதா னியாக இருந்ததாக அறிஞர்கள் கூறியுள்ளனர். இராவணன் ஓர் சிறந்த சிவ பக்தனாக இருந்து சிவலிங்கத்தை வணங்கிப் பூசை வைத்த சிவலிங்கம் இன்று ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆல யத்தில் காணப்படும் சிவலிங்கத்தைப் போன்ற தாகும். இச்சிறப்புமிகு சிவலிங்கத்தை (தான் தோன்றிய) ஸ்ரீ சிவ பாலயோகி என்னும் தபசி பன்னிரண்டாண்டு கடும் தவத்தின் பின் வட இந்தியாவில் உள்ள நர்மதா என்னும் பரிசுத்த நதியில் கண்டெடுத்து எத்தனையோ பேரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கைக்கு கொண்டு வந்தார்கள்.

இவ்லிங்கத்தை தற்போது அமைந்துள்ள இடத்தில் வைத்துப் பூஜை செய்து ஸ்ரீ சிவ பால யோகி மகரிஷி வானொலிமூலம் பேச் சொன்றை நடத்தினார். அப்பேச்சின் மூலம் நாம் அறியக் கூடியதாக அமைந்தது என்னவெ னில் இலங்கையை ஆண்ட இராவணனின் மகனாகிய மேகநாதன் தன் தந்தைக்கு சகல நற் பலன்களும் வேண்டி தற்போது அமைந் துள்ள ஆலயத்தின் பகுதியில் சிவலிங்க வழி பாட்டைச் செய்தான். மேகநாதனின் பக்திப் பரவசத்தின் மகிமையை வியந்து மும்மூர்த்திக ளான பிரமா, விஷ்ணு, சிவன் மேகநாதனின் முன்தோன்றி அவனை ஆசீர்வாதத்தாலும், அருளினாலும் இவ்விடம் புனிதத்தன்மை அடைந்து பிரகாசித்தது. இப்பேர்ப்பட்ட இடம் மானிடர்களினால் என்றும் அழித்தொழியமாட் டாது. மனிதர்கள் வாழ்வதற்கே மிகவும் புனிதத் தன்மை வாய்ந்ததாகும். இவ்விடத்தில் முதல் முதலில் குடியமர்ந்தவர் லெஜிஸ் லேரிவ் கவுன்ஸிலின் முதற் சபாநாயகராக அமர்ந்தி ருந்த பெருமகன் ஒருவராவர், இவரைத் தொடர்ந்து அநேகர் இவ்விடத்தில் வாழமுற் பட்டனர். ஆனால் எவரும் அணுக முடியாத, வாழ முடியாத பேய் பிசாசு நடமாட்டம் உள்ள இடமாக இருந்தது. மனித நடமாட்டமில்லாத இவ்விடத்திற்கு ஸ்ரீ முருகேசு சுவாமி தனது பக்திப் பெருமையினாலும் இவ்விடத்தில் வசிப் பதற்காக 1975ம் ஆண்டு வந்தார். இப்பகுதி யில்தான் 1978ம் ஆண்டு 16ம் திகதி ஐப்பசி மாதம் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பட்டது.

சிவலிங்க பிரதிஷ்டை ஸ்ரீ சிவ பால யோகி யின் மேற்பார்வையில் ஸ்ரீ முருகேசு சுவாமி ஸ்ரீ மதி சீதாபாபு ஆகியோரின் விடா முயற்சியி னால் சிறப்பாக நடைபெற்றது. இவர்களின் ஆதரவும், அன்பும், ஆண்டவனின் கிருபை யும், அனுக்கிரகமும் இல்லாவிடில் இவ்லிங்கம் இவ்விடத்தில் அமைந்திருக்க முடியாது.

இச்சிவலிங்கத்தை அமைத்த பின்னர் சிவ பாலயோகி, சீதாபாபு ஆகியோர் தமது தியானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினாலும், பிரார்த்தனையாலும், இவ்லிங் கத்தை பரிசுத்தம் பெறச் செய்தனர். சீதாபாபு 34 நாட்களாக அமைதிபேணி பால் பழத்தை உட்கொண்டு வாழ்ந்தார்.

இன்று இவ் இலங்காதீஸ்வரர் ஆலயம் மிகவும் பிரகாசமாகத் திகழ்ந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றது. ஒரு காலத்தில் மனித நடமாட்டமில்லாமல் இருந்த இவ்விடம் இன்று சமய, கலாசாரப் பண்புகளோடு தெய்வீகத் தன்மை பொலிந்து காணப்படுகிறது. இதற்குக் காரண கர்த்தாவாக வாழ்ந்தவர் ஸ்ரீ முருகேசு சுவாமி என்றால் மிகையாகாது. அதற்காக நாம் அவரைப் பாராட்டாமலும் இருக்க முடியாது இன்று இவரின் மேற்பார்வையில், பிரார்த்த னைகளும், பூஜைகளும், சகல திருத்தொண்டு களும் மேற்கொள்ளப்படுகின்றன.

உலகில் நாலா பகுதியிலுமிருந்து பக்தர்கள் சாதி, மத பேதமின்றி ஒன்று திரண்டு இவ்வா லயத்தில் வந்து ஆலய வழிபாடு செய்து ஆண்டவன் திருவருள் பெற்றுச் செல்கின்ற னர். இவ்வாலயத்தில் நடைபெறும் அற்புதத் தையும் அவர்களால் நேரில் கண்டு, உணர முடிகிறது. நடுமதியத்தில் இவ்லிங்கம் அமைக் கப்பட்டமையினுல் அச்சமயம் லிங்கத்திற்கு பூஜை நடைபெறுகின்றது. பூஜை நடை பெறும் தருணத்தில் மழை பெய்து வீட்டு முகட்டில் விழுவது போன்ற சத்தத்தையும், லிங்கத்தினின்று கசியும் வியர்வையையும் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இத்து டன் இவ்லிங்கம் நாளுக்கு நாள் வளர்வடைவ தையும் பக்தர்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவை எல்லாம் இவ்வாலயத் தலத்தில் நடைபெறும் அற்புதங்கள் ஆகும்.

இவ்வாலயம் அமைந்திருக்கும் சுற்றாடல் மலைப் பிரதேசமாகையினால் பக்திப் பரவசம் எல்லோரிடமும் மேலோங்கி நிற்பதை நாம் காண முடிகிறது.

மேலும் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய் வதற்கென,தமிழகத்திலிருந்து ஸ்ரீ காயத்திரீ தேவி சிலையும், கேரளாவிலிருந்து தாந்திர மகா காளி சிலையும், மாமகரிஷிகளின் ஆசியு டன் கொண்டுவந்து, 1996 ம் ஆண்டு மகா கும்பாபிசேகம் நடைபெறவிருப் பது, இலங்கை மக்கள் செய்த தவப் பயனேயாகும்.

சுவாமி முருகேசு ஆற்றிவரும் ஆன்மீக சேவையால் மண்ணுலக மக்கள், அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள்வாழ்வாம் பெரு வாழ்வைப் பெற்று வாழ பிரார்த்திப் போமாக.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காயத்ரி தேவி



ஓம் பூர் புவஹ ஸ்வஹ தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோ
தேவஸ்ய தீமஹி தியோ யோ நஹ ப்ரசோதயாத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனைத் தெய்வமாக்கவல்ல ஸ்ரீ காயத்ரீ மந்திரம்

ஓம் பூர் புவ: ஸ்வ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

காயத்ரீயைப் பற்றி பாரத நாட்டில் பல மொழிகளிலும் எண்ணற்ற நூல்கள் இருக்கின் றன, காயத்ரீயைப் பற்றி மாபெரும் வித்துவான் கள், சாஸ்திரிகள் எல்லோரும் அதிக ஆராய்ச்சி யின் பேரில் நூல்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளில் கிடைக்க முடியாத காயத்ரீ பற் றிய பல இரகசிய வித்தைகளின் உண்மையை மகான்கள் பொது மக்கள் அறியாதவாறு, மறைத்து வைத்து அவைகளை அடுத்து நிற்கும் சீடர்களுக்கு மட்டும் நேர்முகமாகக் கற்பித்து வருகின்றனர். வேதமந்திரங்களில் காயத்ரீ நான் என்கிறான் கீதையில் கண்ணன். காயத் ரீயை விட சக்தி நிறைந்தது விலைமதிக்க முடியாத இரத்தினங்கள் போன்ற மந்திரம் மண்ணுலகிலுமில்லை. விண்ணுலகிலு மில்லை. நான்கு வேதங்களின் தாய் காயத்ரீ.

என்னால் துதிக்கப்பட்ட, த்விஜர்களைப் பவித்திரம் செய்யவல்ல, . வேதத் தாயாகிய காயத்ரீ ஆயுள். பிராணன், மக்கள், பசுக்கள், புகழ், செல்வம் பிரம்ம தேஜஸ் முதலியவைக ளைக் கொடுப்பாளாக (அதர்வ வேதம் 19,17,1)

காயத்ரீயை ஜெபிப்பதாலேயே மனிதன் சூரி யனைப் போன்று பிரகாசமுடையவனாகிறான். காயத்ரீ சூரிய சக்தி, அதுவே பிராண சக்தியும் கூட. பிராணனை ரக்ஷிப்பவள் காயத்ரீ. சப்த ரிஷிகளும் காயத்ரீயை உபாசித்தே இந்திர னையே சபிக்கும் தவ ஆற்றலைப் பெற்ற தோடு பூமண்டலம் தோன்றிய நாள்முதல் இதுவரை சிரஞ்சீவிகளாய் வாழ்ந்து வருகிறார் கள். பிரம்மஹத்தி திருடு குருபத்தினியை சேரல் போன்ற பெரிய பாவங்களும் காயத் ரீயை ஸ்மரிப்பதால் நாசமாகி விடுகின்றன.

இத்தகைய சக்தி நிறைந்த, ஜபித்த மாத்திரத் தில், அற்புதமான சித்திகளை அளிக்கவல்ல காயத்ரீ மந்திர இரகசியங்களை குருபரம்பரை யில் தொடர்பு கொண்டவர்களே அறிவார்க ளன்றி சாதாரண கல்வி மான்கள், சாஸ்திரிகள் அறியமாட்டார்கள். அதனாலேயே அவ்விரக சிய வித்தைக்கு 'குப்த வித்தை' மறைக்கப் பட்ட வித்தை என்று பெயர் வந்தது. உண் மையை ஏன் இப்படி மறைத்து வைக்க வேண்டும். எல்லோரும் அறியப் புத்தகங்க ளில் வெளியிடக் கூடாதா என பக்தர்கள் கேட்கலாம். கூடாது அவ்வுண்மைகள் வெளி யானால் எந்தக் கயவனும் எளிதில் சில சக்திகளைப் பெற்றுவிட முடியும் அதைக் கொண்டு அவன் மனித இனத்திற்கு சொல் லொணாத துன்பங்களைச் செய்ய முடியும் இதனால் உலக பரிணாமமே பாதிக்கப்பட லாம். இதனால்தான் இவ்வுண்மை சிக்க மாட் டானென்று தெரிந்தவர்களுக்கு மட்டும் வெளி யிட்டு வருகிறார்கள் குப்த வித்தையின் அதிகா ரிகள்.

சாதாரணமாக, காயத்ரீயின் பல சாதனா, உபாசனா முறைகள், மிகவும் எளிதில் அறிய அற்புத சக்திகளைச் செயல்படச் செய்பவையா யுள்ளன. இதை ஒரு கயவன் அறிந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தையே நாசமாக்கிவிட முடியும். அதனால் காயத்ரீ சாதனைகள் யாவும் இன்றுவரை மறைக்கப்பட்டு. தகுந்தவர்களுக்கு மட்டும் நேர்முகமாகவும், மானசீகமாகவும் கற்பிக்கப் பட்டு வந்து கொண்டிருக்கின்றன. காயத்ரீ இரகசிய வித்தையைப் போதிக்கும் ஓர் மானச ஆஸ்ரமம் தமிழகத்தில் நீலகிரி பொதிய மலைச் சாரலில் இன்றும் செயல்பட்டு வருகின்றது. ரிஷி பரம்பரையினரே இதை நடத்துகின்றனர். பூர்வ புண்ணியத் தவப் பயனாய் இந்த ஆஸ்ரமத்தோடு தொடர்பு கொள்ளும் பாக்யம் பெற்றவர்களுக்கு காயத்ரீ தீக்ஷை கொடுக்கப்பட்டு அவர்கள் அடைந்துவரும் முன்னேற்றத்தை வேறு வழிகளில் அவதானித்து வருவார்கள். சில சமயம் சிலர் அரிய சித்திகளைப் பெற்றபின் தவறான வழிகளில் உபயோகிப்பதாகத் தெரிந்தால் அவர்களில் சக்தி செயல்படாதவாறு அதிகாரிகள் தன் ஆன்ம சக்தியால் தடுத்து விடுவார்கள்.

காயத்ரீக்கு இவ்வளவு மகத்தான சக்தி உண்டென்பதை நாம் இதுவரை கேள்விப்பட்டதேயில்லையே? தினமும் சந்தியாவில் செய்து வருவதுதானே காயத்ரீ. இதில் என்ன அப்படிப் பட்ட சக்தி இருக்கப்போகிறது? இருந்தால் இதுவரை சந்தியா செய்யும் எல்லோருமே பல சக்திகளைப் பெற்றிருக்க முடியுமே?

புத்தகங்களைப் படித்து வித்துவான், சாஷ்திரியால் சாதாரணமாகக் கற்பிக்கப்பட்டு காயத்ரீ மந்திரத்தை ஜெபித்தால் சிறப்பாக எந்த சக்தியும் வராதுதான். ஏனென்றால் அதை சாதாரணமாக ஜெபிப்பவர்களுக்கு அரிய சக்திகள் சித்திக்கக் கூடாது என பிரம்மா, வசிஷ்டர் விஸ்வாமித்திரர் முதலானோர் சாபமிட்டிருக்கின்றனர்.

அப்படியானால் காயத்ரீ, சாதனை, உபாசனை செய்து மனிதன் சித்திபெற முடியவே முடியாதா? சாபமிட்ட அவர்களே அதை விலக்கி அரிய சக்தி பெறுவதற்கான விமோசனங்களையும் கூறியுள்ளார்கள்.

'காயத்ரீ சாபவிமோசனம்' என சில மந்திர சுலோகங்கள் பல நூல்களில் காணப்படுகின்றனவே, அவைகளைச் சொல்வது தானே சாபவிமோசனம்?, இல்லை அப்படியானால் எல்லோரும் தமக்குத்தாமே சாபவிமோசனம் செய்து கொண்டு உயரிய சித்திகளைப் பெறலாமே அப்படியாஞல் சாபம் கொடுத்தும் பயனில்லையே. காயத்ரீ உபாசனை செய்யலாம்.

காயத்ரீயை பொதுவாக த்விஜர்களும் பிராமணர்களும் தான் ஜெபிக்கலாம் மற்றவர்கள் ஜெபித்தால் பாபம் வரும் என்று சிலர் சொல்கிறார்களே?

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக சில தவறான நம்பிக்கைகள் மக்கள் மனதில் அகல முடியாதபடி, வேரூன்றி விட்டிருக்கின்றன. நந்தன், சபரி, கண்ணப்ப நாயனர் இன்னும் எத்தனையோ நாயன்மார்கள், ஆழ்வார்கள் பக்தர்கள், யோகிகள், பிராமணர்களாய் இல்லாமலிருந்தும் பிராமணர்களைவிட சிறந்த தெய்வப் பேற்றைப் பெறவில்லையா? ஸ்ரீ ராமானுஜர் காயத்ரீ பற்றிய இவ்வதந்தியை மறுத்து, எல்லோருக்கும் அதை உபதேசிக்கவில்லையா? உண்மை என்னவென்றால் 'ஜன்மனு ஜாயதே ஸுத்ர: கர்மணா ஜாயதே த்விஜ:' என்ற கீதாவாக்யம் தான் சரியானது, பிறப்பில் எல்லோரும் சூத்திரர்கள் ஆகத்தான் பிறக்கிறார்கள். பிறகு கர்ம சமஸ்காரங்களால் தான் த்விஜர்களாகிறார்கள் 'த்விஜ' என்ற சொல்லுக்கு இரண்டாவது தடவை பிறத்தல் என்று பொருள், இதையே வள்ளுவனார்:- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையால்'' எனக்கூறியுள்ளார். த்விஜத்வம் யாருக்கும் பிறப்பில் உண்டாவதில்லை. தகுந்த சம்ஸ்காரத்தைப் பெறும் போதுதான் உண்டாகிறது, இதை யாரும் பெறலாம், ஏனெனில் பிறப்பில் எல்லோரும் சூத்திரர்தானே,

பெண்கள் காயத்ரீ சாதனைகளைச் செய்யலாமா? ஏனிந்த சந்தேகம், பெண்களின் உடலில் அறியாமை சூழ்ந்த ஆன்மா இல்லையா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நற்கதி பெறவேண்டாமா; அதற்கு பதி சேவையே போதும் என்கிறீரா! கேளுங்கள்:- கார்கீ, மைத்ரேயி, அனுஷூயா, அருந்ததி, தேவயானீ, அஹல்யா, குந்தி' ப்ருந்தா, மண்டோதரி, தமயந்தி, ஸாவித்ரீ. லோபாமுத்ரா, சர்மிஸ்டா, சீதா பார்வதி, சத்யவதி, சுகன்யா முதலான பதிவிரதைகள், காயத்ரீ சாதனையாலேயே அரிய சித்திகளைப் பெற்றார்களென ஆதாரங்களிருக்கின்றன. சந்தேகமே படாதீர். பெண்களும் காயத்ரீ சாதனை பயிலலாம்.

காயத்ரீ சாதனையால் என்னென்ன நன்மைகளைப் பெறலாம்:- செல்வம், ஆரோக்கியம், ஆயுள், புத்திரப்பேறு, நல்ல விவாகம், வியாபார விருத்தி, உத்தியோக உயர்வு, உடல் வலிமை. மன வலிமை, சொத்து, வீடு, முதலான பௌதீக சுகங்கள் பகைமைகள், கலகங்கள், கிரக பீடைகள், தோஷங்கள், கர்மப் பிரபாவங்கள் செய்வினைகள், நோய்கள், குடும்பச் சச்சரவுகள்' முதலியன விலக்கல். ராஜ, ஹட, குண்டலினி, தப, ஷட்கரபேசதனம் முதலான யோக சித்திகள் அணிமாதி அஷ்ட சித்திகள் சூஷ்ம திருஷ்டி, திவ்யஞானம் முதலான ஆன்மீக சித்திகள் முதலான ஆயிரக்கணக்கான நன்மைகள் காயத்ரீ சாதனையால் பெறலாம்.

''காயத்ரீ-பிராணன்! பிராணனைக் காப்பாறுபவள் காயத்ரீ. காயத்ரீ மற்ற தெய்வங்களைப் போல் பரலோகத்திலிருப்பவளல்ல: காயத்ரீ மந்திரம் மற்ற மந்திரங்களைப்போல் தனியொரு சக்தியை விழிப்பிப்பதல்ல: மண்ணுலகுக்கு அனைத்தையும் அளித்து, காத்து, அழிக்கும், சூரியனிலிருந்து பரவும் பிராண சக்தி தான் காயத்ரீ. காயத்ரீ ஜெபத்தால் சூர்ய சக்தி கவரப்படுகிறது. காயத்ரீ உபாசனையால், சாதனையால் சகல சித்திகளும் உண்டாகின்றன ஏனென்றால்,

'பிரஹ்ம விஷ்ணு ஸிவாத்மிகா'

பிரம்ம, விஷ்ணு, வர்களின் ஆத்மாவாக இருப்பவள் காயத்ரீ என உபநிடதம் சக்திகளும் மண்ணுலகுக்கு சூரிய கிரணங்கள் மூலமாத் தான் வருகின்றன, சூரியன் இல்லையானால் உலகும் மற்ற கிரகங்களும் இருக்கா.

யோகிகளின் ஓர் இரகசியமுறை:-

பிராணனை காயத்ரீ மந்திரமாக, காயத்ரீ மந்திரத்தையே சுவாச நடையாக இரண்டறக் கலக்கச் செய்வது இச்சாதனையால் காயத்ரீ ஜெபத்தின் முழுப்பயனும் உண்டாகிறது.

-காயத்ரீ சித்தர்

ஆகையால் சன்மார்க்க சீலர்கள் தகுந்த குருவையண்டி முறைப்படி சாபவிமோசனம் செய்வித்து, தீக்ஷைப் பெற்று' தொடர்ந்த தனை செய்து, சக்திபெற்ற சித்த புருஷனாகி மண்ணுலக மக்கள் மான்புற வழிகாட்டும் மகான்களாக வாழ்வார்களாக,

ஓம் சுபம் பவது.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ ஜபத்தின் ப்ரபாவம்
# (சில மஹான்களின் அநுபவங்கள்)

சில நூற்றாண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் பாண்டிய மன்னன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் தாங்கவொண்ணாத வயிற்று வலியால் தவித்துக் கொண்டிருந்தான். எத்தனையோ வகையான சிகிச்சைகள் செய்தும் அவன் வலி நீங்கவில்லை. இந்த சங்கதி ஊரெங்கும் பரவியது. அதைக் கேள்வியுற்ற ஒரு ஜோதிட பண்டிதன் அரசனிடம் சென்று 'நான் இந்த வலியை நீக்கிவிடுகிறேன். இது பூர்வ வினையினால் ஏற்பட்டது. இதற்கு சாஸ்திர முறைப்படி சாந்தி செய்ய வேண்டும். அதாவது, முறைப்படி தானம் செய்ய வேண்டும்' என்றான். அரசனும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

சாந்தி கர்மாவுக்கான ஏற்பாடுகள் நடந்தன. ஒரு அறையில் எருமைக் கடா, எமன் இவர்களின் உருவங்கள் இரும்பினால் செய்து வைக்கப்பட்டன. அந்த உருவங்கள் மீது விலை உயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பட்டன. அறை முழுவதும் தங்க நாணயங்களும். ரத்தினங்களும் குவிக்கப்பட்டிருந்தன. பிறகு. "அந்த அறையிலுள்ள விலையுயர்ந்த பொருளை யார் வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்" என்று ஊர் முழுவதும் தண்டாரோ போடப்பட்டது. பலர் ஆசையோடு அந்த அறைக்குள் சென்றார்கள். ஆனால், யமன் சிவந்த கண்களுடனும் கரிய உடலுடனும் மூன்று விரல்களைக் காட்டி, 'கொன்றுவிடுவேன்' என்று பயமுறுத்தினான். அவர்களெல்லோரும் பயந்து அங்கிருந்து ஓடி விட்டார்கள். பல நாட்களாகியும் இதை எடுத்துப் போவாரில்லை. அரசனின் நோயும் நீங்கிய பாடில்லை.

சில நாட்களுக்குப்பின், பட்டீசுவரம் என்ற ஊரிலிருந்து ஒரு கன்னடப் பிராம்மணன் அங்கு வந்தான். அவன் ஒரு பெரிய பண்டிதன் அல்ல. ஆனால் தினந்தோறும் ஸ்ந்த்யா வந்தனமும் காயத்ரீ ஜபமும் தவறாமல் செய்து வந்தான். அவன் அந்த அறையில் நுழைந்தான். வழக்கப்படி யமன் மூன்று விரல்களைக் காட்டினான். அந்தணன் 'முடியாது' என்று பொருள்படும்படி தலையை அசைத்தான். யமன் இரண்டு விரல்களைக் காட்டினான், அதற்கும் 'முடியாது' என்றான் அவன். பிறகு யமன் ஒரு விரலை மட்டும் காட்டினான். அதற்கு அந்தணன் சரியென்று ஒப்புக்கொண்டதும் யமன் அவனை அந்த அறையிலுள்ள தானப் பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி அளித்தான். அதன்படி அவன் தானத்தைப் பெற்றுக் கொண்டவுடனே அரசனின் வயிற்று வலி நீங்கிவிட்டது. அரசன், அவ்வந்தணனை அழைத்து, அறையில் என்ன நடந்தது? என்று கேட்டான்.

அதற்கு அவன் சொன்னதாவது, "அரசே, அறையில் உள்ள யமன் மூன்று விரல்களைக் காட்டியதன் பொருள் என்னவென்றால், காலை, மத்யானம், மாலை என்னும் மூன்று வேளைகளிலும் நான் செய்யும் காயத்ரீ ஜபத்தின் பலனை அவனுக்கு அர்ப்பணித்து விட வேண்டுமென்பதே. அதற்கு நான் சம்மதிக்காதபோது, இரு விரல்களைக் காட்டினான். அதற்கு நான் ஒப்புக்கொள்ளாமற் போகவே, ஒரு விரலை மட்டும் காட்டி, 'மத்யானத்தில் காயத்ரீ ஜபம் செய்த பலனையாவது தா? என்று கேட்டான். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவே, அவன் அனுமதியால் இந்த தானத்தை நான் பெற முடிந்தது" என்று கூறினான். பிறகு அந்த பொருளால் ஆயிரம் வேலி நிலம் வாங்கிச் செல்வந்தனாக விளங்கினான். அந்த பட்டிசுவரத்துக் கன்னடப் பிராமணன் பெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரால் திருநெல்வேலி ஜில்லாவில் 'கன்னடியன் கால்வாய்' என்ற வாய்க்கால் இன்றும் ஓடுகிறது. இதனால் காயத்ரீயின் மகிமை நன்கு விளங்குகிறது.

அக்பர் சக்கரவர்த்தியிடம் வீரபலன் என்றொரு விதூஷக பிராமணன் இருந்தான். ஒரு நாள் வீரபலனும் அரசனும் தனிமையில் உலாவச் சென்றார்கள். அப்போது அவர்களிடம் ஒரு பிராமணன் கை நீட்டிப் பிச்சை கேட்டான். அப்போது அக்பர் வீரபலனைப் பார்த்து, 'இந்த பிராமணர்களுக்குப் பிச்சை எடுப்பதைக் காட்டிலும் வேறு தொழில் இல்லையா? என்று கேட்டான்.

இந்த பரிகாசப் பேச்சு வீரபலனின் மனதில் சுருக்கென்று தைத்தது. சில நாட்கள் கழித்து அந்த பிராமணனைச் சந்தித்து 'ஏன் பிச்சை எடுக்கிறாய்?'' என்று கேட்டான். அதற்கு அவ்வந்தணன், ஐயா! எனக்குக் குடும்பம் பெரிது. அவர்களைக் காப்பாற்றவே பிச்சை எடுக்கிறேன்' என்றான், 'தினப்படி எவ்வளவு பணம் வரும்?' என்று வீரபலன் கேட்டான். 20லிருந்து 25 பைசாக்கள் கிடைக்கும்' என்றான் அவன்.

'அப்படியானால் நான் உனக்குத் தினந்தோறும் 50 பைசாக்கள் தருகிறேன். நீ பிச்சை எடுக்கக் கூடாது. தவிர தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்தவுடன் காயத்ரீயை 10 தரம் தவறாமல் ஜபம் செய்யவேண்டும்' என்றான்.

அதற்கு ஒப்புக்கொண்ட அந்தணன் தினம் தோறும் காலையில் காயத்ரீயை 10 தரம் ஜபம் செய்து வந்தான். நாளடைவில் நாள் முழுவதுமே ஜபம் செய்யலாமென்று அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது. எந்தப் பலனையும் எதிர்பாராமல் காயத்ரீ ஜபம் செய்து வந்தான். அதனால் அவனுடைய முகம் பிரம்மதேஜஸால் ஒளிர்விட்டது.

ஒரு நாள் வீரபலன் அவனைச் சென்று பார்த்தான். மனம் மகிழ்ச்சியடைந்தது. பிறகு அவ்வந்தணனை நோக்கி, 'நீ இனி தினந்தோறும் 108 தரம் காயத்ரீ ஜபம் செய்தால் உனக்கு மாதா மாதம் 1000/- ரூபாய் தருகிறேன்' என்று வாக்களித்தான். அதற்கு ஒப்புக்கொண்டு அவ்வந்தணன் ஸதாஸர்வ காலமும் காயத்ரீ ஜபமே செய்துவந்தான். ஒரு நாள் திடீரென அவன் மனதில் ஒரு ஒளியின் தரிசனம் ஏற்பட்டது.

'நீ அற்ப ஆசைகளுக்காக காயத்ரீயை பயன்படுத்தாதே' என்று அசரீரீ வாக்கு கேட்டது. அவன் அதற்குப் பணிந்து அவ்வாறே நிஷ்காமமாக ஜபித்து வந்தான். அதனால் ஒளிபெற்று அவன் புகழ் ஊரெங்கும் பரவியது. மக்கள் அவனிடம் வந்து ஆசி பெற்றுச் சென்றனர்.

அதன் பிறகு அவன் சம்பளம் பெறுவதற்காக வீரபலனின் வீட்டிற்குச் செல்லவில்லை. ஆனால், வீரபலனே அந்தணன் வீட்டிற்கு வந்து 1000 ரூபாயை பெற்றுக்கொள்ள வேண்டினான். காயத்ரீ அருள் கிடைத்தமையால் தனக்குத் தேவையில்லை என்று அந்தணன் கூறி மறுத்தவிட்டான். வீரபலன் அவனை வணங்கி, நடந்த சங்கதியை அரசனுக்கும் அறிவித்தான். அரசனும் காயத்ரீயின் மகிமையை உணர்ந்து, தான் ஏளனமாகப் பேசியதற்கு மிகவும் வருந்தினான்.

ஓர் ஊரில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் ஸ்நான ஸந்திகள் எதையும் சரியாகச் செய்வதில்லை. அவனை ஒரு பிரம்மராஷஸ் பிடித்துக்கொண்டது. அதை ஓட்டுவதற்குப் பல மந்திரவாதிகள் முயற்சி செய்தார்கள். அவர்களையெல்லாம் அந்த பிரம்மராஷஸ் பரிகாசம் செய்து அனுப்பிவிடும். நாளுக்கு நாள் அந்த பிரம்மராஷஸின் அட்டகாசம் அதிகமாகிவிட்டது. ஊரில் இருப்பவர்களுக்கு இரவு பகல் தூக்கம் கிடையாது.

இது இப்படியிருக்க, அந்த ஊரில் பிச்சை எடுப்பதற்காக ஓர் அந்தணன் வந்தான், அவன் வீடு வீடாகப் பிச்சை எடுத்துக்கொண்டேவந்து, அந்த பிரம்மராஷஸ் உள்ள வீட்டு வாயிற்படியில் வந்தான். அவன் அந்த வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடி வைத்த உடனே, உள்ளே இருந்த பிரம்மராஷஸ் "ஐயோ உடலெல்லாம் எரிகிறதே! நான் ஓடிவிடுகிறேன், ஓடிவிடுகிறேன்" என்று உரக்கக் கூவியது. இதைக் கேட்டு ஊராரெல்லாரும் அங்கு கூடி விட்டார்கள்.

அவர்கள் பிச்சையெடுக்கும் அந்தணனைப் பார்த்து, 'ஸ்வாமி! நீங்கம் என்ன மந்திரம் போட்டீர்கள்? யாருக்கும் மசியாத பிரம்மராஷஸ் உங்களைப் பார்த்தவுடனே பயப்பட்டுக் கூவுகிறதே" என்றார்கள்.

அந்தணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தன்னிடம் அப்படி ஒரு மந்திர சக்தியும் இல்லையே, குறைந்த பஷமான வேதாத்யயனம் கூட செய்வதில்லையே! என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். ஆனாலும் தானாக வந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று முடிவு செய்தான். உடனே அந்த பிரம்மராஷஸை அழைத்து. "நீ எப்போது போகிறாய்? உடனே இந்த பிராமணனை விட்டுப் போய்விடு" என்று விரட்டினான், "நாளைக்கே போய்விடுகிறேன்" என்றது அது. "இந்த ஊருக்குப் பக்கத்தில் ஒரு நதி ஓடுகிறது.நேற்றைய தினம் காற்று மழையில் அந்த நதிக்கரையில் உள்ள மரத்தின் ஒரு பெரிய கிளை ஒடிந்து நதியின் மத்தியில் விழுந்துவிட்டது. அந்த மரக் கிளையைக் கரைக்குச் சேர்த்து விட்டால் அந்த பிரம்மராஷஸ் போனதற்கு அடையாளம் என்று ஊரார் சொன்னார்கள்.

அதன்படி அந்த ஏழைப் பிராமணன் பிரம்மராஷஸிடம் ஒப்புதல் வாங்கிக் கொண்டான். அன்றிரவே அந்த நதியிலிருந்த ஒரு பெரிய மரக்கிளை கரைக்குச் சேர்ந்துவிட்டது. அந்த மரக்கிளை 200 பேர் சேர்ந்து அசைத்தாலும் அசையாது. காலையில் ஊரார் எல்லாரும் மிகவும் ஆச்சரியத்துடன் இந்த நிகழ்ச்சியைப் பார்த்தார்கள். பிரம்மராஷஸ் பிடித்திருந்தவன் சகஜமாக எல்லோருடனும் பழகினான்.

ஊரார் ஏழை அந்தணனை மிகவும் கொண்டாடி, "உங்களிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அது என்னவென்று எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு அந்த பிராமணன், "ஐயா! என்னிடம் எந்த மந்திர சக்தியும் கிடையாது. நான் சிறிதளவும் வேதாத்யயனம் செய்ததில்லை. ஆனால், தினந்தோறும் ஆயிரத்தெட்டு காயத்ரீ ஜபம் தொடர்ந்து செய்து வந்தேன். அதன் மகிமைதான் இது. அந்தணர்களாகப் பிறந்து காயத்ரீ ஜபம் செய்யாததனால்தான் பிரம்மராஷஸ் ஒரு பிராமணனைப் பிடிப்பதும் நீங்கள் எல்லோரும் கஷ்டப்படுவதும் ஏற்பட்டது."

அண்மையில் சென்னையில் ஒரு அந்தணப் பிரபு இருந்தார். அவர் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் ஒரு வெள்ளையரின் கம்பனியில் ஒரு சாதாரண குமாஸ்தாவாகப் பணி புரிந்து வந்தார். மிகவும் உண்மையாகவும் உழைப்பாளியாகவும் இருந்ததைப் பார்த்து அந்த வெள்ளைத்துரை. இந்த நாட்டைவிட்டுப் போகும் போது அந்த கம்பெனியை இவர் பெயருக்கே எழுதித் தந்துவிட்டார். அது முதல் இந்த அந்தணர் முதலாளி ஆனார். தொழிலாளிகளைத் தம் குழந்தைகள் போல் அன்புடன் பாவித்த வந்தார். அவர்களுடைய கஷ்ட சுகங்களில் பங்கு கொண்டார். நாளுக்கு நாள் அவருடைய கம்பெனி வளர்ச்சியடைந்தது. ஒன்றின்மேலொன்றாகப் பல கம்பனிகளைத் தோற்றுவித்து அத்தனைக்கும் அவர் முதலாளியாகிப் பேரும் புகழும் பெற்றார்.

அவர் இத்தனை பெருமை பெற்றதற்குக் காரணம் அவர் தினந்தோறும் தவறாமல் 1008 தரம் காயத்ரீ ஜபம் செய்ததுதானாம். வெளிநாடு செல்லும்போது கூட அங்கும் தமது அன்றாட ஜபத்தை விடமாட்டாராம். அதன் பலனாக அத்தனை தொழில் நிறுவனங்களுக்கும் அதிபரானார். இன்று அவர் மறைந்தாலும் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பிழைக்க வழி செய்த அம்மஹானை மக்கள் இன்றும் கொண்டாடுகிறார்கள். இவையெல்லாம் அந்த காயத்ரீ தேவியின் மஹிமையே என்று அவர் நண்பர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடம் பக்தி உருக்கத்துடன் சொல்லி வந்ததாக வும் கேள்விப்படுகின்றோம்.

அம்பத்தூர் ஸ்ரீ காயத்ரீ உபாசகர் ஸ்ரீசே ஷாத்ரி ஸ்வாமிகளை தெய்வ வசமாகச் சந்தித் தபோது அவர் கூறிய அநுபவம் "30 ஆண்டு களாக ஸ்ரீ காயத்ரீ தேவியின் அருளால் மக்களின் பல குறைகளை அறிந்து நிவிர்த்தி செய்து வருகிறேன். காயத்ரீ மந்திரஸித்தி ஸகல காரிய ஸாதகமாக உள்ளது. முறைப்படி அங்கந்யாஸ கரந்யாஸங்களுடன் காயத்ரீயின் வ்யாபக ரூபமான ப்ருஹத் காயத்ரீயை உபா ஸிப்பவர்களுக்கு உலகில் அஸாத்யம் எதுவு மில்லை. காயத்ரீ மந்திரத்தைக் காட்டிலும் சிறந்த வேறு மந்திரமில்லை என்பது என் சொந்த அநுபவம்.

## மோக்ஷலோக உதயம்

எத்தனைதான் சாமிகளைக் கும்பிட்டாலும், ஏற்ற மிகு சொற்பொழிவு கேட்டிட்டாலும், பலகாலம் புத்தகங்கள் படித்திட்டாலும், பலக லைகள் பாங்குறவே கற்றிட்டாலும் பரிணாமம் உயரும்வரை ஞானம் தோன்றா, பரந்தாமன் மோக்ஷமது கிட்டிடாதப்பா.

தாவரங்கள் தோன்றி, வளர்ந்து, பயன்தர பரிணாம காலமுண்டு. பறவைகள் விலங்கு கள் தோன்றி, வாழ்ந்து மறைய பரிணாம வரையறை உண்டு. பூமிக்கும் அதைப் படைத்த பிரமனுக்கும் பரிணாம எல்லை யுண்டு. மனிதன் மெஞ்ஞானம் பெற்று மோக்ஷம் பெறப் பரிணாம சக்தியுண்டு.

மனித பரிணாமம் பல பிறவிகளைக் கொண் டது. சில பிறவிகளுக்குப் பின்புதான் அவ னுக்கு ஞானம் பிறக்கும். அதன் வழி மோக்ஷம் கிடைக்கும்.

சித்தர்களிடம் சரண்புகும் மாணவர்கள் மோக்ஷம் பெற இன்னும் பல பிறவிகளையெ டுக்க வேண்டியிருந்தாலும் குருமார்கள் ரகசிய வித்தை மூலம் அவர்களின் பரிணாமத்தைத் துரிதப்படுத்திவிட, மாணவர்கள் இந்தப் பிறவி யிலேயே மோக்ஷம் பெற்றுவிடுகிறார்கள்.

அத்தகைய ரகசிய சித்த சாதனையைக் கற்று, உங்கள் பரிணாமத்தைத் துரிதப்படுத்தி மிக விரைவில் மெஞ்ஞானம் பெற்று பிறவிப் பெரும்பயனை இகத்திலும் பரத்திலும் பெற விரும்புகிறீர்களா? அப்படியானால் அதற்கான வாய்ப்பு இலங்கையில் கிடைக்கவிருக்கிறது.

தொடர்பு கொள்ளவும்:-
ஸ்ரீ காயத்ரி சித்தர்
ஸ்ரீகாயத்ரி பீடம்
நுவரெலியா,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரியை பொதுவாக த்விஜர்களும், பிராம ணர்களும் தான் ஜெபிக்கலாம். மற்றவர்கள் ஜெபித்தால் பாபம் வரும் என்று வதந்திகளை மறுத்து, எல்லோரும் ஜெபிக்கலாம் என்று, அனைவருக்கும் காயத்ரி மந்திரத்தை உபதே சித்தவர்.

கடினமான தெய்வ சாதனைகளை மக்கள் செய்ய வேண்டிய தேவையில்லை. சிறியதான காயத்ரி ஜெபத்தை செய்து பாருங்கள், இதனா லேயே சகல சித்திகளும் உண்டாகிவிடும். சக்தி நிறைந்த சிறிய மந்திரம் காயத்ரி.

காயத்ரீயின் மகிமையைச் சொல்வது சாதா ரண மக்களால் இயலாத காரியம். ஏனெனில் காயத்ரீயால் அறிவு சுத்தமாகிறது. இதற்கு உலகில் வேறெந்த வழியும் கிடையாது.

பாரத மக்களை விரைவில் விழிக்கச் செய் யும் மந்திரம் காயத்ரீ. இதை ஜெபிப்பவர்கள் கருத்து வேற்றுமை, பகைமை மனப்பான்மை யைக் கொள்ளமாட்டார்கள்.

சுபம்

# ஆத்ம யோக ஞான பயிற்சிப் பாடம்

1. நீ யார்?
2. மனிதனின் அமைப்பு
3. ஆன்ம சுதந்திரம்
4. சூக்ஷ்மம் தான் உண்மை மனிதன்
5. சூக்ஷ்ம உடல்
6. சூக்ஷ்மமும், ஸ்துலமும்
7. சூக்ஷ்ம சாதனையின் தொடக்கம்
8. மனக்கண் செயல் பயிற்சி
9. கர்மாவும், வாழ்க்கையும்
10. கர்மாவை வெல்லும் வழி
11. நல்ல அறிவும் கெட்ட அறிவும்
12. அறிவின் துணை பெறல்
13. முக்காலமறிதல்
14. கால ஞானமும் சூக்ஷ்ம திருஷ்டியும்
15. சூக்ஷ்ம திருஷ்டி பயிற்சிகள்
16. வாழ்வின் குறிக்கோள்
17. விலங்குகளின் பரிணாமம்
18. வாழ்க்கைப் பட்டியல்
19. பாவனா சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ அகஸ்தியர் மாமகரிஷி



ஓம் ஸ்ரீ அகஸ்திய மகரிஷியே நம:

ஸ்ரீ காயத்ரி பீடம் அகஸ்தியர் மகரிஷியின் ஆசி பெற்றது சூக்ஷ்ம சீரத்தில் முருகேசு ஸ்வாமிகளோடு தியானத்தில் தொடர்பு கொண்டு வழிகாட்டி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளியது.

காயத்ரீ எனும் வார்த்தைக்கு எவர்கள் தன்னை கனம் பண்ணுகிறார்களோ அவர்களை ரட்சிப்பது என்பது பொருளாகும் பக்தியுடனும் உச்சரிப்பதாகும். தோத்திரம் செய்கிறார்களோ அவர்களை காயத்ரீ மந்திரம் ரட்சிக்கும்.

வேதத்தில் காயத்ரீயைப் பற்றிச் சொல்லும் போது 'காயத்ரீ சந்தஸாம் மாதா' என்று இருக்கிறது. 'சந்தஸ்' என்பது வேதம். வேத மந்திரங்களுக்கெல்லாம் தாயார் ஸ்தானம் காயத்ரீ என்று வேதம் சொல்கிறது. சாத்திரப் பிரகாரம் செய்யவேண்டிய காரியங்களுக்கெல்லாம் முக்கியமான காரியம் இது என்று சொல்லும் பொழுது, வேதம், மந்திர சக்தி குறையாமலும் தேகத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகிறது.

தேகம் ஒரு தேவாலயம். ஜீவன் ஈஸ்வர சொரூபம். ஆலயத்தினுள் அசுத்தமான பொருள்களைக் கொண்டுபோக முடியாது. அப்படியே தேகத்தை ஒரு தேவாலயமென்றால், இதிலும் அசுத்தமானவற்றைச் சேர்க்கக் கூடாது. மந்திர சக்தி இருக்கின்ற சரீரத்தில் அசுத்தத்தைச் சேர்த்தால் அது கெட்டுவிடும்.

நமது மந்திர சக்தியைக் காப்பாற்றிக் கொண்டுவந்தால், அது எல்லோருக்கும் க்ஷேமத்தை உண்டாக்கும். மந்திர சக்தியாகிற அக்கினி இப்போது அணைந்திருக்கிறது. தேகம் விகார மடைந்திருக்கிறது. அசுத்த பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. ஆனால் ஒரு பொறி மட்டும் அணையாமல் இருக்கிறது. அதை வளர்ச்சியடைய செய்யவேண்டும். அப்படி செய்தால் எப்போதேனும், பற்றிக் கொள்ளும். அந்த நெருப்புத் தான் 'காயத்ரீ.

அந்த நெருப்புப் பொறியை ஊதி ஜுவாலையாக்க வேண்டும். நெருப்புப் பொறி எதற்கும் உபயோகமாகா. ஆனால், உபயோகப்படுத்தவதற்கு ஆதாரம் இருக்கிறது.

ஆகையினால், ஞாயிற்றுக்கிழமையாவது, ஆயிரம் காயத்ரீ பண்ணவேண்டும்.

மூன்று காலமும் சாந்தம் உண்டாகிற காலம். காலை, உச்சி, மாலை என்னும் இந்த மூன்று காலங்களிலும் 'காயத்ரீ — சாவித்ரி 'சரஸ்வதி' என்று மூன்று பிரகாரமாக தியானம் பண்ண வேண்டும். காலையில் விஷ்ணுவுக்கு; மத்தியானம் பிரம்மாவுக்கு; சாயங்காலம் சிவனுக்கு பிரதானமானது. ஆகையினால், காலையில் விஷ்ணு ரூபிணியாகவும், மத்தியானம் பிரம்ம ரூபிணியாகவும், சாயங்காலம் சிவரூபிணியாகவும் தியானம் செய்யவேண்டும்.

காயத்ரீயில் சகல வேதமந்திரசக்தியும் அடங்கியிருக்கிறது. எல்லா மந்திரங்களுக்கும் சக்தியைக் கொடுப்பது அதுதான். அதை ஜபிக்காவிட்டால் வேறு மந்திர ஜபத்திற்கு சக்தியில்லை.

'ஹிப்னாடிசம்' என்பதைக் கொண்டு பல செயல்களைப் புரிகிறார்கள்.

மோட்சத்திற்கு செல்ல உதவும் 'ஹிப்னாடிசம்' காயத்ரீ.

ஆசை அடங்கி, பிறவி எடுத்ததன் பலனை அடையச் செய்யும் ஹிப்னாடிசம் காயத்ரீ.

உலக விஷயங்களை குறைத்துக் கொண்டு இதை அதிகமாகச் செய்யவேண்டும் என்ற விரதத்துடன், சரீரத்தையும் பரிசுத்தமுடன் வைத்துக்கொள்ளவேண்டும்.

காயத்ரீ என்னும் பொறியானது அப்போது தான் அணையாமல் இருக்கும்.

(பரமாசார்யாரின் சதாபிஷேக விழா மலரிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ மகிமை

கீழ்ப் பரிணாமத்தில் உழலும் ஆன்மாக்கள் ஜட, பிராண மானசமாகிய முப்புறங்களிலும் பரவி மாறித் திரிந்து கொண்டிருக்கும். இந்நிலையில் அவை மாயையின் கைப் பொம்மையாகவே உழன்று கொண்டிருக்கும். இவ்வோயாத சுழற்சியிலிருந்து விடுபட்டு, மேல் பரிணாமத்துக்கு செல்ல வேண்டுமானால், இம் முப்புறங்களின் அருட் சக்தியாகிய காயத்ரீயின் பொறுப்பில் தம் வாழ்வை ஒப்படைக்க வேண்டும். பிரபஞ்சத்தை உருவாக்கிப் பெற்றளித்த உலகை மறந்து, உள்முகப்படும் முனிவர்களுக்கு இன்ப மழை பொழியும் மேகம் போன்ற அன்னை காயத்ரீ தன்னைச் சரணடைந்த ஜீவன்களை மாயைப் பிடியிலிருந்து விடுவித்து பேரின்பப் பெரு நெறியில் செலுத்துவாள்.

பிரபஞ்சத்தின் நடுவில் அனைத்தையும் இயக்கும் செயல் சக்தியாய், சகல சிறப்புகளையும் தன் காந்த மண்டலத்திருந்து வெளிப்படுத்திக் கொண்டு உயிர்களின் உடலிலும் குண்டலினி சக்தியாய் ஆறாதாரங்களில் உணர்வு மயமாய் சஞ்சரித்துக் கொண்டு சித்த புருடர்களுக்கு தன் ஜோதி ஸ்வரூபத்தில் காட்சியளித்தபடி தன்னை அண்டி வரும் பக்தர்களுக்கு சகல இன்பங்களையும் கொடுப்பவள் காயத்ரீ,

பிறவிப் பெரும் பிணியை அறுத்துப் பிறவாப் பேரின்பம் பெற விரும்புபவர்கள் தினமும் அதிகாலை எழுந்ததும் விழிப்படையும் மனதில் முதலில் வேறெந்த எண்ணத்தையும் பதிப்பியாமல், காயத்ரீயை நினைத்துவர வேண்டும். இப்படிச் செய்து வந்தால் அவர்களையறியாமலே சித்தத்தில் ஞான சக்தி உதித்து, வழிகாட்டி, உய்விக்கும், விரைவில் அப்பேரின்பானுபவத்தை பெற்று பெருமிதம் அடைவார்கள்.

அன்பு, இன்பம், பாசம் போன்ற சக்திகளைக் கொண்டு ஆன்ம கோடிகளைப் பரிணாமத்தில் சுழலச் செய்து கொண்டிருக்கும் காயத்ரீ, அதிலிருந்து மீள்வதற்கான ஞான சக்தியையும் கூடவே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். சில காலம் வரை முன்னைய சக்திகளால் மயங்கி பரிணாமத்தில் பிறந்திறந்து, உழன்று கொண்டிருக்கும் ஆன்மாக்கள் நாளா வட்டத்தில் அம்பிகையின் ஞான சக்தியை விழிப்பிக்கச் செய்து, மாயையை அகற்றி, பிறப் பிறப்பிலிருந்து விடுபட்டு பேரின்ப வாழ்வைப் பெறுகிறார்கள்.

சுபம்

பாரத மக்களை விரைவில் விழிக்கச் செய்யும்
சக்தி காயத்ரீ, மந்திரத்துக்கிருக்கிறது.
இதை ஜபிப்பவர்கள், கருத்து வேற்றுமை
பகைமை மனப்பான்மையை
கொள்ளமாட்டார்கள்.

- இரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி உபாசனை

காயத்ரி வேதமாதா, காயத்ரி எல்லா மந்திரங்களுக்கும் தாய், காயத்ரி உபாசனை எல்லா உபாசனைகளை விடவும் மேலானது. காயத்திரியை இதயத்தில் உடையவன் தெய்வத்தின் இதயத்தின் மத்தியில் வாழ்கிறான். மூன்று காலங்களிலும் சந்தியாவந்தனம் செய்பவன் பாவங்களைப் பூராவும் எரித்துவிட்டுப் புனிதனாகிறான். மூன்று காலங்களிலும் சந்தியோபாசனை செய்பவன், முக்காலங்களையும் உணர்ந்து வழிகாட்டு பவனாகிறான்.

சந்தியோபாசனையை விட்டவன் உயிர் போன உடம்பை உடையவன்.

வலுவிழந்த கிழட்டுச் சிங்கத்தைப் போன்றவன். படிகள் உடைந்து போன ஏணியைப் போன்றவன்.

கூரையில்லாத வீட்டைப் போன்றவன்.

கணவனை இழந்த கைம்பெண்ணைப் போன்றவன். சந்தியோபாசனைக்கு உரியவன் அதை விட்டு விட்டால் தானும் கெட்டுப் பிறரையும் கெடுத்து உலகைச் சாக்கடையாக்கி அதில் குளித்து ரசிப்பவனாகிறான். இவனைப் போன்ற முட்டாளை உலகில் பார்க்கவே முடியாது. ஏன் தெரியுமா? தலை வாழை இலையில் வேண்டிய அளவு விருந்து படைக்கப்பெற்ற பின்பும் சாப்பிடாமல் பசி பசி என்று கத்தும் நிலையில் ஒருவன் இருந்தால் என்ன சொல்வது? சாப்பிட்டால்தானே அவன் பசி போகும்?

வேதங்கூட மற்ற எல்லாத் தெய்வத்தையும் விட காயத்ரிதான் மேலானது என்று சொல்கிறது. பெரிய பெரிய பாப மூட்டைகளைக் கூட காயத்ரி மந்திரம் எரித்து விடுகிறது. எனவே தான் "காயத்திரியைக் கையில் வைத்திருந்தால் கவலையில்லை" என்கிறார்கள். காயத்ரியின் வலிமையால்தான் வசிட்டன், விசுவாமித்திரன் முன்பு புல்லைக்கொண்டு போராடி வெற்றி பெற முடிந்தது.

பலர் நாங்கள் வேறுவேறு மந்திரங்கள் ஜெபம் செய்கிறோம் என்கிறார்கள். காயத்ரி உபாசனைக்கு உரியவர்கள் மற்றவைகளை காயத்ரி இல்லாமல் செய்யக் கூடாது. பலன் இல்லை.

காயத்ரி தேவியைப் பற்றி நான்கு வேதங்களுமே வெகுவாகப் பேசுகின்றன. கிருஷ்ண பரமாத்மா தன்னை மாதங்களில் மார்கழி என்று சொன்னார். அதைப் போல மந்திரங்களில் நான் காயத்ரி என்று மகிழ்ச்சியுடன் அவர் சொல்லுகிறார். காயத்திரியின் பெருமையால் தான் மகாபாரதம் பிறந்தது. ராமாயணம் எழுந்தது. அந்த நூல்களில் உயிராக விளங்குவது காயத்திரியே. காயத்திரி தேவி காலங்களின் வடிவாகவும் விளங்குகிறாள். காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் அவள் மூன்று வடிவில் பிரகாசிக்கிறாள்.

பற்பல விதமான சிக்கல்கள் நிறைந்த வியாதிகள் உடைய மனிதர்கள் உண்டு. அவர்கள் பார்க்காத வைத்தியர் இல்லை. சாப்பிடாத மருந்து இல்லை. இத்தனை வைத்தியங்களைப் பார்த்தும் இவ்வளவு மருந்துகளைச் சாப்பிட்டும் பலன் என்னவோ ஒன்றுதான். அதுதான் நோய் மேலும் சிக்கலாகி விட்டது என்பது. நோய் போவதற்குப் பதில் பல புதிய நோய்கள் அங்கே தோன்றி வளர்ந்து நின்று விடுகின்றன. இந்தச் சிக்கல் நோயாளியால் மருத்துவனுக்கும் - மருந்துக்கும் கெட்ட பெயர். மருத்துவன் நோய் நீக்கும் தன்மையில் வல்லவனாக இருக்கலாம். மருந்தும் நோய் நீக்கும் சக்தி பெற்றிருக்கலாம் என்றாலும் இந்தச் சிக்கல் பேர்வழியால் மருந்தும் - மருத்துவனும் மகிமை குன்றிப் போகின்றனர். நோயின் ஆரம்பத்தில் அதன் காரணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து வழி கண்டிருந்தால் நோய் பெருகி யிருக்காது. நோய் நாடி மருத்துவம் செய்யும் மருத்துவனிடம் போகாமல் வந்த நோயாளி யைத் தனக்கு உதவும் வங்கியாக நினைப்பவ னிடம் போய் மேலும் மேலும் நோயைப் பெருக்கிக் கொண்டு வலுவிழந்து வாடுகின்ற னர். பயன் என்ன? இந்த உடல் நோயைப் போலவே மனிதர்களின் ஆத்ம நோயும், உடல் நோய் உடலை மட்டுமே வாட்டும். ஆத்ம நோய் அவன் வாழ்வைப் பாழாக்குகிறது. தரித்திரமும், பசிப்பிணியும் சேர்கிறது. உடலி லும் கூட உணர்ந்து முடிக்க முடியாத ஒவ் வொரு நோயும் கூடுகின்றது. வாழ்க்கைப் பாதையில் இடையூறுகள். இவன் வாழ்வை மற்றவன் தட்டிப் பறித்துச் சுவைத்து விட்டுப் போய் விடுகிறான். இவன் முயற்சிகள் இவ னுக்குத் தோல்வியையும், மற்றவனுக்கு வெற் றியையும் தருகின்றன. இப்படியே பல்வேறு நோய்கள் தனித்தனியும் கூடிக்குலவியும் மனி தனை வாட்டுகின்றன.

இத்தகைய நிலையில் மனிதன் பல மந்திரவா திகளை நாடுகிறான். அவனும் கிடைத்தது லாபம் என்றும், அடித்தது யோகம் என்றும் அகம கிழ்ந்து இவனை உறிஞ்சுகிறான். இவனை இதை ஜெபித்து வா என்று கூறி அதற்கு யந்தி ரம், தந்திரம், மந்திரம் என்று காசு பிடுங்கித் தன் கதையை வளர்க்கிறான். ஏமாந்த சோணகிரி அதையும் நம்புகிறான். எதைத் தின்றால் பித்தம் போகும் என்பவன் எதை வேண்டுமானாலும் தின்னத் தயாராகின்றான். பித்தம் போக இஞ்சி யைத் தின்ன வேண்டியவன் இஞ்சி உறைக் கும், கூடாது என்கிறான். வேம்பு கசக்கும், வேண்டாம் எனக்கு லவங்கம் கொடு, தின்கி றேன் - ஏலங்கொடு சுவையாக இருக்கும் என பேசுகிறான். இந்த மனித மனத்தை உணர்ந்த மனிதமன வியாபாரிகள் அதையே கொடுத்து நோயைப் பெருக்கி நாளை தனதாக்கிக் கொள் கின்றார்கள். இவர்களிலும் சில நல்லவர்களும் உண்டு. அவர்கள் நோய் நாடிப் பார்ப்பவர்கள். அவர்கள் நோயின் மூலகாரணத்தைக் கண்ட றிந்து அதற்குரிய மருந்தையே முதலில் தந்து நோயை உடனே போக்கி விடுகிறார்கள். இத னால் இவர்களுக்கு ரூபாய் வரவு குறைவாகிப் போகலாம். இருந்தாலும் உண்மையான சாந்தி யும், நோய் நீக்கி வைத்த புண்ணியமும் உண்டு. இவர்கள் மேலானவர்கள். இவர்கள் வாழ வேண்டும். மனிதர்களில் சந்தியோபாசனைக்கு உரியவர்களில் பலருக்கு வரும் வாழ்க்கை நோய் சந்தியோபாசனையை விட்டதாலேயே வந்தது. அவர்களுக்கு நேரான மருந்து சந்தியோ பாசனைதான். அவர்கள் இந்த மருந்தை விட்டு விட்டு நூறு மந்திரம் ஜெபித்தாலும் இந்த நூல் அறுபதுபோல் அவைகள் அறுந்தே போகும். இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்! வேறு மந்தி ரங்கள் வேண்டாம் என்பது அல்ல இதன் பொருள். வேர் இல்லாமல் தண்ணீர் ஊற்றி னால் செடி பிழைக்குமா? கண்ணில்லாமல் காட்சி காண முடியுமா? உயிரில்லாமல் உடலை வளர்க்க முடியுமா? எனவே மந்திரங்களின் வேர் காயத்திரி. மந்திரங்களாகிய உடலுக்கும் உயி ராக நிற்பது காயத்ரீ எனவே காயத்திரி தான் சிறந்தது. அதுதான் தாய். அதுதான் மூலம். எனவே சந்தியோபாசனையை விடக்கூடாது. காலங்கடந்து போனாலும் கூட சந்தியோபாச னைக் கர்மாவைச் செய்ய வேண்டும். அந்தப் பழக்கம் காலத்தில் செய்யும் புத்தியை உண்டாக் கும். காலங்கடந்து செய்ய மாட்டேன் என்று அதை விட்டுவிட்டால் என்ன லாபம்? காலங்க டந்து போகாமல் செய்ய வழிதேட வேண்டுமே தவிர விட்டுவிடக் கூடாது. காலந்தவறியதால் விட்டு விடுபவனைக் காட்டிலும் காலங்கடந்தா வது செய்பவன் புத்திசாலி, விட்டுவிட்டதால் ஏற்படும் பாபம். விடாமல் செய்ததால் ஏற்படு வதை விட மிக மிக அதிகம். காலத்தில் செய்வது தான் சிறப்பு. காலங்கடந்தாலும் செய்யும் மனம் வளர்ந்தால் காலத்தில் செய்ய காயத்திரி தேவி அருள் புரிவாள்.

சந்தியோபாசனை என்பது மூன்று காலங்க ளிலும் உள்ள கடமை. இது மும்மலங்களையும் அழிக்கும். காயத்திரி ஜெபத்தைச் செய்யாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வேதங்களையும் கரைத்துக் குடித்து மகிழ்ந்தாலும் பைசாவுக்கு லாபம் இல்லை. விழலுக்கு இறைத்த நீர்தான். மிகுந்த கஷ்டம் தான். அவன் ஸ்வரத்தோடு பாடும் வேதம் படப்பாட்டுப்போல, அது தனது நாதத்தால் பூமியைச் சுத்தப்படுத்தாது. வீட்டில் லஷ்மியை நிற்கச் செய்யாது. அது கர்த்தபம் பாட்டுப்பாடு வதுபோல, குடிகேடன் சாஸ்திரம் பேசுவது போல, பிரும்பராஷிடம் வேதம் கேட்டவன் நிலைதான் இவர்கள் வேதமும், சாஸ்திரமும். எனவே காயத்ரியை விட்டுவிடக் கூடாது. வேதத்திலும் கூட காயத்ரியே சிறந்தது. காயத் ரீம் யோந ஜூநாதி வ்ருதா தஸ்ய பரிஸ்ரம். காயத்திரியை உபாசிக்க வேண்டியவர்கள் ஏதோ புண்ணியத்திற்காக இதைச் செய்வதாக நினைக்கிறார்கள். காயத்திரி என்பது அவர்கள் பிறப்புடன் சேர்ந்து வந்தது. அவர்கள் அதற்கு கடன் பட்டவர்கள்.

கடன்பட்டவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் இல்லையென்றால் வட்டி ஏறி மேலும் கடன் பெருகிப் போகும். தேவர்கள், ரிஷிகள், பித்ருகள், மூவருக்கும் அவர்கள் கடன்பட்டவர்கள். அந்தக் கடனை ஒழுங்காகச் செலுத்தாவிட்டால் மீண்டும் கீழான நிலையிலே பிறந்து வாழ்க்கையில் நித்தம் போராடிப் போராடி, தோல்வியையே அடைவார்கள். எனவே காயத்ரியை விடக்கூடாது.

காயத்ரியின் பெருமையால்தான் உலகம் சமாதானத்தை அடைய முடியும். உண்மையான காயத்ரி உபாசகன் மற்றெல்லா உபாசகர்களை விடவும் பெரும் மனிதர்களை விடவும் மேலானவன். அவன் வாழ்வால் உலகம் பரிசுத்தமாகிறது. உனக்கு ஸ்வர்க்கம் வேண்டுமா? காயத்ரி வேண்டுமா? என்று கேட்டால் காயத்ரியே வேண்டும் என்று சொல். காயத்ரியால் ஒரு ஸ்வர்க்கத்தை உண்டாக்கிவிட முடியும். மனித சமுதாயத்தில் மனச்சாந்தியை நிலை நாட்ட முடியும். ஸ்வர்க்கம் போனால் நாடகம் முடிந்ததும் கொட்டகையை விட்டு வெளியே வருவது போல வந்துவிட வேண்டியதுதான். காசு செலவழிந்த பின்பு காசு தேட வேண்டுவது போல புண்ணியம் தேட முயல வேண்டி வந்துவிடும். ஸ்வர்க்கத்தைவிட காயத்ரியே மேலானது. காயத்திரியின் குழந்தைகளே காயத்ரியிடம் போங்கள் உங்கள் குற்றங்கள் மன்னிக்கப்படும். பாபங்கள் கழுவப்படும்.

சுபம்

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

ௐ காயத்ரீ நல்லறிவைக் கொடுக்கும் சாதனம், ௐ
ௐ காயத்ரீ ஜபத்தால் நல்லறிவைப் பெறுபவன் ௐ
வாழ்க்கையில் சிறந்ததைப் பெற்றவனாவான்.
மந்திரங்களில் இரத்தினம் போன்றது
ௐ காயத்ரீ. ௐ
ௐ - சுவாமி விவேகானந்தர் ௐ

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரீ — விஞ்ஞான விளக்கம்

முத்து, பவளம், தங்கம், நீலம், வெள்ளை நிறங்களில் ஐந்து முகங்கள், மூன்று கண்கள் சந்திரன் பதித்த இரத்தினக் கீரிடம் தரித்த, தத்துவப் பொருள் கொண்ட எழுத்து வடிவினள்; வரம் தரும் அபயம், அங்குசம், பாசம் சவுக்கு, கபாலம், கண்டகோடரி, சங்கு, சக்கரம், இரு தாமரைகள் தாங்கிய பத்துக் கைகளைக் கொண்ட காயத்ரீயைத் தியானிக்கிறேன்.

இது காயத்ரீயின் தியான வடிவம். இந்து சமயத்தில் இறைவனைப் பல்வேறு வடிவங்களில் வணங்குவதைப் பல தெய்வ வழிபாடெனப் பலர் கருதுகின்றனர். இக் கருத்து வலியுறஓர் உருவில் வழிபடுபவர் மறு உருவில் வழிபடுவதைத் தவறெனக் கருதக் காரணம் "உருவ வழிபாடு சரியல்ல" எனக் கருதும் ஆரிய சமாஜிகளும், மற்றச் சமயத்தவர்களும் உருவ வழிபாட்டின் ஆன்மிகத் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்களல்லர்.

ஆன்மிக நோக்குடன் பார்க்கும்போது இந்து சமயத்தின் பல்வேறு தெய்வ உருவங்கள் அரூபியான பரம்பொருளில் சில குறித்த தத்துவங்களை விளக்கும் குறிகளேயாகும். உருவையே கடவுளெனக் கருதுவது சரியல்ல. அவ்வுருவம் கற்பிக்கும் இலக்கணங்களையுடையவர் கடவுள் எனக் கொள்வது தான் பொருந்தும். மற்றச் சமயக் கோட்பாடுகளுக்கும் இது பொருந்தும். ஆன்மீகப் பார்வையில் அறிந்தால் சமயப் பிணக்குகள் அறுந்துவிடும்.

### கடவுளை அறியாமை

மனிதனுக்கும், மற்ற உயிர்களுக்கும் நேர்த் தொடர்பில்லாமல் கடவுள் எங்கே இருக்கிறார் என்று கேட்பது கடவுளை அறியாமையாகும். இப்பிரபஞ்சத்தின் மூலப்பொருள், மூலசக்தி, மூலகுணம், மூல உயிர் கடவுள் என அறிந்தால், பிரபஞ்சமெங்கும் கடவுள் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியும். அவரின் திரிபு நிலைகளைக் கொண்டு, அவரின் மூல நிலையை விளக்கவே தெய்வ உருவங்கள், வழிபாட்டுத் தலங்கள் தோன்றின. இந்து சமயத்தின் ஒவ்வொரு தெய்வ உருவம் (இடைக்காலத்தில் சமய வியாபாரிகளால் ஏற்படுத்தப்பட்ட பொருளற்ற உருவங்களைத் தவிர) இறைவனின் சில குணங்களையும் செயல்களையும் கற்பிப்பதாகும். தெய்வங்களின் மந்திர சாதனைக்கு மிகவும் முக்கியமான யோகியர், தபசிகளின் சாதனை மந்திரத் தெய்வமான காயத்ரீ தேவியின் உருவம் விளக்கும் உண்மைகளை இதில் சுருக்கமாக ஆராய்வோம்.

பிரபஞ்சமெல்லாம் அணுக்களின் கூட்டு என்று விஞ்ஞானம் சொல்லுகின்றது. பொருளாக இணைந்த நிலையில், அவை ஐந்து வகையாக இருந்து, கலந்து, பிரபஞ்சமாயிருக்கின்றனவென ஆன்மிகம் கூறுகிறது. இவ்வைந்தும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்கள். நிலம் என்றால் கடின நிலைப்பொருள்; நீர் - திரவங்கள்; நெருப்பு - அணுக்களாகத் திரியும் இயக்க நிலை; காற்று - அணு நிலை; ஆகாயம் - அணு சிதைந்த மின் நிலை எனக் கொள்ளலாம். பிரபஞ்சம் இவை வகை நிலைப் பொருள்களின் கலப்பானதே - பிரபஞ்சத்தின் எந்தச் சிறிய பொருளை எடுத்தாலும் அது இவ்வைந்தில் சிலவற்றில் கலப்பாகவேயிருக்கும். ஐந்து பூதங்களின் விளக்கமே காயத்ரீயின் ஐந்து முகங்கள். மூலப் பொருள் இவ்வைம்பூதங்களாய் அலைக்கழியும் போது, அவ்வலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்தில் வெளிப்படும் நிறங்களே, அவளின் முகச்சாயல்கள்.

தத்துவம் - பரம்பொருள் தன்னை ஐம்பூதங் களாகத் திரித்துக் கொண்டு பிரபஞ்சமாகத் திரிந்திருக்கிறார். ஐம்பூதங்களாகப் பிரபஞ் சத்தை ஆக்கியிருக்கிறார்.

கண்ணில்லாதவன் குருடன், எதுவும் அவ னுக்குத் தெரியாது. ஒளியை வகிப்பது கண் கள்; பிரபஞ்சத்தின் கண்கள் சூரியன், சந்தி ரன், அக்கினி, விளக்குகள், மின்னொளிகள் எல்லாம் சூரிய ஒளியின் திரிபுகளே. எண் ணெய், கரிப்பொருள்கள் அக்கினியிலிருந்து ஒளியாக வெளிப்படுகிறது. சூரிய ஒளி சூடா னது. பொருளை உண்டாக்குவது. சந்திர வொளி குளிர்ந்தது; பொருளை இறுக்குவது. அக்கினி பொருளைச் சிதைப்பது, ஆக்கல், அமைத்தல், அழித்தல் மூன்றைச் சூரியன், சந்திரன், அக்கினிகள் செய்கின்றன. இம் மூன்றே காயத்ரீயின், பரம் பொருளின் மூன்று கண்கள்.

தத்துவம் - ஆக்கல், அமைத்தல், அழித்தல் என்ற மூன்றையும் சூரியன், சந்திரன், அக்கினி வடிவாயிருந்து செய்பவர் பரம்பொருள். சூரி யன், சந்திரன், அக்கினி வழியாக ஆக்கியமைத் தழிப்பவர் கடவுள். மேற்சொன்ன இந்த தத்து வங்களும் இறைவனின் பிரபஞ்ச அமைப்பைப் பற்றியன. இவை உயிர்களுடன் இறைவனின் தொடர்பை விளக்கும் இலக்கணக் குறிகள்.

## பிரபஞ்சத்தில் உயிர்கள்

பிரபஞ்சத்தில் உயிர்கள் ஏன் பிறந்தன, பிறந்து இறக்கின்றன? பிரபஞ்ச வாழ்க்கையில் இன்பம் (போலியானதுதான்) நுகர்வதால் தான். இன்பம் இல்லையானால், வாழ யார் விரும்புவர்? மண்ணுலக இன்பத்தை விளக் கும் உயரிய பொருள்கள் இரத்தினங்கள்; கிரீடம் அதிகாரத்தை அரசுரிமையைக் குறிக் கும்; சந்திரன் இன்பத்தின் சிகரம். குளுகுளு வென இன்ப ஒளி வீசுவது; தேய்ந்து வளரும் இன்பத்தின் இலக்கணம் பிறை.

தத்துவம் - பிரபஞ்சத்தின் உயிர்களைப் பரிணாமத்தில் உழலச் செய்ய, பரம்பொருள் அவைகளின் அனுபவத்துக்கென இன்பம் தரும் பொருள்களை ஆக்கியிருக்கிறார். அவ் வின்பங்கள் பிறைபோல் தேய்ந்து வளர்பவை யானாலும் அவையே உயிர்களை ஆட்சி செய்கின்றன.

இனி அவள் தாங்கியிருக்கும் இலக்கண உண்மைகளைப் பார்ப்போம்:-

அங்குசம் - மதம் கொண்ட யானையை விருப்பம்போல் இயங்க விடாமல் அடக்குவது அங்குசம். அறியாமை, ஆணவம், கன்மம், எனும் மும்மலங்கள் பீரிடச் சீறியெழும் பசுக் களை நிலை பிறழ்ந்து விடாமலிருக்கும்படி அடக்குபவர் பரம்பொருள். பாசம் - தனியுயிர் உலகில் வாழாது. அதற்கு வேறு உயிரும், பொருள்களும் தேவை; மயக்கம், மாயை உயிர்களின் பாசத்தின் வழியாகத்தான் செயல் படுகின்றன. உலகில் எதன் மேலும் பாசம், பற்று இல்லையானால் உயிர்கள் உலகில் பிறக்கா. உயிர்கள்மேல் பாசக் கயிற்றை வீசி, அதனால் கட்டுபடச் செய்து இறைவன் விளை யாடுவதால்தான் உயிர்கள் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. உயிர்களுக்கு பாசத்தை உண்டாக்குபவர் பரமன். சவுக்கு - ஓடாதவை களை ஓடச் செய்ய அடிப்பது சவுக்கால், சவுக்கைக் கையில் ஓங்கியதும் குதிரைகள் ஓடும். உயிர்கள் மந்தமாய், சோர்வாய் இருக் கும்போது துன்பமாகும். சவுக்காலடித்து அவை களை வேகமாய் இயங்க வைப்பவன் இறை வன். துன்பத்தின் இலக்கணம் சவுக்கு. கபா லம் - இது திருவோடாகவும், தலைமண்டை யாகவும் (இதுவே சரி) குறிக்கப்படுகிறது. இறைவன் உயிர்களின் அறிவைத் தன் கைவ சம் கொண்டு தன் விருப்பம் போல் ஆட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

படைக்கிறான். திருவோடு முடிவில் உயிர் களை எல்லாம் தன்னுள் ஒடுக்கிக் கொள்கி றான். கபாலம் அறிவை இயக்கி, உயிர்களின் பரிணாமத்தை முடித்து வைப்பவன் இறை வன். கண்டகோடரி தீயோர்களை, தீமைகளை வெட்டி எறிவது, பிரபஞ்ச அமைப்பை, அஞ் ஞானத்தை வெட்டிப் பிளப்பது; தன் பக்தர்க ளின் துன்பங்களையும், பகைமைகளையும், அறிவின்மையையும் போக்கியருள்பவன் இறைவன். சங்கு இவ்வளவு காரியம் செய்யும் அப்பரமன் நாத வடிவானவன்; நாதம் என்றால் சப்தம் என்று மட்டும் பலர் பொருள்கொள்கின் றனர். நாதம் பொருள்களின் அதிர்ச்சியால் அசைவால்தான் பிறக்கிறதென நாம் அறி வோம். பலவகைச் சப்தங்கள் காற்றிலெழும் பலவகை அலைகள் பிரபஞ்சம் முழுவதும் ஓயாமல் அலைக்கழித்துக் கொண்டிருக்கும் கடல்; இவ்வலைக்கழியும் கடலைக் கடைந்து தான் விடத்தையும் அமிர்தத்தையும் பெற்றார் கள் தேவாசுரர்கள். பிரபஞ்சமுழுவதும் ஓயாத அலைகள். வகைவகையான அலைகள் அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வ லைகளின் வடிவாக இறைவன் இயங்கிப் பிரபஞ்சத்தையும் உயிர்களையும் இயக்குகி றான். பிரபஞ்சத்தை ஓயாமல் அலைக்கழித்துக் கொண்டு, சக்தியலைகள் வடிவாய் இறைவன் இருக்கிறான். சக்கரம்; வட்டமாகச் சுழல்வது சக்கரம். பிரபஞ்சத்தில் இப்படிவட்டமாகச் சுழ லாத பொருளேயில்லை. அணுக்கருவைச் சுற்றி அணுமின்கள் வட்டமிடுகின்றன. சூரிய னைச் சுற்றிக் கிரகங்கள் வட்டமிட்டுக் கொண் டிருக்கின்றன. சுழலும் வட்டமான சக்கரங்க ளால்தான் வாகனங்கள், இயந்திரங்கள் இயங் குகின்றன. பிரபஞ்சத்தையெல்லாம் மட்பாண் டத் தொழிலாளியின் சக்கரம்போல் ஓயாமல் சுழலச் செய்து கொண்டிருப்பவன் பரமன். சுழலும் பிரபஞ்சமாம் சக்கரத்தை தன் கையில் ஏந்தி இருப்பது இலக்கணம். இரு தாமரைகள் அறியாமையில் உழலும் வரை உலக இன்பங் களை மெஞ்ஞானம் பெற்றபின் ஆன்மீக இன்பத்தையும் உயிர்கள் அனுபவிக்கின்றன. இவ்விருவகை இகபர இன்பங்களை உயிர்க ளுக்குக் கொடுத்தருள்புரிபவன் பரம் பொருள். இறைவனை வேண்டி இவ்வுலக இன்பங்க ளைப் பெறலாம். அவனை வேண்டியே மறுவு லக இன்பங்களையும் பெறலாம்.தாமரை இன் பத்தின் இலக்கணம். அபயம் தன்னை நாடிய வர்களுக்கு, சரணடைந்தவர்களுக்கு எல்லாப் பயங்களையும் போக்கி துணிவைக் கொடுப்ப வர் கடவுள். பக்தர்களின் சகல பயங்களையும் பரமன் போக்கிக் காப்பாற்றுவார். தாமரையில் அமரல் பிரபஞ்சம் தாமரை வடிவானது. பிரகிரு திக் கடலிலிருந்து சக்திக்காம்பால் கடலுக்கு வெளியில் வந்து பல பல மண்டலங்களாக (இதழ்களாக) விரிந்த தாமரை பிரபஞ்சத் தாமரை; அதன் மேல் பிரபஞ்சத்தின் நடுமைச் சக்தியாய் அமர்ந்து பிரபஞ்சத்தை நடத்துவிப் பது பரம்பொருள். இதுவே காயத்ரீ தேவியினது உருவத்தின் ஆன்மிக விளக்கம்.

நம் மண்ணுலகத்தைப் பொறுத்தவரை மேலே விவரித்த எல்லாத் தன்மைகளுக்கும் இயக்கங்களுக்கும் சூரியனே கர்த்தா. சூரியக் கிரகணங்கள் மூலம் மண்ணுலகில் பொருள் கள் உண்டாகின்றன; அழிகின்றன; உருப்பெ றுகின்றன. சூரியக் கிரணங்கள் வழியாகவே உயிர்கள் மண்ணுலகுக்கு வருகின்றன. மண் ணுலகை விட்டுப் போகின்றன. நாராயணன், பிரம்மா, சிவன் முதலான எந்தத் தெய்வ விளக்கத்தையும் சூரியனில் பொருத்திக் காண லாம். மண்ணுலக வாசிகளுக்குச் சூரியனே விஷ்ணு. சிவன், பிரம்மா, பரமபிதா, கண்ணன் சகலமும், மண்ணுலகில் செயல்படும் சக்திக ளெல்லாம் சூரியன் மூலமே வருகின்றன. சூரியனே பரமண்டலத்திற்கும், மண்ணுலகத் துக்கும் இடையில் உள்ள சொர்க்க வாசல். இச் சூரியனின் சக்தியைத்தான் முன்பு சொன்ன இலக்கணங்கள் கொண்ட காயத்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மகாத்மா காந்தி**

காயத்ரீ மந்திரத்தின் ஜபம் நோயாளிகளைக் குணப்படுத்தவும் ஆத்மாவை முன்னேறச் செய்யவும் பயன்படுகிறது. திடசித்தமாகச் செய்யப்படும் காயத்ரீ ஜெபம் ஆபத்துக்களைக் காப்பாற்றும் திறமை பெறுகிறது.




**ராமகிருஷ்ண பரமஹம்ஸர்:**

கடினமான தெய்வ சாதனைகளை மக்கள் செய்ய வேண்டிய தேவையில்லை. சிறிதான காயத்ரீ ஜெபத்தைச் செய்து பாருங்கள், இதனாலேயே சகல சித்திகளும் உண்டாகிவிடும். சக்தி நிறைந்த சிறிய மந்திரம் காயத்ரீ.



**சுவாமி விவேகானந்தர்:**


காயத்ரீ நல்லறிவைக் கொடுக்கும் சாதனம், காயத்ரீ ஜபத்தால் நல்லறிவைப் பெறுபவன் வாழ்க்கையில் சிறந்ததைப் பெற்றவனாவான். மந்திரங்களில் இரத்தினம் போன்றது காயத்ரீ



**ரவீந்திரநாத் தாகூர்:**

பாரத மக்களை விரைவில் விழிக்கச் செய்யும் சக்தி காயத்ரீ, மந்திரத்துக்கிருக்கிறது. இதை ஜபிப்பவர்கள், கருத்து வேற்றுமை பகைமை மனப்பான்மையை கொள்ளமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ காயத்ரீ சித்தருக்கு பாத பூஜை




மதன் மோகன் மாளவியா

ரிஷிகள் நமக்குக் கொடுத்த அரிய இரத்தினங்களில் விலைமதிக்க முடியாதது காயத்ரீ காயத்ரீயால் அறிவு சுத்தமாகிறது. ஆத்மாவில் ஈஸ்வரஜோதி உதயமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக ஆன்றோர்கள் வழிபட்டார்கள். காயத்ரீ, சூரிய சக்தி காயத்ரீ மந்திரத்தாலெழும்,

சூக்கும அலை. இச்சூரிய சக்தி பிராண சக்தியை உடலில் மனதில் நிரப்புகிறது. காயம்த்ராயதி-பிராணனைக் காப்பாற்றுவது, தன்னைத் துதிப்பவர்களைக் காப்பாற்றுவது காயத்ரீ. காயத்ரீ மந்திர சாதனையால் உடல் மனங்களில் பிராணன் நிறைவதால் ஞானம் தோன்றி மாயையழிந்து மாமுனிவர் கண்ட ஆனந்தப் பெருவாழ்வாம் முக்தி கிடைக்கின்றது.

சுபம்

# காயத்ரி உபாசனா தீக்ஷை

முறையாகக் காயத்ரி உபாசனை செய்து, பயன்பெற விரும்பும் சன்மார்க்க சீலர்களுக்கு சாபமோசனம் செய்வித்து, காயத்ரீ தீக்ஷை அளிக்கப்படும்.

சாதாரணமாக வேறு எப்படியும் தெரிந்து கொள்ள முடியாத இரகஸ்யங்கள் பாடங்களில் அடங்கியிருக்கும், தெய்வ இரகசியங்கள் நவீன விஞ்ஞான விளக்கங்களுடன் தெரிந்து கொள்ள இது அரிய வாய்ப்பு, பல வகை சாதனைகள் படிப்படியாய்க் கற்பிக்கப்படும்.

சகல தெய்வ உபாசனா முறைகள் கற்பிக்கப் பட்டு, உபாசனா தீக்ஷை அளிக்கப்படுகிறது. யோக வித்தியா, காயத்ரி உபாசனா, மனித காந்த விஞ்ஞானம், சித்மன் பயிற்சி, பிராணா யாம விஞ்ஞானம் முதலான பல்வேறு ஆன்மீ கக் கலைகள் விளக்கங்களுடனும் அனுபவப் பயிற்சிகளுடன்ும் கற்பிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாமிருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ரயம் பகம் யஜா மஹே ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம் உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யூர் முஷிய மாம்ருதாத்

## பொருள்

தன்மணம் நிறைந்தவராய் உயிர்கள் அனைத்தையும் நன்கு போஷிக்கும் முக்கண்ணனாகிய சிவபெருமானை நாம் வணங்குகிறோம்; அவர் எவ்வாறு வெள்ளரிப்பழம் கொடியின் பந்தத்தினின்று விடுபடுகிறதோ, அவ்வாறே நம்மை மரணத்தினின்று விடுவித்து அளவற்ற பதத்தை ? அருள்வாராக.

## நன்மைகள்

1. இந்த மகா மிருத்யுஞ்ஜய மந்திரம் ஓர் உயிர் வழங்கும் மந்திரம் ஆகும். இந்நாட்களில் நம் உயிர்க்குப் பல வகைகளில் எதிர்பாராத நிலையில் இன்னல்கள் ஏற்படுகின்றன. இம் மந்திரம் பாம்புக்கடி, மின்னல், மோட்டார் விபத்துகள், தீ விபத்து, பைசிக்கிள் விபத்து, வெள்ளப் பெருக்கு, விமான விபத்து முதலிய எல்லா விபத்துகளாலும் மரணம் ஏற்படுவதைத் தடுக்கிறது. மேலும் இதற்கு நோய் நிவர்த்திக்கும் சக்தியும் உண்டு. தவிரவும் இம் மந்திரம் உண்மையோடும், நம்பிக்கையோடும், பக்தியோடும் பூஜித்தால் மருத்துவ வல்லுநர்களாலும் தீராது என்று கைவிடப்பட்ட பிணிகளும் போக்கப்படுகின்றன. இது வியாதிகளை நீக்கும் ஆயுதம்; மரணத்தை வெல்லும் மந்திரம்.


2. இது மோட்ச மந்திரமுமாகும். இது நீண்ட ஆயுள், சாந்தி, செல்வம், நல்வாழ்வு, திருப்தி, மோட்சம் ஆகியவற்றை அளிக்கவல்லது.

3. உங்கள் பிறந்த தினத்தில், இம்மந்திரத்தை லக்ஷம் ஆவர்த்தி அல்லது ஐம்பதாயிரமாவது ஜெபித்து, ஹோமம் செய்து, சாதுக்களுக்கும், ஏழை எளியோருக்கும், நோயாளிகளுக்கும் அன்னம் அளியுங்கள். அது உங்களுக்கு நீண்ட ஆயுளையும் சாந்தியையும், நல்வாழ்வையும் அளிக்கும்.

4. மனது பரமாத்மாவைப் பற்றிய மெய்யறிவைப் பெற்றுப் பழுக்கும்போது, ஆத்மா ஜனன மரண பந்தங்களினின்று விடுபடுகிறது. முக்கண் படைத்த சிவபெருமானாகிய, திரயம்பகனின் அருளால் அடையப்படும் சிறப்புவகையான மோட்சத்தைத் திரயம்பக மந்திரம் சுருக்கிக் கூறுகிறது. எவ்வாறு வெள்ளரிப்பழம் தன் காம்பிலிருந்து வேறாகிறதோ அதேபோல், ஒருவன் சிவகிருபையால் மரணத்தினின்று விடுபடுகிறான் என்னும் அர்த்தத்தை இம் மந்திரம் அளிக்கிறது. காயாயிருக்கும்போது கசப்பாகவாவது புளிப்பாகவாவது இருந்தாலும், எந்தப் பழமும் நன்றாகப் பழுக்கும்போது இனிப்பாகிறது. இதேபோல் பக்தியால் ஆத்மா கனியும் போது, அது ஞானத்திலிருந்துவரும் இனிமையாலும், இன்பத்தாலும் நிறைகிறது. எல்லாப் பழங்களும் மேல் கிளைகளினின்றும் கீழே வேரண்டை விழுகின்றன; இதன் மூலம் அவை தங்களுக்கு வேர்களே உற்பத்தி ஸ்தானமும், ஆதாரமும், இறுதிப் புகலிடமும் என்று காட்டுகின்றன போலும். ஆனாலும் பழுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹா மிருத்யுஞ்ஜெய தேவன்



ஓம் த்ரயம் பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த்தனம்
ஊர்வாருக மிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா மேலே வேர்களும் "ஊர்த்வ மூலம்" கீழே கிளைகளும் கொண்ட சம்சார விருட்சத்தின் பழமாகும். ஆகவே, விடுபட்ட ஆத்மாவின் மார்க்கம் மேல் நோக்கி அதாவது ஊர்த்வ கதி, திட்டமாகக் கூறுமிடத்து, அந்த ஆத்மாவுக்குப் போக்கிடம் அல்லது கதி என்பதில்லை; அது இருக்கும் அதே இடத்திலேயே விடுதலை அடைகிறது. அதனால் தான் வெள்ளரிப்பழ உதாரணம் கொடுக்கப்படுகிறது. இந்தப் பழம் கீழே விழுவதில்லை; காம்பிலிருந்து வேறுபடுகிறது. அல்லது பழம் அறியாமலேயே காம்புடைந்த ஆத்மா உலகத்தை விட்டுவிடுகிறது. இந்த வாழ்க்கை மேற்கொண்டு பிறப்பு இறப்புக்களை ஒழிக்கவே அருளப்பட்டிருக்கிறது என்பதை நம் நினைவுகூர்ந்து, நமது இதயத்தை இடம் கொண்ட இறைவனிடம் இவ்வகையான ஆத்ம கைவல்யத்தை "வெள்ளரிக்கனி முக்தி"யை நாம் அடைய அருகதையை அருளும்படி பிரார்த்திப்போமாக.

ஹரி ஓம் தத்ஸத்

## ஸ்ரீ மிருத்யுஞ்ஜய யந்திரம்

அதர்வண வேத - ரோகநாசன மந்திர முறைப்படி பிராண பிரதிஷ்டை, உபசாரம், மந்திர ஜெபம், வேள்வி முதலியவைகள் செய்த போட்டோ யந்திரம்.

இந்த சக்திவாய்ந்த யந்திரம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டியது. நேரில் வந்து ஆசிர்வாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

பிராண பிரதிஷ்டை செய்த ஸ்ரீ மிருத்யுஞ்ஜய தேவனின் மூவர்ணப்படம். இல்லங்கள் தோறும் வைத்துப் பூஜிக்கக் கூடியது.

ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில், சிவபெருமான் ஸ்ரீ மிருத்யுஞ்ஜய தேவனாக எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் வழங்கி வருகிறார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரிஷிகளின் மர்மவாசம்!

"மகரிஷிகள் இருக்கிறார்களா? என்பதே இன்று பலருக்கு நம்பமுடியாத செய்தியாக இருக்கும். ஆனால் நாளுக்கு நாள் இவர்களின் இருப்பிடத்தையறிந்து, நேரில் சென்று, பல ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து, சாதனைகள் பயின்று வரும், ஆண்கள், பெண்கள் மேதைகள், ஆன்ம ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள், ரிஷிகளின் ஆசிரமங்களுக்கு வந்து, உண்மையறிந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்.இத்தகையவர்களின் யாத்திரை அனுபவங்கள் அவ்வப்போது பல ஆன்மிகப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ஆன்மிகப் பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கம் மிகப் பெரும்பாலானவர்களுக்கு இல்லையாகையால் அவர்கள் இதைப்புரிந்து கொள்ள முடிவதேயில்லை.

## மகரிஷிகளின் கேந்திரம்

இமய கிரியின் கிழக்குப் பகுதியின் பின்புறத்தில் தீபேத்தியப் பீடபூமியின் தெற்குப் பக்கத்தில், அடர்ந்த மலைகளும், காடுகளும், பள்ளங்களும், மேடுகளும், நிறைந்த இடத்தின் நடுவில் சம்பளம் என்ற கிராமிய சூழ்நிலை கொண்ட சூட்சும ஆசிரமத்தில் ரிஷிகளின் மத்திய கேந்திரம் இருக்கிறது. இதை ஆன்மிக நெறியில் முன்னேறிய பல ஆண்கள், பெண்கள் சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். தனிப்பட்ட எந்த மனிதனும் இவ்விடத்தைக கண்டு கொண்டு செல்ல முடியாது. இப்படி ஓர் இடம் இருப்பதாக விமானத்தில் பறந்து செல்பவர்களுக்கும் பார்க்க முடியாது. ஏனென்றால் இதன் அமைப்பு மனிதனின் சாதாரண பார்வைக்குத் தெரியாத வண்ணம் உள்ளது. ஆசிரமத்தைச் சேர்ந்த யாராவது வழிகாட்டி அழைத்துச் சென்றாலொழிய உலகத்திலுள்ள யாரும் இதைக் காண முடியாது.

உலகத்தின் மத்திய கேந்திரமாக சம்பளம் இருக்க, உலகின் வேறு ,பல பாகங்களில் அதன் கிளைகளாகச் சிறிய ஆசிரமங்கள், அதேபோன்ற சூக்ஷ்ம அமைப்பில் செயல்பட்டு வருகின்றன. இங்கும் அவ்வப்போது பல ஆன்மிகர்கள் வந்து, சாதனை பயின்று செல்கின்றார்கள். தென்னிந்தியாவிலும் இப்படியொரு கிளையிருக்கிறது. இதன் தலைவராக தமிழகத்தின் தமிழ்ப் பண்பாடுகளின் தந்தையென்று சொல்லும் அகத்தியனார் இருந்து வருகிறார். அகத்திய ஆசிரமம் என்ற பெயரில் மருத்துவமனைகளையும் யோகம் எனப் பெரிய ஆசிரமங்களையும் வைத்து நடத்தும் பலருக்கு அகத்தியனார் இன்னும் இருக்கிறார் என்பதே நம்ப முடியாத செய்தியாயிருக்கும். அவர் தமிழ் நாட்டுக்கு வந்து முதலில் தங்கியிருந்த பொதிகை மலையில் இப்போது இல்லை. நெடுங்காலமாக மேற்கத்திய மலைத்தொடரின் ஒரு பகுதியில் நீலகிரி மலையின் சாரலையடுத்து, மலைகளின் நடுவில் சம்பளம் போன்ற சூக்கும ஆசிரமத்தில் அவர் சிரஞ்சீவியாயிருந்து, தென்னிந்தியாவின் உயிர்களுடையனவும் இல்லாதனவுமான பொருள்களின் பரிணாமத்தை நடத்தி வருகிறார்.

## மேலை விஞ்ஞானி வருகை

சில காலத்துக்கு முன் ஒரு மேல் நாட்டு விஞ்ஞானி இங்கு வந்து பலகாலம் தங்கிச் சென்றபின் எழுதிய நூலில் "நான் நீலகிரிச் சாரலிலுள்ள மாபெரும் முனிவரைச் சந்தித்தேன்." என்று எழுதியிருக்கிறார். இவர்தான் முதன் முதலில் ரிஷிகளின் வரை படத்தை மகரிஷிகளின் உத்தரவின் பேரில் ரிஷிகளின் தொடர்புள்ளவர்களுக்கு காட்டியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரின் கண்களுக்குப் புலனாகாமல் கரந்துறையும் மகரிஷிகள் எப்போதுமே மனிதரிடை வராமல் இருப்பதில்லை. அவ்வப்போது மாறு வேடங்களில் மனிதரிடை வரவே செய்கிறார்கள். இங்கிலாந்தில் அரசி விக்டோரியா மகாராணியின் பட்டாபிஷேகத்தின் போது, மகரிஷிகள் வெண்புரவிகளிலேறி, ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். அவர்கள் எப்போதும் மனித உலகத்தில் வாழாத மகரிஷிகள்தாம் என்பதை அறிந்து மகாராணியார் இத்தகவலைத் தன் வரலாற்றில் எழுதி வைத்திருக்கிறார். அவ்வப்போது உலகின் சமூகங்கள் சமுதாயங்களில் நடைபெறும் பெரிய காரியங்களில் அவர்கள் மாறுவேடத்தில் வந்து பங்கு கொள்கிறார்கள். ரிஷி பாரம்பரிய வழியில் சாதனை புரிபவர்களுக்கு அவ்வப்போது மாறு வேடங்களில் வந்து சில உபதேசங்களைச் செய்து செல்கிறார்கள். இப்படியெல்லாம் இவர்கள் மக்களிடை தோன்றிச்செல்லக் காரணம் தம் வழியில் நிற்கும் அவர்களின் சுப காரியங்கள் செவ்வனே நடைபெற, அவர்களுக்குக் காந்த சக்தியை உதவுவதற்குத்தான். அவர்கள் இருக்கும் இடங்களில் தெய்வீகக் காந்த சக்தி அலைக்கழியும்; அதன் பிரபந்தத்தால் அங்குள்ள அனைத்தும் நலமடையும். நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் மகரிஷிகள் தொடர்புடையது. அங்கு அடிக்கடி மகரிஷிகள் சூக்ஷ்ம சரீரத்தில் வந்து போகிறார்கள்.

## மண்ணுலகப் பரிணாமம்

மண்ணுலகப் பரிணாமத்தைத் திட்டமிட்டு நடத்த ஆண்டுக்கொருமுறை எல்லாக் கேந்திரங்களிலுமுள்ள ரிஷிகளும் சம்பளக் கிராமத்தில் கூடுகிறார்கள். அப்போது அவர்கள் உலகில் எங்கெங்கு என்னென்ன விதமான பரிணாமத்தைச் செய்ய வேண்டும். எங்கெங்கு அழிக்க வேண்டும். எங்கெங்கு ஆக்கவேண்டுமென்றுதிட்டம் தீட்டுகிறார்கள். ''வைகாசி மாதம் பௌர்ணமி''யன்று தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு அக்காலம்வரை ஆன்மசாதனையைத் தகுந்த முறையில் பயின்றவர்கள் நேர்முகமாய் அழைக்கப்பட்டுச் செல்கிறார்கள். அந்த அளவுக்குப் பண்படாதவர்கள் தம் அகக்கண் நோக்கால் சூக்ஷ்ம சரீர யாத்திரையால் அதைக்கண்டு பயனடைகிறார்கள்.

மகரிஷிகள் அனைவரும் கூடும் அச்சமயம் அவர்களின் கூட்டுக் காந்தம் மண்ணுலக வானப் பரப்பு முழுவதும் பரவுகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளவே அன்று ஆன்மீகக் கூடங்களிலுள்ளவர்கள் எல்லாம் அங்கங்கு கூடித்தியான நிலையில் ஆழ்கின்றனர். அந்தக் காந்த சக்தி பரவும் மாதமாகிய வைகாசியில் உலகின் பல ஆன்மீக மேதைகள் பிறந்திருக்கிறார்கள். புத்தர், வியாசர், திருவள்ளுவர், இந்நூலாசிரியர் ஆகியோர் இந்த மாதத்தில் பிறந்தவர்கள்தான்.

## புராணத்திலுள்ள உண்மை

மகரிஷிகளின் தலைமை அவ்வப்போது மாறுகிறது. நம் மந்திரிகள் எப்படி அவ்வப்போது மாறுகிறார்களோ, அப்படி மகரிஷிகளும் தலைமையை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்கிறார்கள். கலியுகம் ஆரம்பமாகும்வரை உலக ரிஷிகளின் குழுவுக்குத் தலைமை வகித்தவர், 18 புராணங்களையும், கீதையையும் எழுதிய வியாசமாமுனிவராவர். கலியுக ஆரம்பத்தில் மைத்ரேயருக்குத் தலைமைப் பதவியளிக்கப்பட்டுள்ளது. இவ் விவரங்கள் கதாரூபமாகப் புராணங்கள் பலவற்றில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், புராணங்களைக் கதைகளாவே நினைத்துப் படிப்பவர்களுக்கு அவற்றில் இருக்கும் இந்த நடைமுறை உண்மை புலப்படுவதில்லை.

அகத்தியர், மைத்ரேயர், புலஸ்தியர், வசிஷ்டர் போன்ற சப்தரிஷிகள் நிரந்தரமாய் மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைக் கேந்திரங்களில் சிரஞ்சீவிகளாயிருந்து பரிணாமத்தை நடத்தி வருகிறார்களானாலும் இடையிடையே அவர்கள் வழியில் நின்று கடுமையான சாதனைகள் புரிந்து அதனால் தம் உடலின் பரிணாமத்தை கட்டுப்படுத்தக்கூடிய அளவு வெற்றியடைந்து பலரும் அவ்வப் போது மகரிஷிகளின் ஆணையின் பேரில் செயல்படுபவர்களாக உலகின் பல கேந்திரங்களிலிருந்து பணியாற்றி வருகிறார்கள். சித்தியடைந்த சித்தர்கள் பலரும் இப்படியிருந்து வருகிறார்கள். உலகின் பரிணாமத்தை நேர்முகமாய் நடத்தவேண்டிய இடங்களில் இத்தகையவர்கள் பங்கு கொண்டு நடத்தி வைக்கிறார்கள். சமயா சமயங்களில் இவர்களில் சிலர் சில குடும்பங்களில் பிறந்து, வளர்ந்து சில அற்புதங்களை செய்து, மக்களைத் திசை திருப்பிவிட்டுப் பின் மரணம் போன்ற நிலையில் உடலை விட்டுச் சென்று தம் பழைய உடம்பையேற்றுக் கொள்கிறார்கள். சமயாசாரிகளாய் தோன்றி மறைந்தவர்கள் பலரும் இத்தகையவர்களேயாவர்.

## ஆன்ம வித்தையின் பயன்

அற்ப நாட்களில் முடியும் வாழ்க்கையை, அற்ப நேரத்தில் மறையும் பௌதிக இன்பத்தை, உண்மையென நம்பி வாழ்பவர்களுக்கு கண்ணுக்குத் தெரியும் மனிதனுக்குள் கண்ணுக்குத் தெரியாத மனிதனொருவனுண்டென்று கருத முடியாதவர்களுக்கு பௌதிக இயக்கங்களெல்லாம் தானாக நடைபெறுபவையெனத் தவறாகக் கருதிக் கொண்டிருப்பவர்களுக்கு, உண்பதும், உறங்குவதும், மக்களைப் பெறுவதையும் தவிர மனிதன் செய்ய வேண்டியது வேறொன்றுமில்லையென்று நம்பி வாழ்பவர்களுக்கு, கண்ணுக்குத் தெரியாத ஓர் உலகம் இருக்கிறதென்பதை புரிந்து கொள்ளாதவர்களுக்கு, இதுவரை நான் சொலிவந்த உண்மைகள், கட்டுக்கதைகளாக, நம்ப முடியாதவைகளாயிருக்கும். ஆனால் இதை நம்பும், பயன்கொள்ளும் ஆயிரக்கணக்கானவர்கள் இதே உலகில் இருக்கிறார்கள். நம்பாதவர்களைப் புத்தகங்களைக் கொண்டும் சொற்பொழிவுகளைக் கொண்டும் நம்பவைத்துவிட முடியாது. இந்த உண்மைகள் அந்த மரபுக்கு மாறானவை. அதனால்தான் இதை அறியாதவர்களுக்கு மெய்ப்பிக்க யாரும் துணியவில்லை. நாமும் இதை அறியக்கூடிய அளவு ஆன்ம வித்தையில் பண்பட்டவர்களுக்காகவென்றே எழுதி வெளியிடுகிறோம். அத்தகையவர்கள் எம்முடைய இந்த விளக்கத்தால் உள்ளத்தில் உறுதி பெற்று, தம் சாதனையில் வேகமாய் முன்னேறி விரைவில் மாமுனிவர்களை நேருக்கு நேராகத் தரிசிக்கும் பேற்றைப் பெறுவார்களென நம்புகிறோம்.

வாழ்க ஆன்மீகம்! வளர்க தெய்வீகம்! ஓங்குக முனிவர் புகழ்!!!

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம விஞ்ஞானம்

264 M4R AR

"நான்" என்ற இந்தச் சொல்லை, ஒவ்வொரு மனிதனும், தினந்தோறும் காலைமுதல், இரவில் தன்னை மறந்து உறங்கும் வரை, ஆயிரம் முறைகள் உச்சரிக்கிறான்." இப்படி அவன் செய்யும் காரியங்களனைத்துக்கும் முன் "நான்" சேர்க்கிறான். இந்த "நான்" எதைக் குறிக்கிறது.?

## "நான்" உடலல்ல

உடலே நானாயிருந்தால் உறக்கத்திலும் "நான்" இருக்க வேண்டும். மரணத்தின் பின்னும் நானிருக்க வேண்டும்; மயக்க நிலையிலும் நான் இருக்க வேண்டும்; மயக்கம் கொடுத்து உடலை ஆபரேஷன் செய்யும் போது நான் அறுபடுவதாக உணர வேண்டும். அதனால் உடல் "நான்" அல்ல, உடலில் "நான்" இருக்கிறேன். எனக்கு ஒரு வீடு, வாசல், தோட்டம், துரவு இருப்பது போல் ஒரு உடல் இருக்கிறது. அதனால் தான் என்னுடைய வீடு, என்னுடைய தோட்டம் என்பது போல் என்னுடைய உடல், என்னுடைய கண், என்னுடைய கால் என்கிறேன். அதனால் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையுள்ள மாமிசபிண்டமாகிய உடல் "நான்" அல்ல.

## மாறுதலில் மாறாதது "நான்"

ஏழாண்டுகளுக்கொருமுறை மனித உடல் முழுதும் புது அணுக்களால் புதுப்பிக்கப்படுகிறது. குழந்தையின் உடலுக்கும், வாலிபனின் உடலுக்கும், கிழவனின் உடலுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. மனமும் இப்படியே மனிதனில் மாறிக்கொண்டிருக்கிறது. எப்போது கலங்கிய மனமிருந்தது, இப்போது தெளிந்த மனமிருக்கிறது. புத்தியும் மாறுகிறது. இப்போதிருக்கும் புத்தி அப்போதெனக்கிருக்கவில்லை. உடலின் இடை, அளவு, அழகு, தோற்றம் எல்லாம் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இப்படி மாறும் உடல், மனம், புத்திகளுடன் "நான்" மாறாதவனாயிருக்கின்றேன். குழந்தையின் உடலில் இருந்த அவனே தான் "நான்" மாறும் பொருள்களில் மாறாமல் இருப்பவன் நான்.

## மனம் "நான்" அல்ல

கண்ணால் பார்க்கிறேன்; காதால் கேட்கிறேன்; இது போல் மனதால் நினைக்கிறேன். கண்ணும், காதும் என் தொடர்பில்லாமல் இயங்காதவை. என் மனம் என் தொடர்பில்லாமல் இயங்கும் ஒரு கருவி. ஆனால் எப்போது வேண்டுமானாலும் நான் மனதைப் பற்றி, தனக்கு வேண்டுமானதை நினைக்கமுடியும். நான் அதைப் பற்றாத போதும் அது தானாக இயங்கிக் கொண்டு தானிருக்குமானாலும் அதை நான் அறிவதில்லை. நான் ஆழ்ந்து தூங்கும்போது என்மனம் இயங்கிக்கொண்டு தான் இருக்கிறது. சிலசமயம் நான் உறங்கிக் கொண்டிருக்கும்போது, மனம் உடலை இயக்கி எழுந்து நடமாடவும் செய்கிறது. உண்ணச் செய்கிறது, ஆனால் இவையாவும் எனக்குத் தெரியாது, ஏனென்றால் நான் அப்போது மனதுடன் இருக்கவில்லை. ஆகவே மனம் "நான்" அல்ல.

## புத்தி "நான்" அல்ல

சில வருஷங்களுக்கு முன்னால் எனக்கு இப்போதிருக்கும் புத்தியிருக்கவில்லை. நான் இன்னும் மேல் படிப்பு படித்துக்கொண்டிருக்கிறேனாகையால் என் புத்தி வளர்ந்து கொண்டேயிருக்கிறது. புத்திகெட்டுப் போனதால் இப்படிப்பட்ட காரியம் நடந்துவிட்டது. புத்தி வளர்ந்



161538
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
ARCHIVES

ததால் நான் வளரவில்லை, புத்திகெட்டதால் நான் கெட்டுப் போகவில்லை, புத்தி மாறிய தால் நான் மாறிப்போகவில்லை. படித்தால் புத்தி வளரும், படிக்காவிட்டால் புத்தி வள ராது. படித்தாலும், படிக்காவிட்டாலும், புத்திசா லியாக இருந்தாலும், மூடனாக இருந்தாலும் ''நான்'' இருப்பேன். அதனால் புத்தி ''நான்'' அல்ல.

## ''நான்'' உடலை ஆள்பவன்

''நான் சாப்பிடுகிறேன்'' என்று சொல்லும் போது வாய் உணவைமென்று, தொண்டை யில் இறக்க, அது இரப்பைக்குள் தள்ளும் காரியத்தைத் தான் குறிக்கிறேன். வாய், தொண்டை, இரப்பையெதுவும் ''நான்'' அல்ல. ஆனாலும் நான் விரும்பும்போது தான் இக்காரியங்கள் நடக்கின்றன. நான் விரும்பும் போதல்லாமல் மற்ற சமயம் என் வாய் எதை யும்மெல்லாது. நான் விரும்பும்போதுதான் கால் கள் நடக்கின்றன. நான் வேண்டும் போது தான் கைகள் உயருகின்றன. உடல் நானல்ல வானாலும், அதன் காரியம் என் விருப்பத்தின் மேல் தான் நடைபெறுகிறது. நான் காதின் வழியாக சங்கீதரசனையில் ஈடுபட்டிருக்கும் போது, என் கண்முன் வந்தவரை நான் தெரிந்துகொள்ளவில்லை. அதனால் உடலின் காரியங்கள் என் இச்சையின்பேரில் தான் நடக்கின்றன. ''நான்'' உடலை ஆள்பவன், உடலின் எஜமானன்.

## ''நான் மனதை இயக்குபவன்

தெருவழியாகச் செல்கிறேன். கண்ணில் பல பொருள்கள் படுகின்றன. ஆனால் நான் எதைக் கவனம் கொண்டு பார்க்கிறேனோ அதுமட்டும்தான் என் மனதில் பதிகிறது, பிறகு நினைவுக்கு வருகிறது. நான் கவனம் செலுத் தாதவை, கண்ணில் பட்டிருந்தாலும் மனதில் பதிவதில்லை, அதனால் பிறகு நினைவுக்கு வருவதில்லை. என் தொடர்பில்லாதபோது அதை மனம் நினைத்துக்கொண்டிருந்தாலும் நான் மனதைப்பற்றி எனக்கு வேண்டுமான வைகளைப்பற்றி நினைக்கச் செய்யமுடியும். மனம் எதையெல்லாம் நினைக்கிறதோ, அதெல்லாம் என்னால் கவனம்கொண்டு மன தில் பதிப்பிக்கப்பட்டவையே நான் கவனம் செலுத்தியிராத எதைப்பற்றியும் மனம் நினைக் காது. அதனால் மனதை ஆள்பவன் ''நான்''.

## இன்ப துன்ப அனுபவகர்த்தா ''நான்''

காலில் அடிபட்டது, நான் இல்லாவிட்டால் அதற்காக உடலில் எதுவுமே தென்படாது. அடியை விலக்க முயற்சியும் நடைபெறாது. நிறையப் பொருள் கையில் கிடைத்தபோது மகிழ்பவன் நான். நான் இல்லாவிட்டால் முகத்தில் சந்தோஷக்குறி தோன்றாது. சுவை யால் இன்பம் பெறுவது நாக்கல்ல ''நான்'' அழகை ரசிப்பது கண்ணல்ல நான். உடலின் உதவிக்கொண்டு, உடலை என் இச்சைப்படி இயக்கி உடலில் இன்ப, துன்பங்களை அனுப விக்கும் கர்த்தா ''நான்''.

உடல், மனம், புத்தி முதலான கருவிகளின் கர்த்தாவால் அவைகளை இச்சைப்படி இயக்கி, உலக இன்பதுன்பங்களை அனுபவிக்கும் '' நான்'' உடலல்ல, மனமல்ல, பொறியல்ல, புத்தியல்ல, ''ஆன்மா''. ஐம்பொறிகளின் வழி யாக உலகை அறிபவன், கர்மேந்திரியங்களின் வழியாக உடலை இயக்குபவன், மனதின் வழியாக நினைப்பவன், புத்தியின் வழியாக அறிபவன் ''நான்'' ஆன்மா. நான் இல்லாவிட் டால் உடல், மனம், புத்திகள் வேலைசெய்யா, அதனால் நான் இவைகளை இயக்கும் சக்தி யாக உடலில் இருக்கிறேன். நான் ''ஆன்ம சக்தி''-எப்போதும் உடலின், மனதின், புத்தி யின் நிலையை வளர்த்து, தகுந்த பரிகாரம் தேட முயற்சிப்பவன் நானாகையால் ''நான்'' உணர்வு மயமானவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ஞான கணேசர்



புனித நர்மதா நதியில் கண்டெடுத்த பிரதிஷ்டை
செய்யப்பட்டுள்ள ஸ்ரீ இலங்காதீஸ்வரர் - சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் தாம்திர மஹாகாளி



ஸ்ரீ காயத்ரீ தேவி முன் காயத்ரீ சித்தர்
தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதன்" என்ற உருவில் செயல்படும் உணர்வு, உருவை இயக்கும் சக்தி, அவைகளால் இன்ப துன்பமடையும் அனுபவி - ஆன்மா.

உடலில் அனுபவு சக்தி உணர்வாகச் செயல்படுவது ஆன்மா.

சுபம்

காயத்ரி சித்தரின்

# சித்த யோக பாடதீட்சை

36 பாடங்கள்


1. உடல்-மன ஒய்வும் பயனும்
2. சுவாசமும் - உயர் சித்திகள்
3. எளிய மனோசிகிச்சை
4. பிறப்பு நிறமும் - பேரின்ப பயன்களும்
5. தூக்கத்தில் சகல-சித்திகள்
6. ஆயுள் உறுதிக்கான அருங்காயகற்கள்
7. பேரறிவு பெறும் பெரும் சாதனை
8. திவ்விய ஞானமும் வாழ்க்கை வெற்றிகளும்
9. பிராணாயாமமும் பெரும் சித்திகளும்
10. சுயதீக்ஷைகளும் - சூஷ்ம சக்திகளும்
11. குண்டலினி எழுப்பும் சாதனை
12. பரிணாமத்தை உயர்த்தி பராசக்தி நெருங்கு
13. உட்புலன்களை வளர்
14. யோகியரின் உணவும் சுகாதாரமும்
15. ஹிப்னாடிச எளிய சாதனைகள்
16. பிரமிதப் பெரும் சக்திகள்
17. ஆவிகளின் தொடர்பும் அரும்பயன்களும்
18. உன் வருங்காலம் அறி
19. மானஸதிசை காட்டி
20. மரண பயம் தவிர்
21. திராடகத்திறன் சக்தி
22. பாவனா சிகிச்சை
23. தூங்காமல் தூங்கி சுகம் பெறு
24. பிரதயாஹார பேறுகள்
25. உணர்ச்சிகளாறுதல் பயன்
26. தாரணையும், தனிச் சித்திகளும்
27. பிறர் மனம் புகுதல்
28. உள்ளொளியும், உயர் சாதனைகளும்
29. தியானமும் தினசரி பயன்களும்
30. தூரக் காட்சி
31. மனச் சோதனையும் பயனும்
32. சூக்ஷ்ம உடலைப்பார்
33. சிகிச்சைக் கிரணங்கள்
34. மனச் சக்தியால் வேண்டியதை பெறு
35. உடலை விட்டு வா
36. உன்னை அறிந்து உண்மை வளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்ஷா விஞ்ஞானம்

ஒருவன் எளியவன், ஆனால் திறமைசாலி, தன் எளிமையைப் போக்கிகொள்ள நல்ல முறையில் ஒரு வியாபாரம் செய்து முன்னே றும் அறிவும், திறமையும் அவனுக்குண்டு. ஆனால் வியாபாரம் தொடங்கப் போதுமான பொருள் இல்லை. இந்நிலையில் பொருள் படைத்த யாராவது இவனுக்குப் பொருள் கொடுத்துதவினால் தான் இவன் முன்னேற முடியும். ஒருவனுக்கு சம்ஸ்கிருதம் படிக்க அதிகம் விருப்பம், படிக்கும் திறமையும் உண்டு, ஆனால் முதலில் அதைக் கற்றுத்தர ஓர் ஆசிரியரின் உதவி தேவை. யாராவது ஒரு ஆசிரியர் அவனுக்கு ஓரளவு சம்ஸ்கிருதம் கற்றுக் கொடுத்துவிட்டால் போதும், அவன் அதை மேலும் கற்று, உயர்நிலைக்கு வந்துவி டுவான். உடல் மெலிந்தவனுக்கு உடலை வளர்க்கும் நல்ல உணவுகளின், மருந்துகளின் உதவி தேவை. தள்ளாடி நடப்பவனுக்குத் தடியின் உதவி தேவை. மனிதன் தன் உடலை யும், மனதையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள பிறரின், பிற பொருள்களின் உத வியை நாடித்தான் வாழவேண்டிய நிலையில் இருக்கின்றான்.

பணம் வேண்டியவனுக்கு பணத்தைப்பற்றி விளக்கம் கொடுத்தால் போதாது. பணத் தையே கொடுத்துதவ வேண்டும். அவன் அதை ஒன்றை நூறாகச்செய்து பணக்காரனாகி விட முடியும். கல்வி வேண்டி நிற்பவனுக்கு கல்வியின் சிறப்பை பற்றி உபதேசம் செய்தால் போதாது. கல்வியை கற்றுத்தர வேண்டும். நோயாளிக்கு மருந்தைப்பற்றி வர்ணிப்பதால் பயனில்லை. மருந்தையே கொடுக்க வேண் டும். உடல் மெலிந்தவனுக்கு சத்துணவுப் பட்டியல் பயன்தராது. உணவே தேவை. தள்ளாடுபவனுக்கு ''தடிவைத்துக்கொள்'' என்று சொல்வது மட்டும் போதாது, ஒரு தடியை கொடுத்துதவ வேண்டும்.

கடவுள் அருள்பெறல், சித்திகள் செய்யும் ஆற்றல் பெறல், பிரபஞ்ச இரகசியங்களைத் தெரிந்து கொள்ளல் போன்ற அனுபவங்க ளைப் பெறுவதற்கு சாதாரண மனிதனின் உடல், மன, அறிவு நிலைகள் போதா. மனிதன் தன் ஐம்பொறிகளால் தொடர்பு கொள்ளும் உலகைப்பற்றிய அறிவைத்தான் தானாகவே அறிந்து கொள்ள முடியும். அந்த அளவில் தான் அவன் பிறப்பு அமைந்துள்ளது. சூக்ஷ்ம விஷயங்களைக் காண, அனுபவிக்க வேண்டு மானால் அதற்கான சூஷ்மக் கருவிகள் மனித னில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவை செயலற்று, இயக்கமற்று கிடக்கின்றன. இவைகளை செயல்படச் செய்தால் தான் மனிதன் சூக்ஷ்ம அறிவை, சூக்ஷ்ம அனுபவங் களை பெற முடியும். செயல் படாநிலையில் கிடக்கும் சூக்ஷ்ம பொறிகளை விழிப்பித்து, செயல் நிலைக்குக் கொண்டு அவைகளில் ஓர் சக்தி புகுத்தப்பட வேண்டும். ஆனால் அச் சக்தி மனிதனின் உபயோகத்திலிருக்கும் எந்த சக்தியுமல்ல. மனிதன் உபயோகிக்கும் சக்திக ளெல்லாம் பௌதீகச் சக்திகள். அவை பௌதீ கப் பொருள்களைத் தானியக்கும். சூக்ஷ்மக் கருவிகளைச் செயல்படச் செய்ய சூக்ஷ்மசக்தி தேவை. இது சாதாரண மனிதனில் இல்லை. ஏதோ ஒரு வகையில் இந்த சூக்ஷ்ம சக்தியைப் பெற்றிருக்குமொருவரிடமிருந்து தான் இதைப் பெற்றாக வேண்டும். தன் சூக்ஷ்மத்தை இயக் கும் அளவுக்கு ஓரளவு சக்தியை, அதை இருப்பவரிடமிருந்து மனிதன் பெற்றுவிட்டால் பின் தன் சொந்த முயற்சியால் அதை வேண்டு மான அளவுக்கு வளர்த்துக் கொள்ளலாம். சூக்ஷ்ம சக்தியை, உடையவர்களிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளும் பரிமாற்றத்தை தான் தீக்ஷையெனச் சொல்கிறோம். "தீக்ஷை" யென்ற சொல்லுக்கு உண்மைப் பொருளும், பாரம்பரியமான பொருளும் இதுதான்.

இடைக்காலத்தில் தெய்வம், கடவுள், பிர பஞ்சம் முதலான விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொள்வதே மனிதனுக்குப் போதுமா னது என்ற நினைப்பு வலுப்பட்ட காலத்தில் ஒரு மந்திரத்தை, ஒரு உபாசனா முறையை, ஒரு ஆன்மீக விஷயத்தை கற்பிப்பதே திக்ஷை என வழங்கப்படலாயிற்று. இந்த தவறான தீக்ஷைகள் மலிந்ததின் பயன்களே உண்மை யான திக்ஷையைப்பெறத் தேடியலைபவர்க ளின் எண்ணிக்கையையும் குறைந்துவிட்டது. தெய்வ சாதனங்களெல்லாம் வாய் உச்சரிப்புக ளுடன், வெளிச்சடங்குகளுடன் நின்றுவிட் டன. சாதனையளவுக்கு அது பிரசாரம் செய்யப் படவில்லை.

பணம் வேண்டிநிற்கும் ஒரு ஏழைக்குப் பணஉதவி தேவைதான். ஆனால் அவன் கிடைக்கும் அவ்வுதவிகளைக் கொண்டு முன் னேறும் அறிவும், திறமையும் இல்லாதவனாயி ருந்தால் அவனுக்கு உதவிசெய்து பயனில்லை. கல்வியை விரும்புவனுக்குக் கல்வியை கிரகிக் கும் சக்தியில்லையென்றால், அவனுக்குக் கல்வி போதிப்பதில் பயனில்லை. தெய்வ சாதனைகளில் முன்னேறவேண்டுமென்ற வெறும் ஆசைமட்டுமிருப்பவனுக்குத் தீக்ஷை கொடுத்து பயனில்லை. தீக்ஷை மூலமாகப் பெறும் சிறு சக்தியை வளர்த்து, சாதனையில் முன்னேறக் கூடியவர்களுக்கே தீக்ஷை பயனு டைத்தாகும். இதனாலேயே ஆசைப்படுமனை வர்க்கும் தீக்ஷை தரப்படுவதில்லை. பக்குவமு டைய சிலருக்கே அது தரப்படுகிறது.

தீக்ஷை யென்பது சூக்ஷ்ம சக்தியைப் பெறுவ தெனக் கண்டோம். அதனால் அதைப்பெறுப வனுக்கு சூக்ஷ்ம சக்தியை ஏற்றுக் கொள்ளும் பண்பு இருக்க வேண்டும். இது இல்லாதவர்க ளுக்குக் கொடுக்கப்படும் சூக்ஷ்ம சக்தி வெளிச் சிதறிப்போகும். அவர்களில் பற்றி நிற்காது. தீக்ஷை பெறுவதற்கான பண்பு, மனதை ஏகாக் ரகப் படுத்திவைத்து, தானே நினைப்பதை யிட்டு, தன் மனதில் புகும் விஷயங்களை, சக்திகளை கிரகிக்கும் பண்புதான் இப்பண்பு பலவழிகளில் உண்டாகலாம். முறையான உண்மையான பக்தி உள்ளவர்களுக்கு இப் பண்பு இருக்கும். முறையறிந்து உபாசனாதிக ளைச் செய்து வருபவர்களுக்கு, அவ்வுபாசன முறையிலுள்ள தியானம், மானசப் பிரார்த் தனை முதலியவைகளால் முன் சொன்ன பண்பு வளர்ச்சியடைந்திருக்குமாகையால் அவர்கள் தீக்ஷை பெறத் தகும். முறையாக யோக சாதனை பயில்பவர்களுக்கு, ஏகாக்ர தியான சாதனைகளால் இப்பண்பு வளர்ச்சிய டையும்.

சாதாரணமாக ஏகாக்ர நிலையையடையக்கூ டிய பண்பு வந்தபின், தீக்ஷையால் அளிக்கப்ப டும் சூக்ஷ்ம சக்தியைக் கிரகித்துக் கொள்ளும் திறமையை மனதில் பெற சில ஆரம்ப, பௌதீக சக்திகளை மனம் கவர்ந்து பலப்பட வேண்டும். இதற்காகவே "சுய தீக்ஷை" என்ற சடங்குகள் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. இவைகள் மூலம் மாணவர்கள் ஒளி போன்றவர் களின் உதவியைக் கொண்டு தம்மில் உள்ள சக்தியைத் தொட்டிழுக்கும் பண்பைப் பெறுகி றார்கள். "யோக வித்யா" பயிற்சி பெறுபவர்கள், தீக்ஷை பெறுமுன் இப்படிப் பல சுய தீக்ஷை சடங்குகளால் தம் மன, அறிவுகளைப் பலப்ப டுத்திக் கொள்கிறார்கள். ஆனால் நியமம் தவறா மல், முறைப்படி, பலகாலம் உபாசனை, ஜெபம் முதலியவைகளை மேற்கொண்டிருந்தவர்க ளுக்கு இது தேவையில்லை, அதிலேயே அவர் கள் மனம் பண்பட்டிருக்குமாகையால் அவர்கள் நேராக தீக்ஷை பெறலாம்.

முக்திப் பேற்றுக்காக, பிரம்ம சாக்ஷாத்காரத் துக்கு பிரம்ம நிர்வாணத்திற்கு மனிதன் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


னில் உறையும் பலவகைச் சக்திகளை விழிப்பித்தாக வேண்டும். ஏழு உலகங்களில் செயல்படும் எழுவகைச் சக்திகளையும் அவன் தன்னில் விழிப்பித்தாக வேண்டும். இவ்வெழுவகைச் சக்திகளாலும் செயல்பட்டு எழுவகை அனுபவ ஞானங்களை உண்டாக்க மனிதனில் சூக்ஷ்மப் பொறிகள் இருக்கின்றன. அதனால் தீக்ஷையும் ஏழுவகைப்படும். ஒவ்வொரு தீக்ஷையாலும் அவன் தன் சூக்ஷ்மப் பொறியை இயங்க வைத்து, புதிய ஞானானுபவம் பெறுவான்.

"முறையாக நியமமாக உபாசனை செய்பவர்கள்" அன்று முன்பு சொன்னது, முதல் தீக்ஷை பௌதீக பொருள் பெற்று! என்று இன்று பலர் தம்மனம் போனபடி, ஒருவரைப் பார்த்து ஒருவர் சில புத்தகங்களைப் படித்துவிட்டு உபாசனை செய்யத் தொடங்கி விடுகிறார்கள். இவர்கள் எத்தனையாண்டுகளாயினும் உயரிய பலனைப் பெறமாட்டார்கள். ஏனென்றால் உபாசனையென்பது வெறும் சடங்குகள் மட்டுமல்ல, அதனோடு மனக்குவிப்பும் தேவை. இதற்காகவே உபாசனையில் மானச தியானம், மானசப் பிரார்த்தனை முதலிய பகுதிகள் உள்ளன. இந்த இரு நிலையும் சரியாகச் செய்யப்பட்டால் தான் மற்ற சடங்குகளால் உருவாகும் தெய்வ காந்தத்தை உபாசகன் கவர்ந்து, பயன்காண முடியும். இந்த தியானமாதிகளில் சரியானபடி மனம் குவிந்தியங்கி, உருவாகும் காந்தத்தையேற்று கொள்ள வேண்டுமானால் இதற்காக உபாசகர் தகுந்த ஒருவரிடமிருந்து, பௌதீக சக்தியைப் பெற்றாக வேண்டும். இதற்கே முதல் தீக்ஷை, பௌதீக தீக்ஷையெனப் பெயர். இத்தீக்ஷைனை மூலம் தகுந்த ஒரு ஆசிரியர், உபாசகரின் உடலில் புதியதொரு காந்த சக்தியை புகுத்தி வைக்கிறார். இது உபாசனையால் அப்படியே நிலை பெற்று உபாசனையில் உருவாகும் தெய்வ காந்தத்தை கவர்ந்து உபாசனையைச் செய்பவர்களும் அதற்காக முதலில் தீக்ஷை பெற்றாக வேண்டும். குறித்த தெய்வ காந்தத்தைக் கவர இதனால் அவர்களுக்கு வழி கிடைக்கும்.

முதல் தீக்ஷையைப் பெற்று, பயனடைந்த பின் இதேபோல் முறையாகப் பிராண தீக்ஷை - பிராணனை வசப்படுத்தி, பிராணலோக அனுபவத்தைப் பெற மானச தீக்ஷை - மனதை வலுப்படுத்தி, மானசமாக அது பயன்களைப் பெற: ஞானதீக்ஷை - சித்தத்தை வசப்படுத்தி, சைதன்ய யோகானுபவம் பெற, ஆன்மதீக்ஷை ஆன்மாவை வலுப்படுத்தி ஆன்ம உலக அனுபவம் பெற பிரம்மதீக்ஷை - இறைப்பகுதியை வலுப்படுத்தி பிரம்ம சாக்ஷாத்காரம் பெற இப்படிப் பெற்றாக வேண்டும். இவைகளில் பௌதீக பிராண மானச தீக்ஷைகள் மண்ணுலகில் ஆசிரியர்களால் தரப்படும். இப்படி முறையாகத் தீக்ஷை பெறாமல் யாரும் பிரம்ம சாயுஜ்யம் பெற முடியாது.


மண்ணுலக, தீக்ஷைகளை, ஆசார்யார்களின் ஆசிரமத்தில் தங்கியிருந்துதான் பெறுவது வழக்கமாயிருந்து வந்தது. ஆனால் இன்றைய உலக நிலையில், உலகின் பல பகுதிகளிலுமுள்ளவர்கள் இப்படி ஆச்சிரமங்களுக்கு வந்திருந்து தீக்ஷை பெறமுடிவதில்லை. தீக்ஷைதரும் ஆஸ்ரமங்களும் மறைமுகமாகவே இருக்க வேண்டியிருக்கிறது. இதனால் மானச ஆகாய மூலமும் காந்தமேற்றிய யக்ரோபவீதம் குங்குமம், விபூதிப்பிரசாதங்கள் போன்றவை மூலமும் தீக்ஷை தரும் முறையைப் பெரியோர்கள் வகுத்துள்ளார்கள். மாணவருக்கு எந்த காந்தத்தைப் பரிமாற வேண்டுமோ, அதை தகுந்தவொரு பொருளில் ஏற்றி, மாணவருக்கனுப்ப அவர் அதை உபயோகிக்கும் போது, அதில் ஏற்றப்பட்டுள்ள காந்தம் அவரில் புகுந்து நிலைபெறுவது இம்முறைகளில் ஒன்று. பிராண மானச தீக்ஷைகளை மாணவர் எதிர்ப்பு (Receptive) நிலை தியானத்துடன் இருக்கச் சொல்லி ஆசிரியர் பிராண, மன ஆகாயத்தின் வழி சக்தியை அனுப்ப அதை மாணவர் ஏற்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதி சங்கரர்

காயத்ரீயின் மகிமையைச் சொல்வது சாதாரண மக்களால் இயலாத காரியம். ஏனெனில் காயத்ரீயால் அறிவு சுத்தமாகிறது. இதற்கு உலகில் வேறெந்த வழியும் கிடையாது.



ஸ்ரீ இராமனுஜர்

காயத்ரியை பொதுவாக த்விஜர்களும், பிராமணர்களும் தான் ஜெபிக்கலாம். மற்றவர்கள் ஜெபித்தால் பாபம் வரும் என்ற வதந்திகளை மறுத்து, எல்லோரும் ஜெபிக்கலாம் என்று, அனைவருக்கும் காயத்ரி மந்திரத்தை உபதேசித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கிருஷ்ணர்

வேத மந்திரங்களில் காயத்ரி நான் என்று கீதையில் கண்ணன் கூறியுள்ளான்.

கிருஷ்ண காயத்ரியை ஜெபித்து கிருஷ்ண பரமாத்மாவின், பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெறலாம்.



ஸ்ரீ இராமர்

ஸ்ரீ இராமர் விஸ்வாமித்திர மகரிஷியிடம், காயத்திரி தீக்ஷை பெற்று, காயத்ரி சாதனை செய்து, தெய்வமானவர்.

ஸ்ரீ ராம காயத்ரியை ஜெபிப்பதனால்

ஸ்ரீ ராமபிரானின் பேரருள் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னில் பதித்துக் கொள்ளும் முறையில் தரப்படுகிறது. இம்முறைகளில் மாணவர்கள் தம் ஆசிரியரை நேரே காணாமலேயே தம்தம் இடங்களிலிருந்தே உரிய தீக்ஷையைப் பெற்றுப் பயனடைகிறார்கள். தீக்ஷை பெறாமல் ஆன்ம, தெய்வ சாதனைகளில் யாரும் வெற்றியடையமுடியாது.

சுபம்

## காயத்ரி சித்தரின் ஆன்மீக படைப்புகள்

1. தியானம் ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமை
2. ஞான குரு
3. மனித காந்தம்
4. எளிய முறை யோக பயிற்சி
5. சகல தெய்வ உபாசனா சித்தி
6. காயத்ரி உபாசனா சித்தி (சகஸ்ரநாம அர்ச்சனையுடன்)
7. காயத்ரி ராமாயணம்
8. காயத்ரி கீதை
9. காயத்ரி மூலம் குண்டலின் விழிப்பு
10. பிரபஞ்சம் இன்பமயம் (அச்சில்)
11. மனித உடலில் தெய்வ ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ம விஞ்ஞானம்

மனிதனுட்பட சகல ஜீவராசிகளும் செய்யும் காரியங்களில் அனுபவிக்கும் அனுபவங்களின் தொடர்பு உடனுக்குடன் அழிந்து போவதில்லை. பத்து ஆண்டுகட்கு முன் செய்த ஒரு காரியம், ஏற்பட்ட ஒரு சம்பவம் இப்போதும் தத்ரூபமாக மனதில் தோன்றவில்லையா? மனதில் தோன்றுமுன் இது வேறெங்கோ இருந்திருக்கத்தானே வேண்டும், பல வருடங்களுக்கு முன் மாம்பழங்கள் சாப்பிட்டு, சீதபேதிக்கு உள்ளானதால், இப்போதும் மாம்பழத்தைக் கண்டவுடன் வெறுப்புத் தோன்றவில்லையா? விஞ்ஞானிகள் தாம் முன்பு செய்த ஆராய்ச்சிகளை நினைவு கூர்ந்து தானே தொடர்ந்து புதிய ஆராய்ச்சிகளைச் செய்கிறார்கள்.

மனிதன் தெரிந்து செய்யும் கர்மங்கள் மட்டும் இப்படி வாழ்க்கையிற் தொடர்பு கொண்டிருக்கவில்லை. அவன் தெரியாமற் செய்யும் கர்மங்கள், அவன் உடலையோ மனதையோ, அல்லது உணர்வையோ பாதித்திருக்குமானால் அதன் பிரபாவத் தொடர்பு அவனின் வாழ்க்கை முழுவதும் இருந்து கொண்டே இருக்கும். குழந்தைப் பருவத்தில் ஒருவன் குளத்தில் விழுகின்றான். எப்படியோ காப்பாற்றப்படுகின்றான். நாம் குளத்தில் விழுந்து காப்பாற்றப்பட்டோம் என்று தெரிந்து கொள்ளாத பருவமது. ஆனாலும் அவன் குளத்தைக் கண்டாலும் கட்டுப்படுத்த முடியாத, காரணம் தெரியாத ஒரு பயம் அவனுக்கு உண்டாகிக் கொண்டேயிருக்கும். குளத்தைக் கண்டால் ஏன் பயப்படுகின்றேன் என்று அவன் அறியமாட்டான். மனதைதிடப்படுத்தி பயப்படாமல் இருக்க உறுதிகொண்டாலும் உள்ளூர அப்பயம் இருந்து கொண்டேயிருக்கும். தகுந்த சாதனை இல்லாமல் அவன் இப்பயத்திலிருந்து விடுதலை பெறவே முடியாது.

மனிதனுக்கு உடலுறுப்புக்கள் பல இருப்பது போல் சூச்சும உறுப்புக்கள் சில இருக்கின்றன. மனம் அவைகளில் ஒன்று, சித்தம் மற்றொன்று இந்தச் சித்தத்தில் மனிதனின் கர்மங்கள், அனுபவங்களெல்லாம் சம்ஸ்கார வடிவில் குடியிருந்து வருகின்றன. மனம் அவ்வப்போது ஐம்பொறிகளின் வழியாக வரும் துடிப்புகளைப் பிரதிபலிக்கும், கருவிமட்டும்தான். ஒரு மரத்தைப் பார்க்கும்போது மனம் அம்மரத்தின் வடிவாக மட்டும் திரிந்து நிற்கிறது அப்போது அதில் வேறொன்றுமிருப்பதில்லை. சித்தத்தில் பழைய கர்மங்களின் அனுபவங்களின் சம்ஸ்காரங்கள் இருக்கின்றன. இப்பிறவியிற் செய்த கர்மங்களின் சம்ஸ்காரங்கள் மட்டுமல்ல, பழைய பிறவிகளின் சம்ஸ்காரங்களும் சித்தத்திற் குடியிருக்கின்றன. ஆழ்ந்த ஹிப்நாட்டிஸ் நிலையில் ஒருவனை கிடத்தினால் மனமடங்கி அதன் ஸ்தானத்தில் சித்த சம்ஸ்காரங்கள் செயற்படக் காண்பான்.

சித்தம் சூச்சும ஆகாயப் பொருளால் ஆனது. அந்த ஆகாயத்தில் அலைவடிவாகச் சம்ஸ்காரங்கள் இருக்கின்றன. சப்தங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் போற்தான் சித்தத்திற் சம்ஸ்காரங்கள் பதிந்திருக்கின்றன. காலப் போக்கில் அனுபவமுடிவாகப் பல சம்ஸ்காரங்கள் சித்தத்தில் பதிவிற் கலந்து போகின்றன. புதியவை பதிந்து கொண்டேயிருக்கின்றன. சித்த சம்ஸ்காரங்கள் அவ்வப்போது மனதின் நினைப்புவழி வெளிப்படுகின்றன. நல்ல சம்ஸ்காரங்கள் நல்ல நினைப்புகளாகவும், கெட்ட சம்ஸ்காரங்கள் கெட்ட நினைப்புகளாகவும் செயற்படுகின்றன. மனதில் நினைத்தே செயற்படுபவன் மனிதனாகையால், இந்த சம்ஸ்கார எண்ணங்களைத் தான் நினைத்ததாகக் கருதி அதன்படி செயற்பட நன்மையையோ, தீமையையோ அடைகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் நினைப்புகளெல்லாம் அவன் சுயமாக நினைப்பவையல்ல. ஆனால் மனிதனுக்கு இது விளங்குவதில்லை. உட்கார்ந்திருக்கும் ஒருவன் "மனதில் வெளியே போகலாம்" என்கின்ற நினைப்பு உண்டாகின்றது. இது ஏன்? உண்டாயிற்று என்பதைத் தெரிந்து கொள்ளாமல் தானே நினைத்ததாக எண்ணி வெளியே செல்கின்றான். வண்டியில் அடிபட்டு ஆபத்தை அடைகின்றான். அல்லது நண்பரைச் சந்தித்து நலம் பெறுகின்றான். இதற்கு ஆதாரமாகத் தோன்றிய எண்ணம் அவன் சித்தம் மனதிற் தோற்றுவித்ததேயாகும்.

குழந்தை பருவத்திலும், கருவில் உருவாகிக் கொண்டிருக்கும்போதும் சித்தமே மனநிலையிற் செயற்படுகின்றது. சித்த சம்ஸ்காரங்களே தகுந்த உருவைக் கருவில் உண்டாக்குகின்றன. இதனாற்தான் ஒரே கற்பத்தில் பல உருவக் குழந்தைகள் பிறக்கின்றன. மனிதனைத் தவிர மற்றப் பிராணிகளெல்லாம் சித்த இயக்கத்தில் வாழ்பவையே. சுபாவ குணங்கள் பிறப்பு நோய்கள் முதலியவை சித்தத்தின் ஆக்கமே.

சித்த சம்ஸ்காரத்தைத்தான், கர்மம், வினை, விதி என்றெல்லாம் சொல்கின்றோம். சாதாரண மனிதனின் வாழ்க்கை முழுவதும் சித்த வினையின் அடிப்படையிற்தான் அடங்கியிருக்கின்றது. எவ்வளவு படித்தாலும் எவ்வளவு அறிவு வளர்ந்தாலும், எவ்வளவு கேட்டாலும், எவ்வளவு சிந்தித்தாலும், சித்த இயக்கத்தை மனிதன் கட்டுப்படுத்த முடியாது. சித்த சம்ஸ்காரத்தால் குளத்தைக் கண்டு பயப்படுபவனின் பயம், கல்வி, கேள்விகளாற் போய்விடாது. இதனாலேயே "கர்மத்தை எளிதில் வெல்ல முடியாது" என ஆன்றோர்கள் கூறினார்கள். இப்படிச் சித்தம் இயங்கிக் கொண்டேயிருக்கும் போதும், மனிதன் தன்னையறியாமலே சித்தத்தின் பழைய சம்ஸ்காரங்களை அனுபவித்துத் தீர்த்துக் கொண்டும், புதிய சம்ஸ்காரங்களைப் பதித்துக் கொண்டும் வாழ்கின்றான். குளத்தைக் கண்டு பயப்படுவது பழைய சம்ஸ்காரம், பயந்து ஒதுங்கியபோது கல்தடுக்கி கீழேவிழ,அப்போது முதல் கல்லைப்பார்த்தாலும் பயப்படத் தொடங்குவது புது சம்ஸ்காரம்.

முற்பிறவிகளிற் செய்த கர்மங்களாற் சித்தத்திற் பதிந்துள்ள சம்ஸ்காரங்கள் இப்பிறவியில் வெளிப்படத் தொடங்கியமை "பிரார்ப்த கர்மம்" எனப்படும். இன்னும் வெளிப்படாமற் சித்தத்திற் குடியிருக்கும் கர்மங்கள்..... எனப்படும்? இப்போதைய காரியங்களால் புதிதாகச் சித்தத்திற் பதிந்து வரும்கர்மங்கள்..... எனப்படும்? நம் வாழ்க்கையில் நடைபெற்ற நம்நினைவில் இருக்கும், சிறிய பல சம்பவங்கள் நினைவிலிருக்காது, கவனமாகச் சிரத்தையுடன் பார்த்த பொருட்கள் பெரும்பாலும் எளிதில் நினைவிற்குவரும். அக்கறையில்லாது பார்த்தவை நினைவில் வரா. சிரத்தையுடன் கவனத்துடன் அதிக ஆசையுடன் செய்த கர்மங்களில் சம்ஸ்காரங்கள் சித்தத்திற் பலமாகப் படிந்து மெதுவாக வெளிப்படும். முற்பிறவியிற் செய்த பலத்த கர்மங்கள் இப்பிறவியின் சுபாவத்தை வாழ்க்கை முறையை அமைப்பதாக ஆகின்றன. இதுவே பிரார்ப்த கர்மம்.

நல்லவர்கள் பலர் ஒன்றாக வாழலாம். கெட்டவர்கள் பலர் ஒன்றாக வாழலாம். நல்லவரும் கெட்டவரும் சேர்ந்து வாழ முடியாது. நல்ல சம்ஸ்காரங்கள் இருக்கும் சித்தத்தில் கெட்ட சம்ஸ்காரங்கள் இருக்கா....? சம்ஸ்காரங்களை மாற்றுவதற்கு, இது ஒரு உபாயம். புகைப்பழக்கத்தை விட வேண்டுமானால் விட்டு விடுவேன் என்ற உறுதி கொண்டால் மட்டும் போதாது. பலவந்தமாக அடக்கி வைத்தால் ஒரு நாள் ஆபத்தான அளவிற்குச் செயற்படும். அதற்குப்பதில் நல்ல பழக்கத்தை உண்டாக்கி கொள்வதுதான் அதை மாற்றும் வழி. கெட்டவைகளைக் கொடுக்கும் பிராப்த கர்மத்தை நினைப்பால் உறுதியால் மாற்ற முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாசனை போன்ற நல்ல சம்ஸ்காரங்களைப் பதித்து வந்தால் கெட்டவை அழிந்து விடும். கர்மத்தை உண்டாக்கியவன் மனிதனாகை யால் அவன் அதை மாற்றவோ, அழிக்கவோ முடியும். இதற்கு இரண்டு வழிகளுண்டு. முதலாவது பழைய சம்ஸ்காரங்களை வெளிப்ப டுத்தி அனுபவித்துத் தீர்ப்பது, மற்றது புதிய பலத்த சம்ஸ்காரங்களைப் புகுத்தி பழையவை களை அழிப்பது, தெய்வ உபாசனை, யோக சாதனை பின் சொன்னதற்கான கஷ்டங்களுக் குப் பயப்படாமல், அதற்காக மேலும் பாவங்க ளைச் செய்யாமல் அனுபவித்துத் தீர்ப்பது முன் சொன்ன வழி, இந்த வழியை எளிதாக எல்லோரும் பின் பற்ற முடியாது. பின் சொன்ன வழியை எல்லோரும் பின்பற்றலாம்.

அவனவன் அனுபவிக்கும் நன்மை தீமைக ளுக்கு அவனவன் செய்த கர்மாவே காரணமன் றித் தெய்வம் காரணமல்ல, கர்மத்தை வெல்ல முயலும்போதும், தெய்வம் தடை செய்வ தில்லை. மின்சக்தியைக் கொண்டு நல்லதும் செய்யலாம். கெட்டதும் செய்யலாம். ஆன்ம தெய்வ சக்திகளைக் கொண்டு எதையும் செய்யலாம். ஆனால் தகுந்த பலனைத்தான் அனுபவிக்க முடியும். இறை சம்ஸ்காரத்தைச் சித்தத்திற் பதித்துவிட்டால் அல்ல....? சம்ஸ்கா ரங்களும் அழிந்து போகும். நாம் எத்தனையோ கர்மங்களை கடமைக்காகச் செய்கின்றோம். அதனால் நமக்கு அதைப்பற்றி நினைப்பேயி ருப்பதில்லை. இத்தகையவை சம்ஸ்காரமாகப் படிவதில்லை. இதே முறையில் எல்லாக் கர்மங்களையும் செய்பவன் "கர்மயோக" இதற் கான வழி; யோகஸ்த குரு கர்மாணி, யோகநி லையில் இருந்து கர்மங்களைச் செய். யோக மென்பது சுக - துக்கேஷ சமத்வம் யோக முச்யதே" இன்ப துன்பங்களின் நடு நிலமை யோகம் ஆக யோக சாதனையிலிருந்து கொண்டு செய்யும் கர்மங்கள் சம்ஸ்காரமாகப் படியாது. பழைய சம்ஸ்காரங்களை இறை சம்ஸ்காரத்தைக் கொண்டு அழிக்கலாம். இப்ப டிச் செய்தால் சித்தம் எல்லா சம்ஸ்காரங்களை யும் இழந்து சுத்தமாகும், பிறவிப்பிணி அகலும், பரம்மானந்தம் உண்டாகும்.

"விதியை மதியால் வெல்லலாம்" ஓம் தத்து வம் அஸி:

சுபம்

---

கடினமான தெய்வ சாதனைகளை மக்கள்
செய்ய வேண்டிய தேவையில்லை.
சிறியதான காத்ரீ ஜெபத்தைச் செய்து
பாருங்கள், இதனாலேயே சகல சித்திகளும்
உடண்டாகிவிடும். சக்தி நிறைந்த சிறிய
மந்திரம் காயத்ரீ.

- ராம்கிருஷ்ண பரமஹம்ஸர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தி விஞ்ஞானம்

பிரபஞ்சமும் அதில் உள்ள சகல பொருள்களும் என்றுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொருட்கள் தாமாக இயங்கவில்லை. அவற்றுள் இருக்கும் சக்தி அவைகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சம் முழுவதுமே இயக்கமயமானது. சூன்யமான பகுதி எங்குமேயில்லை எனலாம். சூன்யம் என்பது நம் கண்களுக்குத் தெரியாத வெட்ட வெளி. இங்குகூட சூக்ஷமப் பொருள் உண்டு. இங்குள்ள கோள்களின் அமைப்புக்கேற்ப அவை இயக்க நிலையில் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. ஆகவே பிரபஞ்சத்தின் உள்ளும், புறமும், வெட்ட வெளியிலும், ஒரு சக்தி ஓயாமல் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிகிறோம்.

குளத்தின் நடுவில் அலைகளைப் பார்த்தால், குளத்தில் ஏதோ ஒரு பகுதியில் அலைகள் தோன்றுகின்றன என அறியலாம். ஆகாயத்தில் மின் காந்த அலைகளைக் கண்டால், அவை அலைக் கழிக்கப்படுவதைக் காணலாம். நகரங்களில் மின்சாரத்தைப் பார்த்தால், எங்கோ ஓர் இடத்தில் இருந்து மின் சக்தி வருவதாகத் தெரிகிறது. அதாவது செயல் சக்தி, இயக்கச் சக்தியை ஓர் இடத்தில் பார்த்தால் அது எங்கிருந்தோ தோன்றி வருவதை அறியலாம்.

பிரபஞ்சம் முழுவதும் ஒரு செயல்சக்தி, இயக்கச் சக்தி, இருப்பதைக் கண்டால், இதற்கு ஒரு தோற்றுவாய் இருக்க வேண்டும். பிரபஞ்சத்தின் சகல திசைகளிலும் இயக்கச் சக்தி இயங்கிக் கொண்டிருப்பதால் யாருக்கும் எதுவெனத் தெரியாத, பிரபஞ்ச நடுமையத்தில் இருந்து இது தோற்ற வேண்டும் என்பதை அறியலாம். கடலின் நடுவில் அலைகள் எழுந்து பரவுவதுபோல் பிரபஞ்சநடுவில் சக்தி அலைகள் எழுந்து, சகல திசைகளிலும் பரவிக் கொண்டிருக்கின்றன.

பிரபஞ்ச நடுவை மதவாதிகள் கைலாயம், வைகுண்டம், பிரமயோகம், பரமண்டலம், ஏழாவது ஆகாயம் எனக் கூறுகிறார்கள். அது தான் பிரபஞ்சத்தின் ஆக்க அமைப்பு, அழிவுக்கான சக்தியின் களஞ்சியம். அவ்விடத்தில் சக்தியை நிலைச் சக்தியென்பர். அங்கிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்சமெல்லாம் பரவும் சக்தியை செயல்சக்தியென்பர்.

முன் சொன்ன பிரபஞ்சத்தின் செயல்சக்தி, நிலைச்சக்தி, இரண்டும் மின் காந்தம் போன்ற ஜட, பௌதீக சக்தி அல்ல. அவை மனித உடலில் உயிர்களின் உடலில் செயல்படும் ஆன்மசக்தி. ''ராமா'' என்றவுடன் ஏன்? என்று பதில் சொன்னபடி ஓர்உடலை நம்பக்கம் நகர்த்தி வருவது எப்படி? அவ்வுடலுடைய ஆன்ம, அறிவுச் சக்தியே அப்படி பிரபஞ்சத்தில் செயல்படும் சக்தியும் ஆன்ம அறிவுச் சக்தியே. உடலை விட்டு வெளிப்பட்ட ஆன்மாவானது உடலில் இருந்து அழைப்பவரின் தொடர்புக்கு உட்படாத சூக்ஷமத்தில் இருப்பது போல் சாதாரண மனிதனின் பௌதிகத்துக்கு வசப்படாத சூக்ஷம சக்தி ஆகிறது.

நிலைச்சக்தி செயல்சக்தி இரண்டையும் தத்துவ நூல்களில் புருடன், பெண்ணுக்கு ஒப்பிடுவர். ஏனெனில் உலகில் புருடன் பெண் சேர்க்கையால் மக்கள் பிறப்பதுபோல், இப்பிரபஞ்ச சேதன அசேதனப் பொருள் எல்லாம் இந்த மூலாதாரத்தால் தாய், தந்தை சேர்க்கையால் உண்டாக்கப்படுகின்றன.

தந்தையின் கருவைப் பெற்ற தாய், அதைச் சுமந்து உருவாக்கிப் பெற்று வளர்ப்பதுபோல் பிரபஞ்சத்துக்கு ஆதாரமான ''பிந்துவை'' புரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனிடத்தில் இருந்து பெறும் செயல் சக்தி அதைப் பல் உருவாக்கி வெளிப்படுத்தி, வளர்ந்து பிரபஞ்சத்தை நடத்துகிறது. இதே கருத்தைக் கண்ணன் கீதையில் ''மயா அதிஷ்டிதேன ப்ரக்கிருதி; ஸயெதேச சராசரம்'' என்னை ஆதாரமாய் கொண்டு பிரக்கிருதி சராசரங்களை உண்டாக்குகிறார்.

பிரபஞ்ச நடுவில் இருக்கும் நிலைச் சக்தியான பரப்பிரம்மம் மஹாவிஷ்ணு, மஹாதேவன், பரமபிதா, அல்லாஹ், குதா அஹுரமேஜ் தாயென்று மதவாதிகள் சொல்லும் புருஷ சக்தியை வகித்துக் கொண்டு, பிரபஞ்சமெல்லாம் இயக்கச் சக்தியாகப் பரவி சகல பிரபஞ்ச சேதன, அசேதனப் பொருள்களை ஆக்கி அமைத்து அழித்துக் கொண்டிருக்கும் பெண்மைச் சக்தியையே ''பராசக்தி'' என்கிறோம்.

பிரபஞ்சத்தின் எப்பகுதியை எடுத்தாலும் அங்கு செயல்படுவது ''பராசக்தியே'' அதனாலேதான் பாரதமக்கள் சக்தி வழிபாடு சிறந்தது எனக்கொண்டனர். உயிர்களின் உடலில் மனதில் அந்தக் கரணத்தில் பொருள்களின் உள்ளும், புறமும் இயங்கிக் கொண்டிருப்பது பராசக்தியே. உயிர்களைப் பிறப்பு இறப்புக்கு ஆளாக்கிக் கொண்டிருப்பது ''சக்தியே'' இச்சக்தியின் தயவைப் பெற்று அது வழிகாட்டினால் தான் தந்தையாகிய ''பரப்பிரம்மத்தின்'' ஸ்தானத்தை அடைந்து தந்தையாம் நிலைச் சக்தியில் நிலையான இன்ப அனுபவத்துடன் நிலைக்கலாம். சக்தியின் அருள் இன்றி, உதவி வழிகாட்டல் இன்றி யாருமே, பிரம்ம ஞானத்தை அடைய இயலாது.

1. பூமியை இயக்கும் பராசக்தி - பூமாதேவி
2. புவனங்களை இயக்கும் பராசக்தி - புவனேஸ்வரி
3. உயிர்களிடத்தில் ஆசையை இயக்கும் சக்தி - காமேஸ்வரி
4. மனச்சக்தியாகச் செயல்படும் சக்தி - மனோன்மணி
5. உயிர்களில் அறியாமையைப் புகுத்தி ஆட்டுபவள் - காளி
6. பிரபஞ்சத்தின் உயிராக இயங்கும் பராசக்தி - காயத்ரீ

பிரபஞ்சம் முழுவதும் பராசக்தியே உயிர்களை ஆட்டிப்படைப்பவளும் அவளே. உயிர்கள் விடுதலை பெறச் செய்பவளும் அவளே. அவளின் அருள் இன்றி யாருமே முக்திப்பேறாம் ''பிரம்மசாயுச்சியம்'' அடையமுடியாது. எனவே முறையாக, பராசக்தியின் அம்சத்தை வழிபட்டு, இகபர சுகங்களை நுகர்ந்து பேரின்ப பெருவாழ்வு பெறுவோமாக!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்ப விஞ்ஞானம்

அறிவு முன்னேற்றத்தால் அகம்பாவம் கொள்ளும் மனிதன் பலதுறைகளில் தன்னுடன் இம்மண்ணுலகில் வாழும் மற்ற உயிரினங்களை விடப் பிற்போக்கில் நிற்கிறான். மாறி மாறிபலநோய்களுக்குள்ளாகி வேதனைப் படுகிறான். மற்றப் பிராணிகள் இப்படி நோய்படுவதில்லை. அற்ப ஆயுளில் மடிபவன், தற்கொலை செய்து கொள்பவன் மனிதன். உடல் கூற்றை அதன் நடைமுறையை அதற்கு வேண்டிய போஷனைப் பொருட்களை அறிந்த மனிதன் ஏன் நோய்வாய்ப்பட வேண்டும்? அற்ப ஆயுளில் மடிய வேண்டும்? இயற்கையை விட்டுச் செயற்கையில் போகத் தொடங்கியதே மனிதனின் அழிவுக்குக் காரணம். மற்ற உயிர்கள் இன்னும் இயற்கை வாழ்வையே மேற்கொண்டிருப்பதால் தம் பரிணாமத்தைச் செவ்வனே முடித்து மறைகின்றன.

மனிதனுடையதும் மற்றப் பிராணிகளுடையதும் உடல், இரத்தம், தோல், எலும்பு, மஜ்ஜை, மாமிசம், கொழுப்பு முதலியன தாதுக்களால் ஆனவையே. மனித உடலை நவீன இரசாயன பரிசோதனைகளுக்கு உள்ளாக்கியவர்கள் இதில் 12 வகைத் தாது உப்புக்களும் (Bio-Salts) உலோகங்களும் (Minerals) மற்றும் சில இரசாயனப் பொருள்களும் (Chemicals) இருப்பதாகக் கண்டுபிடித்தனர். இப்படிக் கண்டவுடன், இதே உப்புக்களையும்,உலோகங்களையும், இரசாயனப் பொருட்களையும், தேவையான அளவு உடலுக்குக் கொடுப்பதற்கென செயற்கை மருந்துகளைக் கண்டு பிடித்தனர். இதனால், வைட்டமின்கள், புரோட்டீன்கள் போன்ற பல்வேறு மருந்துகள் வெளிவரலாயின. மனிதன் உடலைப் பாதுகாக்கும் குறுக்கு வழியைக் கண்டு பிடித்து விட்டதாகப் பெருமை கொண்டான். ஆனால் இதன் மூலம், வீட்டிற்கொரு டாக்டர், வீட்டிற்கொரு ஆஸ்பத்திரி ஆகியது.

மனித உடலில் உப்புகளும், உலோகங்களும், இரசாயனப் பொருட்களும் இருப்பினும் இவை ஒரே வடிவில் உடலில் சேர்க்கப்பட்டவையல்ல. தாவரங்களின் வழியாகத்தான் உடலின் சகல தாதுக்களுக்குரிய பொருள்களும் சேர்க்கப்படுகின்றன. கருவில் உருவாகும் உடலும் தாய்ப்பாலில் வளரும் குழந்தையின் உடலும் இரசாயனப் பொருள்களைப் பெற்று வளர்கின்றன. ஆனால் அதை நேராக இரசாயனவடிவில் பெறுவதில்லை. உடல், சரீரம் என்ற சொல்லில் என்ன எல்லாம் அடங்குமோ, அவையாவும் தாவரங்களின் உணவுச் சக்தியினால் பெறப்பட்ட திரிபுகள்தான். தாவரங்கள் தான் உடலின் சப்த தாதுக்களாகத் திரிகின்றன. தாவரங்களில் இருந்து உடலின் உப்புகளையும் உலோகங்களையும் உடல் பெறுகிறது. இரும்புச் சத்து உடலில் இரத்தத்தை உண்டாக்கும் என்பதற்காக, இரும்புத் தூளை உண்ணலாம் என ஆயுர்வேத சித்த வைத்திய முறைகள் கூறவில்லை. ஆதிகால வேதகால வைத்தியம் முழுவதும் தாவரங்களைக் கொண்டே செய்யப்பட்டு வந்தன.

கீரை வகையில் உப்புச் சத்துக்கள் உண்டு. அதே வகையில்தான் உடலில் உப்புச் சத்து உண்டு. நெல்லிக்காயில் வெள்ளியும், கடுக்காயில் பொன் சத்தும் இருக்கின்றது. இதே போல் உடலிலும் அச்சத்துக்கள் இருக்கின்றன. இப்படியே உடலில் உள்ள சகல உப்புக்களும், சத்துக்களும் தாவரங்களில் உள்ள நிலையிலே உள்ளன.

ஒரு துண்டு மாமிசத்தை பரிசோதனை செய்து என்னென்ன பொருட்கள் உண்டெனக் கண்டறிந்து விட்டால், அதே பொருள்களைக் கொண்டு நரமாமிசத்துண்டத்தை மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் செய்ய முடியுமா? மாமிசம் போன்றதைச் செய்யலாம் அன்றி மாமிசத்தைச் செய்ய முடியாது.

இரத்தத்தில் இன்னது உள்ளது என்பதால், இரத்தத்தைச் செய்ய முடியாது. செய்ய முடியுமானால் இரத்தத்தைச் சேமிப்பது எதற்காக? எலும்பில் இன்ன பொருள் உண்டென அறிந்தால், எலும்பைச் செய்ய முடியுமா? முடியாது. உண்மை இப்படி இருக்க, உடலில் குறைந்த உப்புச் சத்துக்களை, இரசாயனப் பொருட்களைச் சரிசெய்ய செயற்கை உப்புக்களைக் கொடுப்பது உண்மையில் சரிதானா? உடலில் உள்ள மாமிசம், இரத்தம் என்ன ஆயிற்றோ? இப்படிச் செய்வதுதானா? கல்ப சிகிச்சை.

மனித உடலில் உள்ள சகல தாதுக்களும் தாவரங்களில் இருந்து உண்டாவது எனக் கண்ட யோகியர், எந்தத் தாவரம் தாதுவாக உடலில் மாறுகிறது. என்பதை தம் ஆன்ம சிருஷ்டியால் கண்டறிந்தனர். இதன் பயனாக உடலில் ஒரு தாது குறைந்தவன் எத்தாவரத்தை உண்டால், அத்தாது வளரும் எனக் கண்டு அறிந்தனர். உணவு பரிணாமத்தால் இந்தக் காமாலை மாறும். மாமிசமாக மாறும் பொருட்கள் கொழுப்பாக மாறும் பொருட்கள் எவை எவை எனக் கண்டு அறிந்தனர். பாம்பின் விஷம் போன்ற கொடிய விஷங்களை தகுந்த தாவரங்களினால் மாற்றினால், அது உடலில் என்ன பரிணாமம் அடையும் என்பதையும் ஆராய்ந்து அறிந்தார்கள். இதன்பயனாக ஆயுர்வேத சித்த வைத்தியர்களில் பிற்காலத்தில் பஸ்ப முறைகள் பாஷாண முறைகள் நடைமுறைக்கு வந்தன. எனவே உடலுக்கு வேண்டிய சகலதும் தாவர முறையை அடிப்படையாகக் கொண்டன என்று முடிவு செய்தனர்.


உடலுக்குச் சொன்ன இதே உண்மை மூளைக்கும் பொருந்தும், மூளையணுக்களாகப் பரிணாமமடையக்கூடிய தாவரங்களை மகான்கள் கண்டு பிடித்தார்கள். "ஆஹார சுத்தௌ சத்து சுத்தி" உணவுச் சுத்தத்தில் அறிவுச் சுத்தமிருக்கிறது என்பது அவர்கள் கண்டறிந்த பேருண்மை. மனிதன் உண்ணும் உணவின் பரிணாமமாக அவன் உடல் தாதுக்களும் மூளையும் உண்டாவது மட்டுமல்ல, அவன் மனமும் புத்தியும்கூட உணவின் திரிபாகவே உண்டாகிறது. சில உணவுகளை உண்பவனுக்கு அறிவே வளர்ச்சியடையாது. மூடனாகவே இருப்பான். மனமும் புத்தியும் கூடஉணவின் திரிபால் ஆனவைதான். அதனால் எந்தெந்தத் தாவரம் தன் பரிணாமத்தில் மனப்பொருளாகும். எத்தாவரம் பரிணாமத்தில் புத்திப் பொருளாகத் திரியும் என்பதையும் யோகிகள் கண்டறிந்தனர்.

இப்படிக் கண்டறிந்த உண்மைகளைக் கொண்டு, மனித உடலில் தனித் தனி தாதுக்களாகவும், கூட்டுத் தாதுக்களாகவும், மனமாகவும், புத்தியாகவும், சுக்கில, சுரோணிதமாகவும் பரிணமிக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு அந்தந்த தாதுக்களையும் மனம், புத்திகளையும், சுக்கில, சுரோணிதங்களையும் உண்டாக்கி வளர்ப்பதற்கான முறைகளைக் கண்டு பிடித்தார்கள். இவைகள் தாம் "கல்ப விஞ்ஞானம்" எனப்படும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலயோகீஸ்வரர்


ஆந்திர பிரதேசத்தில் மும்முடிபுரம் என்ற கிராமத்தில் 33 வருடங்கள் கடுந்தவம் செய்து சிவராத்திரி தினத்தில் மாத்திரம் பக்தர்களுக்கு கண் திறந்து ஆசீர்வதிப்பார். காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகள் பல தடவை இவரை தரிசித்து ஆசி பெற்றுள்ளார்.



பாலயோகீஸ்வரார்

பாலயோகீஸ்வரரின் சகோதரர், இவரும் கடந்த 30 வருடங்களாக, அதே இடத்தில் கடுந்தவமியற்றி சிவராத்திரியன்று மாத்திரம் பக்தர்களை ஆசீர்வதிப்பார். முருகேசு சுவாமிகள் பல தடவை இவரிடம் ஆசி பெற்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திலகர் பெருமான்

சம்சார கடலைத் தாண்டி பேரானந்தமெனும் அக்கரைக்கு எடுத்துச் செல்லும் படகு காயத்ரி

ஞானானந்தகிரி சுவாமிகள்



பக்தியோடு காயத்ரி மந்திரத்தை உச்சரிப்பவனிடம் சாக்ஷாத் காயத்ரி தேவியே அவன் அருகே வந்து அமர்ந்து கேட்டு வேண்டும் வரங்களை அருள்வாள். ஸ்ரீ காயத்ரி பீடத்திற்கு ஆசி வழங்கி கொண்டே இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர் ஜன்ம விஞ்ஞானம்

ஒரே தாய்தந்தைக்குப் பிறக்கும் ஐந்து குழந்தைகள் ஐந்து விதமான அறிவு நிலைகளில் வளரக் காரணம் என்ன? எல்லோரையும் ஒரே விதமாக வளர்த்து ஒரே விதமாகவூட்டி, ஒரேவிதமான கல்வியைக் கற்பித்தும் ஒருவன் கணிதத்தில் பற்றுடையவனாய், ஒருவன் இயந்திரக் கலையில் பற்றுடையவனாய், ஒருவன் எக்கல்வியிலும் பற்றில்லாதவனாய் வளரக்காரணம் என்ன? ஹிரண்யனுக்குப் பிரகலாதன் பிறந்தது போல் மூடர்கள் வயிற்றில் நல்லவன், நல்லோர் வயிற்றில் மூடன் பிறக்கக் காரணமென்ன?

மனிதர் பிறரிடம் இருந்து கற்றுத்தான் எந்த அறிவையும் பெற வேண்டும். சிலர் கல்லாமலே கற்றவர்களை விடச் சிலகாரியங்களில் திறமைசாலிகளாய் இருக்கக் காரணமென்ன? ''பாத்கல்'' என்று ஒருவன் இருந்தான் இவன் கணிதம் கற்கக் கூடாதெனப் பெற்றோர் கருதி, கண்காணித்து வந்தனர். ஆனால் அவன் எங்கும் கற்காமலே தன் 12-வது வயதில் அக்கால கணித சாஸ்திரிகள் அறிந்திராத சில கணக்குகளைப் போட்டான். இன்னும் அவை ''யுக்லிட்'' என்ற பெயரில் கணித நூல்களில் காணப்படுகின்றன. ''மோர்ஜாட்' என்பவன் தன் மூன்றாவது வயதில் தன் சகோதரிவாசித்த ஒரு பாட்டைக் கேட்டு, உடனே அதை அப்படியே வாசித்தான். இத்தாலியில் '' வைடோ மாங்கியானெல்லி'' என்ற படிக்காத இடையன் தன் 13-ம் வயதில் பாரிஸ் அக்கடமியில் 3796416-ன் கனமூலம் இன்னதென அரை நிமிடத்தில் மனதில் கணித்துச் சொன்னான். சுமேச சாந்திரன் வங்காள வாலிபன் நூறுஸ்தான எண்ணை நூறுஸ்தான எண்ணால் மனதில் சில நிமிடங்களில் பெருக்கிச் சரியான விடையைச் சொன்னான். இவர்களுக்கெல்லாம் இத்திறமை எப்படி உண்டாயிற்று?

உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தனியொரு அறிவு நிலையில் வளர்ந்து வாழ்கிறான். பிறப்பில் இருந்தே மனிதரில் வேற்றுமை வளர்ந்து வருகிறது. இவ்வேற்றுமைகளின் அடிப்படை ஆதாரம் எங்கே இருக்கிறது. உடலிலா? இரத்தத்திலா? மூளையிலா? ஆராய்ச்சியின் பயனாக அறிவு வேற்றுமைக்குக் காரணம் மூளையல்ல எனக்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அறிவாளிக்குப் பெரிய மூளை மூடனுக்குச் சிறிய மூளை எனும் வேற்றுமைக்கும் இடமில்லை. மூளை சிறியதானால், அறிவும் சிறியதாகும் என்றால் முன் சொன்ன சாட்சிகளில் சிறுவயதினர் எப்படிப் பெரிய காரியங்களைச் செய்திருக்க முடியும். அறிவு வேற்றுமைக்கு அதிக ரத்தம், குறைவான இரத்தம் எனும் வேற்றுமையும் இருக்க முடியாது. இரத்தத் தன்மைக்கும் அறிவுக்கும் ஒற்றுமை கற்பிக்க முடியாது.

## அறிவு வேற்றுமையின் ஆதாரம் உடலில் இல்லை

பௌதிக, மாமிச பிண்ட உடலில் செயல்படும் அறிவு உணர்வு, ஆன்மா, உடல்பொருள் அல்ல, பௌதிகப் பொருள் அல்ல, உடலை இயக்கி, அனுபவம் பெறும் ஓர் சூஷ்மசக்திப் பொருளாகும். உடல் அழிவால் இது அழிந்து விடுவதில்லை. உடல் உருவாக முன்னும், உடல் விடுபட்டபின்னும் அது அனுபவ சமஸ்காரங்களுடன் இருக்கவே செய்கிறது. தெலுங்கன் தமிழ்நாட்டில் குடி புகுந்தாலும் தெலுங்கு பேசுவது போல், தமிழன் ஆங்கில நாட்டில் இருந்தாலும் தமிழ் அறிந்திருப்பது போல், தன் தன் சொந்த அனுபவ சமஸ்காரத்துடன் வளர்கிறது. இசைக் கருவியில் வித்வான் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகத்தையும் இசைப்பது போல், எந்த உட லில் வாழ்ந்தாலும் ஆன்மா, தன் சமஸ்கா ரத்தை வெளிப்படுத்தி வாழ்கிறது. இசைக் கருவி கெட்டுப் போய் இருப்பின் வித்வான் அதன் மூலம் தன் திறமையை வெளிப்படுத்த முடியாதது போல உடலின் செயல் தன்மை யின் வேற்றுமையால் தன் முழு சமஸ்காரத்தை யும் சரியாக வெளிப்படுத்த முடியாமல் இருக்க லாமன்றி அதன் வழி எதை வெளிப்படுத்தினா லும் அது அதன் சமஸ்காரமாகவே இருக்கும். ஒருவன் பல ஊர்களில் பல வீடுகளில் மாறி மாறி வாழ்வதைப் போலத்தான் ஆன்மா பல கோலங்களில், பல உடல்களில் பிறந்து, பிறந்து வாழ்கிறது. ஒவ்வொரு வகை அனுப வத்தை மனிதன் அடைவது போல, ஒவ்வொரு பிறப்பிலும் ஆன்மா புதுப்புது அனுபவம் அடைகிறது. ஒருவன் புதிதாக எங்கு குடி புகுந்தாலும் தன் பழைய ஊர்களின் அனுப வம், அவனில் இருப்பது போலவும் ஆன்மா பிறவிகள் தோறும் அடையும் அனுபவங்களை சமஸ்கார வடிவில் எப்போதும் வைத்துக் கொண்டே இருக்கிறது. பிறப்பிற்கு முன்பே, பிறந்தபின் வாழும் வாழ்க்கை முறை மனித னில் வரையறுக்கப்பட்டு விடுகிறது. இவ்வுண் மைகளை மனிதர் நம்பி வந்துள்ளனர் என்ப தைச் சில உதாரணங்களால் விளக்குகிறோம்.

எகிப்தில் 3000 வருடங்களில் ஒரு ஆன்மா தாவரம், பறவை, மிருக உடல்களைக் கடந்து மனித உடலை அடைவதாக நம்பினார்கள். மறுபடி மிருக உடலுள் போகாதிருக்க வேண் டும் என்பதற்காகவே, மரித்த உடலைக் காப் பாற்றி வந்தனர். சால்டியா நாட்டில் ஆன்மா வுக்கு பல உறுப்புகள் உண்டு. மரிக்கும்போது அவைகளில் சில அழிந்து மறுபடி பிறக்கும் போது, திரும்ப உண்டாவதாக நம்பினர். சீனா வில் (Toism) ரோய்சம் எனும் மதத்தினர் மனிதனுக்கு மூன்று உறுப்புகள் உண்டு. 1. க்கியூஈ (Kuei) இது வயிற்றில் இருந்து உடல் இறக்கும் போது இறந்துவிடும் 2 - லிங்ஸ் (Lings) இருதயத்தில் இருந்து உடல் இறந்து சில நேரத்தின்பின் அழிந்துவிடும் 3 - யூன் (Quiean) இது மூளையில் இருப்பது, உடல் அழிந்தாலும் இது மறு உடல் ஏற்கும் வரையும் நிலைத்து நிற்பது என்றுநம்பினர். "பைதகிரஸ் ", பிளாட்டோ" என்ற பேரறிஞர்கள். ஆன்மா வுக்கு மறுபிறவியுண்டெனக் கூறினார்கள். "ஜான் தியேட்டிஸ்" (John) Theyepdish) முற்பி றப்பில் எலியாக இருந்தாலும் குழந்தைப் பிறப்பின் அதைப் பாதையோரத்தில்வைத்து விடுவார்கள். ஏனென்றால் யாராயினும் கர்ப்பி ணிப் பெண்கள் அவ்வழியாகச் சென்றால், அவர்களின் வயிற்றில் அவ்வுயிர் புகுந்து கொள்ளும் என நம்பினர். தற்கால சிறந்த விஞ்ஞானிகளான "பார்க்லீஸ், ஸ்வீடன் பார்க், எமர்சன், ப்ரூசோ, லெஸ்ஸிஸ், ஹார்டன், கெஸ்ட், ஹேகல், லாங்க், பேலோ, டென்னி சன், முதலானோரும் ஆன்மாவுக்கு புனர்ஜென் மம் உண்டென ஒப்புக் கொள்கின்றனர்.

பாவம் செய்பவன் அதன் தண்டனையை அனுபவிக்கத் தேவையில்லையானால், உல கில், நீதிகள், ஒழுக்கவிதிகள், தர்மமுறைகள் பிரசன்னமாய் இருந்திருக்கத் தேவையில்லை. பிறப்பின் முன்னும், இறப்பின் பின்னும் மனி தன் இருப்பதில்லையானால், அவன் நற்காரி யம் செய்து நல்லவனாய் வாழ வேண்டிய தேவையென்ன? பாவத்துக்குத் தண்டனை யில்லாவிடில் ஒருவன் பிறப்பில் இருந்தே நோயாளியாய், வறியவனாய் வாழ மற்றவன் பலசாலியாய், செல்வச் சீமானாய் வாழக் கார ணம் என்ன? சந்தர்ப்பமா? விஞ்ஞான அறிவு லகம் இதை நம்பாது.

தம்பூர்வ சென்மத்தைப் பற்றிச் சரியான தக வல்களை வெளியிட்டவர்கள், சம்பவங்கள், நாளுக்கு நாள் உலகில் அதிகரித்து வருகின் றன. ஒரு கிராமத்தில் ஓர் ஏழைஉழவன் உழுது கொண்டிருந்தான். திடீரெனத்தான் முன்பு இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பட்ட ஊரில் இன்ன நிலையில் வாழ்ந்து கொண்டிருந்ததாய்க் கூறினான். இப்பிறவியில் அவன் அவ்வூருக்குச் சென்றதே இல்லை. அங்கு சென்று பார்த்த போது அவன் கூறிய விபரங்கள் சரியாய் இருந்தன. இவ்விபரம் ''வில் லியம் அட்ஜின்சன்'' எழுதிய நூலில் உள்ளது. ''புடாபெஸ்ட்'' நகரில் ''ஜரிஷ் பெனாடி'' என்ற பெண் இருந்தாள். இவள் நோய்வாய்ப்பட்டு மூர்ச்சையானாள். மூர்ச்சை தெளிந்ததும். திடு மென ''ஸ்பானியப் பாஷை பேசத் தொடங்கி னாள். இது அவள் படித்த பாஷை அல்ல. தன்வ யது 40 என்றும், தனக்குப் 10 குழந்தைகள் உண்டென்றும், தான் மெட்ரிக் வரை படித்ததா யும் சொன்னாள். ஆராய்ச்சி செய்தபோது யாவும் உண்மையாய் இருந்தது. இது லாகூர் தினசரி பத்திரிகையில் உள்ளது.

டெல்லியில் சீர்காழிப்பேட்டையில் ரெங்கபி ஹாலிமாதுர் என்பவரின் மகள், சாந்தாதேவி 4 வயது வரை பேசாது இருந்தவள். பின்னர் பேசத் தொடங்கி மத்ராவில்தான் இருந்ததா யும், அங்கு தன்பதி இப்படி இருந்ததாயும் அடுப்பங்கரையில் அவருக்குத் தெரியாமல் இவ்வளவு பணம் புதைத்து வைத்திருப்பதா யும், சொன்னாள். ஆராய்ச்சி செய்தபோது எல்லாம் சரியாக இருந்தன. இந்தப் பாடத்தை எழுதும் ஆசிரியரோ, ஹிப்னடிச நிலையில் இருக்கும் எவரும் தம் பழைய பிறவியைச் சரியாக வர்ணிக்க முடியும். இவ்வழியில் நூற் றுக்கணக்கான ஆராய்வுகளைச் செய்து. புனர் ஜென்மம் உண்டென்பதை நிரூபித்து உள்ளார்.

மனித உடல் உற்பத்தியாவதற்கு மூலமான கருவில் (Spermatoza) எவ்வித வேற்றுமையும் இல்லை. எல்லா மனிதக் கருக்களும் எல்லாவி தங்களிலும் ஒன்றாகவே இருக்கின்றன. கரு உருவாகி வளரும்போதுதான் அதில், உடல் மன அறிவு வேற்றுமை தெரிகின்றது. இதற்கு ஆதாரம் கருப்பையும் கருவளரும் முறையும் அல்ல. கருவை உருவாக்கும் மன சம்ஸ்காரமே வேற்றுமையை உண்டாக்குகிறது. ஆன்மிக சமஸ்காரங்களில் இத்தகைய ஆராய்ச்சிகள் பல நடத்தப்பட்டுள்ளன.

தந்தை தாயின் சுக்கில ஸ்ரோணிதம், பிறக் கப் போகும், ஆன்மாவின் மனப் பிராண அச்சில் அதே வடிவில் பற்றி உருவாகின்றது. இதனால் வேற்றுமையில்லாத கருக்களில் வேற்றுமை நிறைந்து உருக்கள் உருவாகிப் பிறக்கின்றன.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்பெண் விஞ்ஞானம்

மண்ணுலகில் தனியாக ஆண் என ஒரு ஜீவனோ, பெண் என ஒரு ஜீவனோ கிடையாது என்றால் பலர் சிரிப்பர். சிரிப்பவர் எக்கருவில் இருந்து பிறந்தார் என்பதை அறிந்தால் தலைகுனிவர். மனிதன் உண்டாவதற்கு ஒருகரு உருவாக இருபொருள்களது சம்பந்தம் தேவை. சுக்கிலம் ஆணின் பிஜப்பையில் இருந்து உண்டாவது. சுரோணிதம் பெண்களின் சினைப்பையில் இருந்து உண்டாகும். சினைமுட்டைகள் இவ்விரண்டும் ஒன்று சேரும் போது சுக்கிலம் அதிகமானால் ஆணும், சுரோணிதம் அதிகமானால் பெண்ணும் உருவாகிறது. இரண்டும் சம அளவில் இருப்பின் பேடிகளாகப் பிறப்பர். இரன்டு அம்சங்களும் கலவாது விடில் மக்கட் பேறே இல்லை எனலாம். மற்றும் இவை பற்றிய விளக்கங்களை - விரும்பிய மக்கட் பேறு'' மலட்டுச் சிகிச்சை என்ற இரகசிய வித்யா பாடங்களில் படித்து அறியலாம்.

ஆண், பெண் இரு பாலாரிலும் ஆண்மை பெண்மைத் தத்துவங்கள் கலந்து இருக்கின்றன. இக்கலவையில் ஆண் தத்துவம் அதிகம் உடையது ஆணாகவும், பெண் தத்துவம் அதிகமுடையது பெண்ணாகவும் பிறக்கிறது. அதனால் ஆண்மையில் பெண்மையுண்டு. பெண்மையில் ஆண்மையுண்டு. பெண்ணில் பெண்மை அதிகம் குறைவு. இப்படியேதான் உலக ஆண், பெண் இனம் வழித்தோன்றலாக உருவாகி வருகிறது. முட்டையில் கூட ஆண்மை பெண்மையுண்டு. வெண்கரு, மஞ்சள் கரு இரண்டும் கலவாமல் கோழி உண்டாகாது.

இரத்தத்தில் வெண்மை செம்மையான அணுக்கள் இருப்பதுபோல் சகல உயிர்களது உடலிலும் (Cells) ஆண்மை, பெண்மைக்கான அணுக்கள் உண்டு. உடல் வளர்ச்சியில் இரண்டுமே வளர்ந்து, பின் இரண்டும் தேய்ந்து, பின் உடல் அழிவில் இரண்டுமே அழிகிறது. எந்த சதவீதத்தில் கருவில் இவை கூடியதோ அதே சதவீதத்தில் இவற்றின் வளர்ச்சி அழிவுகளும் நடைபெறுகின்றது. ஏதாவது சில காரணத்தால் வளர்ச்சியின்போது ஆணில் உள்ள பெண் அணுக்கள் அதிகமாய் வளர்ந்தால், அவ் ஆண்மகனில் பெண்மைத் தன்மையும், பெண்ணில் ஆண் இனச் செல் (Cells) அளவு மீறி உண்டாவதே பெண் ஆணாகவும், ஆண் பெண்ணாகவும் மாறுவதற்கு உரிய காரணம் ஆகும்.

ஆண்மையும், பெண்மையும் கலப்பதால் தான் கருவுண்டாகும் என்று அறிந்தோம். இவையிரண்டும் ஏன் கலக்க வேண்டும்? மக்கட்பேற்றுக் காரியத்திற்காக, ஆண் விந்து யோனிலும், பெண் சினை முட்டை கருப்பையின் வாயில் அருகிலும் இருத்தப்படுகிறது. பின்பு ஆண் விந்துவின் ஜீவக்கிருமிகளை, பெண் சினைகள் ஒருவகைக் காந்த சக்தியால் தம்பால் இழுக்க அக்காந்த இழுப்பால் ஆண் விந்துக் கிருமிகள் அதை நோக்கிப் போக இரண்டும் ஒன்று சேர்ந்து, இக்கலப்பால் புதுத்தன்மை பெற்று, புதிய சரீரத்தின் மூலக் கருவகமாய் (குழந்தை) உருவெடுக்கிறது. ஆண்மைத் தத்துவத்திற்கும் பெண்மைத் தத்துவத்திற்கும், ஒரு ஈர்ப்புச் சக்தி, கவர்ச்சித் தன்மை, காந்தத்தன்மை இயற்கையாய் இருப்பதால் தான் இப்படி நடைபெறுகிறது.

மின்சாரத்தின் தள துருவங்களிடையே எப்படி இழுக்கும் தன்மையும், பாயும் தன்மையும் இருக்கிறதோ, இதேபோல் தான் ஆண்பெண் அணுக்களிலும் உண்டு. இது இருப்பதால்தான் உலகில் உயிர்களது உடல் தோற்றம் சமைக்கப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கூறிய ஆண்பெண் கருத்தத்து வங்களை அறிந்து கொண்டால், ஆண், பெண்களின் தன்மை, சம்பந்தம் பற்றி அநேக தத்துவங்களைப் புரிந்து கொள்ளலாம். ஒரு அணு "ப்ரோடகன்" எனும் நடுமையத்தின் ஈர்ப்புத் தன்மையும் "பெக்ட்ராஜ்ஸ்கனென்" னும் சில நுண்ணிய பாய்வுத் தன்மைகளையும் கொண்டது. இரண்டும் சம அளவில் இருக்கும் போது அணு சமத்துவ நிலையில் இருப்பதாகச் சொல்வோம். "பெக்ட்ரான்ஸ்" குறைந்த அணு குறைந்த அணுவை சரிக்கட்டுவதற்கான அதிக ஈர்ப்பு தன்மையை கொண்டிருக்கும். "ப்ரோகணை" விட்டுப் பிரிந்த அணு தன்பாய் வுத் தன்மையால் பெண்ணின் கருப்பையுள் பாய்ந்து ஒன்று சேர்ந்துவிடும். எனவே இரண் டும் தம் ஈர்ப்பு, பாய்வு தன்மை நெருங்கிவரு மானால் உடனே நன்கு சேர்ந்து விடும்.

ஆண்களில் குறைந்தளவு பெண்மை இருப் பதால் பெண்மையைப் பெற்று சமத்துவம் அடைய எப்போதும் பாய்வுத் தன்மையிலி ருந்து கொண்டே இருக்கும். பெண்களில் ஆண்மைத்தன்மை குறைவாய் இருப்பதால் அதைச் சரிக்கட்ட எப்போதும் ஆண்மையை ஈர்க்கும் தன்மை இருக்கிறது. ஆண், பெண் இடையே இயற்கையாய் காணப்படும் உணர்ச்சி வேகத்திற்கு இதுவே காரணம். எளிதில் கட்டுப்படுத்த முடியாதபடி இருபாலா ரிலும் இவ்வுணர்ச்சி இருந்துவர இவர்களது சரீர இயற்கையே காரணம்...!

இது சாதாரணமாய் தவிர்க்க முடியாத உணர்ச்சியாகும். உலகில் உயிர்களின் பரிணா மம் நிகழ்ந்து கொண்டிருக்க இது இன்றியமை யாதது. இருபாலாரிலும் இருந்து வரும் உணர்ச்சி, ஆண்மை பெண்மை அணுக்கள் வெவ்வேறு சக்தியைக் கொண்டனவாதலால் அவைகளின் அதிகக் குறைவில் உருவாகும். ஆண், பெண்களின் சக்தி, குணம், பண்பு வேறாய் இருக்கின்றது. "ஆண்-பெண்" சமத் துவம் என்று கூச்சல் போடும் மனிதர்கள், ஆண் பெண்ணின் இந்த இயற்கையான அடிப் படை வேற்றுமைகளைப் புரிந்து கொண்டால், இது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதை அறிவர். பெண்மைக்குச் சில தனிப் பண்புகள் உண்டு. அவையென்றுமே ஆண்மைப் பண்பு களாக மாறா. ஆண்மைக்குரிய சிறப்புப் பண்பு கள் எதுவானாலும் பெண்மைப் பண்பாக மாறாது.

சிருஷ்டியில் இவ்வேற்றுமை ஏன் இருக்கி றது. "பரிணாமம்" என்பதே "ஒன்றைக் குறை யப்பெற்று இக்குறையை நிறைவாக ஆக்கிக் கொள்ளச் செய்யும் போராட்டமே" எல்லாருக் கும் ஒரே குறையிருப்பின், அது எவ்வகையி லும் நிறைவேறாது. ஒருவரிடம் ஒரு குறை மற்றவரிடம் வேறு குறை இப்படியிருந்தால் ஒருவர் மற்றவரின் குறையைப் போக்கி இருவ ரும் தமக்கான நிறைவைப் பெறமுடியும்." ஆன்ம கோடிகளைப் "பரிணாமத்தில்" புகுத்த விரும்பிய இறைவனும் அவைகளின் கலன்க ளில் (Cells) இக்குறையைப் பிரித்துவைத்தார். இக்குறையை நிறைவாக்குவதே "ஆன்மபரி ணாமம்" பௌதிக உடலுள் கூறிய ஆண்- பெண் வேற்றுமைகள் ஆன்மாவின் கவனம் அனைத்திலும் இருக்கிறது.

மனஉலகில் வாழும் தேவர்களிலும் ஆண், பெண்மை இருக்கிறதல்லவா? இதுவரை நாம் உடலில் இருப்பதாகச் சொல்லிவைத்த வேற்று மைக்காதாரம் உண்மையில் ஜடப்பொருளின் தன்மையல்ல. ஜடம்தானாக எதுவும் ஆகாது. ஏதும் சக்திதான் ஜடப் பொருளில் எந்த இயக்கத்தையும் உண்டாக்கும். எனவே ஆண் பெண்மைக்கு ஆதாரமானது உண்மையில் உடலை உருவாக்கும் சக்தி, பிராண சக்தி யிலே இருக்கிறது. பிராணன் பௌதிக உட லில் மட்டும் அல்ல. பிராணமய, விஞ்ஞான மய கோஸங்களிலும் இது இருக்கிறது.

இரண்டு சக்திகளும் தனித்தனியான அளவு களில் இருக்கும்வரை கீழ்ப்பரிணாமம், இரண் டும் சமநிலையையடையும் போது பரிணாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு. ''சமத்துவம் யோக முக்கியதே'' முன்னோர்களால் ஏற்படுத்திய தாம்பத்திய உறவுகளிலே உள்ள இரகசிய முறை இதுவேயாம். காம இச்சை பூர்த்தியாக மட்டும், உடல் உறவாகும். இல்லறம் என்று ஒன்றை வகுக்க வேண்டிய தேவையிருக்காது. சில நாள்வரை ஒரு பெண்ணின் சக்தியில், ஓர் ஆண்மகன் சக்தி கூடிவந்து பின் வேறிடம் செல்லுமானால் முன் சேர்ந்த அளவு சக்தி பயனில்லாது போகும் அல்லவா? எனவேதான் ஓர் ஆணும் ஒரு பெண்ணுமே இணைந்து இல்லறம் நடத்த வேண்டுமென்று விதித்தனர்.

ஆண் பெண் உறவு சரீர இச்சா பூர்த்திக்காக மட்டுமல்ல. இருவரின் முக்திபேற்றுக்கான சக்திபரிவர்த்தனத்துக்காக (பரிமாறிக் கொள்ளல்) இருக்கிறது. ஆண்மை/ பெண்மைக் குணங்கள் விழிப்படையும்போது, அன்பு தேவை, முதலிய குணங்கள் செயல்படும் போது, இருவரின் குறைகள் நிறைவாக்கப்பட்ட சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. இருவரும் பிறவிப்பயனைப் பெறும் வழியில் முன்னேற வழி செய்கிறது. இருவரும் இப்படிக் கலந்து உடலால் மட்டுமல்ல, குணங்களாலும் உறவாடாதவரை இருவருக்கும் மேல் வாழ்க்கை அமைவது கடினம். எனவேதான் ''இல்லறமல்லது நல்லறமன்று'' என்றனர். பல பிறவிகளையும் தொடர்ந்து தம்பதியராய் இணைந்து பரிணாமத்தை விரைவில் முடிக்க முயல்வர். ''ஆண், பெண்'' இரகசியங்களை அறிந்த பெரியோர் இவ்வுண்மைகளைப் புரிந்து கொள்ள ஆன்மீக கட்டுரைப் பாடங்களும் பயன்படும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பொருளாக்கல் விஞ்ஞானம்

பிரபஞ்சத்தில் காணப்படும் பொருள்கள் யாவும், சில சூக்ஷ்மமான ஒரேவகையான மூலப்பொருள் பருக்கைகளின் பல்வேறு அளவான, வடிவான இறுக்கங்களே, எப்படி 96 வகை அணுக்களின் சேர்க்கையால், உலகப் பொருள்கள் அனைத்தும் ஆகியுள்ளதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்களோ, அப்படி அணுக்களும், சில சூக்ஷமப் பொருளின் இறுக்கத்தால் ஆனவையே என மெய்ஞ்ஞானம் கூறுகின்றன. தற்போதைக்கு அணுக்களே மூலப்பொருள்கள் எனக் கொண்டு ஆராய்வோம். (Hydrogen) நீரிய அணுவும், உயிரிய அணுவும் (oxygen) சேர்ந்தது நீர். இது போலவே சகல பொருட்களும் சில அணுக்களின், சில அளவான, சில வடிவான, இறுக்கங்களேயாம்.

பிரபஞ்சப் பரப்பு முழுவதும் எந்த மனிதனாலும் உண்டாக்கப்படாதவையாகப் பரவியிருக்கும் அணுக்கள், இப்படிப்பல அளவுகளில், பலவடிவுகளில் சேர்ந்து பல பொருள்களால் ஆனது, எப்படி? தானாக சேர்கின்றன என்றால், எல்லா அணுக்களுமே சேர்ந்திருக்க வேண்டும். நீரிய அணுவும், உயிரிய அணுவும் தானாகவே சேர்ந்து, நீராகும் தன்மை கொண்டதனால் வானியல் பரப்பில் இவ்விரு அணுக்களும் தனியாகக் கிடைக்கா. எல்லாம் சேர்ந்து நீராக மாறி இருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை. எங்கோ ஓர் இடத்தில் எப்பவோ ஒருவேளை மனித அறிவுக்குக் காரணம் தெரியாதபடி சிலகுறித்த நீரிய அணுக்கள் மட்டும், சில குறித்த உயிரிய அணுக்களுடன் சேர்ந்து நீராகிறது. மற்றவை அப்படியே இருக்கின்றன. அணுக்களின் இத் தன்மையைக் கண்ட "ஐன்ஸ்டீன்" போன்ற விஞ்ஞானிகள் குறித்த சமயத்தில் குறித்த இடத்தில் குறித்த அளவில், குறித்த வடிவில், குறித்த அணுக்களைச் சேர்த்து குறித்த பொருளாக ஆக்குவதற்கு, மனிதனில் செயல்படும் "மனம்" போன்ற ஒரு சக்தி செயல்படுகிறது என்று ஆராய்ந்து கண்டறிந்தனர். இதே கருத்தை "உபநிடதங்களும்" கூறுகிறது. ஸோ அமஸ்யத இறைவன் பொருளை ஆக்க நினைத்தார். நினைப்பது "மனம்" அதனால் பரம்பொருள் தன் மனதைக் கொண்டே, பொருள்களை ஆக்கிற்று என்ற கருத்து வெளிப்படுகிறது.

மின், காந்தம், அணுசக்திபோல் மனிதனில் இயங்கும் மனதும் ஒரு சக்திதான் என்பதை, இன்று பல விஞ்ஞானிகள் பல கருவிகள் மூலம் நிரூபித்து உள்ளனர். ரேடியோவில் "மைக்கை" மனிதன் "ஆக்ஞா சக்கரத்தில், வைத்துப் பலமாக எதையாவது நினைத்தால் அந்நினைப்பை, ஸ்பீக்கரில் கேட்கும்படி, "மானசரேடியோ"வை (Mental Radio) இன்று தயார் செய்துள்ளனர்.

குறைந்த அளவு மின்சக்தியால், எந்தப் பெரியகாரியத்தையும் சாதிக்க முடியாது. மின் சக்தியைச் சில சாதனங்கள் மூலம் அதிகப்படுத்தலாம். இதே போல் மனிதனில் சாதாரணமாய் செயல்படும் மனம், மிகக் குறைந்த சக்தியுடையது. மனிதன் சில சாதனை மூலம் "மனச் சக்தியை" அதிகரிக்கலாம். இப்படி அதிகரித்த மனச்சக்தியை, அணுக்களில் புகுத்திப் பொருள்களை ஆக்க முடியும். பொருள்களில் புகுத்தி அதை அணுவாகச் சிதைக்கவும் முடியும். இதுவே மனப் பொருளாக்கல் விஞ்ஞானம்.

வெறும் தகரடப்பாவைக் காட்டி, மூடிதிறந்ததும் அதில் நிறைய மிட்டாய்கள் இருக்கச் செய்கிறார்கள். ஏமாற்று வித்தையில், இப்படிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர் பலர் இருப்பினும், உண்மையாய் செய்பவர் சிலர் இருப்பர் 'என்று ஸ்வாமி விவேகானந்தர் தம் நூலில் கூறியுள்ளார். மனச்சக்தியை அணுக்களில் புகுத்தி, அவற்றை இறுக்குவதாலேயே இத்தகைய சித்திகள் செய்யப்படுகின்றன.

நிறைந்த மகிழ்ச்சியுடைய ஒருவனது உடல், போதுமான சத்துணவு, உண்ணாவிடிலும் செழிப்பாய் உள்ளது. இதன் காரணம் அவனது "மனச்சக்தி" அவன் உடலில் புது உடல் அணுக்களை உற்பத்தி செய்வதே, கவலை, விசனம் முதலியவற்றால் வருந்தும் உடலானது நிறைய ஊட்டச்சத்துப் பொருள்கள் இருந்தும் தேய்கிறது. இதன் காரணம் அவன் மனச்சக்தி பொருளை, அணு அணுவாகச் சிதைப்பதில் ஈடுபடுகிறது.

கண்ணன் ஒரே சமயத்தில் ஒரு கண்ணனாகத் தென்பட்டான். ஒரு சாது ஒரே சமயம், பல ஊர்களில் காணப்பட்டார் என்பவை போன்ற சம்பவங்களும் மனச்சக்தியால் நடப்பவையே. மனச்சக்தியை அணுக்களில் புகுத்தி உருவை உண்டாக்குவதே இதன் கருத்தும். இராமாயணத்தில் கூறப்படும், மாயா சீதையின் தத்துவமும் இதுவேதான். முன்கூறிய உண்மைகளால், மனச்சக்தி கொண்டு அணுக்களைத் திரட்டியிறுக்கிப் பொருள்களை உண்டாக்க முடியும் என்பதை நன்கு அறிவீர் என நினைக்கிறேன். "மனப் பொருளாக்கல்" என்பது இக்கலையைத்தான் குறிக்கிறது. எனினும் பலர் "மனச்சக்தி" கொண்டு உலகில் உள்ள தனக்கு வேண்டிய பொருளைப் பெறுவது தான் நடைமுறையில் இருக்கிறது. மனச்சக்தி கொண்டு மனிதன் உலகில் எதையும் பெற முடியும். இப்படி மனதை உபயோகப்படுத்துவதுதான் "மனப்பொருள்" விஞ்ஞானம், மனச்சக்தியை உபயோகித்து பல காரியங்களைச் செய்ய அதிக மனச்சக்தி தேவை. இதை சிதறாமல் குவித்து, குறித்த காரிய சாதனைக்கு போதல் இதுவே. இதன் சாதனைகள், "பிரணாயாமம்" ஏகாக்ரம், தியானம் என்பவையே இவற்றை முறையாக ஒருவன் பழகிவரின், அவன் மனச்சக்தி அதிகரித்து குவிந்து உபயோகத்துக்குக் கிடைக்கும். இப்படிப் பெற்ற மனச்சக்தியை உபயோகிக்கும் முறையை விளக்குகிறேன்.

உலகில் எப்பொருளையாவது பெறவிரும்பில், அப்பொருளின் உருவை மனதில் அசையாது இறுக்கி நிறுத்த வேண்டியதுதான். அது உலகில் எங்கு இருப்பினும், சக்தி அங்கு பாய்ந்து சாதனைகளைத் தேடி வருவதற்கான சூழலை உருவாக்கிவிடும். உதாரணம் ஜப்பானில் உள்ள ஒரு பொருள் தேவை என்று மனச்சக்தியால் நினைத்தால் அது அப்படியே இலங்கைக்கு வந்து எம் கையில் கிடைக்கும் இந்நிலைதான் "மனச்சக்தி நினைப்பை இறுக்கி பிடித்தல் என்பது.

எனவே சகலரும் தத்தம் தியான ஆத்மீக உணர்வால் தம் மனச் சக்தியை, இறுக்கிப் பிடித்து நினைத்து "பிரணாயாம' ஏகாக்ர தியானத்தால், பெறமுடியும். எனவே வாசகரே நீங்கள் அனைவரும் உங்கள் மனச் சக்தியை இறுக்கி விரத அனுட்டானங்கள் இருந்து வேண்டிய சித்திகளைப் பெற்று உய்யவும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சன விஞ்ஞானம்

பிரபஞ்சப் பொருட்கள் எல்லாம் ஒருவகைக் காந்தக் கதிர்வீச்சை (Radio Activity) கொண்டவை. விளக்கு எரியும்போது அதிலிருந்து எப்படி ஒளிக்கதிர்கள் சுற்றிலும் பரவுகின்றனவோ, அப்படி பிரபஞ்சத்தின் சேதன, அசேதன பொருள்கள் எல்லாம் தம்மைச் சுற்றி ஓர் பிரபாவக் கதிர் மண்டலத்தைக் கொண்டிருக்கின்றன. காந்தக் கல்லைச் சுற்றி ஓரளவு தூரம் வரை காந்த சக்தி மண்டலம் இருக்கிறது. ஆனால் நாம் அதைக் கண்களால் காண முடியாது. இரும்புத்துண்டங்கள் இக்காந்த மண்டலத்துள் வந்தால், உடனே இழுபட்டு காந்தத்துடன் ஒட்டிக் கொள்ளும். இதுபோலவே சகல பொருட்களும் தம்மைச் சுற்றி ஓரளவு தூரம் வரை தம் பிரபவாக்கிரண மண்டலத்தைக் கொண்டிருக்கின்றன. இரு பொருள்கள் தம் காந்த மண்டலம் ஒன்றையொன்று தொடும்படி நெருங்கி வந்தால், சக்தியதிகமாயுள்ள பொருளின் காந்தக் கிரணங்கள், சக்தி குறைந்த பொருளின் காந்தத்தின் வழியாகத் தன் கதிர்களைப் புகுத்தி அதில் மாறுதலையுண்டாக்கும். இது பற்றிய விபரங்களை எமது யந்திர விஞ்ஞானம் எனும் ஆன்ம விஞ்ஞான பாடத்திலும் மனித காந்த விஞ்ஞானம் எனும் பயிற்சிப் பாடத்திலும் விளக்கமாய் அறியலாம்.

அணுவின் கதிர்வீச்சை சிலசாதனங்களைக் கொண்டு துரிதப்படுத்துவதுபோல், சகல பொருள்களின் கதிர் வீச்சையும் துரிதமாக்க முடியும் என ஆதி மக்கள் அறிந்து இருந்தனர். பொருள்களின் கதிர்வீச்சைத் துரிதப்படுத்துவதில் மனச்சக்தி அதிகசக்தி வாய்ந்தது. ஒரு பொருளின் கதிர்வீச்சை மனச்சக்தியால் தாக்கினால், அது ஆயிரக்கணக்கான மைல்கள் வரையும் கதிர்வீசிப் பாயும். இது பற்றிய விபரங்களை ''மனித கிரண விஞ்ஞானம்'' எனும் பயிற்சிப் பாடத்தில் படித்தறியலாம்.

மனிதன் தன் மன ஏகாக்ரகத்தால், தன் சூட்சுமக் கண்ணில் மனச்சக்தியை ஒன்றுபடுத்துவதால், பொருட்களின் சூட்சுமக் கதிர்வீச்சுக்களைக் காணமுடியும். இத்திறமையை வளர்க்க இன்று ஆன்மீகக் கூடங்களில் சில கருவிகளையும் கண்டு பிடித்துள்ளனர். (கில்னர்ஸ்கிறீன்) (Kilner's Screen) எனும் கண்ணாடியை உபயோகித்து இத்தகைய திறமையைப் பெறலாம், முறையான மனோபயிற்சி மூலம் இத்திறமையை நல்லமுறையில் பெறலாம்.

## 1. அஞ்சன விஞ்ஞானம்:

மன ஏகாக்ரகத்தால் பொருள்களின் கதிர்வீச்சுத் தன்மையை பல ஆயிரம் மைல்கள் வரை பரவச் செய்யலாம் என்றோம். அப்படி பரவும் போது அதன் கதிர்வீச்சு மண்டலத்துள் அனேக பொருள்கள் கவரப்படும். அதாவது ரேடியோ அலைகள் சகல பொருள்களையும் ஊடுருவிச் செல்வதுபோலவே இதுவும் பரவும். இந்தியாவில் இந்த சூக்குமக் கதிர்வீச்சைக் காணக்கூடிய ஒருவர், இதனால் பொருள்களில் ஏற்படும் மாறுதல்களை நேருக்கு நேராகப் பார்க்க முடியும். சில பொருள்களின் கதிர்வீச்சு மண்டலங்கள். மனச்சக்தியால் எளிதில் தாக்கப்பட்டு வேகமடையும். இத்தகைய பொருள்களின் கதிர்வீச்சுகளை வேகப்படுத்தி அதன் வழிதூரத்தில் உள்ள பொருள்களையும், அங்கு நிற்கும் விடயங்களையும் அறியும் கலைதான் ''அஞ்சன விஞ்ஞானம்''.

## அஞ்சனங்களின் உபயோகங்கள்

யோகிகள் பொருள்களின் கதிர்வீச்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வேகப்படுத்தி தூரத்தில் உள்ளவற்றை அறிந்ததும் அன்றி வேறுபல செயல்களுக்கும் இதைப் பயன்படுத்தினர். கதிர்வீச்சைத் துரிதப் படுத்தும்போது அதில் சில மனிதர்களைக் குறியாகக் கொண்டு, சில எண்ணங்களைக் கலந்து வீசச் செய்தால் அது பரவும் போது குறித்த மனிதனின் மூளையைத் தொட்டுச் செல்லும்போது, அவர்கள் மனதில் குறித்த எண்ணங்களைப் பதித்துச் செல்லும். இப்படித் தூரத்தில் உள்ளவரின் மனதில் மாறுதலை உண்டாக்க அஞ்சன விஞ்ஞானம் பயன்பட்டு வந்தது. கதிர்வீச்சை துரிதமாக்கும்போது, அதில் குறித்த ஆகர்ஷணத் தன்மையைக் கலந்து அனுப்பினால் அத்தன்மைக்குரிய சக்தியை அது ஆகர்ஷித்து, கதிர்வீசும் பொருளின் பக்கம் கொண்டு வரும். இதன் அடிப்படையில் தெய்வ சக்திகளையும், பூத, பிசாசுகளையும் இறந்தோரின் ஆவிகளையும் ஈர்த்துக் கொண்டுவரும் காரியத்திற்கும் அஞ்சனங்கள் பயன் பட்டன. மறைந்திருக்கும் பொருள்களையும் மனிதர்களையும் கண்டு பிடிக்க அஞ்சனங்கள் பயன்படுமென்பதை இதனால் அறியலாம். இதைப் பற்றிய விபரங்களைப் பின்னால் பார்ப்போம். ஆகவே அஞ்சனங்கள் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன என்பதை இதனால் அறிவோம்.

## 2. அஞ்சனக் கலையின் வியாபகம்

அஞ்சன சாதனையைப் பழங்கால முதல் உலகில் பல்வேறு பொருட்களை உபயோகித்து பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் ''போல்யா'' என்ற இனத்தவர் பரம்பரையாக அஞ்சனம் போட்டுப் பார்த்து செய்திகளைச் சொல்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க சிகம்பத்திய மருத்துவர்கள், ஒரு நோயாளிக்கு என்ன மருந்தைக் கொடுக்கலாம் என்று நீருக்குள் பார்த்து அறிவார்கள். மலேயாவின் ஒரு பகுதியில் வாழ்பவர்கள் பீங்கான் தட்டில் வெற்றிலை பாக்கு எச்சிலைத் துப்பி, அதைப் பார்த்துச் சம்பவங்களைச் சொல்வார்கள். ஜப்பானில் கறுப்பு பொலிஷ் செய்த பெட்டிகளைப் பார்த்து, குறிசொல்வார்கள். ரஷ்யாவின் பழங்குடி மக்கள் நீர்க்குடத்துள் பார்த்து விஷயங்களைக் கூறுவார்கள். பாரதநாட்டில், கண்ணாடியில் ஒருவகைக் கரும் மை பூசி அதைப் பார்த்து திருட்டுப் போன வழியைச் சொல்வர். இதற்கு ''அஞ்சனக் கண்ணாடி'' என்று பெயர். சில மூலிகைகளினால் மையைத் தயாரித்து அதை நகத்தின் மேல் தடவி அதைப் பார்த்து விஷயங்களை அறியும் முறையும் பாரத ஆன்மீகர்களிடம் இருந்து வந்தது. தற்காலத்தில் மேலை நாடுகளில் அதிகமாக உபயோகத்தில் இருந்து வரும் ''உருண்டைக் கண்ணாடிப் பார்வை'' (Grystal Gazing) என்பதும் அஞ்சனக் கலையின் திரிபே. ''நீக்ரோ'' போன்ற சில அநாகரீக ஜாதியர்கள் பலவகை மிருகங்களின் ஈரல் பித்தப்பை என்பவற்றை இதற்காக உபயோகிக்கிறார்கள். உலகின் சகல பகுதிகளிலும் அஞ்சனக்கலை பழக்கத்தில் இருந்தது என்பதற்குச் சில சான்றுகள் இவையாகும்.

## ''பாரதீய அஞ்சனக் கலையின் சிறப்பு''

ஒவ்வொரு தெய்வசக்தியும், தனிப்பட்டதொரு வேகத்திலும், தன்மையிலும் இயங்குவதை யோகியர் அறிந்திருந்தனர். இத்துடன் மண்ணுலகில் உள்ள பொருள்களின் கதிர்வீச்சுக்கள். எந்தெந்த வேகத்தின் தன்மையில் இயங்குகின்றன என்பதையும் ஞான திருஷ்டியால் அறிந்திருந்தார்கள். அசேதனப் பொருள்களில் தாவரங்கள்தான் உயிர்களுக்கு அடுத்தபடி வேகமான கதிர்வீச்சுடையன என அவர்கள் அறிந்திருந்தனர். தாவரங்களுக்கும், வானத்தில் திரியும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் சம்பந்தமிருக்கிறது. சில கிரக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர நிலைகள் சிற்சில தாவரங்களில் சில சிறப்புத் தன்மையை உண்டாக்குகிறது என்ற பரம இரகசியத்தையும் அவர்கள் அறிந்திருந்த னர். இந்த உண்மைகளை இப்போதுதான் பௌதீக விஞ்ஞானிகள் அறிய ஆரம்பித்திருக் கிறார்கள். இதனால் சில குறித்த கிரக நட்சத் திர சமாகம காலங்களில் குறித்த சில மூலிகை களைப் பறித்து, அத்துடன் கதிர்வீச்சை வேகப் படுத்தும் சிலபொருட்களைச் சேர்த்து, மையாக்கி உபயோகித்தால் குறித்த காரியங்க ளில் நிச்சய வெற்றி கிடைக்கும் என்பதை யோகியர் கண்டு அறிந்ததன் பயனாக பல் வேறு காரிய சித்திகளுக்கெனப் பல்வேறு அஞ்சனங்களையும், அவைகளை உபயோகிக் கும் முறைகளையும் வகுத்தார்கள். தீயவர்க ளுக்கு இவ்வித்தை கிடைத்தால், தீய காரியங்க ளுக்குப் பயன்படும் என்ற கருத்தால் எழுத்து வடிவில் அவ் இரகசியங்களை எழுதாமல், தம்வழிவரும் மாணவர்க்கு மட்டும் இரகசியமா கச் சொல்லி வைத்தார்கள். ஆனால் தீமைக்குப் பயன்படாத சில அந்தரங்க முறைகளை இங்கு மங்குமாக சாஸ்திரங்களில் வெளியிட்டுள்ள னர். ஆனால் அவைகளைப் படிப்பவர்கள், தற்போதைய கல்வி அறிவு நிலையில் அவற் றின் உண்மைகளைப் புரிய முடியாமல் அவை களைப் பொய் எனப் புறக்கணித்து விட்டார் கள். தத்துவ விளக்கம் தெரிந்தால் இப்படிச் செய்யாமல், பயன் பெற்று இருப்பார்கள்.

தாவரங்களையடுத்து, கஸ்தூரி, கோரோ ஜனை, புனுகு, ஜவ்வாது போன்ற சில மிருகப் பொருள்களும், பலவகை நறுமணப் பொருள்க ளும், மனச்சக்தியால் வேகப்படுத்தக்கூடிய கதிர்வீச்சைக் கொண்டவை. கோரோஜனை, கஸ்தூரி முதலியவைகளை மருந்துகளாக உப யோகித்து அவைகளின் கதிர்வீச்சுத் தன்மை யைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்துவ தற்கு இப்போதுதான் பௌதிக விஞ்ஞானிகள் உண்மையை அறிந்து வருகிறார்கள். சில மருந் துகளை கதிர்வீசும் நிலைக்கு மாற்றி மனித உட லில் செலுத்தினால் அக்கதிர்வீச்சால் நோய்கள் குணமாகின்றன என அறிந்து உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். "இரிடியத்தின் கதிர் வீச்சை" புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் பயன்படுத் துகிறார்கள்.

தெய்வ உபாசனைகளில் நறுமலர்களை உப யோகிப்பதும் இதே கருத்தில் தான். இதைப் பற்றி "நறுமணங்களின் இரகசியம்" என்ற ஆன்ம விஞ்ஞானப் பாடத்தில் படித்து அறிய லாம்.

## அஞ்சன வகைகள்

பாரதிய யோகியர் கண்ட பேருண்மையின் பயனாக, அவர்கள் கண்டுவகுத்த சில அஞ்ச னங்களின் உபயோகங்களைப் பார்ப்போம்.

### பூதாஞ்சனம்

மண்ணுலக வானப்பரப்பில், சுற்றித்திரிந்து கொண்டிருக்கும் பூதங்களைச் செயல்பட வொட்டாமல் தடுக்கும் கதிர்வீச்சுடையது. இத னால் பூதங்களை வசப்படுத்தி தம் இச்சைப் படி நடத்தி வந்தனர்.

### வேதாளாஞ்சனம்

விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதா ளம் போன்றவை சூக்ஷ்ம சக்தி வாய்ந்த ஜீவன்கள், இவைகளை வசப்படுத்தினால் பலகாரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். இதற்குப் பயன்பட "வேதாளமூலி" என்று மூலிகையே இருக்கின்றது.

### பாதாளாஞ்சனம்

புவிப்பரப்பையூடுருவி நெடுந்தூரம் உட்பா யும் கதிர்வீச்சுடையது. புவிக்கடியில் உள்ள பொருட்களை அறியலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வ அஞ்சனங்கள்

தெய்வசக்திகள் பல அவைகளைக் கவரும் கதிர்வீச்சுக் கொண்டவை. அந்தந்த தெய்வ சக்தியைக் கவரும் அஞ்சனங்களைத் தகுந்த வர்களுக்குச் செய்து கொடுத்து வருகிறோம்.

## வஸ்யாஞ்சனம்

இக்கதிர் வீச்சு யார் மூளையைத் தாக்குகி றதோ, அவர்கள் மனதில் நாம் சொல்வதை யேற்று நடத்தும் எண்ணத்தை உண்டாக்கும்.

## மோகனாஞ்சனம்

இதன் கதிர்வீச்சுத் தாக்கம் மனங்களை ஸ்தம்பிக்கச் செய்துவிடும். இதை உபயோகிப் பவர் தம்மில் அப்பிரபாவம் நேராதபடி மாற்றை உபயோகித்துக் கொள்வர்.

## நேத்திராஞ்சனம்

கண்ணின் சக்தி சூக்ஷ்ம ஒளியில் அடங்கியி ருக்கிறது. கண்ணின் இயற்கையான இவ் ஒளி குறைந்தால் பார்வை மங்கிவிடும். இவ்விஞ் ஞானக் கதிர்வீச்சு கண்ணில் அவ்ஒளியை உண்டாக்கும். இதனால் கூரிய பார்வை உண் டாகும். பொது மக்களின் நன்மைக்காக இதைச் செய்தளித்து வருகிறோம்.

## ரோக நிவாரணஞ்சனம்

ஆன்ம வித்தையின் கருத்துப்படி உடலின் ஒரு பகுதியில் பிராண சக்தி குறைவதுதான் அப்பகுதியின் நோய். நோயை உண்டாக்கும் காரணங்கள் அப்பிராணனைக் குறைப்ப வையே. நோய்ப் பகுதியில் பிராணனைப் புகுத்தினால் நோய் குணமாகும். இந்த அஞ்ச னக்கதிர் வீச்சில் பிராணக் கிரணங்கள் இருக் கின்றன. இதனால் பிராணன் குறைந்த பகுதி யில் பிராணன் நிறைந்து, நோய் குணமாகிறது. இதையும் இப்போது செய்தளித்து வருகிறோம்.

## சூட்சுமாஞ்சனம்

இதை உபயோகித்து ஆன்ம திருஷ்டி பெறு வதற்கான சாதனைகளைச் செய்து வந்தால் இக்கதிர்வீச்சால் விரைவில் சூக்ஷ்ம திருஷ்டி உண்டாகும்.

## மானசாஞ்சனம்

மனச்சக்திக்கு சமமான கதிர்வீச்சுகளைக் கொண்டதாகையால், சித்தப் பிரமை போன்ற மனக்கோளாறுகள் குணமாகி, அபாரமாக மனத்திறன் வளரும்.

இன்னும் எத்தனையோ அரும்பெரும் காரி யங்களைச் சாதிப்பதற்கு யோகியர் அஞ்சன முறைகளை வகுத்துள்ளனர். இவற்றால் பல சித்துக்களையும் விளையாடி வந்தனர். பௌதீ கத் தன்மையில் மக்கள் இனம் வளரவே அஞ்சனக் கலையை பொதுமக்கள் அறியா வண்ணம் மறைத்து விட்டார்கள்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீயந்திரம்

ஸ்ரீ பாலதிரிபுரசுந்தரி லலிதா ஸ்ரீ சக்ரஸ்வரூபிண்யை நம:



ஸ்ரீ சக்ரப்பிரியவாசனீம் பகவதீம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரீம் பக்தனாமபயப்பிரதாம் வரனிதீம் ஆனந்த சந்தாயினீம்
பரமேசாச்சுதாம் வர்னிதாம் முனினுதாம் கந்தர்வசம்சேவிதாம் துவாம்தேவி திரிபுறே பராபரமயீ
ஸ்ரீ பிரம்மவித்தியாம் சிவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY 2005 PERIODICALS DIVISION

# யந்திர விஞ்ஞானம்

விளக்குக்கு முன்னால் உங்கள் வலதுகை விரல்களைப் பிரித்து வையுங்கள். விரல்களின் ஓரமாகப் பாருங்கள். என்ன தெரிகிறது? ஏதோ புகை போன்ற ஒரு படம் தெரிகிறதல்லவா? ஒரு காகிதத் துண்டைக் கிழித்து, விளக்குக்கு முன் வைத்து ஓரத்தைப் பாருங்கள். விரல் ஓரத்தில் தெரிந்தது போலவே தெரியும். ஒரு இலையைப் பிடுங்கி, இப்படி வைத்துப் பாருங் கள், அப்போது இது தெரியும். உலகிலுள்ள எந்தப் பொருளைச் சுற்றிலும் இப்படியொரு மண்டலத்தைக் காணலாம். இது என்ன?

பிரபஞ்சத்தில் சிறு அணு முதல், சூரியன் போன்ற பெரும் பொருள் வரை எதுவும் நிலையாயிருப்பதில்லை. எல்லாமே சிதைந்து கொண்டும், ஆகிக் கொண்டும் இருக்கின்றன. புது மின்கள் சகல பொருள்களையும் புதுப்பித் துக் கொண்டிருக்க, பழைய மின்கள் பொருள் களை விட்டு வெளியேறிக் கொண்டே இருக் கின்றன. பொருளை நெருங்கி, புது மின்கள் புகும்; பழைய மின்கள் வெளியேறும். (Radio-active) மண்டலத்தைத்தான் முன்பு நீங்கள் பார்த் தீர்கள். சாதாரண கண்களுக்கு வெறும் புகை போல் தெரியும் இம்மண்டலத்தைச் சூக்ஷ்மக் கண்ணால் கண்டால் மின்னிகள் ஓடும், ஓர் இயக்க மண்டலமாகத் தெரியும். இரும்பை இழுக்கும் காந்தம் இந்தக் கிரண மண்டல ஈர்ப்பாலேயே இழுக்கிறது. மின்சாரம் கம்பியில் ஓடும்போது கம்பியைச் சுற்றி இந்தக் காந்த மண்டலம் உருவாகிறது. ரேடியோ முதலிய வைகளில் உபயோகப்படும் ட்ரான்ஸ் ஃபார்மர் கள் Transformerss) இக்காந்தப் பிரபாவத்தா லேயே உபயோகிக்கப்படுகின்றன.

பொருள்களிலிருந்து சக்தியாக வெளியே றும் கிரணமண்டல மின்கள் பொருளுக்குப் பொருள் வேற்றுமைப்பட்ட உருவங்களில் (Pattern) வெளியேறுகின்றன. அதனால் ஒரு பொருளின் கிரணமண்டலத்தை மட்டும் பார்த்து, அது இன்ன பொருளினுடையது என்று சொல்லிவிடலாம் சில கிரணங்களில் மின்கள் முக்கோணமாகவும் ( △ ) சதுரமாக வும், ( □ ) இப்படிப்பல உருவங்களில் வெளியேறும். சேர்.சி.வி. ராமன் ஒளியைக் கொண்டு பொருள்களை அறியும் சித்தாந்தத் தைக் கண்டு பிடித்தது இதற்கு நல்ல சாட்சி யாகும்.

பொருள்களின் மின்கள் வெளியேறவும், உட் புகவும் சக்தி வேண்டும். ஒவ்வொரு பொருளில் இச்செய்கை நடைபெற, அப்பொருளிலேயே சக்தியிருக்க வேண்டும். பொருளே சக்தியின் இறுக்கம் என இன்றைய விஞ்ஞானம் நிரூபித்தி ருக்கிறது. ஆக பொருளுக்குப் பொருள் சக்தியி யக்கத்தில், வேற்றுமைப்படுகிறது. சில வேகமா னவை, சில மந்தமானவை, சில முக்கோண வடிவில் மின்களை இயக்குபவை, சில சதுரவடி வில் மின்களை இயக்குபவை, சக்தியால் இயக் கப்படும் மின்களின் உருவ அமைப்பில்தான் பொருள்களின் வேற்றுமையிருக்கின்றது. அடுப்புக்கரி, நிலக்கரி, பென்சில்கரி, ஈயம் முத லியவைகள் ஒரே மூலப் பொருளாலானவை. மின்களின் உருவ வேற்றுமையால்தான் இவை வெவ்வேறு பொருள்களாக இருக்கின்றன. பொருள்களெல்லாம் சக்திக் கிரணங்களைக் கொண்டவையானால், இரு பொருள்கள் நெருங்கும்போது, இரண்டின் சக்திகளும் மோதிக் கொள்ளுமல்லவா? இப்படி மோதும் போது வேக சக்தி, வேகமில்லாத சக்தியைச் செயற்படாமல் செய்வதுமட்டுமன்றி, தன் மின் கள் சிலதையும் அதில் புகுத்திவிடுமல்லவா? இரண்டும் பிரிந்தபின் அதிக மின்கள் புகுத்தப் பட்ட பொருள் பிறகு அதை வெளியேற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமுள்ள சக்திப்பொருள், வேகமில்லாத சக்திப் பொருளில் தன் மின்களைப் புகுத்தியதைப் பிரபாவித்தல் என்போம். வாசகரே! உலகில் ''ரச வாதம்'' என்றொரு வித்தை இருந்ததென நீர் கேள்விப்பட்டிருப்பீரல்லவா? அதாவது செம்பைத் தங்கமாக்குவது. இதன் தத்துவம் இது தான். தங்கம் என்பது ஒருவகை உருவமின்களைக் கொண்ட ஒரு வேக சக்தி. செம்பு வேறொரு வகையானது. இச்செம்பின் மின்களுக்குள் வேறு பொருள்களின், பாதரசம் போன்ற பொருள்களின் சில மின்களைக் கலந்து விட்டால் செம்பு பொன்னாய்விடும். செம்பும் பொன்னும் மின்னிலையமைப்புகளில் வேறானவை. மின்களை மாற்றுவதன் மூலம் செம்பைப் பொன்னாக, பொன்னை வேறு பொருளாக மாற்றலாம். ஆனால் இதைச் சாதிப்பது எப்படி என்பதைத்தான் மகான்கள் மறைத்துவிட்டார்கள். இன்றைய இரசாயன சாஸ்திரம் இதை நிரூபிக்கப் பல உதாரணங்களைக் கூறும்.

இதுவரை சொன்னவைகளை மறுபடி சுருக்கமாகப் புரிந்து கொள்ளுங்கள். யந்திர ரகசியம் விளங்கிவிடும். சகல பொருள்களும் சக்தியின் இறுக்கங்கள். சக்தியின் பல்வேறு மின்வடிவங்களில் இணைவதே பல பொருள்களின் ஆதாரம். எல்லாப் பொருள்களும் மின் கதிர்வீச்சுகளைக் கொண்டேயிருக்கின்றன. அதிக சக்தியுடன் கதிர்வீசும் பொருளை நெருங்கி மெதுவாய்க் கதிர்வீசும் ஒரு பொருள் வந்தால் முன்னது தன் மின்கள் பலதைப் பின்னதில் பொருண்மையும், குணமும் மாறுபட்டுப் போகும். இப்படிப் புகுத்தப்பட்ட மின்களைப் பிறகு அப்பொருள் மெதுவாய் வெளியேற்றும்.

மண்ணுலகில் செயல்படும் சக்திகளனைத்திலும் பலமானது, வேகமானது மனச்சக்தி. மனிதனில் இது அதிக அளவில் இருக்கிறது. ஆனால் மனிதனின் கட்டுக்கடங்காமல், தன்னிச்சையாய் ஐம்பொறிகள் வழியே தனக்கும் சப்த, ஸ்பரிசாதிகளின் துடிப்புகளின் ஆதாரத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இத்தகைய மனச்சக்தியைக் கட்டுப்படுத்தி, வசப்படுத்தி தன் விருப்பம்போல் உபயோகப்படுத்த மனிதன் தெரிந்துகொண்டால், மண்ணுலகில் செயல்படும் மற்ற சக்திகளை எல்லாம் தன்னிச்சைப்படி மனிதன் மாற்றிவிட முடியும். இதுவே யோக வித்தையில் ஆழ்ந்த அனுபவ இரகசியம்.

## யந்திரம்

அதிக மின்களைத் தன்பால் சேமித்து வைத்து மெதுவாய் அவைகளை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, துணி, நீர், பழம், விபூதி, குங்குமம் போன்ற பொருள்களில் மனச் சக்தியை வசப்படுத்திய ஒருவன், தன் சக்திக் கிரண மின்களின் தேவையான வடிவ மின்களை, தேவையான அளவு நிரப்பி வைக்க, அப்பொருள்கள் அதே வடிவ மின்களை பல நாட்கணக்கில் நிதானமாய் வெளிப்படுத்த, வெளிப்படும் அவை, அதை வைத்திருக்கும் மனிதனில் சக்திக் கிரணவழியாய்ப் புகுந்து, அவன் உடலையும், மனதையும் பிரபலப் படுத்துவதுதான் யந்திரத்தின் பெரும் இரகசியம்.

மனச்சக்தி கொண்டு, மனித கிரணத்தில் உருவாக்கிப் புகுத்தும் மின்களைக் குறித்ததில் வெளிப்படுத்துவதற்காகவே யந்திரத் தகட்டில் சக்கரங்களையும், மந்திர அட்சரங்களையும் அடைக்கிறோம். இச்சக்கரமும் அட்சரங்களும் சக்தியின் உருவை மாற்றும் தன்மை கொண்டவை.

## அபிஷேகம்

சாதகரால் புகுத்தப்படும் சக்தி உருவ அலைகளை அப்படியே நிறைய ஏற்றுச் சேமித்துக் கொள்வதற்கான இரசாயனத் தன்மையை உண்டாக்க, யந்திரங்களுக்கு அபிஷேகாதி சடங்குகள் செய்யப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராணப் பிரதிஷ்டை

சாதகன் தன் மனச்சக்திகொண்டு உருவாக்கும் சக்தி வடிவ, கிரணங்களைத் தன் பிராணன் வழியாக, பிராணனில் உருவாக்கி யந்திரங்களில் புகுத்துவதால் இதற்குப் பிராணப் பிரதிஷ்டை என்று பெயர். "பிராணன்" என்றால் பொதுவாக சக்தி என்று பொருள்.

## மந்திர ஜெபம்

மனச்சக்தியில், குறித்தவொரு பலனையளிக்க எந்த சக்தி உருவங்களை உருவாக்க வேண்டுமென்று விளக்குபவை மந்திரங்கள். அம்மந்திரத்தை ஜெபிக்கும்தோறும் மனச்சக்தியில் அதற்குரிய உருவங்கள் உருவாகிப் பிராணன் வழிப்பொருளில் புகுகின்றன.

## பலப்பிராப்தி

இப்படி சாதகரால் மந்திரங்களைக் கொண்டு உருவாக்கிப் புகுத்தப்பட்ட சக்தி வடிவங்கள் அதிலிருந்து நிதானமாய் வெளிப்பட அதை வைத்திருக்கும் மனிதனின் கிரண மண்டலத்தின் வழியாகப் பிரபாவித்து, அவன் உடல் மனங்களில் புகுந்து தகுந்த மாறுதலைச் செய்கிறது. இதனால் அவன் உடலும் மனமும் அவன் பெற வேண்டிய பலனைப் பெறவதற்கான தன்மையில் மாறுதலடைகிறது. உடலிலும், மனதிலும் புகும் சக்தியலைகள் அவன் கிரணங்கள் வழியும் வெளிப்படுவதால், பிறர் கிரணங்களையும், பொருள்களையும் பிரபவப் படுத்தி இவனுக்குப் பயன்தரும் வண்ணமான மாறுதலைச் செய்கிறது. இப்படியான இயந்திர உபயோகத்தால் தன்னிலிருந்தும், பிறரிலிருந்தும் தன் காரிய சித்திக்கான தன்மைகளைப் பெற்றுப் பலனடைகிறான்.

## சாதகன்

மேற்சொன்ன உண்மைகளிலிருந்து யந்திர சாதகன் வெறும் சாஸ்த்ர ஞானியாய் இருந்தால் மட்டும் போதாது. மனதை வசப்படுத்தியவனாக மனச்சக்தியை இயக்கும் ஆற்றல் படைத்தவனாக இருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

## முடிவுரை

முன் சொன்ன தத்துவ உண்மைகளைப் பலமுறை படித்துப்படித்து மனதில் புரிந்து கொண்டால் யந்திர சாதனையின் இரகசியத்தை நீர் ஐயந்திரிபற அறிந்து கொள்ளலாம். பலமுறை படித்தறியுங்கள்.

சுபம்

161538

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபூரக விஞ்ஞானம்

மனித உடலியக்கத்தில் பல்வேறு தனி இயக்கங்கள் இருக்கின்றன. இவைகளில் பொதுவாக மூன்று இயக்கங்களை முக்கியமானவையாகச் சொல்லலாம். அவை ஞான இயக்கம், கர்ம இயக்கம், அஞ்ஞான இயக்கம் எனப்படும். ஐந்து ஞான இந்திரியங்களால் நடைபெறும் இயக்கம் ஞான இயக்கம். கண்களால் பார்த்தல், காதுகளால் கேட்டல், மூக்கால் முகர்தல், வாயால் சுவைத்தல், சர்மத்தால் ஸ்பரிசித்தல், மனதால் நினைத்தல், விசாரித்தல் முதலியவை இந்த இயக்கத்தைச் சேர்ந்தவை. இந்த இயக்கத்தின் ஆதாரஸ்தானம் முன்மூளை. முன் மூளையில் ஒரு கோளாறு ஏற்பட்டால் முன் சொன்ன இயக்கங்களில் கோளாறுகளை உண்டாக்கிவிடும். இது மனிதனின் இச்சைக்கு வசப்பட்டு நடக்கும் இயக்கம். நம் இச்சை எதையோ பார்த்துக் கொண்டிருக்கும்போது, நம்மை ஒருவர் கூப்பிடும் சப்தம் கேளாது அதில் அப்போது நம் இச்சை இருக்கவில்லை.

இரண்டாவது கர்ம இயக்கம்:-

கை கால்களை அசைத்தல், இமைத்தல், பேசல் நடத்தல் போன்ற கர்மேந்திரியங்களின் இயக்கங்கள். இவைகளின் ஆதாரஸ்தானம் பின் மூளை. இங்கு கோளாறு ஏற்பட்டால் கைகாலசைவு முதலியவைகள் நடைபெறா இது தனியான பகுதி என்பதற்குச் சாட்சி பின் மூளையில் கோளாறு ஏற்பட்டால் நாம் விரும்பினாலும் கை கால்களை இயக்க முடியாததேயாகும். நாம் எங்கோ கவனம் வைத்திருக்கும் போதும், தூங்கிக் கொண்டிருக்கும் போதும் நம் உடல் மேல் ஏதாவது பூச்சிகள் உட்கார்ந்தால், கண்ணில் வெளிச்சம்பட்டால், மூக்கில் தூசி புகுந்தால் நமக்குத் தெரியாமலேயே, நம் இச்சை இல்லாமலேயே கைகால் அசையும், கண் இமைக்கும், மூக்கு சிந்தும், இதனால் இந்த கர்மஸ்தானத்தில் நம் உணர்வுக்கு அப்பாற்பட்டதோர் மற்றொரு ஞானம் இருந்து இயக்குகிறது என்றறியலாம். முதலில் சொன்ன ஞானேந்திரிய காரியத்தை "நாம் எனும் தன்னுணர்வு நடத்த, பின் சொன்னதை நாம் என்பதற்குட்படாத மற்றொரு ஞானம் இருந்து நடத்துகிறது. இதை கர்ம ஞானம் எனலாம்.

கை கால் சில சமயங்களில் தானாக அசைந்தாலும், நாம் விரும்பும் போதும் அவைகளை அசைக்கலாம். இதனால் கர்மஞானம் தனிஞானமாக இருந்தாலும் தன் ஞானத்தின் இச்சையை அறிந்து, அதன்படி கர்ம இந்திரியங்களை இயக்குவதாயிருக்கிறது. காலை அசைக்க விரும்பினால் நாமே அசைப்பது போல் கால் அசைகிறது. ஆனால் உண்மையில் கர்மஞானமே இதை அசைக்கிறது.

இந்த இரண்டு இயக்கங்களைத் தவிர இருதயம், நுரையீரல், இரைப்பை, குடல், ஈரல் முதலியவைகளின் இயக்கங்கள் நம் உடலில் உண்டு. இவைகள் எந்த ஞானத்துக்கும் உட்படாமல் தானாய் எப்போதும் கண்மூடித்தனமாய் இயங்கிக் கொண்டிருப்பவை எனச் சிலர் நம்பலாம். ஆனால் உண்மை இப்படியல்ல. இவைகளும் ஓர் மறைமுகமான ஞானத்தாலேயே இயக்கப்படுகின்றன. நம்மனதில் கோபம், பயம், விசனம், முதலான உத்வேகங்கள் உண்டாகும்போது நம் உள்ளுறுப்புகளின் இயக்கங்களில் மாறுதல் உண்டாகிவிடுகிறது. நாமாக நம் இச்சையால் இருதய நடையை, இரத்த ஓட்டத்தை மாற்ற முடியாது. ஆனால் நம்மில் கோப தாபங்கள் உண்டானால் உடனே இவைகளில் மாறுதல்கள் உண்டாவது மட்டுமன்றி நமக்குத் தெரியாமலேயே பல சமயங்களில் இவைகளில் மாறுதல்கள் நடக்கின்றன.

வெளியிலிருந்து நமக்குத் தீமை பயக்கும் விஷப் பொருள்கள் நம் இரத்தத்தில் புகுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் இரத்தத்திலுள்ள பல ஆயிரக்கணக் கான அணுக்கள் அவைகளை விரட்ட அவைக ளோடு பெரும்போராட்டம் நடத்துகின்றன. நுரையீரலில் தூசி புகுந்து விட்டால் அதை விலக்க மூச்சு நடைமாறுகிறது. நாம் உண்ணும் உணவு புளிப்பானதாயிருந்தால் அப்போது நம் இரைப்பையில் ஊறும் ரசம் வேறு, நாம் இனிப்பை உண்ணும் போது ஊறும் ரசம் வேறு. நாம் ஓட நினைத்தவுடன் ஈரலில் சேமிக்கப்பட்டுள்ள சர்க்கரைச் சத்து அதிக அளவில் இரத்தத்துடன் கலக்கத் தொடங்கியி ருக்கிறது. இப்படி தகுந்த சமயங்களில் தகுந்த வகையில் நடத்த ஓர் ஞானம் நிச்சயமாயிருக்க வேண்டுமென்பதை அறியலாம். உடற்கூறு வல்லுனர்கள் இதை அறிந்து கொண்டார்கள். ஆனால் இதற்கானஞானம் எங்கேயிருக்கிற தென்பதை நெடுங்காலம் அறிந்து கொள்ள வில்லை. அதனால் இதைப் பொதுவாக அஞ் ஞானம் அறியமுடியாத ஞானம் (Unconcious) எனக் கூறிவந்தார்கள். ஆனால் ஆன்ம ஞானி களுக்கு இது நெடுங்காலமாகத் தெரியும். உடலின் உள்ளூறுப்புகளைத் தகுந்த சமயங்க ளில் தகுந்த வகையில், ஆன்மாவின் தேவை யையும், உடலின் தேவையையும் அறிந்து தகுந்தபடி இயக்கும் மறைஞானம் இருக்கும் இடம் மணிபூரக சக்ரம், என அவர்கள் அறிவார் கள்.

தன் ஞானம் கர்மஞானம் முதலியவைகளும் நரம்புகளின் வழியாகவே இந்திரியங்களை இயக்குகின்றன. உள்ளூறுப்புகளனைத்துட னும் சம்பந்தப்படும் நரம்புத் தொடர்பு நாபிக் கமலத்தின் அடிப்புறத்திலுள்ள மணிபூரக சக்க ரத்துடன்தான் இருக்கிறது. சுஷும்னாவுக்கும் உள்ளூறுப்புகளுக்கும் நேர்தொடர்பு இல்லை. சுஷும்னாவிலிருந்து மணிபூரகத்துக்கு நரம்பு செல்ல, அங்கிருந்துதான் உள்ளூறுப்புகள னைத்துக்கும் நரம்புக் கிளைகள் இருக்கின் றன. அதனால் உள்ளூறுப்புகளை இயக்கும் ஞானம் மணிபூரக சக்கரத்தில்தான் இருக்க வேண்டும். இதை அறிந்தபின் உடற்கூறு வல்லுனர்கள் மணிபூரக சக்கரத்தை ''வயிற்று மூளை'' (Abdominal Brain) என்று சொன்னார் கள். மணிபூரகம்தான் ஜீரண காரியத்தை நடத்துகிறது. கோளங்களின் கசிவை செம் மைப்படுத்துகிறது. சரீரத்தின் உஷ்ணம் இங்கு தான் இருக்கிறது. அதிக சூடானால் வயிறு வலிக்குமல்லவா? நாம் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது, கைகால்கள் அசையா மல் இருக்கும்போது மணிபூரக நாளம் விழித்தி ருந்து உடலின் உள்ளூறுப்புகளை இயக்கிக் கொண்டே இருக்கிறது. நம்மில் கோபதாபங் கள் எழும்போது காரிய விருப்பங்கள் எழும் போது அதையறிந்து, அதற்கு தகுந்தபடி உள் ளூறுப்புகளை மாற்றி இயக்குவது மணிபூர கமே. உடலுறுப்புகளில் ஏற்படும் கோளாறு களை நோக்காடு மூலமாய் நம் முன்மனதுக்கு தந்தி கொடுத்தறிவிப்பது மணிபூரகமே. பருவ மாறுதல்கள் உணவுமாறுதல்களை அறிந்து அவைகளுக்குத் தகுந்தபடி உடலுறுப்புகளை மாற்றி இயக்குகிறது மணிபூரகம்.

உள்ளூறுப்புகளின் இயக்கத்தில்தான் நம் ஆயுள், ஆரோக்கியம் இவைகள் இருப்பதால் நம் ஆயுளாரோக்கியங்களுக்கு மணிபூரக ஞானமே ஆதாரம். இதுதானாய், தனக்குகந்த சுபாவ முறையில் தன் கருவிகளை நடத்திக் கொண்டிருக்கும் வரை நமக்கு கர்மவினைப்ப டியான ஆயுளும் ஆரோக்கியமும் இருக்கும். ஆனால் இது மனது வைத்தால், தயை செய் தால் நமக்கு நீண்ட ஆயுளையும், நிலையான, உறுதியான ஆரோக்கியத்தையும் கொடுக்க முடியும். இப்படிச் செய்ய இதனை நாம் தூண்ட வேண்டும். எட்டாத இதனுடன் நாம் தொடர்பு கொள்ள வேண்டும். எப்படிக் கொள் வது? இதற்கான ஓர் எளிய வழியை இங்கு கூறுகிறோம்.

முதலில் மணிபூரக நாளத்துக்கும், நம் தன் ஞானத்துக்கும் ஓர் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இதற்குப் பிரணாயாமமும் உட்தி யான பந்தமும் பயன்படுகிறது. பிரணாயாமம் செய்து கும்பகத்தில் இலேசாக வயிறை உள்ள முத்தினால் மணி பூரகத்துக்கும் நமக்கும் தொடர்புண்டாகும். இந்த நிலையில் நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திடமான பாலனா ஏகாக்ரகத்தின் மூலம் மணி பூரகம் நமக்குச் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்படி செய்துவிடலாம். ஆரோக் கியம், இளமை, அழகு, ஆயுள் இவைகளை அந்த நிலையில் திட ஏகாக்கரத்துடன் பாவிக்க வேண்டும். அவ்வளவுதான் மணிபூரக ஞானம் அதை ஏற்றுக் கொண்டு, அதற்கான வழியில் நம் உள்ளுறுப்புகளை இயக்கத் தொடங்கிவி டும்.

இது நமக்குக் கைவசம் வந்துவிட்டால் மணிபூரகத்தின் உதவியால் நம் நோய்களை எளிதாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். இரத்த ஓட்டத்தை, நாடி நரம்புகளின் துடிப்புக ளைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். சூட் டைச் சரியானபடி நிலைப்படுத்திக் கொள்ள லாம். சரீர வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாக ஆக்கிக் கொள்ளலாம்.

இந்த சித்திக்குத் தேவையானது முறையான பிரணாயாம ஏகாக்ரக பயிற்சிகளேயாகும். இவைகளை முறையாகப் பயின்றவர்கள் தம் மணிபூரக ஞானத்தின் உதவியால் ஆயுளா ரோக்கியம் பெற்று இன்பமயமாய் வாழலாம்.

சுபம்

# தியான யந்திரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ராமா'' என்று ஒருவன் ஒரு இடத்திலிருந்து கத்தினால் அவனைச் சுற்றிலும், ஒரு குறித்த தூரம்வரை இருப்பவர்கள் இதைக் கேட்கிறார்கள். எப்படி எல்லோரும் அதைக் கேட்க முடிகிறது? கத்தினவனிடத்திலிருந்து கேட்டவர்கள்வரை அச்சப்தம் சென்றிருக்க வேண்டும். காற்றின் வழியாகச் சப்தங்கள் பரவுகின்றன. இங்கே காற்று என்றால் வீசும் காற்றல்ல, வாயு மண்டலம் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். வீசும் காற்று ஒரு திசையால்தான் போகும். சப்தம் எல்லாத் திசைகளிலும் பரவுவதால் அது நிலைக் காற்றான வாயு மண்டலத்தில் தான் அலைக்கழிந்து பரவுகிறது. வேகமான சப்த அலை நெடுந்தூரம் பரவ, மந்தமான சப்த அலை சிறிதுதூரம் தான் பரவும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

சித்திரத்தில் ''அ'' என்பது ஒரு சினிமாப்படமெடுக்க உபயோகிக்கும் ரோல்பிலிம், ''இ'' என்பது அது சுற்றும்போது அதைக் கீழே சுற்றிக் கொள்ளச் செய்யும் ஒரு சுருள். அதற்கு நேராக ''உ'' என்பது காற்றில் அசையாமல் எரிந்து கொண்டிருக்கும் ஓர் மெழுகுச் சுடர். ''எ'' என்பது எரியும் சுடருக்கு நேராகப் பிடிக்கப்பட்ட ஒரு புனற் குழலின் நுண்ணிய துவாரமுள்ள குழல். ''ஓ'' என்பது வாய் வைத்துப் பேசக்கூடிய முன் குழலின் வாய்ப்புறம். பிலிம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஒருவன் குழலின் வாய்ப்புறத்தில் அ-அ-அ-வென்று சில நிமிடங்கள் சொல்கிறான். சொல்லால் ஏற்படும் வாயுமண்டல அலை குழலின் ''எ'' வழியால் சுடரைத் தாக்க, சுடர் அசைய, அது ஓடும் பிலிமில் பதிகிறது. இதே போல் இ-இ-இ என்றும் பல எழுத்துக்களையும் மாற்றி, மாற்றிச் சொல்கிறான். பிறகு பலவகை சொற்களை மாற்றிமாற்றிச் சொல்கிறான். முடிவில் பிலிம்மைக் கழுவி பிரதி (Copy) எடுத்துப் பார்த்தால், ''அ'' என்று சொன்ன போது ஒரு வகையையும் ''இ'' என்ற போது ஒரு வகையையும் பலவகைச் சொற்களைச் சொன்ன போது பலவகை சித்திரம் போன்ற உருவங்களையும் சுடர், பிலிம்மில் படம் செய்திருக்கின்றதைக் காணலாம்.

சப்தத்திற்கு வடிவமுண்டு என்பதை இதனால் அறியலாம். இதே கருவியில் சாதா பிலிமுக்குப் பதிலாக நிற அலைகளைப் படம் பிடிக்கும் பிலிமை உபயோகித்திருந்தால் ஒவ்வொரு சப்தமும் ஒவ்வொருவித நிறமாகப் பிலிமில் பதிந்திருப்பதைக் காணலாம். சப்தத்திற்கு நிறமுண்டு என்பதை இதனால் அறியலாம்.

சப்தத்துக்கு வேகமுண்டு, வடிவமுண்டு, நிறமுண்டு என்பதை நிரூபிக்க இன்று விஞ்ஞான உலகில் பலவகைக் கருவிகள் இருக்கின்றன. சினிமாவில் சப்தங்களை ஒளி வடிவங்களாக மாற்றி, மறுபடி அவைகளை சப்தங்களாக மாற்றித்தான் திரையில் கேட்கிறோம். கோர்வையான சில சப்தத் தொடர்புகளுக்கு பொருளுடைய உருவமும், செயல்படும் சக்தியும் உண்டு. ஒரு அறையில் புகையை நிரப்பி, அதன் நடுவிலிருந்து இசைக்கருவியால் ஒரு குறித்த இசையை வாசித்தால் புகையில் சலனமுண்டாகி சிறிதுநேரத்தில் இயேசுவின் உருவமாக அது திரள்கிறது. சப்தங்களுக்குத் தகுந்தபடியான மின் கருவிகளைக் கதவில் இணைத்தால் குறித்த சப்தத்தைப் போட்டால் மட்டும் கதவு திறக்கும்.

வேறெதனைச் சொன்னாலும் கதவு திறக்காது. தற்கால எலக்ட்ரானிக் கருவிகளில் இப்படிப்பட்ட எத்தனையோ கருவிகள் இருக்கின்றன. மோட்டாரில் ஒரு கருவியை இணைத்துவிட்டு வேறொரு கருவியில் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் மோட்டார் இடம் திரும்பும். வலம் என்றால் வலம் திரும்பும். நேர் என்றால் நேராகத் திரும்பும். இதைப் பலர் கண்கூடாகப் பார்த்திருப்பார்கள். இசைகளால் தாவர வளர்ச்சியில் மாறுதல் ஏற்படுவதைப் பலர் அறிந்திருப்பார்கள். தூக்கம் வராதபோது. கிராமபோனில் ஒரு ரிகார்டைப் போட்டுவிட்டால், அது பாடி முடிவதற்குள் எல்லோரும் தூங்கி விடுவார்கள். வேறொரு ரிகார்டை கவனம் கொண்டு எதிர்ப்பில்லாமல் கேட்டால், கேட்பவர் ஹிப்னாடிச நிலைக்கு போய்விடுவார்.

நோயால் வருந்திக்கொண்டிருக்கும் ஒருவன் சமீபத்தில் ஒரு ரிகார்டைப் போட்டால் வேதனையை உணர மாட்டான். இப்படி எத்தனையோ வகையான ரிகார்டுகள் மேல் நாட்டு ஆன்மீக சங்கங்களில் தயார் செய்திருக்கிறார்கள். "பாம்பு" என்ற சொல்லைக் கேட்டதும் உடல் நடுங்குகின்றது. "அன்பு" என்பதைக் கேட்டதும் குழைகிறது. "மடையா" என்பதைக் கேட்டதும் கோபம் வருகிறது.

சப்தங்களை வாயால் சொல்லும்போதும் மனதால் நினைக்கும்போதும் சப்தங்களுக்குத் தகுந்த மாறுதல் இரத்தம், நாடி, நரம்புகளில் உண்டாகிறது. கீழ்வருமாறு பரீட்சை செய்து பார்க்கலாம். ரம்-ரம்-ரம் என்று விடாமல் ஆயிரத்தெட்டு முறை வாயால் சொல்லுங்கள். உங்கள் உடலெல்லாம் அதிக சூடு பரவுவதைக் காணலாம். மனதில் சலனமில்லாமல் இப்படிச் சொன்னால், இன்னும் அதிகமாகச் சூடு பரவும். ரம் - அக்கினி பீஜம், இதற்கு மாறாக - ஸம் என்பதை உச்சரித்துப் பாருங்கள் சீதளம் அதிகமாகும். இது அப்ஸு பீஜம் பிருதிவி பீஜத்தை ஜெபித்தால் இரத்தவோட்டம் மந்தப்படும். வாயு பீஜத்தை ஜெபித்தால் நாடித் துடிப்புகள் வேகமாகும்.

உடலில் ஏற்படும் மாறுதல்கள் உடலுடன் நிற்பதில்லை. உடலைச் சுற்றியுள்ள வாயுமண்டலத்தையும் மாற்றுகிறது. உடல் அதிக சூடாயிருக்கும்போது உடலைச் சுற்றியுள்ள காற்றும் சூடாகிவருமெனச் சொல்ல வேண்டுமா? ஆனால் உடனுக்குடன் அச்சூடான காற்று வெளியேறி, புதுக்காற்று வந்து விடுவதால் காற்று சூடாவதை நாம் உணர முடிவதில்லை. உடலில் ஏற்படும் மாறுதல் வாயு மண்டலத்தில் மாறுதலைச் செய்வதுபோல் மனதில் ஏற்படும் மாறுதலும் மன ஆகாய வெளியில் மாறுதலைச் செய்யுமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதை இங்கு விளக்க முடியாது. எமது வேறு பாடங்களில் அவை பற்றிய விளக்கத்தைப் படித்தறியலாம்.

மனிதன் உடலிலும், மனதிலும் செயல்படும் சக்திகளெல்லாம் வெளிப்பாகத்திலிருந்து பெறப்படுபவையே. சூரியனில்லாவிட்டால் உடலில் பிராணனிருக்காது. சந்திரனில்லாவிட்டால் மூளையில் திரவத்தன்மை இருக்காது. பிண்டத்திலுள்ளதெல்லாம் அண்டத்திலிருந்து பெறப்படுபவையே.

மந்திரம் என்பது குறித்தவொரு சக்தியை அதிகமாய்க் கவரும் வண்ணமான ஆற்றலுடைய சொற்கோர்வையே. குறித்த அளவு ஒரு மந்திரத்தை ஜெபிக்கும் போது, அதற்குரிய மாறுதல் ஜெபசாதகரின் உடல், மனம் சுற்றியுள்ள ஆகாயங்களில் பிரதிபலித்து அதிக சக்தியைக் கவர்கிறது. தெய்வ ஆகர்ஷண மந்திரங்கள் குறித்த நிற வடிவங்களை ஆகர்ஷிக்கும் வண்ணம் மகான்களால் ஏற்படுத்தப்பட்டவை. இவைகளின் ஜெபத்தால் அக்குறித்த வடிவ தெய்வ உருவம் சூக்ஷ்மத்தில் இருந்து ஸ்தூலத்துக்கு உருவாகிறது. சாதகன் தன் இஷ்ட தெய்வத்தை பௌதிகக் கண்களால் காண்கிறான். காரிய சித்திக்கான மந்திரங்களை ஜெபிக்கும் போது உண்டாகும் அலை மன ஆகாயத்தில் பரவி காரிய சித்திக்கான சூழ்நிலைகளை உருவாக்கி வெற்றியடைச் செய்கிறது.

மந்திரங்கள் செயல்படும் முறைகள் அனைத்தையும் சுருக்கமாகச் சொல்லிவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோம். முன் சொன்ன உண்மைகளுடன் இவைகளை ஒப்பிட்டறிந்தால் மந்திரங்களின் இரகசியங்களனைத்தும் வேறு விளக்கமின்றி நன்றாக அறிந்து கொள்ள முடியும்.

## ஜெபமுறை

மந்திரங்களை வாயால் உச்சரித்தே பயன் காண வேண்டுமானால் அதற்குப் பல காலம் வேண்டும். சில சமயம் அவ்வப்போது ஜெபித்த மந்திரத்தின் பிரபாவம், மற்றொரு ஜெபத்துக்குள் கலைந்து போகலாம். இப்படியானால் எத்தனை காலம் மந்திரங்களை ஜெபித்தாலும் பயன்காண முடியாமலே போகும். அதனால் மந்திரங்களின் பலனை அடைய வேண்டுமானால் வாய் உச்சரிப்புடன், மனதிலும் உச்சரித்து வர வேண்டும். மனதில் சலனமில்லாமல் உச்சரிக்க முடிந்தவர்கள் வாயில் உச்சரிக்காமலே மனதில் உச்சரித்து விரைவில் பலன் காணலாம். தெய்வக் காட்சிகளைக் காணும் விருப்பத்துக்கான மந்திரங்களானால் வாயில் உச்சரிக்கும் அதே சமயம் மனதில் அதன் அர்த்தத்தைப் பாவித்து வர வேண்டும். ''தத் ஜப; ததர்த்த பாலனம்'' என்பது சாஸ்திரம்.

## மந்த்ர தீக்ஷை

பலவகை நிறங்களைத் தாறுமாறாகத் தீட்டியிருக்கும் ஒரு துணியில் சுத்தமானதொரு சித்திரத்தை வரைய முடியாது. இதற்கு முதலில் பழைய வர்ணங்களை அகற்றியாக வேண்டும். மந்த்ர ஜபங்களால் உருவாகி வரும் புது அலைச் சக்தியை ஏற்றுக் கொள்ளும் திறமை அல்லாதவனுக்கு நன்மைக்குப் பதில் தீமையே விளையலாம். இத்தகையோர் இச்சக்தியை வகிப்பதற்கான ஆற்றலை, தகுந்த ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டால் பின் பயமின்றி ஜெபித்து, சித்தி பெறலாம். மந்திரத்தை ஜெபித்து வரும்போது திரண்டுவரும் சக்தியைத் தாங்கும் ஆற்றலைத் தகுந்த ஒருவரிடமிருந்து பெறுவதுதான் மந்த்ர தீக்ஷை.

## மந்திரத் தேர்வு

ஏதோ பலனை நாடி ஏதோ ஒரு மந்திரத்தைச் ஜெபித்தால் பலன் காண முடியாது. குறித்த பலனைப் பெறுவதற்கான தேவைகளை உண்டாக்கக் கூடிய மந்திரங்களை அறிந்தே ஜெபிக்க வேண்டும். இப்படிச் செய்யாததால்தான் பலர், பல மந்திரங்களை பலகாலம் ஜெபித்தும் எதிர்பார்த்த பலனை அடையாமல் போகிறார்கள்.

## முடிவுரை

சப்த தத்துவங்களை புரிந்து கொண்டால் அதனால் உடல் மன ஆகாயங்களில் ஏற்படும் மாறுதல்களைப் புரிந்து கொண்டால் இங்கு கூறப்பட்ட சகல உண்மைகளையும் ஜயந்திரிபறப்புரிந்து கொள்ளலாம்.

## உபதேசம்

மந்த்ர சாதனையால் நீர் ஏதாவது பலனடைய விரும்பினால் அதற்கு இன்ன மந்திரத்தை, இன்ன முறையில், இத்தனை காலம் ஜெபிக்க வேண்டுமென நாம் தெரிவிக்கிறோம். அன்றி அதற்கான மந்த்ர தீக்ஷையும் கொடுத்து உதவுகிறோம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூக்ஷ்ம யாத்திரை விஞ்ஞானம்

உலகின் எல்லாமத நூல்களிலும் சிலர் அடிக்கடி தேவலோகங்களுக்குப் போய் வந்த தாக கதைகள் இருக்கின்றன. தேவலோகங்கள் பௌதிக உலகங்களல்ல. அவை சூக்ஷ்ம உலகங்கள். அங்கு சென்றவர்கள் பௌதிக உடலுடன் சென்றிருக்க முடியாது. பௌதிக உடல் பூமியின் ஆகர்ஷணத்துக்கு உட்பட் டது. ஆகவே, தேவலோகங்களுக்குச் சென்ற வர்கள் சூக்ஷ்ம உடலுடன் தான் சென்றிருக்க வேண்டும்.

நாம் வாழும் மண்ணுலகப் பொருள்களெல் லாம் சூக்ஷ்மத்திலிருந்து, ஸ்தூலநிலைக்கு வந்து, மறுபடி சூக்ஷ்மநிலைக்குப் போய்க் கொண்டிருப்பவை. புதிய தாவரங்களின் பொருள் எங்கிருந்து வருகிறது? பட்டுப்போ கும் தாவரப்பொருள் எங்கு போகிறது? கண் ணுக்குத் தெரியும் பொருள்கள் ஆவதற்குக் காரணமான அணுக்கள் எங்கிருக்கின்றன. அணுக்களும் சிதைகின்றனவே அவை எங்கு போகின்றன? பௌதிகப் பிரபஞ்சத்தைச் சுற்றி, சூக்ஷ்மப் பிரபஞ்சம் இருக்க வேண்டும்.

தூக்கத்தில் நமக்கு உடலின் நினைப்பு ஏனிருப்பதில்லை? தூக்கத்தின்போது நாம் ஸ்தூல உடலில் இருப்பதில்லை. சூக்ஷ்ம உடலில் இருக்கிறோம். கனவில் காணும் பொருள்கள் பௌதிகத்தில் இல்லை. அவை சூக்ஷ்மத்தில் இருக்கின்றன. ஹிப்னாடிச நிலை யில் சூடு சுடுவதில்லை. குளிர் குளிர்வ தில்லை ஏன்? அந்நிலையில் பார்த்த கேட்ட எதுவும் சாதாரண நிலையில் ஞாபகத்துக்கு வருவதில்லை. ஏன்? ஹிப்னாடிசத்தில் உணர்வு ஸ்தூலத்தைக் கடந்து, சூக்ஷ்மத்தில் செயல்படுவதனால் தான் ஆபரேஷனுக்காக மயக்க மருந்துகள் கொடுக்கப்படும்போது நாம் எங்கிருக்கிறோம்? சூக்ஷ்ம உடலில்.

பௌதிகப் பிரபஞ்சத்தினுள் சூக்ஷ்மப் பிர பஞ்சம் இருப்பதுபோல் நம் பௌதிக உடலுக் குள் சூக்ஷ்ம உடல் இருக்கிறது. நம்மனம் சூக்ஷ்ம உடலில்தான் இருக்கிறது. ஏனென் றால் மூளையில் இருக்கும் சக்திதான் மனமே யன்றி, மூளையே மனமல்ல. கனவில் காணும் காட்சிகளை சூக்ஷ்ம உடலிலிருக்கும் கண்க ளால்தான் காண்கிறோம். கேட்கும் கேள்வி களை சூக்ஷ்ம உடலிலிருக்கும் செவிகளால் தான் கேட்கிறோம். தூக்கத்தில் சூக்ஷ்ம உடல் ஸ்தூலத்தை விட்டு நகர்ந்து விடுவதனால் தான் ஜடவுடலின் தொடர்பு இருப்பதில்லை. கீழே விழுதல், பறத்தல் போன்ற கனவுகள் சூக்ஷ்ம உடலின் அனுபவங்களே. வீட்டின் மேலிருந்து விழும் ஒருவனுக்கு முதலில் நோவே தெரியாது. விழுந்ததும் தெரியாது. நெடுநேரத்தின் பின்தான் இவை தெரியவரும். ஆபத்துக்கள் நேரும்போது தற்காலிகமாக சூக்ஷ்ம உடல் சூக்ஷ்மத்தைவிட்டுப் பிரிந்து விடுவதே இதற்குக் காரணம்.

மின் விளக்குகள் எரியும் நகர்ப்புறங்களில் வசிக்கும் பலர் பிசாசுகளை நம்புவதில்லை. மின்னொளியில் அவை காணப்படாதென் பதை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. பிசாசுகள் சூக்ஷ்ம உடலில் வசிப்பவையாத லால், விளக்கொளிகளில் அவை தென்படா, நாகரீகம் வளர்ந்த உலகின் பல பாகங்களிலு முள்ள மக்கள் இன்றும் பிசாசுகளைக் காணத் தான் செய்கிறார்கள். ஸ்தூல உடலைவிட்டுச் சென்று, மேல் பரிணாமத்தில் புகாமல் சூக்ஷ்ம உடலுடன் பூமியைச் சுற்றிக் கொண்டிருப்பவர் களே பிசாசுகள், பேய்கள்.

இன்று பல ஆன்மீகக் கூடங்களில் தகுந்த சில அமைப்புகளை அமைத்து அதில் சூக்ஷ்ம சரீரிகளை அழைத்துப் பலருக்கும் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்கள், போட்டோக்களும் எடுக்கிறார்கள். நல்ல தியான சித்தியிருந்தால் யாரும் இப்படிச் செய்ய முடியும். மேற்சொன்ன பல வகை சான்றுகளிலிருந்து நம் ஸ்தூல உடலுக்குள் ஓர் சூக்ஷ்ம உடல் இருக்கிறதென்பதை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். பிரபஞ்ச வெளியிலிருந்து பல சக்திகள் நம் உடலில் புகுந்து வேலை செய்கின்றன. சக்திகள் சூக்ஷ்ம உடலின் வழியாகத்தான் ஸ்தூலத்தை இயக்குகின்றன. நம் உடல் பிராணன் சூக்ஷ்ம சரீரத்தின் வழிதான் ஸ்தூல உடலை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. இறக்கும் எல்லோரும் பூரணமான சூக்ஷ்ம உடலுடன் ஸ்தூல உடலை விட்டுச் செல்கிறார்கள்.

ஸ்தூல சூக்ஷ்ம சம்பந்தம்; ஸ்தூல உடலுடன் சூக்ஷ்ம உடல் ஓர் சக்திக் கயிற்றால் கட்டப்பட்டிருக்கிறது. இதையே "பாசக்கயிறு" என்கிறோம். மரணத்தில் இக்கயிறு அறுந்துவிடுகிறது. உடனே சூக்ஷ்ம உடல் வெளிப்பட்டுவிடுகிறது. இதைத்தான் "யமபாசக்கயிறு" என்கிறோம். கயிற்றின் கட்டை நாம் வேண்டுமான போது அவிழ்த்துவிட்டு, மறுபடியும் கட்டிவிடுவதைப்போல், சில சாதனை மூலம் ஸ்தூலத்துடன் கட்டப்பட்டிருக்கும் பாசக்கயிற்றை அறுத்து, மறுபடி சில நேரத்தின் பின் அதை ஸ்தூலத்துடன் இணைத்து விடுவதுதான் "சூக்ஷ்ம யாத்திரை" இப்படிச் செய்ய முடியுமா? என்பதைப் பார்ப்போம்.

நெடுந்தூரத்தில் வாழும் ஒரு தாய் தொலைவிலிருக்கும் தன் மகனை, மரணத்தறுவாயில் நினைக்கிறாள். மகன் சூக்ஷ்மமாக அழுதுநிற்கும் தன் தாயைக் காண்கிறான். உண்மையில் தாய் அப்போது உடலிலில்லை. அங்கிருக்கும் உறவினர்கள். அவள் மயக்கமாயிருப்பதாகக் கருதுகிறார்கள். ஆனால் தாயோ சூக்ஷ்ம உடலுடன், தன் மகனிடம் வருகிறாள். உண்மைக் காதலர்கள் பிரிந்து வாழும்போது, அடிக்கடி ஒருவரை ஒருவர் இரவு நேரங்களில் காண்பதுண்டு. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இத்தகைய சில சம்பவங்கள் நடந்திருக்கும். ஆனால் இதைப்பற்றி அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் பாசக்கயிறு அறுந்து போவதில்லை. ஆனால் நீண்டு ஸ்தூல சூக்ஷ்ம உடல் மறுபடி ஸ்தூலத்தில் புக முடியாது.

நீங்களும் சில சமயம் தூர இருக்கும் உறவினர்களை நினைத்துப் படுத்துக் கொள்ளும் போது, அவ்வுறவினர்களை நேராகப் பார்த்ததாக கனவுகண்டு விழிப்பதில்லையா? இது உண்மையில் கனவல்ல. உண்மையாக நீர் உம் உறவினரைச் சென்று பார்த்து வந்திருப்பீர். சாதாரணமாக இத்தகைய சம்பவங்கள் இரவில், கனவு போன்ற நிலையில்தான் ஏற்படும். ஏனெனில் நாம் பகலில் வெளியுலகத் தொடர்புடனேயே இருந்து வருகிறோம். சூக்ஷ்ம உடல் பிரிய வழி கிடைப்பதில்லை.

மேற்சொன்னவைகளிலிருந்து சூக்ஷ்மத்தை ஸ்தூலத்திலிருந்து பிரிக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஸ்தூல உடலிலும் சுற்றுப்புற உலகப் பொருள்களிலும் செயல்படாதபடி உணர்வை உள்ளடக்கி, தூரமான ஒரு இடத்தை நினைத்தபடி இருந்தால் மெதுவாக சூக்ஷ்ம உடல் ஸ்தூலத்தை விட்டுப் பிரிந்து வெளிப்படும். இங்கு நினைத்தலென்பது சாதாரண நினைப்பைப் பற்றியதல்ல, திடமாக ஒன்றிய பாவனையாகும். முறையான சாதனையில்லாமல் இதை யாரும் செய்ய முடியாது. மற்றும் உடல்நிலை, உணவு, உறக்கமுறை, இவைகளும் இதில் கவனிக்கப்பட வேண்டும்.

சூக்ஷ்ம உடலைப் பிரிக்கக் கற்றுக் கொண்டால் நாமனைவரும் நிலையாக ஸ்தூல உடலை விட்டுப் போகும்போது சென்றடையும் சூக்ஷ்ம உலகங்களை அதற்கு முன்பாகவே சுற்றிப்பார்த்து வரலாம். அதனால் மரணபயம் நமக்கு விலகும். அங்கு செல்லுமுன் அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாய் வாழ்வதற்காக இங்கு நாம் என்ன சம்பா தித்துக் கொண்டு போக வேண்டுமென்பதை நிச்சயமாக அறிந்து கொள்வோம். உடல் வாழ்க் கையை வீணாக்கி விடலாம். உயிர் வாழ்க்கைக் குப் பயன்படும் வண்ணம் உபயோகப்படுத்து வோம். இப்படி நாம் சூக்ஷ்ம உடலில் செல்லும் போதெல்லாம், நமக்குமுன் சமீபகாலத்தில் நிலையாக நம்மைவிட்டுச் சென்ற, இறந்து போன உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து அவர்கள் ஆவலை அறிந்து கொள்ள லாம்.

சூக்ஷ்ம உடலில் ஸ்தூல உடல் போலவே கண், காது முதலிய உறுப்புகள் இருக்கின்றன. ஸ்தூலக் கண்ணைவிட சூக்ஷ்மக் கண்கள் நெடுந்தூரத்திலுள்ளதைப் பார்க்கும். ஸ்தூல உடலை மெதுவாக நடத்தித்தான் செல்ல வேண்டும். சூக்ஷ்ம உடல் வெகுவேகமாகப் போகும். நொடிப்பொழுதில் நூற்றுக்கணக் கான மைல் தூரம் சென்று விட முடியும். இறந்து சூக்ஷ்ம உடல் வெளிப்படுபவர்களின் சூக்ஷ்ம உடலில் நெடுங்காலம் அவர்கள் ஸ்தூல உடலில் அணிந்திருந்த ஆடையாபர ணங்கள் சூக்ஷ்ம உருவில் இருக்கும்.

முதலில் ஸ்தூலத்திலிருந்து சூக்ஷ்ம உடல் வெளிப்படும்போது மிகவும் வேகமாகச் சுற்று வது போலிருக்கும். பழக்கத்தில் இதைச் சமா ளித்துக் கொள்ளும் திறமையுண்டாகிவிடும். சூக்ஷ்ம உடலில் இருக்கும்போது மிகவும் லேசாக இருப்பதுபோல் உணர்வோம்.

சூக்ஷ்ம உடலை பூமியின் ஆகர்ஷணம் இழுக்காததாகையால் மனிதன் சென்று காண விரும்பும் பல கோளங்களை சூக்ஷ்ம உடலில் சென்று சுற்றிப் பார்த்து வந்து விடலாம். சில நாள் வரை இப்படிப் பார்த்தால் கனவு போலவே இருக்கும். பிறகு சகஜமான உணர் வின் அனுபவமாகிவிடும்.

முறையான யோக, மனச் சாதனைகள் பயில்ப வர்கள் வெகுவிரைவில் இத் திறமையைப் பெற்றுவிடலாம். தினசரி இரவில் சூக்ஷ்ம உலகங்களில் சஞ்சரித்து அநேக அற்புதங் களை அனுபவிக்கலாம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாக விஞ்ஞானம்

பிரபஞ்சத்தில் ஒரு பொருளும் அழிவ தில்லை. அழிவென்பது பொருட்கள் அணுக்க ளாக, மின்னியாக மாறுவதையும், ஸதூலப் பொருள்கள் சூக்குமமாக மாறுவதையும் தான் குறிக்கும். ஸ்தூலப் பொருளைச் சூக்குமமாக மாற்ற நெருப்பு ஒரு சிறந்த சாதனம். நெருப் பில் போடப்பட்ட பொருள்கள் அழிந்து போவ தில்லை. அணுவடிவாகி ஆகாயத்தில் பரவு கின்றன. யாராவது " நெருப்பில் போடும் பொருள்கள் அழிந்து போகின்றன" என்று சொன்னால், அவர்கள் அருகில் கொஞ்சம் நெருப்பை எடுத்து, அதில் சில மிளகாய்க ளைப் போடுங்கள். சொன்னவர் தும்முவார். திணறுவார். ஏனென்று கேளுங்கள். திகைப் பார் அவ்வப்போது சொல்லுங்கள் "நெருப்பில் போட்ட மிளகாய்கள் அழிந்து விடவில்லை சூக்கம அணுக்களாகப் பிரிந்து காற்றில் பரவின அதனால்தான் உங்களுக்குத் தும்மல்" என்று, அப்போதுதான் ஒப்புக்கொள்வார்.

## ஸ்தூலப் பொருள்கள்

ஸதூலப் பொருள்கள் எடையிலும் பரும னிலும் உருவிலும் மிகப் பெரியவையாயிருந் தாலும் சக்தியில் சூக்குமப் பொருள்களை விடக்குறைந்தவைதான். ஒரு பெரிய யானை யின் உயிரை ஒரு சிற்றெறும்பு போக்கிவிடும். மனிதனின் பெரிய உடலைக் கொசுக்கள் படுத்தும் பாட்டை யாரறிய . மாட்டார்கள்? மனித உடலில் புகும் மிக நுண்ணிய ரோகக் கிருமிகள் மனிதனை என்ன பாடுதான் படுத்து வதில்லை? இரும்பாலான பெரிய பொருள்க ளைக் காற்று தூக்கி எறிந்து விடுகிறது. கடலில் செல்லும் பெரும் கப்பல்களைச் சூறா வளிக் காற்று சூறையாடி விடுகிறது. பூதக் கண்ணாடியைவிட கருடன் கண்ணுக்குப் பார்வை அதிகம். ஸதூலமான கம்பியின் வழி யாக சூக்குமமான மின்னிகள் ஓடுவதாலாகும் மின் சக்தியை யாரறியார்? பிராணிகளின் ஸ்தூல உடலை இயக்குவதும், வளர்ப்பதும் அழிப்பதும் சூக்குமமான பிராண சக்தியேயல் லவா? ஸ்தூலத்தைவிட சூக்குமம் பலமானது; சக்தி வாய்ந்தது.

ஒரு மிளகாயை ஒருவன் வாயிலிட்டால் அவனுக்கு மட்டும்தான் அது காரத்தைத் தரும். ஆனால் அதே மிளகாயை நெருப்பிலிட்டால் பலருக்கு அதன் காரம் சேரும். ஒரு துண்டு சாம்பிராணியை முகர்ந்து பார்த்தால், அவ னுக்கு மட்டும் வாசனை தெரியும். ஆனால் அதை நெருப்பிலிட்டுப் புகைத்தால் பலருக்கு வாசனை தெரியும். ஒரு கரண்டி நெய்யைத் துளித்துளியாகப் பங்கிட சுமார் 20 பேருக்குப் பங்கிடலாம். ஆனால் அதை நெருப்பிலிட் டால் 100 பேருக்கு மேல் அனுபவிக்கலாம்.

அக்கினியில் பொருள்களைப் போட்டுச் சூக் குமப்படுத்துவதால் அப்பொருள்களின் பிரபா வம் காற்றில் பரவி, பலருக்கும் பங்காகி, ஸ்தூலம் நுழைய முடியாத இடங்களிலெல் லாம் புகுந்து, அங்கு தன் பிரபாவத்தைச் செய்து, ஸ்தூல உடலில் ஸ்தூலப் பொருள்க ளைவிட வேகமாக வேலை செய்யும். இம்மு றையில் பொருள்களின் உபயோகத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் தத்துவமே, யாகம் - வேள்வி, யக்ஞம் - ஓமம்.

## தேவர்களின் உலகம்

தேவர்கள் சூக்கும உலகங்களில், சூக்கும சரீரங்களில் வசிப்பவர்கள். அவர்கள் ஸ்தூல உலகில் இருக்கும் நமக்கு, நம் ஸ்தூலத்தின் மூலம் செயல்பட்டுப் பல அரிய உபகாரங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைச் செய்ய முடியும். இப்படி அவர்களின் உதவியைப் பெற வேண்டுமானால், அதற்காக நாம் அவர்களுக்கு ஏதாவது செய்தாக வேண் டும். ஸ்தூலத்தில் இருக்கும் நாம் சூக்குமதாரிக ளான அவர்களுக்கு எப்படி உதவ முடியும்? இதற்கும் யாகம் வேள்வி வழி செய்கிறது.

குறித்தவொரு தேவனுக்கென இலட்சியம் கொண்டு நெருப்பில் தேவர்களுக்குப் பிரிய மான சில பொருள்களைப் போட்டால், அவை சூக்குமமாகி அதைத் தேவர்கள் அனுபவிக்கி றார்கள். இறந்து போனவர்களுக்கும் பலகாரம், பட்சணங்கள் படைக்கும்போது, அதிலிருந்து வெளிப்படும் சூக்கும ஆவிகளை முகர்ந்து, அவர்கள் திருப்தியுறுகிறார்கள். தேவர்கள், இறந்து மண்ணுலகைச் சுற்றித் திரிபவர்களை விட சூக்குமமானவர்களாகையால் அவர்களுக் குப் பொருள்களை மிகவும் சூக்குமப்படுத் தியே தர வேண்டும். அதற்குச் சிறந்த சாதனம் வேள்வி. வேள்வியில் "இதம் இந்த்ராய இதன்ன மம' இது இந்திரனுக்கு என்று சொல்லிப் போடும்போது, அது சூக்குமமான தும் இந்திரனே அதை ஏற்றுக்கொள்கிறான். இப்படி ஸ்தூலப் பொருள்களைத் தேவர்களுக் குச் சூக்குமப்படுத்தி எடுத்துச் செல்வது அக்கி னியாகையால் அக்கினியைத் "தேவவாஹ னன்" என்று சொல்கிறோம்.

## வருணயாகம்

உப்புப் போன்று சில பொருள்களைச் சூக்கு மப்படுத்தினால் அவை நீராக மாறிப்போகும். இப்படிப்பட்ட பொருள்கள் பலதைச் சேர்த்து அக்கினியிலிட்டு, சூக்குமப்படுத்தினால் அவை ஆகாயத்தில் பரவி குளிர்ந்ததும் நீராக மாறி மழையாகப் பெய்யும். இதையே வருண யாகம் என்று சொல்கிறோம். அன்றி மழைத் தன்மைக்கு அதிகாரியான வருணனுக்கென இதை அனுப்புவதால் அவனும் மழை பொழிய உதவுகிறான். முகர்ந்தால் மயக்கத்தை உண்டு பண்ணும் பல பொருள்கள் உண்டல்லவா? இவைகளைக் கலந்து அக்கினி மூலம் சூக்கு மப்படுத்தி, காற்றில் பரவவிட்டால், அக் காற்றை முகர்பவர்களெல்லோரும் மயக்கம டைவார்களல்லவா? பாரதத்தில் மோகனாஸ்தி ரம் இருந்ததென்பது ஏன் உண்மையாயிருக்க முடியாது? அஸ்திரப் பிரயோகம் என்பது அணு குண்டு போல் வேண்டுமானபோது நெருப் பைப் பற்றவைத்துவிட்டால் அதனால் உள்ளி ருக்கும் பொருள்கள் சூக்குமமாகிப் பரவுவதே யாகும்.

## வேள்வி மந்திரங்கள்

வேள்விகளில் மந்திரங்களை உச்சரிப்பதி லும் ஒரு பெரிய இரகசியம் இருக்கிறது. மந்திரங்கள் ஒரு குறித்த அலைவடிவை ஆகா யத்தில் உண்டாக்குபவை. ஒரு குறித்த இலட் சியத்துக்காக ஒரு வேள்வி செய்யும் போது மந்திரங்கள் குறித்த அலைவடிவில் அக்கினி வழிவரும் சூக்கும பொருளை அலைக்கழித் துச் செல்கின்றன. அதனால் அவ்வேள்வி எதற்காகச் செய்யப்படுகிறதோ, அதற்கான வகையில் அது பயன்படுத்தப்படுகிறது.

வேள்விகளில் சிறப்பாக அஜமேதம், கோமே தம், நரமேத யாகங்களில் உயிர் பிராணிகள் பலிகொடுக்கப்பட்டனவா? என்று கேட்போ ருக்கு அப்படி பலியுடன் வேள்விகள் பிற்கா லத்தில் செய்யப்பட்டனதான்; ஆனால் அது சாஸ்திர விரோதம். அஹிம்சைகளை வற்புறுத் தும் ஹிந்து தர்மம் பிராணி பலிக்கு ஆதரவு காட்டுமா? வேதக் கருத்துக்களைச் சரியாக மக்கள் புரிந்து கொள்ளாததும், வேத உபதேசங் களைச் சுயநலமிகள் தங்கள் நலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டதுமே இதற்குக் கார ணம் உண்மையில் வேள்விகளில் எந்தப் பலியும் கொடுக்கப்படக் கூடாது.

ஆரோக்கியம் பெற, ஆயுளை வளர்க்க, புத்திரப் பேறு பெற, தெய்வங்களின் உதவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற, நோய்களைக் குணப்படுத்த, பேய் பிசாசு சேஷ்டைகளை விலக்க, ஏவல், பில்லி சூன்யத் தொல்லைகள் மாற, மனக்கோளாறுகளை மாற்ற, அறிவை வளர்க்க, உலகில் சஞ்சலம் நீங்கி, சாந்தி நிலவ, இப்படி நூற்றுக்கணக் கான அரிய காரியங்களைச் செய்ய வேள்வி, யாகங்களைச் செய்யலாம்.

## யாகத்தின் நன்மைகள்

வில்வம், முருக்கம், கருங்காலி, ஆலமரச் சமிதைகளாலும், எள், கடுகு, பால், தயிர், சாமக்கிரியையால் இலட்சம் அவி கொடுத்து, பிறகு வில்வச் சமிதையால், அறுகம் புல்லால் ஆயிரம் அவி கொடுக்க நாட்டில் வறுமை நீங்கி, அதிக செல்வம் கிடைக்கும். அரச சமிதையால் வேள்வி செய்ய, பிரம்ம தேஜஸ் உண்டாகும். கருங்காலி சமிதையால் வேள்வி செய்ய உடலழகும், பலமும், நல் ஞானமும் உண்டாகும். ஆலம் சமிதையால் வேள்வி செய்ய தனம், தான்யங்கள் விருத்தியாகும். எள் ஓமம் செய்ய, எல்லாப் பாபங்களும் அழியும். வெண் கடுகால் ஓமம் செய்யப் பகைவர்களை வெற்றி கொள்ளலாம். பசும்பாலும் தேனும் கலந்து வேள்வி செய்ய செய்வினைகள், பில்லி, சூன்ய சேஷ்டைகளால் விளைந்த மரணம் தவிர்க்கப்படும். பாயாசத்தால் ஓமம் செய்ய புக ழும் சாந்தியுமுண்டாகும். தயிர் ஓமம் செய்ய வாக்குத் திறமை உண்டாகும். அறுகம் புல்லால் ஓமம் செய்ய எல்லா நோய்களும் குணமாகி ஆயுளும் ஆரோக்கியமும் நிலைப்படும். நாகக் கட்டை சமிதையால் பாயாச அன்னத்தால் நெய் கலந்து ஓமம் செய்ய இலக்ஷ்மி கடாக்ஷமுண்டா கும். பொரியால் ஓமம் செய்ய, கலியாணமாதகா பெண்களுக்குக் கல்யாணம் நடக்கும். பாலுள்ள மரச் சமிதையால் ஓமம் செய்ய, ஞானி களின் தொடர்பு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண விஞ்ஞானம்

''அவன் வருகிறான்' என்று சொல்லும் போது நாம் எதைக் குறிக்கிறோம்? ஒரு உடல் நம்மை நோக்கி வருவதைத்தானே! ''அவன்'' என்று சொல்லும் போது அசைந்து கொண்டிருந்த உடலில் அசைவற்று விட்டது என்பதைத்தானே! இருதயம் முதலான உள்ளுறுப்புகள். கைகால் முதலான வெளியுறுப்புகள் ஒரு உடலில் இயக்க மற்று ஓய்ந்துவிட்டால் மரணித்து விட்டதாகக் கருதுகிறோம். மரணம் என்பது உடலுறுப்புகள் மாறுவதோ, அழிவதோ அல்ல. அவைகளை இயக்கிக் கொண்டிருந்த பிராணன் அதை விட்டுப் போய் விட்டதென்பது பொருள். அதனால் மரணம் என்றால் உடலைவிட்டு உயிர் - பிராணன் போய் விடுவது ஆகும்.

ஒரு ஏரிக்கு நீர்வருவது குறைவாகவும், போக்கு அதிகமாகவும் இருந்தால் சில தினங்களில் ஏரி வரண்டு போகும். உடலின் ஒவ்வொரு இயக்கத்திலும் பிராண சக்தி செலவாகிறது. வரவு குறைந்த கொண்டே வந்த ஒரு நாளைக்கு வரவே இல்லாமல் நின்றுவிட மரணம் ஏற்படுகிறது. அப்படியானால் ஏதாவதொரு வகையில் உடலுக்குப் பிராணனைக் கொடுத்துக் கொண்டிருந்தால் எப்போதும் இறவாமல் இருக்கலாமே! இதுவும் நடக்காது. மின் சக்தியை எப்போதும் போதுமான அளவு கொடுத்துக் கொண்டிருந்தாலும், உழைப்பின் அளவு கொடுத்துக் கொண்டிருந்தாலும் உழைப்பின் பயனாய் இயந்திரங்களின் உறுப்புகள் தேய்ந்து போனால், சக்தியிருந்தும் இயந்திரம் இயங்காது. உடலும் தன் உழைப்பால் உறுப்புகளின் தேய்மானத்தை அடைந்து கொண்டேயிருப்பதால் பிராணனை ஏற்க முடியாத ஒரு நிலையையடைந்து மரணமாகும். தேயும் உறுப்புகளுக்குத் தேய்மானங்களை அவ்வப்போது கொடுத்து பிராணனையும் குறையாமல் கொடுத்து வந்தால் மரணிக்காமல் இருக்கலாம்.

ஆனால் இது மனிதர்களால் முடியாது. மகரிஷிகளால் முடியும். ஆனால் அவர்கள் இதை உபயோகித்து என்றுமே உலகில் வாழ இச்சிக்க மாட்டார்கள். மண்ணுலகில் வாழ்வதைவிட, இறையுலகில் வாழ்வதையே விரும்புவார்கள். தம் கடனைச் செய்வதற்காக பல ஆயிரமாண்டுகள் உடலை புதுப்பித்துக் கொண்டு வாழ்ந்திருப்பார்கள். சாதாரண மனிதர்களுக்கு மரணம் தவிர்க்க முடியாதது.

மின்சக்தி அளவு குறைந்து வருவதை இயந்திர இயக்க வேகம் குறைவதால் காட்டப்படுவதுபோல், மரணம் நேரும் பல நாட்களுக்கு முன்பே அதற்கான அறிகுறிகள் தென்படும்.

மரணம் வேதனை தரும் ஒரு செய்கையல்ல! முடிவாக , முழுப்பிராணனும் உடலை விட்டு வெளிப்பட்டு, பூரணமரணத்துக்கு பல மணி நேரம் முன்பாகவே ஆன்மா உடலை விட்டு சூஷ்ம சரீரத்துடன் வெளியாகி விடுகிறது. அந்த ஆன்மா உடலைவிட்டுப் போக விரும்பாமல் உள்ளே புக முயற்சிக்க, பிராணன் குறைந்த உடல் அதை வெளியே நிறுத்த முயற்சிக்கும் போராட்டம் தான் மரண வேதனை. பாசம் இல்லாமல் மரிப்பவர்களுக்கு மரணம் வேதனையல்ல - பரம சாந்தமானது. பிராணன் முதலில் முன் மூளையிலிருந்து விடுபடுகிறது. இதனால் தான் மரணம் சமீபிக்க உணர்விழந்து பிதற்றல், பிராணக்குறைவால் உடலணுக்கள் சுருங்கி, தம்முள் உறைநிலையிலிருக்கும் பிராணனை வெளிப்படுத்துகின்றது. இதனால் சுவாசமந்தம், உடற் சூடு குறைதல், நாடியடங்கல், நரம்பு படபடத்தல், கண்பார்வை அழிதல் முதலியவை நடைபெறுகின்ற சமயம் ஆன்மா சூஷ்ம உடலுக்கும், ஜட உடலுக்கும் உடலில் பூர்வபிராணனின் தொடர்பு இருக்கிறது. இதையே''பாசக்கயிறு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறோம். அநேகருக்கு உடலை எரிக்கும் வரை இக்கயிறு அறுபடுவதில்லை. அவ்வளவு பாசம் உடலிலும், உலகிலும் உடலணுக்களிலிருந்து மெதுவாக வெளியேறிக் கொண்டிருக்கும் பிராணனுடன் இது தொடர்பு கொண்டிருந்தது, அந்தப் பிராணனும் வெளியேறிய பின் அறுந்து, சூக்கும உடலைத் தனிமைப்படுத்துகிறது. சமாதியில் இத்தகையோரின் உடல் வைக்கப்பட்டால், மண்ணரித்து உடலின் நிலைப்பிராணன் வெளிப்படும் வரை பாசக்கயிற்றின் தொடர்பால் அங்கேயே சூக்கும உடலுடன் திரிந்து கொண்டிருப்பர். சிலர் இதனையே பேயாகக் காண்கிறார்கள். ஆகையால் தகனம் செய்வதுதான் நல்ல பழக்கம்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகஸ்ரார சக்ர விஞ்ஞானம்

அண்டத்திலுள்ளதெல்லாம் பிண்டத்தி லுண்டு, பிண்டத்திலிருப்பவையெல்லாம் அண் டத்திலிருப்பவையே என்பதை ஆன்மஞானிகள் மட்டுமல்ல பௌதீக விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர். வெளியுலகில் சூடு உண்டு, மனித உடலிலும் அது இருக்கிறது. காற்று, ஆகாயம், நீர், மின்சக்தி, காந்தசக்தி, எரிபொருள் போன்றவை உலகிலும், உடலிலும் இருக்கின் றன. பௌதீக விஞ்ஞானிகள் உடலிலும், உலகி லும் இப்பௌதிகப் பொருள்கள் இருப்பதையே கண்டார்கள். ஆனால் ஆன்மஞானிகள் உலகி லும், உடலிலும் ஆன்மாவும், இறைவனும் இருக் கிறார்கள் எனக் கூறுகிறார்கள், "ஈஸ்வரன் எல்லா உயிர்களின் இருதயத்திலும் இருக்கிறான் என்று கீதை கூறுகிறது. "உட்கலந்த ஜோதி" என்று தமிழ் ஞானிகள் கூறுகிறார்கள். மனித உடலில் சூரிய சக்தியைச் சேமிக்க நாடிக் கமல மும், பிராண சக்தியைச் சேமிக்க மண்ணீரலும், மனச்சக்தியைச் சேமிக்க நெற்றிக் கண்ணும் இருப்பதுபோல, இறைசக்தியைச் சேமித்துப் பரப் பும் ஓர்ஸ்தானமும் இருக்க வேண்டும். உடலின் மத்திய பாகத்தில் பெருவிரல் அளவான, ஸ்தா னம்போன்ற அவயவத்தில் இறைவன் இருக்கி றான் என உபநிடதம் கூறுகிறது. ஆக மனித உடலில் பிரம்மசக்தி, இறை சக்தி செயல்படும் ஓர் ஸ்தானம் இருக்க வேண்டும். அதுதான் சகஸ்ரார சக்ரம், சகஸ்ரார கோளம், பினியல் கோளம் (Pineal Gland) மூளையின் நடுப்பகுதியில் இக்கோளம் இருக்கிறது. ஒளிப்பொருள்களான பொஸ்பரஸ் போன்ற இரசாயனக் கலவையால் இது ஆனது. இதன் விவரங்கள் சகஸ்ரார கோள ஞான திருஷ்டிக்காஷி" என்ற கட்டுரைத் தொகு தியில் படித்தறியுங்கள். "ஆயிரம்" என்ற தத்துவ நூல்களில் வேதாதி சாஸ்திரங்களில் காணப்படுகி றது. ஆயிரம் என்ற எண்ணை, கணக்கைக் குறிப்பதல்ல, கணக்கிலடங்காத, எண்ணித் தொலையாத, அளவிலடங்காத என்ற பொரு ளில்தான் இச்சொல் உபயோகப்பட்டிருக்கிறது. "சகஸ்ர சீர்ஷா புருஷ" என்ற புருஷி சூக்த வாக்கியமும் "நாலாயிர முடியாயிர மாயிரம் கை பரப்பி" என்ற திருமங்கையாழ்வார் பாசுர மும் அசாப்தய என்ற பொருளில்தான் கூறப் பட்டுள்ளன. சகஸ்ரார கோளம் என்றால் கண்ணுக்கடங்காத, அளவுக்கடங்காத கிரணங் களை கொண்ட கோளம் என்று பொருள். சகஸ்ரார கோளம் சித்திரத்திலுள்ளபடி இருக்கி றது.

மூலாதாரத்தில் ஜீவான்ம சக்தியும், சகஸ்ரா ரத்தில் பிரம்ம சக்தியும் இருக்கிறது. மூலசாதா ரத்தில் ஜீவான்ம சக்தியும், சகஸ்ராரத்தில் பிரம்ம சக்தியும் இருக்கிறது. மூலாதார சக்தி முழுவதையும் விழிப்பித்து சுஷிம்ஞான வழி மேலேந்தி, சகஸ்ராரத்தில் லயிக்கச் செய்வது தான் "ஜீவபரம்மைக்யம்" சக்தி சிலதுடன் கலத்தில் மனிதனைத் தவிர மற்ற பிராணிக ளில் இக்கோளம் ஒளியற்று செயலற்றுக் கிடக் கிறது. இதிலிருந்து கசியும் கசிவுகள் மட்டும் இரத்தத்தில் கலந்து வருகிறது. மனிதனில் இக்கோளம் மந்தவொளி வீசுவதாயிருக்கிறது. கல்வியில் மேம்பட்டவன், கலைகளில் உயர்ந் தவன், சாஸ்த்திரத்தில் சிறந்தவன், பௌதிக ஞானத்தில் மேதை இப்படிப்பட்டவர்களிலும் இது மந்த ஒளியுடன்தான் இருக்கிறது. ஆனால் பக்தன், உபாசகன், யோக சாதகன், ஆன்ம ஞானி இவர்கள் கல்வியில், கலைகளில் மேம் பட்டவர்களாயிருந்தாலும் இல்லாவிட்டாலும். இவ்வொளி அதிகமாய் வீசுகிறது. ஆன்மஞா னத்தில் ஆன்ம சாதனைகளில் பிரகாசமடை யும் ஒளியிது. இவ்வொளியைக் கொண்டு ஒருவன் உண்மையான பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறானென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்ளலாம். இவ்வொளியை அதிகப்ப டுத்த வேண்டுமானால், பக்தி, யோகம், ஞானம், தவம் முதலியவைகளில் ஈடுபடுவதன்றி வேறு வழி கிடையாது.

இவ்வொளியை நெற்றி நடுவிலுள்ள ஆக்ஞா சக்ரத்தில் பட வைத்தால் சூஷ்மலோகங்களையும் சூஷ்மப் பொருள்களையும் நேருக்கு நேர் காணும் சக்தியுண்டாகும். இவ்வொளியை இருதயகமலத் தில் படச் செய்தால் அனைத்துயிர் ஒன்றென் றெண்ணும் சமநோக்கும், கருணை, தயை, பரோ பகாரம் முதலான சீரிய பண்புகள் உண்டாகும். இவ்வொளியைக் காதுகளுக்குப் படச் செய்தால் சூஷ்ம நாதங்கள் தேவகானங்கள் கேட்கும். இவ்வொளியைக் கண்களில் படச்செய்தால் பௌதீகக் கண்ணில் தேவர்களையும் சூஷ்ம உலகவாசிகளையும் பார்க்கும் திறமையுண்டா கும். இவ்வொளியை மூக்கு நரம்புகளில் படச் செய்தால் கற்பக விருக்ஷம், சந்தான தரு போன்ற தேவருலக மலர்களின் நறுமணம் இருந்த இடத்தி லிருந்து முகரக் கிடைக்கும். இவ்வொளியை வாய்நரம்புகளில் படச்செய்தால் தெய்வீகச் சுவைப்பொருளின் தேவையிருக்காது. விரும்பிய எதன் சுவையையும் வாயில் சுவைத்தறிய முடி யும். இவ்வொளியை ஸ்பர்ச நரம்புகளில் படச் செய்தால் தெய்வீகத் தென்றலை, குளிர்மையை அனுபவிக்கச் செய்யும். எந்தப் பருவமாறுதலும் உடலை ஒன்றும் செய்யாது இவ்வொளியை நாவிக் கமலத்தில் படச்செய்தால் புவனங்களின் அமைப்பு தெரியவரும், கிரக கிரணங்களின் கோளாறுகள் பாதிக்காத நிலையுண்டாகும். இவ் வொளியை மூலாதாரத்தில் படச்செய்தால் அபார மான ஆன்ம ஞானம் உண்டாகும். தன்மை உண்டாகும்

முன் சொன்னவைகளைப் படித்தவுடன் அவ் வொளியை வேண்டுமான இடத்தில் படச்செய் வது எப்படி என்று கேட்கத் தோன்றும் ஆனால் முதலில் நான் அப்படிப் படச் செய்து, பயன் பெற முயற்சிக்கலாமா? என்று கேட்பதுதான் அறிவுடமை, ஏனென்றால் வழிகிடைத்து நீர் அப்படிப் படச் செய்து கொள்ள முடிந்ததாக வைத்துக்கொள்வோம். அதனாலேற்படும் புதிய, விசித்ர, நினைத்திராத அனுபவத்தை நீர் மன அதிர்ச்சியில்லாமல், கலவரம், பயமில் லாமல் அனுபவித்துக் கொண்டிருக்க முடியு மென்பதற்கு என்ன உறுதி? திடுமெனக் கண்முன், வெட்டவெளியெனக் கருதுமிடத் தில் உம்முடைய இறந்துபோன உறவினர்க ளும், நண்பர்களும் உயிருள்ளவர்கள் போல் உலவிக் கொண்டிருப்பதைக் கண்டால் நீர் அதிர்ச்சியடையமாட்டீரா? திடுமென பொரு ளில்லாமல், வழிதெரியாமல், ஏதோ புதுமணம் உம் மூக்கைத் தாக்கிக் கொண்டிருந்தால் பயப்படாமல், சந்தோஷத்தை அனுபவித் துக் கொண்டிருப்பீரென்பதற்கு என்ன உத்ரவா தம்? "நாளை கலங்கமாட்டேன்" என்று உறுதி யாக நம்பிய சிலர், இச் சாதனைகளையும் புரிந்து ஓரளவு வெற்றி கண்டதும் அதனா லான அனுபவங்களைத் தாள முடியாமல் வாழ்க்கையையே சீர்குலைத்துக் கொண்டிருப் பதை நாமறிவோம். அதனால் இம்முயற்சியில் நாம் ஈடுபடலாமா? என்பதைத்தான் முதலில் ஒருவர் தீர்மானம் செய்யவேண்டும். இதற்கு முன் நேரடியாக அவர்கள் பலமான சாதனைக ளைப் பயின்று அவற்றால் ஏற்படும் தற்காலிக மான சில அனுபவங்களைப் பெற்று சகித்து, அனுபவித்துப் பழக வேணடும். பிறகுதான் இதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

தாமாக தம் சுபாவமாகக் கொண்டுள்ள சக்திகளைக் கொண்டு யாரும் இப் பிரம்ம ஜோதியை வசப்படுத்த முடியாது. இதற்கான திறமையைப் பெற அவர்கள் முதலில் "ஆன்ம தீக்ஷை" பெற வேண்டும். அதற்கே அவர்கள் ஓரளவு சாதனையில் முன்னேறியாக வேண் டும். இல்லாவிட்டால் ஆன்ம தீக்ஷையை யாரும் தரமாட்டார்கள். ஹடயோகம், இராஜ யோகம் என்ற இரு முறைகளில் இவ்வொளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் தொடர்பைப் பெறலாம். ஹடயோக என்ற இரு முறைகளில் இவ்வொளியின் தொடர்பைப் பெறலாம். ஹடயோக முறையில் பெறுவதென்றால் இல்லறமோ, லௌகீக வாசமோ, உதவாது. பூர்ண துறவியால், காடுகளில் ஆஸ்ரமங்களில் இருந்தாக வேண்டும். கடினமான நியமங்களுடன் கடினமான உடலுழைப்பும் செய்தாக வேண்டும். இப்படிச் செய்து அத்திறமையைப் பெற்றாலும் அதனாலவர்கள் சித்துகள் விளையாடிப் பேரும், புகழும் பெறத்தான் முடியுமன்றி பிறவிப் பெரும் பிணியை அறுத்துப் பேரின்பம் பெறமாட்டார்கள்.

எல்லோரும் இல்லறத்தான், தொழிலாளி, வியாபாரி, அரசியல்வாதி முதலான் சகலரும் எளிதில் சாதித்து, நிதானமாய், பயமில்லாமல் வெற்றியடையக்கூடிய வழி ராஜயோகம். இவ்வழியில் சாதகர்கள் பூரண வெற்றியடைந்து, பிரம்ம ஞான ஒளியை வசப்படுத்தும்போது, அதை நல்லமுறையில் உபயோகித்து நல்ல பயன்களைப் பெற தேவையான பண்புகளையும், உடல் மனநிலைகளையும் சக்திகளையும் பெற்றவர்களாகவே இருப்பார்கள். அதனால் எவ்வித அதிர்ச்சியும், பயமும் கலக்கமுமில்லாமல் ஏற்படும் புது அனுபவங்களைப் பயன்படுத்தி தெய்வ உலக இன்பங்களை மண்ணுலகில், மனித உடலில் இருந்தபடியே அனுபவிப்பவர்களாய், பிரம்ம ஞானிகளாய் விளங்கி, பிறவிப் பெரும்பிணியை வேருடன் களைந்தெறிந்து, பிறவாப் பேரின்பத்தைப் பெறுவார்கள்.

இராஜ யோகத்தில் இதற்கான சாதனை வேறொன்றுமில்லை. எல்லோருக்கும் தெரிந்த பிராணாயாமம் ப்ரதயாகார, தாரண, தியான, சமாதி சாதனைகள்தான் இதை முறையாகப் பயில்பவர்கள் பிரம்ம சாஷாத்காரம் பெறுவதற்கான பண்புகளைப் படிப்படியாய்ப் பெற்று, தம்முன் மந்தமாயிருக்கும் பிரம்ம கருவியை - சகஸ்ராரத்தை விழிப்பித்து, பிரம்ம சக்தியைக் கவர்ந்து பிரம்ம வியாபகத்தின் சகல அனுபவங்களையும் பெற்றுப் பிரம்மானந்தத்தில் திளைப்பார்கள்.

வாசகரே! முறையாக யோக சாதனைகளைப் பயின்று முன்னேற முயற்சியுங்கள்!!

பிரம்ம தியானத்தால் பிரம்மா ஆகவே ஆவான்.

ஓம் பிரஹ்ம ஜ்ஞானம் பலது.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பௌர்ணமி யாக பூஜையில் பங்கு கொள்ள பக்தர்கள்
ஆலயத்தை நோக்கி செல்லும் காட்சி



காயத்ரீ சித்தரின் ஆசி பெற கூடியிருக்கும் பக்தர் கூட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ காயத்ரீ பீட தியான மண்டபம்



காயத்ரீ சித்தரின், தரிசனத்திற்காக ஆலயத்திற்கு முன் பக்தர்களின் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் ஆய்வு

இரசாயனப் பொருள்களை ஆராய்ந்து அவைகளின் தன்மைகளை அறிவதுபோல் மனித உணர்வை ஆராய்ந்தறிய முடியுமா என்பது நெடுநாட்களாகத் தத்துவ வல்லுனர்க ளிடையில் இருந்து வந்த கேள்வி. இக்கேள்வி எவ்வித ஆராய்ச்சியையும் செய்வது மனித உணர்வே என்ற உண்மையால் எழுந்தது. உணர்வின் ஆய்வையும் உணர்வுதான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆராயப்படுவதும் ஆராய் வதும் ஒன்றேயாக எப்படி இருக்க முடியும். உணர்வை ஆராய உணர்வினும் மேலான பொருள் அண்டத்தில் யாதுமில்லை என்பது ஆன்ம ஞானிகள் கண்டறிந்த உண்மை. உணர்வை ஆராய வேறு பொருள் இல்லை. உணர்வுதான் உணர்வை ஆராய வேண்டும். இது முடியாதது. ஆகையால் உணர்வு எவ்வ கையிலும் ஆராயப்பட முடியாது என்ற முடி வைக் கட்டினர் பலர்.

உணர்வு ஆராயப்பட்டு அறியப்படக்கூடி யதே என்கிறார்கள் யோகியர். அண்டத்தில் உணர்வு மட்டும் தானே எழுவாயாகவும் முன் னிலைப் பொருளாகவும் இருந்து தன்னைத் தானே அறியும் தன்மை கொண்டது. இதற்கு யோகியர் கூறும் உதாரணம் வருமாறு: ஓர் விளக்குக்கு உணர்விருப்பதாக வைத்துக் கொள்வோம். அதன் கிரணங்கள் அறை முழு தும் பரவுகின்றன. விளக்கு இப்போது தனக்கு அந்நியமான அனைத்தையும் உணர்ந்து கொண்டிருக்கிறது எனலாம். இப்போது அதன் ஒரு கிரணமும் வெளிச் செல்லாதபடி அதற்கு மூடியிடுவதாக வைத்துக் கொள்வோம். என்ன ஆகும்? இதுவரை வேற்றுப் பொருள்களின் மீது பட்டு அவைகளை அறிந்து கொண்டி ருந்த உணர்வுக் கதிர்கள் இப்போது விளக்கி லேயே ஒன்றி நிற்கின்றன. இதனால் விளக்கு உணர்வுத் தன்மையை இழந்துவிட்டது எனக் கூற முடியாது. அது வெளியுலகை உணராமல் இருக்கிறது என்றுதான் கூறலாம். வெளிப்பொ ருள்களை உணர முடியாமல் தடைபடுத்தப் பட்ட உணர்வுக் கதிர்கள் இப்போது விளக்கி லேயே தன்னைத்தானே அறியும் நிலையில் ஒன்றியிருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

சுருங்கச் சொன்னால் உணர்வும் தன்னைத் தானே ஆராயும் தன்மை படைத்தது. இதே போலும் நன்கு புரிந்து கொள்ள உணர்வு செயல்படும் இடத்தைப் பார்ப்போம். நம் ஆராய்ச்சிக்கு மாறுபட்டவைகளை எடுத்துக் கொள்வோம். மனித உணர்வு மனித உடலில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உடலில் உணர்வு செயல்படும்போது உடலியக்கம் மன வியாபாரம் அனுபவம் ஆகிய மூன்று தன்மை கள் இருக்கின்றன. இம்மூன்றும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. உடலில் ஒன் றைச் செயல்படுத்தவிட்டு எழுந்தாக வேண் டும். உடலில் தானாகவே நடைபெறுவதான இமைத்தல் போன்ற காரியங்களும் மனிதனின் ஒரு பகுதியான சித்ததாலேயே நடைபெறுகின் றன. மனம் உடலில் ஒரு காரியத்தைச் செய்ய ஏன் நினைக்க வேண்டும். இதற்குக் காரணம் உணர்வே. உணர்வில் ஏற்படும் ஒரு விருப் பமே மனதில் நினைப்பை உண்டாக்கி உட லில் இயக்கத்தைத் தோற்றுகிறது. உணர்வில் விருப்பம் எழ, அதற்குண்டாகும் இன்ப, துன்ப உணர்ச்சியே காரணம். உணர்வின் விருப்பத் தைப் பூர்த்தி செய்வதற்கான வழியில் உடலி யக்கத்தை மனம் உண்டாக்குகிறது.

உடலில் உண்டாகும் இயக்கங்களெல்லாம் உணர்வின் விருப்பம் பூர்த்தியாகவே உண்டா கிறது. குறித்தவொரு சமயத்தில் மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தவொரு எண்ணம் தோன்றவும் உணர் வின் நிலையே காரணம். உடல் மனம் சித்தம் முதலியவை உணர்வின் கருவிகளே. உணர் வின் உபயோகத்துக்காகவே இவை இறக்கின் றன இயங்குகின்றன.

உணர்வு ஜடவுலகில் செயல்படும்போது அறிதல், அனுபவித்தல், இயக்கம், என்ற முத்தொழிலைச் செய்தபடி இருக்கிறது. இவை களை யோக நூல்கள் முறையே நாத்ருத்வம் போக்த்ருத்வம், கர்த்ருத்வம் எனக்கூறும். உணர்வென்பது இம்முத்தன்மைகளைக் கொண்ட ஒன்று என ஆராய்ந்தறியலாம். தன் குணங்களை வெளிப்படுத்தி உபயோகிக்கவே ஆன்மா பரிணாமத்துட்படுகிறது. அனுபவிப்ப தும் அதன் தன்மையில் ஒன்றானால் அதனால் அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்று இருந்தாக வேண்டும். இது அறியும் தன்மை கொண்டதா னால் அதனால் அறியப்பட வேண்டிய ஒன்றி ருந்தாக வேண்டும். உணர்வின் இத்தன்மைக ளுக்காகவே அண்டத்தில் எழுவகை உலகங் கள் ஆக்கப்பட்டன. இவைகளைக் கொண்டு இவைகளின் வழியாக உணர்வின் தன்மைகள் வெளியிடப்படுகின்றன. பரிணாமத் தொடக் கத்தில் தன் தன்மைகளின் மிகச் சிறியள வையே உணர்வு வெளிப்படுத்த முயல்கிறது. பூரணமாய்த் தன்னை வெளிப்படுத்தி நிற்கும் நிலையையே முக்தி என்கிறோம்.

உணர்வின் இம்மூன்று தன்மைகளை வேதாந்த நூல்கள் சத், சித், ஆநந்தம் எனக்கூ றும் "சச்சிதாநந்தம்" என்பது முற்றுணர்வு மயமான இறைவனின் பெயர்.

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யக்ஞ சிகிச்சா

இருக்கு வேதத்தின் முதல் மந்திரம் ''அக்னி மீனே'' அக்னியை வழிபடுவோம் என்கிறது. இங்கு அக்னி என்ற சொல் இறைவனைக் குறிக்கிறது. இறைவன் அக்னி வடிவினன் என்று இது கூறுகிறது. அக்னிப் பிழம்பாகிய சூரியன் இல்லாவிட்டால் மண்ணுலகமோ அதிலுள்ள ஒரு பொருளுமோ இருக்காது. உயிரினங்கள் உடலை இயக்கும் பிராணன் அக்னி வடிவானது. அணு அக்னியின் உறைவிடம். அது சிதையும்போது உறைந்துள்ள அக்னி வெளிப்படுகின்றது. நீரில் அக்னி இருக்கிறது. உலகில் எல்லாப் பொருள்களையும் அக்னியாக மாற்றிவிடலாம்.

இந்த அக்னியை வளர்த்து அதில் சில பொருள்களைப் போட்டு அவைகளை நன்கு எரியச் செய்ய நெய்யை ஊற்றுவது யக்ஞ சடங்கு. ஆனால் யக்ஞம் இந்த சடங்குக்காக மட்டும் செய்யப்படுவதில்லை. இந்தச் சடங்குடன் குறித்த மந்திரங்கள் ஓதப்படுகின்றன. இதன் அரும்பெரும் பயனை மக்கள் மறந்துவிட்டார்கள். மின்சக்தியுடன் எப்படி ஒலி, ஒளி அலைகள் கலக்கின்றனவோ, அப்படி அக்னி - சூட்டலைகளில் மந்த்ர அலைகள் கலக்கின்றன என்பது ஆன்றோர்கள் கண்ட உண்மை. விளக்கை ஏற்றி வைத்து அதன் சுடரில் நல்லது, கெட்டதை அறிந்து கொள்ளும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. பார்சிக்காரர்கள் அக்னியை வளர்த்து, மந்திரங்களைச் சொல்லிக் கடவுளை வழிபடுகிறார்கள். குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரை செய்யப்படும் 16 சடங்குகளில் யக்ஞம் செய்யப்படாத வழிபாடுமுண்டோ? பழங்காலத்தில் அசுவமேத யாகங்கள் செய்யப்பட்டன. புத்ரகாமேஷ்டி யக்ஞத்தில் தான் இராம லஷ்மணர்கள் பிறந்தார்கள்.

இந்த உண்மைகளெல்லாம் நமக்கு விளக்குவது; நெருப்பை வளர்த்து அதில் சில பொருள்களை அணுவாகச் சிதைத்து, ஆற்றலாக மாற்ற அத்துடன் மந்திர சக்தி அலைகள் கூடி எதற்காக யக்ஞம் செய்யப்பட்டதோ அந்த காரியத்தை நிறைவேற்றுகிறது. இராமன் தன் மேல் படையெடுத்து வருகிறான் என்பதை அறிந்த இராவணன் நிதும்பலை யாகம் செய்யத் தொடங்கினான். இந்த யாகம் முற்றுப் பெற்றிருந்தால் உண்மையில் இராமன் இராவணனை வென்றிருக்க முடியாது. இதை அறிந்த இராமனுக்குரியவர்கள் அந்த யாகத்தை அழித்துவிட்டார்கள். விசுவாமித்திரர் இராம லஷ்மணர்களை காட்டுக்கு அழைத்துச் சென்றது எதற்காக? தான் செய்யும் தவ வேள்விக்கு இடையூறுகள் செய்யும் அசுரர்களை அழிப்பதற்குத்தானே? காயத்ரியின் பேருளைப் பெற்று அச்சக்தியை வசப்படுத்தி விசுவனும் வேள்வி செய்தானென்றால் வேள்வியின் சிறப்பை, சக்தியை பயனை அறியக் கூடுமல்லவா? இன்று யக்ஞத்தின் சிறப்பை அறிந்த மேல் நாட்டு அறிஞர்கள் பலர் நாள் கணக்கில் வேள்வி செய்கிறார்கள், சிலர் வேள்வியால் கொடியநோய்களை குணப்படுத்தி வருகிறார்கள்.

ஒவ்வொரு காரிய சாதனைக்கும் சில சிறப்பான சமிதைகள் (சுள்ளிகள்) சாமக்ரி (ஓமத்திரவியம்) மந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சுள்ளிகள் ஓமத்திரவியங்களின் சூட்டாவி நிலையில் மந்திர அலைகளும் கலந்து எதற்காக வேள்வி செய்யப்பட்டதோ, அதை நிறைவேற்றுகிறது. அது எப்படியென்று பார்ப்போம்.

அக்னிக்கு ''தேவவாகனன்'' என்று பெயர். அதாவது குறித்த தேவர்களுக்கு பொருளைக் கொண்டு செலுத்துபவன் என்று பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்னியும், மந்திரங்களும் கூடும் இடத்தில் அந்த மந்திரங்களுக்குரிய தேவர்கள் வருகிறார் கள். அவர்களுக்கு உகந்த பொருள்களை தகுந்த மந்திரங்களுடன் கலந்து சூக்குசுமப்ப டுத்தும்போது அது அவர்களுக்கு திருப்தியளிப் பதன் மூலம் யக்ஞம் செய்யப்பட்டதன் குறிக் கோளை நிறைவேற்றுகிறார்கள். இந்த உண் மையை இன்னும் விரிவாக விஞ்ஞான ரீதியாக விளக்கலாம். ஆனால் சக்திகளையும், அவைக ளின் இணைப்பையும் மந்திர சக்திகளையும் அறிந்தவர்களுக்கு இந்த அளவு விளக்கம் போதுமென நினைக்கிறேன்.

"ஓம் சிவாயா ஸ்வாஹா" என்று அவி கொடுக்கும்போது அது சிவனை சிவசக்தி யைச் செயல்படச் செய்கிறது. "ஓம் லக்ஷ் மியை ஸ்வாஹா" என தகுந்த அவி கொடுக் கும்போது அது செல்வமகளாம் செல்வம் சேர் சக்தியை செயல்படச் செய்கிறது. "ஓம் சரஸ் வத்யை ஸ்வாஹா" எனும்போது வித்தையை நல்கும் ஆற்றலை செயல்படச் செய்கிறது. தேவர்கள், தேவிகள் பெயரால் தகுந்த பொருள்களை தகுந்த மந்திரங்களுடன் அவி கொடுக்கும்போது சூக்சுமயமான ஆற்றலாக மாறும். அவை வானப் பரப்பிலுள்ள மகா சக்தியை தகுந்த ஆற்றலாக மாற்றிச் செயல்ப டச் செய்வதன் மூலம் காரியத்தைச் சாதிக்கச் செய்கிறது. தீராத நோயை ம்ருத்யுஞ்ஜெய யக்ஞத்தால் தீர்க்கலாம். ஆயுஷ்ய ஹோமத் தால் மரணகாலம் நெருங்கியவரை இன்னும் பலகாலம் வாழச் செய்யலாம். லக்ஷ்மியின் வேள்வியில் வறுமையை அகற்றி செல்வம் பெறலாம். துர்க்கையின் யக்ஞத்தால் இன்னல் களைப் போக்கலாம். சரஸ்வதி யக்ஞத்தால் பல கலைகளை எளிதில் கற்கலாம். சுயம்வ ரக்லா யக்ஞத்தால் பெண்களுக்கு விரைவில் விவாகம் கூடச் செய்யலாம். புத்திர காமேஷ்டி யக்ஞத்தால் புத்திரப் பேற்றை அடையலாம். காயத்ரி யக்ஞத்தால் அறியாமையை அழித்து பிரம்ம ஞானம் பெறலாம்.

ஒருவருக்கு ஒரு காரிய சாதனைக்கான யக்ஞம் செய்யும்போது அவர் நேராக இருக்க வேண்டுமென்பதில்லை. எப்படி மனஅலை சிகிச்சை மிக தூரத்திலிருப்பவருக்கும் செய்யப் படுகிறதோ அவரை சங்கல்பித்து யக்ஞம் செய்யும்போது அவர் எங்கிருந்தாலும் யக்ஞத் தின் பலன் அவரையே சாரும். முடிவாக யக்ஞம் செய்த ஓம பஸ்பத்தை அவருக்கு அனுப்ப அவர் அதை பயன்படுத்தும்போது யக்ஞத்தின் பலன் முழுவதும் அவருக்கு உண் டாகிறது. பகைவர் படையெடுத்து வரப்போகி றார்கள் என்று தெரிந்தவுடன் "சத்ருதமன" வேள்வியை செய்தால் படையெடுப்பு தவிர்க் கப்படும். நமக்கு தீங்கு செய்ய நினைக்கும் ஒருவன் தூரத்தில் இருந்தாலும் இந்த வேள் வியை அவனைக் குறியாகக் கொண்டு செய் தால் அவன் மனதிலுள்ள பகைமை எண்ணம் மாறி நட்புக் கொண்டாடத் தொடங்கிவிடு வான்.

பொதுவாக சிறு அளவில் ஓமம் செய்பவர் கள் வீட்டில் தொற்றுக்கிருமிகள் அண்டா காற்று எப்போதும் சுத்தமாயிருக்கும். பலநோய் கள் குணமாகும். எண்ணங்கள் நல்லவையாய் வெளிப்படும். இப்படி சிறு வேள்வியை மந்தி ரம் சொல்லிச் செய்ய முடியாதவர்கள் எமது "பொது வேள்வி" கசட்டை வாங்கி உபயோ கித்தால் தினமும் அவர்கள் வீட்டில் வேள்வி நடந்தேறும். அநேக நற்பயன்கள் உண்டாகும்.

நீங்கள் எங்கிருந்தாலும் உங்களுக்கு ஆக வேண்டிய காரியத்தை விளக்கினால் தகுந்த யக்ஞத்தை செய்து பஸ்பத்தை அனுப்புகி றோம். உங்கள் காரியம் வெற்றியாகும். தேவை யானால் நேரிலும் வந்து உங்கள் வீட்டில் யக்ஞத்தைச் செய்கிறோம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவாழ்வு முயற்சிக்குத் துணை!

மனப் பொருளாக்கல் விஞ்ஞானத்தால் மக்களுக்கு ஏற்படக்கூடிய அரிய நன்மை

பிரபஞ்சத்தில் காணப்படும் பொருள்களெல்லாம் சில சூக்குமமான ஒரே வகையான மூலப்பொருள் பருக்கைகளின் பல்வேறு அளவான, வடிவான இறுக்கங்களே. அதாவது, எப்படி 96 வகை அணுக்களின் சேர்க்கையால் உலகப் பொருள்கள் அனைத்தும் ஆகியிருப்பதாக விஞ்ஞானிகள் சொல்லியிருக்கிறார்களோ, அப்படியே அணுக்களின் மூலப் பொருள்களும் இவ்வணுக்களின் சில அளவான சில வடிவான இறுக்கங்களே.

## அணுச் சேர்க்கை

பிரபஞ்சப் பரப்பு முழுவதும் எந்த மனிதனாலும் உண்டாக்கப் படாதவையாகப் பரவியிருக்கும் அணுக்கள் இப்படிப் பல அளவுகளில் பல வடிவங்களில் சேர்ந்து பல பொருள்களானது எப்படி தானாகவே சேர்கின்றன என்றால் எல்லா அணுக்களுமே சேர்ந்திருக்க வேண்டும். நீரக அணுவும் தானாகவே சேர்ந்து, நீராகும் தன்மை கொண்டதானால் வானப் பரப்பில் இவ்விரு அணுக்களும் தனியாகக் கிடைக்கா. எல்லாம் சேர்ந்து நீராக மாறியிருக்க வேண்டும். ஆனால் அப்படியின்றி எங்கோ, ஓரிடத்தில் எப்போதோ ஒரு சமயம் மனித அறிவுக்கு காரணம் தெரியாத படி சில குறித்த அணுக்கள் மட்டும், சில குறித்த உயிரக அணுக்களுடன் சேர்ந்து நீராகின்றன. மற்றவை அப்படியே இருக்கின்றன. அணுக்களின் இந்தத் தன்மையைக் கண்ட விஞ்ஞானிகள் குறித்த சமயத்தில் குறித்த இடத்தில் குறித்த அளவில் குறித்த வடிவில் குறித்த அணுக்களை சேர்த்து குறித்த பொருள் ஆக்குவதற்கு மனிதனில் செயல்படும் ''மனம்'' போன்ற ஒரு சக்தி இயங்குகின்றது என்று ஆராய்ந்து கண்டறிந்திருக்கிறார்கள். இதே கருத்தை உபநிடதங்களும் கூறுகின்றன. ஆண்டவன் பொருளை ஆக்க நினைத்தான். நினைப்பது மனம். அதனால் பரம் பொருள் தன் மனதைக் கொண்டே பொருள்களை ஆக்கிற்று எனக் கருத்து வெளிப்படுகிறது.

மின்சாரம், காந்தம், அணுசக்திபோல் இயங்கும் மனமும் ஒரு சக்திதான் என்பதை இன்று பல கருவிகள் மூலம் ஆன்ம விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள். ரேடியோவில் மைக்கை மனிதன் ஆங்ஞாசக்கரத்தில் வைத்துப் பலமாக எதையாவது நினைத்தால் அந் நினைப்புகள் தொலைபேசியில் கேட்கும்படியான மானச வானொலியை இன்று தயார் செய்திருக்கிறார்கள்.

## மனச்சக்தியின் ஆற்றல்

குறைந்த அளவு மின்சக்தியால் எந்தப் பெரும் காரியத்தையும் சாதிக்க முடியாது. மின்சக்தியை சில சாதனங்கள் மூலம் அதிகப்படுத்தலாம். இதே போல் மனிதனின் சாதாரணமாகச் செயல்படும் மனம் மிகக்குறைந்த அளவு சக்தியுடையது. மனிதன் சில சாதனைகள் மூலம் மனச் சக்தியை அதிகரித்துக் கொள்ள முடியும் பொருள்களில் புகுத்தி அவைகளை அணுக்களாகச் சிதைத்துவிடமுடியும். இதுவே மனப் பொருளாக்கும் விஞ்ஞானமாகும்.

ஒரு வெறும் தகர டப்பாவைக் காட்டி மூடி திறந்ததும் அதில் நிறைய மிட்டாய்கள் இருக்கச் செய்கிறார்கள் சிலர். ஏமாற்று வித்தையில் இப்படிச் செய்பவர்கள் பலரிருந்தாலும் உண்மையாகவே செய்பவர்கள் சிலர் இருக்கிறார்கள் என்பதை ஸ்வாமி விவேகானந்தர் தம் ''இராஜ யோகம்'' என்னும் நூலின் முகவுரையில் கூறியிருக்கின்றார். எத்தனையோ விஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகள் இதை நேரில் பரீட்சித்தறிந்திருக்கிறார்கள். மனச் சக்தியை அணுக்களில் புகுத்தி, அவைகளை இறுக்குவதிலேயே இத்தகைய சித்திகள் செய்யப்படுகின்றன.

நிறைந்த சந்தோஷமாயிருக்கும் ஒருவனின் உடல் போதுமான சத்துப் பொருள்கள் உண்ணப்படாமலிருந்தும் செழித்து, கட்டுமஸ்த்தாக வளர்கிறது. இதற்குக் காரணம் அவன் உடலில் புது அணுக்களை உற்பத்தி செய்வதே. கவலை, விசனம் முதலியவைகளால் வருந்தும் ஒருவனின் உடல் நிறையச்சத்துப் பொருள்கள் இருந்தும் தேய்கிறது. இதற்குக் காரணம் அவன் மனச்சக்தி பொருளை அணுக்களாகச் சிதைப்பதில் ஈடுபடுகிறது.

## மாய சீதையின் தத்துவம்

''கண்ணன் ஒரே சமயத்தில் பல கண்ணன்களாகத் தென்பட்டான். ஒரு சாது ஒரே சமயம் பல ஊர்களில் காணப்பட்டார்.'' என்பவை போன்ற சம்பவங்களும், மனச் சக்தியால் நடப்பவையே. மனச்சக்தியை அணுக்களில் புகுத்தி உருவை உண்டாக்குவது இதன் தத்துவம். இராமாயணத்தில் கூறப்படும் மாய சீதையின் தத்துவமும் இதுவே.

முன் சொன்ன உண்மைகளால் மனச் சக்தி கொண்டு அணுக்களைத் திரட்டி இறுக்கிப் பொருள்களை உண்டாக்க முடியுமென்பதை நன்றாக அறிந்து கொள்வீர்களென நினைக்கிறேன். பொதுவாக ''மனப்பொருளாக்கல்'' என்பது இந்தக் கலையைத்தான் குறிப்பதானாலும், வழக்கில் மனச்சக்தி கொண்டு தனக்கு வேண்டிய, உலகில் உள்ள பொருளைப் பெறுவது தான் உபயோகத்திலிருந்து வருகிறது. மனச்சக்தி கொண்டு மனிதன் உலகிலுள்ள எதையும் பெறமுடியும். இப்படி மனதை உபயோகிப்பது தான் மனப் பொருளாக்கல் விஞ்ஞானத்தின் முதற்படி.

தனக்கு வேண்டுமான, உலகிலுள்ள பொருளைப் பெறவோ அல்லது புதிய பொருளை உண்டாக்கிப் பெறவோ தேவையானது அதிக மனச்சக்தி. அதைச் சிதறாமல் குவித்து குறித்த காரிய சாதனைக்கு ஏவுதல் இவையே. இதற்கான சாதனங்கள் பிராணயாமம், தியானம், ஏகாக்கிரகம் என்பவைகளே. இவைகளை முறையாக ஒருவன் பழகி வந்தால் அவன் மனச்சக்தி அதிகமாகி, குவிந்து உபயோகத்துக்குக் கிடைக்கும். இப்படிக் கிடைத்த மனச் சக்தியை உபயோகிக்கும் முறையைச் சுருக்கமாக விளக்குகிறேன்.


உலகிலுள்ள எந்தப் பொருளையாவது பெற வேண்டுமானால் அந்தப் பொருளின் உருவை மனதில் அசையாமல் இறுக்கிப் பிடித்து நிறுத்த வேண்டியது தான். அப்பொருள் உலகில் எங்கிருந்தாலும் மனச்சக்தி அங்கு பாய்ந்து அது சாதகனைத்தேடி வருவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு வந்து சேர்ந்து விடும். ஜப்பானிலிருக்கும் ஒரு பொருளை வேண்டுமென ஒரு சாதகன் சாதனை செய்தான். அங்கிருந்து வரும் ஓர் அதிகாரி அதை எடுத்து வந்து இந்தியாவில் வைக்க, அது மற்றவர் மூலமாய்ச் சாதகனுக்குக் கிடைத்தது. மனச்சக்தியால் புதிய பொருளை ஆக்க வேண்டுமென்றாலும் ஆக்கப்பட வேண்டிய பொருளின் சகல அமைப்பையும் சிறிதும் மாறுதலோ, தவறோ இல்லாதபடி மனதில் இறுக்கிப் பிடித்தால், மனச்சக்தி அணுக்களை இறுக்கிப் பொருளை ஆக்கிவிடும்.

அதனால் மனச்சக்தியால் உலகில் இருக்கும் பொருளைப் பெற வேண்டுமென விரும்புபவர்களும், புதுப் பொருளை ஆக்க விரும்புபவர்களும் தம் மனச்சக்தியை பிராணாயாம, ஏகாக்ரக தியான சாதனைகளை முறையாகச் சாதிப்பதன் மூலம் பெறலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அரிதான மனச்சக்தியை வீணாக்கிவிடாமல் வளர்த்துக் கட்டுப்படுத்தி, உலகில் தேவையானவைகளைப் பெற்றுப் பெரு வாழ்வு வாழும் முயற்சியை மேற் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம். ஸ்ரீ காயத்திரீ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரீ சித்தருக்கு பக்தர்கள் கர்பூர ஆர்த்தி செய்து வழிபடுகிறார்கள்



பௌர்ணமி யாகம் முடிந்து காயத்ரீ சித்தர் பக்தர்களை ஆசிர்வதிக்கிறார்



ஸ்ரீ காயத்ரீ சித்தரை ஆலய பக்தர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித காந்த சிகிச்சை

உலகில் உண்மையை உணரும் வழியில் உயர்ந்து செல்லும் உத்தமர்களே! உலகில் உடலுடன் நாம் இருக்கும் வரைக்கும் நம் உதவிக்காக உடலைப் பேணியாக வேண்டும். இதற்காக உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் உறவு கொண்டிருந்து அவர்களுடன் தகுந்த முறையில் ஒழுகத் தெரிந்து வாழ வேண்டும். பிறருடன் கலந்து வாழ பிறருக்கு எவ்வகையிலாவது நாம் உதவியாயிருந்தாக வேண்டும். ஆன்மீகப் பாதையில் செல்லும் நாம் பொருளாலோ உடல் வலிமையாலோ பிறருக்கு உதவ முடியாது. நாம் வளர்த்துக் கொண்டு வரும் உயர் சக்தியை இவ்வழியில் உபயோகிப்பது ஆன்ம நெறிக்கு முரணானது. ஆக நாம் எப்படிப் பிறருக்கு உதவியாயிருக்க முடியும் ?

## பிறருக்கு உதவும் முறை

தற்கால விஞ்ஞானிகளுக்குப் புலப்படாத பல சக்திகளைக் கண்டு இயற்கையில் அவைகளை உபயோகித்து எளிதாக நாம் பிறருக்கு உதவி செய்யலாம். உலகப் பொருள்கள் அனைத்தும் அணுக்களாலானவை. அணுக்கள் மின்சாரத்தால் ஆனவை. ஆகவே எல்லாப் பொருள்களிலும் மின்சாரம் உறைந்திருக்கிறது. இவ்வாறு சொல்வர் விஞ்ஞானிகள். உறை மின்சாரம் பாயும் போது தன்னைச் சுற்றிலும் ஒரு காந்த வட்டத்தைக் கொண்டிருக்கும் என்பதை நாம் அறிவோம். மனித உடல் மின்களஞ்சியம். பிராணன் மின்சாரத் தன்மை வாய்ந்ததென்று முன்பே நாமறிவோம். உடலில் அணு அணு தோறும் ஜீவ மின்சாரமான பிராண சஞ்சாரம் இருக்கிறதென நாமறிவோம். இதைக் கொண்டு நம் உடலைச் சுற்றி ஒரு காந்த மண்டலம் இருக்கிறதென்பதை நாமறிந்து கொள்ளலாம். இன்று விஞ்ஞானிகள் அநேக பரீட்சைகளால் இக்காந்த மண்டலக் கூறுபாடுகளை அறிந்திருக்கிறார்கள்.

## உடலிலுள்ள காந்த சக்தி

முதன் முதலாக மெஸ்மெர் என்ற ஒரு பெரியவர் இவ்வுண்மையைக் கண்டு பிடித்தார். மனித காந்தம் மனித உடலின் சில உறுப்புகளின் வழியாக எப்போதும் பாய்ந்து கொண்டே இருக்கின்றது. இதை வேண்டுமான சில இடங்களில் பாய்ச்ச முடியும். உடலின் அநேக நோய்களுக்கு அவ்விடத்திலுள்ள இக்காந்தக்குறைவே காரணம். ஆகவே நோயடைந்த பகுதிகளில் ஓர் ஆரோக்கியவான் தன் காந்தத்தைப் பாய்ச்சிக் குணப்படுத்தலாம் என்ற உண்மையை அவர் கண்டுபிடித்து, செயல் முறையில் காந்த சிகிச்சை செய்து பல கடுமையான நோய்களைக் குணப்படுத்தி வந்தார். அவர் பெயரால் இம்முறை மெஸ்மெரிசம் என்று அழைக்கப்பட்டு வந்தது. எளிதாக நீங்களனைவரும் கையாளக் கூடிய காந்த மெஸ்மெரிச சிகிச்சை முறையைத் தான் இதில் உங்களுக்கு விளக்கப் போகிறேன்.

முதன் முதலாக உங்கள் உடலிலிருந்து காந்தம் வெளிப்படுகிறது; அதை நீங்கள் உடலில் பாய்ச்ச முடியும் என்பதை ஆதாரங்களுடன் பார்த்து கேட்டறிவதை விட நேரடியாக செய்து பார்த்தே அறிந்து கொள்வது நல்லதல்லவா ? அதற்காக நான் சொல்வது போல் உடனே செய்து பாருங்கள். உமக்குத் தெரிந்த ஒரு வாலிபரை ஒரு தனியறையில் ஒரு பலகையின்மேல் மல்லாந்து படுக்கச் சொல்லுங்கள். கைகளைப் பக்கவாட்டில் வைத்து கால்களை நன்றாக நீட்டி வைக்கச் சொல்லுங்கள். உடல் முழுவதையும் நன்றாகத் தளர்த்தி வைக்கச் சொல்லுங்கள். அவர் மேல் நீங்கள் காந்தம் பாய்ச்சப் போவதையும் அது அவரின் உடலுக்கு இதமாயிருக்குமென்றும் சொல்லிவையுங்கள். பிறகு கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மூடும்படி சொல்லுங்கள். திறந்தபடி இருந்தாலும் தவறொன்றுமில்லை. இனி உங்கள் வலது கையை உயர்த்தி விரல்களைப் பிரித்து வைத்து அவரின் தலைக்கு மேல் 4 அல்லது 5 அங்குல உயரத்தில் வைத்து, அப்படியே மெதுவாய்க் கால்வரை உயர்த்தியபடியே தடவி விடுங்கள். கை அவரின் உடம்பில் படக் கூடாது. 4, 5 அங்குல உயர்த்திலேயே இருக்க வேண்டும். இப்படி 6,8 தடவை செய்யுங்கள். பிறகு அவரை எப்படி இருந்தது என்று கேளுங்கள் ஏதோ உடம்பில் பாய்ந்ததாக அவர் சொல்வார். இப்போது உங்கள் உடலிலிருந்து காந்தம் பாய்வது உறுதியாய் விடுமல்லவா ?

## பிராணாயாம சாதனை

இவ்வளவுதான் என்று நினைத்து விடாதீர்கள். எல்லா மனித உடலிலிருந்தும் காந்தம் வெளிப்பட்டாலும் சிலரது காந்தம் சிலர் உடம்பிற்கு நன்மைக்குப் பதில் தீமையையே செய்யும். இது அவரவர் உணவு, மனச் சுத்தத்தைப் பொறுத்திருக்கிறது.

நோயாளிக்குச் சிகிச்சை செய்ய ஒருவர் உடலில் தானாக வெளிப்படும் காந்தம் போதாது. ஆகவே காந்த சிகிச்சைகள் தம் காந்தத்தை அதிக அளவில் வளர்க்கத் தெரிந்து கொள்ள வேண்டும். சாத்வீக உணவு, உடல் சுத்தம், நல்லெண்ணம் முதலியவை ஓரளவு காந்தத்தை அதிகப்படுத்தும். மேலும் அதிக அளவான காந்தத்தைப் பிராணாயாமம் மூலம் ஒருவர் பெறலாம். திட ஏகாக்கிரகம் நல்ல காந்தத்தை வளர்க்கும். ஆகவே காந்த சிகிச்சைகள் நன்றாக பிரணாயாம சாதனை செய்து வர வேண்டும். யாருக்கும் சிகிச்சை தொடங்கு முன் 5 அல்லது 10 நிமிஷம் பிராணாயாமம் செய்ய வேண்டும். அப்போது தான் நிறையக் காந்தம் நோயாளியின் உடலில் பாய்ந்து விரைவில் குணப்படுத்த முடியும். தடவிச் செய்யும் போது மாத்ரிகப் பிராணாயாமம் செய்து கொண்டே இருப்பது மிகநன்று. இதனால் குபுகுபுவென்று காந்தம் கைவழி நோயாளியின் உடலில் பாயும்.

## காந்தம் பாய்ச்சும் முறை

இனி, நோய்களுக்கு காந்தம் பாய்ச்சி சிகிச்சை செய்யும் முறையை விளக்குவோம். எந்த நோய்க்கும் ஆரம்பத்தில் முதல் தடவை உடல் முழுவதையும் முன்போல தடவிக் கொடுக்க வேண்டும். பிறகு நோயுள்ள பகுதியில் மட்டும் பலமுறை தடவிக் கொடுக்க வேண்டும். பலத்த நோயுள்ள இடமானால் சிறிது நேரம் மாத்ரிகப் பிராணாயாமம் செய்தபடியே ஆள்காட்டி விரலை அப்பகுதிக்கு நேராய் 4, 5 அங்குல உயரத்தில் சுட்டிக் காட்டுவது போல் வைத்திருந்தும் பாய்ச்சலாம். எந்த வகைச் சிகிச்சை செய்தாலும் முடிவில் 2, 3 தடவைகள் பொதுவாய் உடல் முழுவதையும் தடவிக் கொடுப்பது நலம். சிகிச்சை முடிந்த பின் சிகிச்சகர் தன் கைகளை நன்றாக நீரில் அலம்பித் துடைத்துக் கொள்ள வேண்டும். கைகளை கழுவாமல் எதையும் அவர் கையால் தொட்டு உண்ணக் கூடாது. நோயாளி பக்தரானால் சிகிச்சை முடிந்தவுடன் அதே கையால் சிறிது விபூதியையோ குங்குமத்தையோ எடுத்து நோயாளியின் நெற்றியில் பூசுவது நலம் தரும்.

சிகிச்சை இருக்கும் ஒரு நோயாளிக்கு மனதில் சந்தேகமிருந்தால் சிகிச்சை பலன் தராது. நம்பிக்கையில்லாதவருக்கு இச்சிகிச்சை செய்யக் கூடாது.

ஏகாக்கிர சாதனை பயின்று சிகிச்சையின் போது மனதில் காந்த சக்தியைக் கைவழி நோயாளியின் உடலில் புகுத்துவதாகப் பாவனை செய்து வந்தால் வியக்கத்தக்க முறையில் கடும் நோய்களும் எளிதில் குணமாகும்.

தேவையற்றோருக்கும், தீயோருக்கும், நம்பிக்கையில்லாதோருக்கும் இம்முறையில் சிகிச்சை செய்தல் நலமல்ல. காயத்ரி பீடத்தில் இச்சிகிச்சை முறைகள் கற்றுத் தரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள் மனமும் புற மனமும்

மனம் போன போக்கில் போகாமல் மனதைச் செலுத்தத் தவயோகியர் நெறி செல்லும் பக்தர் களே!

எல்லா மனிதரிலும் அவர்களின் நினைப் புக்கு ஆதாரமாக இருக்கும் மனதைத் தவிர, அதனிலும் சக்தி படைத்த மற்றொரு மனம் இருக்கிறது. ஆனால் இது சாதாரண மனித னின் உணர்விற்கு எட்டாதபடி தன்னிச்சை யாய்ச் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் பெரும்பாலானவர்கள் தம் சாதாரண நினைப்பு மனம் தவிர சக்தி கொண்ட மற்றொருமனமி ருக்கிறதென்பதையே அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இப்படியொரு மனம் உண்டு என்பதை அறிந்து கொண்ட முன்னோர்களில் பலர் அதைச் சாதாரண மனம் போலத் தம் விருப்பப்படி இயக்கப் பழகி அதனால் பெரும் அற்புதங்களைச் செய்ததோடு அரிய பல நன்மைகளையும் பெற்று வந்தார்கள்.

## நம்மில் மற்றொரு மனம்

அத்தகையதொரு மனம் உண்டு என்பதை இன்று சில ஆதாரங்களால் உங்களுக்கு விளக் கப் போகிறேன். நம்மில் மற்றொரு மனம் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள நம் உடல் இயக்கத்தில் சில உண்மைகளை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். நம் உடலில் நம் இச்சைக்குட்பட்டு நடக்கும் இயக்கங்கள் சில உண்டு கை காலசைத்தல், கண்ணிமைத் தல், கழுத்தைத் திருப்பி உடலை வளைத்தல், போன்றவைகளை உதாரணமாகக் கூறலாம். இவையன்றி நம் இச்சைக்கும் வசத்துக்கும் உட்படாமல் தன்னிச்சையாய் நடைபெறும் இயக்கங்கள் பலவுண்டு. இருதயம் துடித்தல், இரைப்பை அசைதல், ஈரல் இயங்கல் போன் றவை சில உதாரணங்களாகும். நெடுநாட்க ளாக இவ்வனிச்சா இயக்கங்கள் எப்படி ஜட உடலில் நடைபெறுகின்றன என்பது ஆராய்ச் சியாளர்களின் பெரும் புதிராயிருந்தது. ஏனெ னில் இவ்வியக்கங்கள் மனிதன் வசத்துக்குட்ப டாமல் நடப்பவையானாலும் மனிதனின் நினைப்புக்கும் இவ்வியக்களுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருக்கிறது. உதாரணமாக, மனிதன் தன் மனதில் கோபமாயிருக்கும் போது, இருதய நடைமுதலானவைகளின் இயக்கத்தில் மாறுதலை உண்டாக்குகின்றன. மனதுக்கு இவை தொடர்பில்லாமலிருந்தால் இது எப்படி முடியும்? ஆனால் நேரடியான தொடர்போ காணப்படவில்லை. ஏனெனில் மனிதன் தன் விருப்பங்கொண்டு தன் கைகளை அசைப்பதுபோல் இருதய இயக் கத்தை மாற்ற முடியாது. ஈரக்கசிவைத் தடுக் கவோ அதிகரிக்கவோ முடியாது. அப்படியா னால் மனதுக்கும் இவ்வியக்கங்களுக்கும் தொடர்பு எப்படி உண்டாகிறது?

## விழிப்புடனுள்ள உள் மனம்

நீண்டகால ஆராய்ச்சியின் பயனாக மனித உடலியக்கத்துக்கு மனிதனின் சாதாரண மன மன்றி மற்றொரு மனமும் இருக்கிறதென்பதை மனோதத்துவ சாஸ்திரிகள் கண்டு பிடித்தனர். மனிதனின் சாதாரண மனதைப் புறமனம் என்றால் மற்றதை உள்மனம் எனலாம். சாதா ரண மனதை முன் மனம், தூல மனம், பித்து மனம், என்றும், உள்மனதைப் பின் மனம், சூக்கும மனம், சித்து மனம் என்றும் அழைப் பர். முதலில் இப்படியொரு மனம் இருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்வோம். நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பவனில் முன்மனம் உட லில் செயல் படாமலிருக்கிறதென்பதை நாமறி வோம். இப்போது இவன் முழங்காலின்மேல் ஒரு சிறு கம்பால் தட்டினால், அவன் கால்கள் மடங்கும். கண்களில் ஒளியைக் காட்டினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் இறுகும். காதில் சிறு சுப்பலைத் தீண்டினால் கைகள் தள்ள முயலும். இவ்வள வுக்கும் அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டி ருப்பான். அப்படியானால் இவ்வியக்கங்கள் எப்படி நடந்தன ? இவ்வியக்கங்கள் இயந்திரத் தில் நடைபெறுவதைப் போல் அர்த்தமற்ற இயக்கங்களுமல்ல. மனோ சம்பந்தத்தால் நடைபெற வேண்டிய இயக்கங்களே இவை. சாதாரண மனமோ அடங்கிக் கிடக்கிறது. ஆகவே சாதாரண மனம் அடங்கியபோது உடல் இயக்கங்களுக்கு அதிகாரியாய் வேறொரு மனம் விழித்துக் கொண்டிருக்க வேண்டுமல்லவா ? இதுதான் உள்மனம்.

புறமனம் அவ்வப்போது புலன்கள் வழிவ ரும் வெளித்துடிப்புகளைப் பிரதிபலித்து நிற்கி றது. இச்சா காரியங்கள் முன் மனதின் ஆட்சி யில் உள்ளது போல் அனிச்சா காரியங்கள் பின் மனதின் ஆட்சியில் உள்ளன. முன்மனம் உள்மனதைப் பற்றுவதில்லை. ஆனால் உள்ம னம் புறமனதில் எழும் உணர்ச்சி வேகங்களை அறிந்து அதற்குத் தக உடலியக்கங்களை மாற்றி நடத்துகிறது.

## உள்மனத்தின் அற்புத சக்தி

புறமனம் அவ்வப்போது புலன்கள் வழிவ ரும் வெளித்துடிப்புகளைப் பிரதிபலித்து நிற் கையில், உள்மனம் அவைகளைத் தன்னில் அழியாமல் எப்போதும் வைத்திருந்து வேண் டும்போது புறமனதுக்கு ஞாபகமாக அனுப்புகி றது. புறமனம் தூக்கத்தில் அடங்குகிறது. உள்மனம் மரணகாலம் வரை ஓயாமல் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. சிலர் தூக்கத்தில் எழுந்து உண்டு, குடித்துப் படுப் பார்கள். காலையில் யாதும் நினைவிருக்காது. இதற்குக் காரணம், இரவில் அவர்களை எழுப் பிக் காரியங்களைச் செய்வித்தது புறமனமல்ல. உள்மனம் காலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டுமென்று நினைத்துப் படுத்துக் கொண்டால் சற்று நேரத்தில் அவ்வாறு நினைத்த புறமனம் அடங்கிவிடுகிறது. உள்ம னம் அதை அப்படியே ஞாபகத்தில் வைத்தி ருந்து சரியாக 5 மணிக்கு விழிக்கச் செய்து விடுகிறது. மிகுந்த பயம் ஏற்படும்போது புறம னம் ஸ்தம்பித்து நின்று விடுகிறது. உடனே உள்மனம் உடலை மேற்கொண்டு, சாதாரண நிலையில் தாண்ட முடியாத உயர்ந்த சுவரைத் தாண்டச் செய்துவிடுகிறது. யோசனையில் பழைய எண்ணங்களை அப்படியே திருப்பி ஓட்டுகிறது புறமனம். திடுமெனப் புதிய கருத் துக்களை வெளிப்படுத்துகிறது உள்மனம். உள்மனதில் தம் உணர்வைச் செலுத்தி நின்ற தன் பயனாகத்தான் புத்தர் போன்ற மகாஞானி கள் புது உண்மைகளைக் கண்டனர். விஞ்ஞா னிகளும் ஆழ்ந்த ஏகாக்கிரக யோசனையின் போது புறமனம் அடங்க உள்மனத்திலிருந்து தான் புதுத் தத்துவங்கள் உதயமாகின்றன. ''ஹிப்னாடிசத்''தில் புறமனம் அடங்கப் பெற்று உள்மனத்துடன் ஹிப்னாடிசக்காரன் தொடர்பு கொள்வதால் தான் அற்புதங்களைச் செய்விக்க முடிகிறது.

## முக்காலமும் அறியும் திறன்

புறமனம் சஞ்சலத்தன்மைக் கொண்டது. உள்மனம் நிலையான தன்மையைக் கொண் டது. புறமனம் நிகழ்காலம் மட்டும் அறியும். உள்மனம் முக்காலங்களையும் அறியும். புறம னம் ஸ்தூலத்தில் மட்டும் செயல்படும். உள்ம னம் சூக்குமத்தில் செயல்படும். புறமனம் சக்தியற்றது. உள்மனம் சக்தி மிகக் கொண் டது. புறமனம் நினைப்பதெதுவும் உடலில் நடைபெறாது. உள்மனம் நினைப்பதனைத்தும் உடலில் நடைபெற்றே தீரும். இந்த உண்மை யின் அடிப்படையில் தான் எண்ண சிகிச்சை, மந்திர சிகிச்சை, நம்பிக்கை சிகிச்சை ஹிப்னா டிச சிகிச்சை முதலான முறைகள் கையாளப் பட்டு வருகின்றன. உள் மனதில் உடல் இப்படி இருக்கிறது என்ற ஓர் எண்ணத்தைப் புகுத்தி விட்டால் அது உடலை அப்படியே இருக்கச் செய்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுள் மனதில் தேவைப்பட்ட ஓர் எண்ணத்தைப் புகுத்திப் பயனடையும் ஓர் எளிய முறையை "சிந்து மன வசியம்" என்பதில் விளக்குவோம். யோக சாதனையில் நம் புறமை முழுதும் கட்டுப்பட்டு அசையாது நிற்கும் போது, இவ்வுள் மனம் நம்வசத்துக்கு வருவதால் தான் நம் பழம் பிறவிகளின் சாக்ஷாத்காரம் நமக்கு உண்டாவதன்றிச் சாதாரண நிலையில் நாம் செய்ய முடியாத சில அற்புதங்களைச் செய்ய முடிகிறது. விரைவில் நீங்களனைவரும் சாதனையால் அந்நிலையை அடைய முயற்சி செய்வீர்களாக!

சுபம்

காயத்ரி சித்தரின்

## காயத்ரி பாடங்கள்

### காயத்ரி பாடத்தால் கற்றுத் தரப்படும் பாடல்கள்

1,2,3 உபதேயம்
4. பிரபஞ்சம் காயத்ரிமயம்
5. காயத்ரி தேவி விஞ்ஞானம்
6. தெய்வ வஸியம்
7. காயத்ரியின் தெய்வ சக்திகள்
8. காயத்ரியின் அருள் விலாசம்
9. காயத்ரியும் உடல் மனத் தூய்மையும்
10. காயத்ரி சக்தி சோதனைகள்
11. காயத்ரியின் அட்சுர தெய்வங்களும், பயன்களும்
12. தெய்வ காயத்ரிகள்
13. பெண்களும், காயத்ரியும்
14. காயத்ரி சுப சிகிச்சை
15. காயத்ரியும் - ஆறாதார விழப்பும்
16. சாதனையும் -பக்குவமும்
17. இல்லற வேள்வி
18. காயத்ரியும் - பஞ்சகோமும்
19. உபவாச நிபந்தனை
20. உணவு கட்டுப்பாடு
21. பிராணமய கோசு சாதனை
22. மனோமய கோச சாதனை திராடகம்
23. மனோமய-சப்த சாதனை
24. ரச சாதனை
25. கந்தஸ்பர்ச சாதனைகள்
26. விஞ்ஞான மய சாதனை ஞானமும் விஞ்ஞானமும்
27. விஞ்ஞான மய கோச சாதனை
28. ஆனந்த மய கோசம்
29. பஞ்ச பூத தத்துவம்
30. பஞ்ச பூத சாதனை
31. மூன்றவைத்தைகள்
32. தனித்த ஆன்மாவின் செயல்
33. தூரியாவஸ்தை
34. காயத்ரி மய வாழ்வு
35. துரிய சாதனை
36. பயிற்சியின் குறிக்கோள்
37. தன்னறிவு

ஸ்ரீ காயத்ரி பீடம்
ஸ்ரீ நகர், 82 லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ்
நுவரெலியா இலங்கை போன் 052/2609

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டக்கலையில் மனோ சக்தி

மனித காந்தம் பாய்ச்சித் தாவரங்களைச் செழிப்பாய் வளரச் செய்யலாமென்பதை விளக்குவோம். மனித காந்தத்துக்கு ஆதார மான மனோசக்தியையே பாய்ச்சினால் தாவரங் கள் மேலும் அதிகமான பலன்களைத் தரும் என்பதை விளக்குவோம்.

தாவரங்கள் மற்ற உயிரினங்களைப்போல் உயிர் கொண்டவை மட்டுமல்ல. உணர்வையும் ஓரளவு கொண்டவை என்பதை பாரத நாட்டுத் தாவரப் பேரறிஞர் போல் அவர்கள் நிரூபித்துள் ளார். தாவரங்களுக்கு மனிதர்களைப் போல் உணர்ச்சியுண்டு. உணர்வதென்றால் மனம் இருக்க வேண்டும். ஏனெனில் மனதில் தான் உணர்ச்சிகள் எழுகின்றன. பெரிய மரங்களில் உணர்ச்சி மட்டுமன்றி ஆன்மாவும் இருப்பதா கப் பழங்கால மக்கள் அறிந்திருந்தார்கள். இவ் வான்மாக்கள் சில சமயங்களில் மரத்தைவிட்டு வெளிவந்து, தம்மைச் சேர்ந்தவர்களின் நன்மை தீமைகளில் பங்கு கொண்டதான விபரங்களை யும் பழங்கால நூல்களில் காண்கிறோம். சில தாவரங்கள் தம் எஜமானர்களுக்கு வரும் நன்மை தீமைகளை வாடிப்போதல், செழித்தல் ஆகிய குறிகளால் முன்கூட்டியே அறிவித்து வந் தன. இதனால் தான் மரத்தைத் தெய்வமாக வழி படும் வழக்கம் எல்லா மதங்களிலும் இருந்திருக் கிறது.

## தாவரங்களின் மனம்!

மேற்சொன்னவைகளிலிருந்து தாவரங்க ளுக்கு மனமும், உணர்வும், ஆன்மாவும் இருக் கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவை இன்ப துன்பங்களை அனுபவிக்கின் றன. உணர்ச்சி வேகங்களுக்கு உள்ளாகின்றன. தம் எஜமானர்களுடன் பங்கு கொள்கின்றன.

தாயாரின் அன்புடன் வளரும் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் வளர, அன்னையின் ஆதர வற்ற குழந்தை பலமற்று வளரும் என்பதை நாமறிவோம். ஒரு குழந்தைக்கு தாயின் அன்பை விடச் சிறந்த பொருள் எதுவுமில்லை. அன்னையின் அன்பு விலையுயர்ந்த பல டானிக் குகளை விட சிறந்த நன்மையை அளிக்கும். இந்தத் தத்துவம் தாவர இனத்துக்கும் பொருந் தும். தோட்டக்காரனின் அன்புடன் பராமரிக்கப் படும் தோட்டம் பார்வைக்குப் பிறரை வசீகரிக் கும் தன்மையதாயிருக்கும். கூலிக்காக மட்டும் வேலை செய்யும் தோட்டக்காரனின் பராமரிப் புக்கு உட்படும் தோட்டம் சோபையிழந்து காணப்படும். தாவரங்களின் உணர்ச்சிகளை அறியக்கூடியவர்களுக்கு இவ்வுண்மை நன் றாக விளங்கும். தோட்டக்காரனின் அன்புக்குத் தகவே தாவரங்கள் பலனளிக்கும்.

## அன்பும் ஆதரவும்

நாமும் நம் அன்பையும் ஆதரவையும் கொடுப்பதன் மூலம் தாவரங்களைச் செழித்து வளரச் செய்யலாமல்லவா? அன்பைச் செலுத் துவதென்றால் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்வதென்று பொருளல்ல. அன்பு கலந்த மனஅலைகள் தாவரங்களில் பாய வேண்டும். இதைப் பல வழிகளில் சாதிக்கலாம். ஒரு சாதாரண மனிதனும் பின்பற்றக்கூடிய ஓர் எளிய முறையை மட்டும் இக்கட்டுரையில் விளக்குகிறோம்.

தாவரங்களில் எதிரில் உட்கார், கண்களை மூடு. மனக்கண் முன் முழுத் தோட்டத்தையும் வரவழைத்துக் கொள். இக்காட்சியை அசையா மல் சில நிமிடங்கள் மனதில் நிறுத்து. இப் போது உன் மனதில் அன்பு வெள்ளத்தையெ முப்பு. இதன் விவரத்தை உணர்ச்சி ஏகாக்ரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஏகாக்ரப் பாடத்தில் காண்க, காயத்ரி பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தினமும் இப்படி இருமுறை செய். தோட்டத்தின் கவர்ச்சி மாறுதலைக் கவனி. முடியுமானால் இப்படி மனச் சக்தியைப் பாய்ச்சுவதோடு காந்தத்தையும் பாய்ச்சலாம். தோட்டத்தின் அமைப்பில் சிறந்த மாறுதலைக் கண்டு ஆச்சரியப்படாமல் இருக்கவே முடியாது. உன் தோட்டத்தில் வந்தமரும் மக்கள் தம்மனக் கவலைகளை மறந்து மானசீக அமைதி அடைவார்கள்.

இதற்காக அவர்கள் அடிக்கடி உன் தோட்டத்துக்கு வருவார்கள்.

நம் தோட்டத்துக்குக் காந்தத்தையும் மனச் சக்தியையும் பாய்ச்சி, பிரதி பலனாகப் பெரிய அளவில் அறுவடை பெறுவது ஓர் இன்பக் கலையல்லவா ?

பரீட்சை செய்ய முடிந்தால் விவரத்தை எமக்குத் தெரிவியுங்கள்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் முதற்பொருளாம் அண்ட ஆகாயத்தின் தன்மை?

அண்ட ஆகாயத்தின் இரசாயனத்தன்மையை அறியுமுன் அண்ட ஆகாயமென்பதென்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நெடுங்காலமாக விஞ்ஞானிகளும், சாஸ்திரிகளும், அண்டத்தின் மூலப்பொருள் யாது என்பதைக் கண்டறிய முயன்று வந்தார்கள். ஒரு சமயம் அண்டத்துக்கு யாதும் மூலமில்லை. காணப்படும் அனைத்தும் அப்படியே இருந்தவை. இருப்பவை, அண்டத்துக்கு அண்டமே மூலம் என நினைத்து வந்தார்கள். சில காலத்தின் பின், அணுக்களே அண்டத்தின் மூலம் எனக் கண்டார்கள். தற்போதைய விஞ்ஞானிகள் அணுக்களை மின்னிகளாகவும், மின்னிகளைச் சக்தியாகவும் பிரிக்கத் தெரிந்து கொண்டார்கள். சக்திப் பொருளாகிய ஆகாயமே அண்டத்தின் மூலம் என இப்போதைய விஞ்ஞானம் கூறுகிறது. இப்படி விஞ்ஞானிகள் கூறும் ஆகாயத்தை நாம் கூறும் அண்ட ஆகாயமெனக் கருதிவிடக் கூடாது.

## அண்டத்தின் மூலம் யாது?

இவ்வுலகத்தில் மனிதன் கண்களுக்குப் புலனாகும் கோளங்கள் மட்டுமன்றிக் கட்புலனாகாத பல சூக்கும கோளங்களும் உண்டு என்பதை மெய்ஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நீங்கள் அறிந்திருப்பீர்கள். தோன்றும் கோளங்கள் எப்படி உண்மையோ அப்படியே இத்தோன்றாக் கோளங்களும் உண்மையானவையே. நாம் இத்தென்படும் உலகை அனுபவித்துக்கொண்டிருப்பதுபோல் அத்தென்படா, உலகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் பலர் இத்தென்படும் உலகில் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். நம் ஜடப் பொறிகளைக் கொண்டு நாம் ஸ்தூல உலகை அனுபவிப்பதுபோல் சூக்குமப் பொறிகளை விழிப்படையச் செய்தவர்கள், சூக்கும உலகப் பொருள்களை அனுபவிக்கிறார்கள். ஆக, அண்டம் என்பது காணப்படும் பொருள்களைக் கொண்டது மட்டுமல்ல. காணப்படாத பொருள்களையும் உள்ளடக்கியது எனக் கொள்வோம்.

அண்டத்தின் மூலம் யாது என எழும் ஆராய்ச்சி, காணப்படும் பொருள்களின் மூலத்தை மட்டும் அறிவதற்காக இருக்கக்கூடாது. காணப்படாத பொருள்களின் மூலத்தையும் அறிவதற்காக இருக்க வேண்டும். காணப்படும் உலகின் மூலம் ஜட ஆகாயம் என்ற விஞ்ஞானக் கூற்றை நாம் ஏற்றுக்கொண்டால், காணப்படா உலகங்களின் மூலம் ஒரு சூக்கும ஆகாயப் பொருளாக இருக்க வேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். விஞ்ஞானம் ஆகாயத்தை ஜடாகாசமெனவும் மெஞ்ஞானிகள் கண்ட ஆகாயத்தை அண்ட ஆகாயமென்றும் குறிப்பிடுவோம். ஜட ஆகாயத்தை விஞ்ஞானிகள் ஆராய்வதுபோல் அண்ட ஆகாயத்தை ஆராய்வோம்.

## யோகிகள் கூறும் விடை

இயற்கையின் முதற்பொருள் இவ்வண்ட ஆகாயமே. இதன் திரிபாகவே கர்மப்பொருள்களனைத்தும் தோன்றின. பொருள்களனைத்தும் இவ்வாகாயத் திரிபாகவே தோன்றியுள்ளதை நாம் பொருள் எனச் சொல்ல முடியாது. ஏனெனில் பொருள் என்பதற்கு என்ன கருத்துக் கொள்வோமோ அக்கருத்துக்குரிய தன்மை யாதும் அண்ட ஆகாயத்தில் இல்லை. பொருள் தன்மையற்றது. தன்மையற்ற ஒன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து தன்மையுள்ள குணமுள்ள பொருள்கள் எப்படித் தோன்றும்? யோகியர் கீழ்வருமாறு விடை கூறுகிறார்கள்.

ஸ்தூல சூக்கும பொருள்களனைத்திலும் காணப்படும் தன்மைகள், குணங்கள் எல்லாம் இவ்வண்ட ஆகாயத்தில் மறைந்த நிலையில் இருந்தன. இம்மறைநிலைக் குணங்கள் தான் மாத்திரைகள் எனப்படும். பிராண நீரிய வாயுக்களின் நீர்த்தன்மை மறைந்திருப்பது போல் என இதைக் கூறலாம்.

உலகில் காணப்படும் பல்வேறு தன்மைகள் எல்லாம் இவ்வாகாயத்தில் அப்படியே இருந்தன என எண்ணி விடக்கூடாது. பொருள்கள் பலவற்றை நாம் கண்டதும் அவைகளெல்லாம் 96 வகை அணுக்களின் கூட்டாலானவையே என நாமறிவோம். வெவ்வேறு பொருள்களில் காணப்படும் மாற்றுக் குணங்கள் 96 வகை அணுக் குணங்களின் கலப்பால் தோன்றியவையே. அணுக்களினது 96 குணங்களே எண்ணற்ற குணங்களின் மூலம். இதேபோல் தான் அண்ட ஆகாயத்தின் தத்துவமும்.

## ஐந்துமூல தத்துவங்கள்

அண்ட ஆகாயத்தின் 5 மூல தத்துவங்களே இருந்தன. அவை பார்த்திவம்/கடினத்துவம், மணம்/ஆபஸ்/நீராம் தன்மை அதன் குணம்/தேஜஸ்/சூடு, உருவக்குணம்/வாயு/பரவல் தன்மை ஸ்பர்ஸ குணம்/ஆகாயம்/சக்தித் தன்மை சப்த குணம்/என்பவை. இவ்வைந்து மூல அண்ட ஆகாயத் தத்துவங்களும் பல்வேறு வகையான, நிரையான கலப்புகளாகவே காணப்படும். காணப்படா உலகப் பொருள்களனைத்தின் தன்மை, குணங்கள் தோன்றின. ஏழு உலகங்களின் அணுப்பொருள்களிலும் இவ்வகைத் தன்மைகளின் கலப்பாலானவையே. பார்த்திவத் திரிபே காணும் உலகின் நிலமும் மற்றும் ஜடப் பொருள்களும் தேஜஸின் திரிபே காணும் உலகின் எரிபொருள்கள். பார்த்திவத் திரிபே ஸ்வர்க்கத்தின் நிலப்பரப்பு. தேஜஸின் திரிபே ஸ்வர்க்க ஜோதி. மானச உலகின் பார்த்திவம் கூறும்மனம்.

இப்படியே ஸ்தூல சூக்கும உலகங்களில் காணப்படும் எல்லாப் பொருள்களையும் அவைகளின் தன்மைகளையும் அறிய அண்ட ஆகாயத்தின் தத்துவக்கலப்பை நாம் அறிய வேண்டும்.

அண்ட ஆகாயத்தின் இரசாயனக் கூறுபாடு மேற்சொன்ன ஐவகை மூல, தன் மாத்ரா தத்துவங்களே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர் வருகிறார்

நாளுக்கு நாள் தம் முற்பிறவியைப் பற்றிய வரலாறுகளைச் சொல்லும் மக்கள் எண் ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருகிறது. உலகின் பல நாடுகளில் பல சமய மக்களின் இத்தகைய நிகழ்ச்சி நடந்துள்ளதை ஆராய்ச்சி செய்த அறிவாளிகள் மனிதனுக்கு முற்பிறவி இருந்தது உண்மைதான் என்று முடிவு செய் துள்ளார்கள். இப்பிறவிக்கு முன் ஒரு பிறவி இருந்ததென்றால், இப்பிறவிக்கு அப்பாலும் ஒரு பிறவி இருக்குமென்பதில் ஐயப்பாடு இருக்க முடியாது. இதில் ஒரு பிறவிக்கும் மறு பிறவிக்கும் இடையில் மனிதன் என்ன வாகி றான்? இறந்தவனுக்கு இறப்பதற்கு முன்னி ருந்தவைகளின் நினைப்பும், தொடர்பும் உண்டா? என்ற பொருள்களில் ஒன்றை மட்டும் ஆன்மிக நோக்குடன் ஆராய்வோம்.

## பிறப்பும் இறப்பும்

"நீ எப்படிப் பிறந்தாய்" என்றால் பிறப்பென் பது உடலில் மனிதன் நுழைவது என்றும் இறப்பென்பது உடலைவிட்டு மனிதன் வெளிப்படுவது என்று பொருள். வெளிப்பட்ட மனிதன், (ஆன்மா) என்ன ஆகிறான் என்பதற் குச் சமயவாதங்கள் அனுபவத்துக்கு முரண் பட்ட பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின் றன. எகிப்து, அஸீரியா, பாபிலோனியா, கிரேக் கம், ரோமானியம் முதலான மிகப் பழங்கால நாடுகளின் சமயக் கோட்பாட்டையும், சமயச் சடங்குகளின் முறையையும் நடுநிலைமையு டன் கவனித்தால் மிகப் பெரியதோர் உண்மை புலட்படும். எகிப்தியர்கள் இறந்த மன்னர்க ளின் உடல்களை அழியாமல் வைத்தனர். எப்படி இதைச் செய்தார்கள் என்பதை இப்போ தைய விஞ்ஞானத்தால் அறிய முடியவில்லை. வெளிக்காட்டிக் கொள்ளாத சூழ்நிலையில் ஆன்ம ஞானிகள் இன்றும் அதை அறிந்திருக் கிறார்கள். எகிப்தியர்கள் எதற்காக அப்படிச் செய்தார்கள்? இறந்தவர்கள் மறுபடி உடலுக் குள் வருவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்க லாம். முற்பிறவியை மெய்ப்பிக்கும் இக்காலத் தில், இறந்தவர்கள் அழிந்து விடுவதில்லை என்று புரிந்துகொள்வது கடினமல்ல. இறந்த வர்கள் உடனே எங்கும் போய்விடுவதில்லை; பல நாட்கள் வரை தம் வீடு வாசல் முதலிய வைகளின் அருகிலேயே சுற்றிக்கொண்டிருக்கி றார்கள், அல்லது அடிக்கடி அங்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்துக்களின் சமயச் சடங்களில் பல இந்த அடிப்படை உண்மையை உள்ளடக்கிய வையே. இறந்தவரின் ஆடை ஆபரணங்களை அவர் இறந்த இடத்தில் வைப்பதும், இறந்தவர் களுக்கு விருப்பமான பட்சணங்களைச் செய்து அங்கு படையல் போடுவதும், இறந்தவர்கள் அங்கு வருகிறார்கள், தாம் விட்டுச் சென்ற பொருள்களைக் காண அவாவுறுகிறார்கள் என்பவைகளையே குறிக்கின்றன. சமயச் சடங்குகளின் மறைவில் ஆன்மீக உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன.

## தூக்க விழிப்பே சாவு

நாள்தோறும் நாம் நம்மையும் மற்றவைக ளையும் மறந்து தூங்குகின்றோம்; காலையில் கண் விழித்தும் பழையவைகள் எல்லாம் நினைவில் இருக்கக் காண்கிறோம். சாவு ஒரு வகைத் தூக்க விழிப்புத்தான். உடலை விட்டு முடிவாக உயிர் பிரியும் பொழுது மனிதனுக்கு உணர்வு செயல்படுவதில்லை; தூக்கம் போன் றதொரு மூர்ச்சைக்கு உள்ளாகிறான். அம் மூர்ச்சை தெளியும்போது உண்மையில் அவன் உடலில் இருப்பதில்லையானாலும் உடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அதைப் புரிந்துகொள்வதில்லை. நாள் தோறும் தூங்கி விழித்தது போலவே உணர்கி றான். சில விநாடிகளில் தன்னில் ஏதோ மாறுதல் நடந்திருப்பதாக அறிகிறான்.

## தெய்வமாகும் நம்பிக்கை

"இறந்தவர் தெய்வமாகி விடுகிறார்" என்ற நம்பிக்கை சிலரில் இருக்கிறது. உண்மையில் இறந்தவனுக்கு இறப்பதற்கு முன் இருந்த அறிவு ஞானத்தைவிட கடுகளவுகூட அதிகமா வதோ, குறைவதோ இல்லை. தீயவன் இறந்து விட்டால் நல்லவனாய் விடுவதில்லை. அப் போதும் பிறருக்கு தீமை விளைவிக்கவே செய்கிறான்; முடியாதவன் தன் குணத்தை செயல்படுத்த முடியாததால் சும்மா இருக்கி றான். பத்தாவது வரை படித்தவன் இறந்துவிட் டால் 12வது படித்தவனாகி விடுவதில்லை. உலகில் ஒருவன் எப்படி இருந்தானோ அப்படி யேதான் இறந்த பின்பும் இருப்பான். இப்படி யெல்லாமிருந்தும் இறந்தவர்களைத் தெய்வமா கிவிட்டதாகக் கருதுவதும், அவர்களை நினைத்து வழிபடுவதுமான நம்பிக்கை மக்க ளிடை தோன்றியதற்கு ஒரு பெரிய காரணம் உண்டு. இறந்தவர்கள் சூக்கும உடலுடன் இருக்கின்றார்களாகையால், தூல நிலையில் உள்ளவர்களின் மன எண்ணங்களை நன்றா கப் பார்க்க முடிகிறது. அன்றி தூல உடலிலி ருந்து செய்ய முடியாத சிலவற்றையும் சூக்கும உடலிலிருந்து செய்ய முடிகிறது. இந்தப் பண்பால் அவர்கள் உயிருடன் வாழும் தம் மனைவி, மக்களுக்குச் சில காலங்களில் அரிய உதவிகளைச் செய்கிறார்கள்.

தன் குழந்தைகளை யாராவது அடிக்க வந் தால் அவன் மனக் கருத்தைப் புரிந்துகொள் ளும் இறந்த தந்தை எதையாவது உருட்டித் தள்ளி குழந்தை அடிக்கப்பட முடியாதபடி தடைசெய்ய முயல்கிறான். தகாத ஒருவனுக்கு தன் மகளைத் திருமணம் செய்ய உறவினர்கள் முயற்சி செய்யும்போது அதைத் தடை செய்ய இறந்த தந்தை முயற்சி செய்கிறான். இப்படிப் பல வழிகளில் தம் சூக்கும நிலையின் ஆற்ற லைப் பயன்படுத்தி, உலகில் இருக்கும் மனைவி மக்களுக்கு உதவி செய்கிறார்கள். யோகியர், சித்தர், முதலியவர்கள் மரணத்தின் பின் இருப்பவர்களை முற்றும் மறந்துவிட்டு முன்பே பற்றற்றிருந்தவர்களாகையால் அடுத்த வாழ்க்கைக்கு உடனே போய் விடுகிறார்கள். ஆனாலும் சித்தி பெற்ற அவர்களின் உடலிலி ருந்து வெளிப்படும் சூக்கும கதிர்கள் மக்க ளுக்கு நன்மை செய்யும் என்ற கருத்துடன் தான் மகான்களைச் சமாதி வைத்து, வழிபடும் வழக்கம் வந்தது.

## கருமாதி செய்வதேன்?

உடலுடன், உலகில் இருக்கும்போது பெறப் படாத எந்த நற்பண்பையும் இறந்தபின் பெற் றுவிட முடியாது. அதனால் உலகில் இருக்கும் போது தன் மனைவி, மக்கள், வீடு, வாசல், சொத்து சுதந்திரங்களில் அதிக ஆசாபாசம் கொண்டிருப்பவர்கள் இறந்தபின் உடனே அவைகளை மறந்துவிடுவதில்லை. சில நாட் கள் முதல் சில ஆண்டுகள் வரை அவரவர்க ளின் பற்றுதலின் ஆழத்துக்குத் தக உலக வாழ்க்கையின் நினைப்பும், அதன் பற்றுதலும் இருந்து கொண்டேயிருக்கின்றன. அதனால் அவர்கள் முடியுமான காலம் வரை அடிக்கடி தாம் விட்டுச் சென்ற இடங்களையும் பிரிந்து வந்த உற்றார், உறவினர்களையும் பார்க்க வந்து போகிறார்கள். அப்படி வரும்போது தம் பழைய பொருள்கள், மக்கள் இருக்கும் நிலைக் குத்தக்க இன்பத்தையோ, துன்பத்தையோ அடைகிறார்கள். மரணத்தையடுத்துப் பல நாட்கள் வரை சாதாரணமான மக்கள் தம் ஆசாபாசங்களுக்கு உரித்தான இடங்களை விட்டுப் போவதேயில்லை. அங்கேயே திரிந்து கொண்டிருப்பார்கள். இப்படி அவர்கள் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதைத் தடை செய்வதற்காகத் தான் இந்து சமயத்தில் கருமாதி என்ற சடங்கைச் செய்கிறார்கள். இறந்தவர்கள் தம் இருப்பிடத்தை அறிந்து கொள்ள முடியாமல் செய்வதே இச்சடங்கின் உட் கருத்து.

## ஆவி உலகுடன் சம்பாஷணை

இறந்தவர்கள் பற்றி ஏக்கம் கொண்டிருக்கும் சிலருக்கு இறந்தவர்கள் தம் அருகில் வருவதும், கூடவே திரிவதும் கண்களுக்கு தெரியாவிட்டாலும் உணர்வுக்குத் தெரிந்துகொள்ளும்.

"யாரோ வந்தது போல் இருந்தது. துணியசைந்தது. விளக்குத் திடுமென அவிந்தது. கவிழ்ந்தது என்ற கருத்து இந்த உண்மையைத் தான் விளக்குகின்றது. இறந்தவர்கள் தாம் இருப்பதை இப்படிப் பல அடையாளங்களால் தெரிவிக்கவே செய்கிறார்கள்.

சாதாரண யோகமானவர்களும், தம் சூக்கும உடலை வெளிப்படுத்தி, தேவ, சுவர்க்க, பிதுர், ஆவி உலகங்களில் சஞ்சரித்து அவ்வுலக வாசிகளுடன் சம்பாஷணை நடத்தித் திரும்பலாம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரும்பும் போது கனவு காணல்

தம் வாழ்க்கைச் சிக்கல்களுக்குக் கனவு மூலம் விடைகள் கண்டவர்கள் பலர் உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வருகிறார்கள். சிலர் தமது காணமற்போன பொருள் இருக்கு மிடத்தைக் கனவு மூலம் அறிந்து மீட்டார்கள். பலர் தன் இஷ்ட தெய்வத்தின் ஆசியைக் கனவுமூலம் பெற்றுக் களித்தனர். பல மருந்துக ளைக் கண்டனர். பல கவிகள் கனவு மூலம் புதுக்கவிதைகளை ஆக்கினர். பல சித்திரக்கா ரர்கள் தாம் வரைந்த சித்திரங்களுக்குரிய உருவைக் கனவில் கண்டனர். கனவு பெரும் பாலோருக்கு அரிய துணையாய் இருந்து வந்தது; இப்பொழுதும் இருந்து வருகிறது.

### பொருளுள்ள கனவுகள்

உடற்கோளாறுகளின் காரணமாய் உண்டா கும் கனவுகளைவிட மற்ற கனவுகளெல்லாம் தம்மில் ஒரு பொருள் கொண்டே இருக்கின் றன என்பதை நாமறிவோம். அநேகர் தமக்கு வரப் போகும் நோய்களை பற்றிக் கனவில் எச்சரிக்கை செய்யப்பட்டு, அவை பலமாய் முதிர்ந்து வெளிப்படுவதற்கு முன்பே எளிய சாதனைகள் மூலம் தப்பிக் கொள்கிறார்கள். ஆகவே தனக்கு வேண்டும் போது, வேண்டிய வகையான கனவு காண ஒருவன் தெரிந்து கொண்டால், அதனால் அவன் பெரும் பயன் பெறுவான் எனலாம்.

கனவு எப்படி, ஏன் உண்டாகிறது என்பதை மட்டும் சுருக்கமாக விளக்கப் போகிறேன். ஒருவன் எதையாவது அறிய வேண்டும் என்ற பேராவலுடன் தூங்கச் சென்றானானால் கனவு உண்டாகும். கவலையாலோ, துன்பத்தாலோ மன அமைதியில்லாமலோ தூங்கச் செல்பவர்க ளுக்கும் கனவுண்டாகும். மேற் சொன்னவைக ளிலிருந்து ஒருவன் ஏதாவதோர் ஆழ்ந்த சிந்த னையுடன் தூங்கச் சென்றால் அவனுக்குக் கனவு உண்டாகும் என்பதை புரிந்து கொள்ள லாம். எதைப் பற்றியாவது முடிவு கட்டியாக வேண்டிய சூழ்நிலையில் இருப்பவன் அது முடிவாகும் வரை நிம்மதியான தூக்கத்தைப் பெற முடியாது. ஏனெனில் தூங்குவதற்கு வேண்டிய மனநிம்மதி அவனுக்கு ஏற்படுவ தில்லை. உணர்வோ மனதை விட்டு அகல விரும்புகிறது. இந்நிலையில் உணர்வு மனதை இயக்கும் தன்மையை இழந்தும் ஆழ்ந்தடங்கும் தன்மையைப் பெறமுடியாமலும் இரண்டுக்கும் நடுப்பட்ட விழிப்பு, தூக்கத்துக்கு இடைப்பட்ட தூரத்தில் இருந்து கொண்டு மனதைப் பார்த் துக் கொண்டு நிற்கிறது. மனமோ இப்போது உணர்வின் வசத்திலிருந்து விடுபட்டதால் விழிப்பு நிலையில் புலன்வழி தன்னை அடைந்த பொருள்களைத் தன் விருப்பம் போல் இணைத்து வெளிப்படுத்திக் கொண்டி ருக்கிறது. இதுதான் கனவும், அதில் காணும் சம்பந்தமும் ஒழுங்கு மற்ற காட்சிகளுக்குக் காரணமாகும். இப்படி மனதனின் உணர்வு மனதை விட்டுப் பிரியும் தருணத்தில் மனதில், ஒரு குறிப்பிட்ட விடய சம்பந்த அலையை உண்டாக்கி விட்டுப் பிரிந்தால், அதைப்பற்றித் தானறிந்திருக்கும் தோற்றங்களை மனம் வெளிப்படுத்திக் கொண்டு போகும். இவ்வகை யில் உண்டாகும் கனவுகள் அர்த்தமுள்ளவைக ளாகவும் வருங்காலமுணர்த்துபவைகளாகவும் இருக்கும். சில சூழ்நிலைகளின் காரணமாகப் பலருக்கு இத்தகைய பொருள் செறிந்த கனவு கள் வருவதுண்டு. இதை முறையறிந்து விருப் பத்தின் பேரில் உண்டாக்க முடிந்தால், யாரும் தம் சிக்கலுக்கு விடை காணும் வண்ணம் கனவு காண முடியும். அடுத்து கனவின் பொருளைப் புரிந்து கொள்ளும் திறமை வேண்டும். கன வால் பயன்பெற முதலில் மேற் சொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தை மேற் கொண்டு, விரும்பும் போது கனவு காணக் கற்றுக் கொள்ளுங்கள்.

## விரும்பிய கனவு காணல்

நீங்கள் விடைகாண வேண்டிய ஒரு விஷயத்தைப் பற்றிய திட எண்ணத்தை மனதில் வைத்தபடி தூங்கச் செல்லுங்கள். இதை செய்தால், தவறாமல் கனவுண்டாகும். இதைப் பயில்வதற்கான சில குறிப்புகளைக் கூறுகிறேன்.

1. படுக்கையில் எப்போதும் படுப்பது போல் படுத்துக் கொள்ளுங்கள். தூக்கம் வரும் போலிருக்கும் சமயத்தில் நீங்கள் காண வேண்டிய கனவின் கருத்தை மனதில் திடமாய் உருவகப் படுத்துங்கள். அப்படி மனதில் அதை இருத்திய படியே தூங்க முயற்சி செய்யுங்கள். விரும்பும் கனவு உண்டாகும்.

2. மேற் சொன்னதிலும் வெற்றி காணாவிட்டால் நீங்கள் நல்ல தூக்கத்திலிருக்கும் போது யாரையாவது உங்களைத் தட்டி யெழுப்பும்படி சொல்லி வையுங்கள். அவர்கள் எழுப்பியதும் உடனே மனதில் உங்கள் விருப்பத்தை உருவகப்படுத்தியபடியே தூங்கச் செல்லுங்கள். கனவுண்டாகும். உம்மைத் தூக்கத்திலிருந்து எழுப்ப அலாரம் கடிகாரத்தையும் உபயோகிக்கலாம். எப்போது நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பீர்களோ அப்போது அடிக்கும்படி அலாரத்தை வைத்து, விழித்ததும் அலாரத்தை நிறுத்திவிட்டு முன் சொன்னது போல் மனதில் உருவகப்படுத்தியபடியே தூங்குங்கள்.

கனவுண்டாகத் துணை செய்யும் சில சாதனங்கள் வருமாறு:

1. மல்லாந்து படுத்த படியே தூங்கினால் அநேகருக்கு கனவுண்டாகும்.
2. வயிறு நிறைய உண்ட சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கினால் கனவுண்டாகும்.
3. பாதத்தில் ஈரத்துடன் தூங்கினால் கனவுண்டாகும்.

மேற் சொன்னவைகளால் உண்டாகும் கனவு விருப்பத்துக்கு விடை கூறும் கனவாயிருக்காது. ஆனால் விருப்பத்துக்குக் கனவு காணும் திறமையை இவை உண்டாக்கும். கனவிலிருந்து விழித்ததும் கனவை ஞாபகப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அநேகர் நல்ல கனவு கண்டும் விழித்ததும் மறந்து விடுகிறார்கள். படுக்கையருகில் ஒரு காகிதமும் பென்சிலும் வைத்திருந்து, விழித்ததும் கனவைக் குறித்து வைப்பது நலம். பிறகு மெதுவாய் அதைப்படித்துப் பலன் அறியலாம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்களை இங்கே அகற்றுக

மனிதன் உடலாலும் வாக்காலும் மனதாலும் புரியும் ஒவ்வொரு காரியமும் அவன் சித்தத்தில் சமஸ்கார வாசனா வடிவில் குடியிருந்து என்றைக்காவதொரு நாள் மனநினைப்புகளின் வடிவில் வெளிப்பட்டு அவனுக்கு இன்பத்தையோ துன்பத்தையோ பகிர்ந்தே தீரும் என்பதை நன்கறிவோம்.

உலகில் பிறக்கும் எல்லா மனிதர்களும் அறிந்தோ அறியாமலோ சில பாவங்களைச் செய்யவே வேண்டியிருக்கிறார்கள். சூழ் நிலைகளின் வற்புறுத்தலால் தவிர்க்க முடியாமல் தம் மனதுக்கு விருப்பமற்ற பாவங்கள் சிலதைச் செய்தாக வேண்டிய நிலமை அனைவர்க்கும் உண்டாகிறது. பாவம் செய்வதால் தான் மனிதன் பிறக்கிறான் என பைபிள் கூறுகிறது. இப்பொதுவிதிக்குச் சிலர் விதிவிலக்காக இருக்கலாம். பலர் தம் வாலிப வயதில் பாவங்களைச் செய்துவிட்டு முதுமையில் அதற்காக வருந்துகிறார்கள்.

## விதியை வெல்ல முடியுமா?

மனிதர் தம் பாவத்திற்காக சமைத்த விதியை வெல்ல முடியுமா? என்பது நெடுங்காலமாக மதவாதிகளிடையே தீராத ஒரு கேள்வியாக இருந்து வந்திருக்கிறது.

இந்து மதத்தில் பாவங்களிலிருந்து விடுபட வழியேயில்லை என்று சில நண்பர்கள் கருதுகிறார்கள். இது சரியல்ல. இந்து மதத்தில் எல்லா விதப் பாவங்களிலிருந்தும் விடுபட பிராயச்சித்த முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாவமும் அகல தனித்தனி முறைகள் கூறப்பட்டுள்ளன.

தற்கால மனோதத்துவ ஆராய்ச்சிப்படி பாவங்களை அகற்றும் வழி சித்தத்தில் இருக்கும் பாவங்களைப் பற்றிய சமஸ்காரத்தை அகற்றி விடுவதுதான். இப்படி அகற்றி விடுவதென்பது அவைகளைப் பற்றி நினைக்காமல் இருப்பதென்பதல்ல. சித்தத்தில் அதற்கான தொடர்பே இல்லாமற் செய்துவிடுவதுதான் அதுவாகும். யோக சாதனை ஒன்றினால் தான் யாரும் அதைச் சாதிக்க முடியும். ஞானம், தெய்வ ஞானம் ஒரு பெரும் நெருப்பு போன்றது. இந்நெருப்புக்குட்பட்ட மாத்திரத்தில் கர்மவினைகளெல்லாம் நெருப்புப் பொறிபட்ட பஞ்சைப் போல் எரிந்து சாம்பலாகி விடும் எனக் கீதை கூறுகிறது. சர்வ பாவ வினைகளையும் தகித்துச் சாம்பலாக்க வல்ல இத் தெய்வஞானம் யோக சாதனையால் தான் உதிக்கும். நேராக யோக சாதனையை மேற்கொண்டு தங்கள் சித்தத்தில் குடியிருக்கும் எல்லாப் பாவ வினைகளையும் சுட்டெரிக்க முடியப் பெறாதவர்கள் இப் பிறவியில் செய்த தவ பாவ வினைகளை அகற்றிக் கொள்வதற்கான ஓர் எளிய முறையை இங்கு விளக்குகிறோம். இம்முறை பாவத்துக்காக இரங்கல் என்ற தத்துவத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டது. தம் பாவங்களுக்காக உள்ள உண்மையுடன் வருந்துபவர்கள் தம் பாவங்களிலிருந்து விடுபடுவார்கள் என்பதை எல்லா மத நூல்களும் மனோதத்துவ நூல்களும் ஒரு முகமாய் ஒப்புக் கொள்கின்றன. உயர்ந்த பக்தியுணர்வு நிறைந்த பிராத்தனைகள் பாவத்தைப் போக்கும். தம் பாவங்களை அகற்றியே ஆக வேண்டும் என வைராக்கியம் மேற்கொள்பவர்களுக்கு அதற்கான வழிகள் தானாகத் தெரியவரும். கீழ்வரும் எளிய முறையில் யாரும் தமது இப்பிறவிப் பாவங்களைப் போக்கிக் கொள்ளலாம்.

## பாவத்தை நீக்கும் முறை

தினமும் இரவில் படுத்துக் தூங்கப் போகும் முன் அன்று காலை நீங்கள் உடலாலும் வாக்காலும், மனதாலும் செய்த எல்லாக் காரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களையும் முறையாக படிப்படியாக நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். எந்த இடத்தில் பாவம் செய்த நினைப்பு வருகிறதோ, அங்கு சற்று நிற்க வேண்டும். ஏன் அந்தப் பாவத்தைச் செய்தோம்? என்பதை நன்கு ஆராய்ந்து இனிமேல் எக்காரணம் கொண்டும் அதைச் செய்ய மாட்டேன் என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். செய்த இப்பாவத்தைப் பரமன் மன்னித்தருள வேண்டுமென்று அன்புடன் விரும்பிப் பிராத்தனை செய்யுங்கள்.

உங்கள் இஷ்ட தெய்வத்தின் ஆசியருளால் உங்கள் பாவம் விலகி நீங்கள் பவித்திரமாகி விட்டதாக உறுதியாய் நம்புங்கள். இந்நம்பிக்கை உங்களில் வேரூன்றினால் உண்மையாகவே உங்கள் பாவம் விலகிப் போகும். நாள்தோறும் இச்சாதனையை அன்புடனும் சிரத்தையுடனும் பயபக்தியுடனும் செய்துவந்தால் உண்மையாகவே தினசரிபாவங்கள் அன்றன்று கழுவப்பட்டு பவித்திரதன்மை உண்டாகிக் கொண்டு வரும்.

ஆழ்ந்த தியான சக்தியைக் கொண்டு உங்கள் முற்பிறவிகளில் செய்த பாவங்களையும் நினைவுக்குக் கொண்டு வந்து இம்முறையில் அவைகளை விலக்கலாம். உன் முறை கேட்கப்பட்டதான நம்பிக்கைக்குள் வந்தாக உன் பாவம் விலகியதான உறுதி உனக்குக் கிடைக்கப் பெறும் உண்மையாகவே நீ பவித்திரம் ஆவாய்!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானதத் தந்திக்குப் பரீட்சை

மனதை வசப்படுத்துவதால் மனிதன் என்னென்ன நன்மைகளைப் பெறமுடியும் என்பதை நீங்கள் எல்லோரும் ஐயந்திரிபற அறிந்திருக்கிறீர்கள். உங்களில் இன்னம் பூரணமாக மனதை வசப்படுத்தாமல் அதற்கான சாதனையைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். வசப்படுத்தியவர்களுக்கு இன்றைய உபந்நியாசத்தில் புதுமை ஒன்றும் தெரியாது. ஆனால் அதில் இன்னும் வெற்றி காணாதவர்களுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டு மனதை வசப்படுத்த முயற்சி செய்கிறோம். இதில் வெற்றியடைந்து விட்டால் உண்மையாகவே இதனால் ஏற்படக் கூடிய நன்மைகள் என்ன? நாம் கேள்விப் பட்ட அரிய நன்மைகள் கிடைக்குமா? என்ற சந்தேகத்தைப் போக்கிவிடும்.

### தெரிந்த நபரின் படம்

முதலில் நீங்கள் தொலைவிலுள்ள உங்களின் ஒரு நண்பரையோ உறவினரையோ இதற்காக தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு நெடுநாள் தன் நலத்தைப் பற்றிக் கடிதம் எழுதாமலிருக்கும் உங்கள் பிள்ளை பெண், உங்களை எப்போதும் காரணமின்றி வெறுக்கும் உங்கள் எஜமானன் போன்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம்.

நீங்கள் தேர்ந்தெடுத்த நபரின் சமீபகாலப் புகைப்படம் ஒன்றை நீங்கள் பெற வேண்டும். அல்லது அவரின் உருவை நீங்கள் மனக்கண்ணால் நன்றாகப் பார்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். பரீட்சை செய்ய ஒரு நிசப்தமான இடத்தைக் தேர்ந்தெடுக்க வேண்டும். வீட்டிலேயே இதற்கென ஓர் அறையை ஏற்பாடு செய்யலாம். கூறப்போகும் பரீட்சா சாதனையைத் தினமும் நீங்கள் படுக்கப்போகும் போதும் காலை கண்விழித்ததுமாக இரண்டு வேளை செய்ய வேண்டும். இந்நேரம் நீங்கள் தேர்ந்தெடுத்த நபரின் தூக்க நேரமாயிருக்க வேண்டும். விரைவில் பலன் காண வேண்டுமானால் இச்சாதனையை நடு இரவில் ஒரு முறை செய்வது நல்லது.

### படத்தின் முன் பரீட்சை

உங்கள் படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். அல்லது சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொள்ளுங்கள். உங்கள் முகத்துக்கு நேராக இருக்கும்படி புகைப்படத்தை மாட்டி வையுங்கள். தலையையோ கண்களையோ அசைக்காதபடி நீங்கள் அதைத் தெளிவாய்ப் பார்க்க கூடியதாயிருக்க வேண்டும். புகைப்படம் நன்கு தெரியுமான அளவு வெளிச்சம் இருக்கட்டும். ஆனால் உங்கள் கண்கள் மேல் நேராக வெளிச்சம் படாதபடி இருக்க வேண்டும். தேவைக்கு அதிகமாய் இருக்கக் கூடாது.

உங்கள் உடைகளைத் தளர்த்தி விடுங்கள். உடல் முழுவதையும் நன்றாகத் தளர்த்துங்கள். இமைக்காமல் அப்போட்டோவிலுள்ள உருவத்தின் புருவமத்தியைப் பாருங்கள் அப்போட்டோவிலுள்ள நபர் உண்மையாகவே உங்களுக்கு நேராக இருந்தால் அவர் என்ன செய்ய வேண்டுமென்று எப்படிச் சொல்வீர்களோ, அப்படி அப்போட்டோ உருவத்தைப் பார்த்தபடி தெளிவாய் மனதில் திடமாய்ச் சொல்லுங்கள். மனம் ஏகாக்கிரமாய் இருக்கச் சொல்லுங்கள் எத்தனைத் தடவைகள் சொல்ல முடியுமோ அத்தனை தடவைகள் சொல்லுங்கள். பிறகு கண்களை மூடி, அந்நபரின் உருவை மனக்கண்முன் தெளிவாய் நிறுத்துங்கள் இப்போதும் முன்போலவே சில தடவைகள் சொல்லுங்கள். மறுபடி கண்திறந்து போட்டோ இல்லாவிட்டால் மனதாலேயே பலமுறை திடமாய்த் தெளிவாய்ச் சொல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகாக்கிர சக்தியின் பயன்

இப்படிப் பன்முறை சொல்லிய பின் நீங்கள் சொன்னதை அவர் அப்படியே செய்வதாக மனதில் கற்பனை செய்து காணுங்கள். உதார ணமாக உங்கள் மகள் உங்களுக்கு கடிதம் எழுத வேண்டும் என்பது உங்கள் கருத்தா னால் முன் சொன்னபடி உங்கள் மகள் போட்டோவை எதிரில் வைத்து உடனே எனக் குக் கடிதம் எழுது, எனக்கு கடிதம் எழுதி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாய் என்றெல் லாம் முன் சொன்னபடி மனதில் சொல்லிய பின் உங்கள் மகள் ஒரு கடிதமும் பேனாவும் எடுத்து மேஜைக்கு முன் எழுந்து உங்களுக்குக் கடிதம் எழுதி, எடுத்துச் சென்று தபால் பெட்டியில் போடுவது போலவும், மறுநாள் தபால்காரன் இக்கடிதத்தை உங்களுக்குக் கொண்டு வந்து கொடுப்பதாகவும் மனதில் தெளிவாய் கற்பனை செய்து காணுங்கள். உங்கள் எஜமானனின் வெறுப்பை மாற்றுவது உங்கள் கருத்தாயின் அவர் போட்டோவை முன்னிட்டு இனி என்பேரில் நீங்கள் பட்சமாயி ருப்பீர்கள்; என்பால் உங்களுக்கு அன்பு தோன் றுகிறது என்றெல்லாம் சொன்னபின் மனக் கண்ணில் நீங்கள் வேலைக்குச் செல்வது போலவும் அவர் உங்களை அன்புடன் அழைத்து உபசரிப்பது போலவும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

உங்கள் ஏகாக்கிரசக்திக்குத் தக ஒன்றிரண்டு தினங்களில் நீங்கள் நம்பியபடி காரியம் நடை பெறுவதைக் காண்பீர்கள். உங்கள் மகளிடமி ருந்து கடிதம் வரும். எஜமானர் அன்பு காட்டத் தொடங்குவார்.

இதை வேறு நல்ல காரியங்களுக்கும் உபயோகித்துப் பயன் காணலாம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கே இருக்கின்றார்

கடவுள் வைகுண்டத்தில் இருக்கின்றார். கைலாயத்தில் இருக்கின்றார்; பிரம்மலோகத்தில் இருக்கின்றார். பரமண்டலத்தில் இருக்கின்றார், ஏழாவது ஆகாயத்தில் இருக்கின்றார், மூன்றாவது ஆகாயத்தில் இருக்கின்றார், திருத்தணியில் இருக்கின்றார், திருப்பதியில் இருக்கின்றார், மாதாகோவிலில் இருக்கின்றார், காபாவில் இருக்கின்றார், என்றெல்லாம் சமயவாதிகள் கடவுளின் இருப்பிடத்தைப் பற்றிக் கூறுகின்றார்கள். இத்தகையவர்களை ஒன்று கேட்க விரும்புகின்றோம்.

இப்பிரபஞ்சத்தில் அணுமுதல் அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உயிர்கள் குடியிருக்கும் உடல்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இயக்கங்களுக்கும் கடவுளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டு. உண்மையாகவே கடவுள் ஏதோ ஒரு இடத்தில் இருப்பதாகச் சொல்பவர்கள் தொடர்பு இருப்பதாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அப்படி ஒப்புக் கொள்ளாதவர்களைக் கேட்கின்றோம். ''அப்படியானால்'' இப்பிரபஞ்சப் பொருட்களை இயக்குவது எது? தானாக இயங்குகின்றனவா அல்லது கடவுள் இயக்குகிறாரா? கடவுள் இயக்குகின்றார் என்பதை ஒப்புக்கொள்ளாதவர்கள் இதற்குக் கடவுளைப் போன்ற வேறொரு சக்தி இருப்பதாக ஒப்புக் கொள்ள வேண்டும். சைத்தானை நம்புபவர்கள் அதுதான் அந்தச் சக்தி என்று சொல்லுகின்றார்கள். அப்படியானால் சைத்தான் கடவுளைவிடச் சக்தி படைத்ததுதானே? என்றால் ஒப்புக் கொள்ள முடியாது வாயடைத்துப் போகின்றார்கள். கடவுள் தான் இயக்குகின்றார் என்று சொல்பவர்களிற் சிலர் கடவுளுக்குத் தனியிடம் கற்பனை செய்வதால் இதற்கு இப்படிச் சமாதானம் சொல்லுகின்றார்கள். கடவுள் இருந்த இடத்திலிருந்து பிரபஞ்சத்தை இயக்குகின்றார். எதன் மூலமாக இயக்குகின்றார் என்று கேட்டால்? தூதுவர்களால் என்று சிலரும் ''சூத்திரக்கயிற்றால்'' என்று சிலரும் விடை கூறுகின்றார்கள். சூத்திரக்கயிறு எப்படி ஒவ்வொரு பொருளுடனும் இணைந்திருக்கின்றது? என்று திரும்பக் கேட்டால் விடை சொல்லத் தெரியாது திகைக்கின்றார்கள். இனி, பிரபஞ்ச இயக்கத்திற்கும் கடவுளுக்கும் தொடர்பு உண்டு என்று ஒப்புக் கொள்பவர்கள் அதேசமயம் கடவுள் ஏதோ ஓரிடத்தில் இருப்பதாக நம்புவதால் பிரபஞ்ச இயக்கத்திற்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை இப்படியாகச் சொல்லுகின்றார்கள். ''அவர் ஆகாயத்தில் குறித்த இடத்திற்தானிருக்கின்றார்'' அங்கிருந்தே அவரின் சக்தி பிரபஞ்சமெல்லாம் பரவி பிரபஞ்சத்தை இயக்குகின்றது. இப்போது இவர்களைக் கேட்கின்றோம். ''கடவுளும் அவரின் சக்தியும் வேறு, வேறா? ஒன்றேதானா? என்று அச்சக்தி கடவுளிடம் வேறானதென்றால் கடவுள் கலப்படமானவர் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டி வரும். கடவுளும் சக்தியும் ஒன்றேதானென்றால் அவர்தன் சக்தியையும் பிரபஞ்சத்திற் செலுத்திக் கொண்டிருந்தால் ஒருநாளைக்கு இல்லாமற்போய்விடுவார்.

இப்படி மக்களிடையே உண்மைக்கும், அறிவுக்கும் பொருந்தாத பல கொள்கைகளைச் சமயவாதிகள் நிலைபெறச் செய்து விட்டார்கள். இத்தவறான நம்பிக்கைகளிலிருந்து மீள முடியாதபடி அவர்களைச் சமயக் கட்டுப்பாட்டிற்குள் கட்டுப்படுத்தி வைத்து விட்டார்கள். இவ்வமைப்பில் ''கடவுள் எங்கே இருக்கிறார் என்பதற்கு ஆன்மாக்களின் அனுபவவிடையைச் சொல்வோம்.

முதலில் ஒரு தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், ஒரு பொருள் இயங்குகின்றது என்றால் அந்தப் பொருளை இயக்கும் சக்தி அந்தப் பொருளுக்கு வெளியில் இருக்க முடியாது. அது அந்தப் பொருளுக்குள்ளேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாக வேண்டும். மோட்டாரை இயக்கும் பெற்றோலிய சக்தி மோட்டாரிலேயே இருந்தாக வேண்டும். மின் ரயிலை இயக்கும் மின் சக்தி, மின் ரயிலின் இயந்திரத்தில் இருக்க வேண்டும். மின் விளக்கில் மின் விசிறியில், மற்றும் மின் சாதனங்களனைத்திலும் மின்சக்தியிருக்க வேண்டும். மின் சக்தி எங்கேயோ இருக்க மின் விளக்கு எரிகின்றது. மின் விசிறி சுழல்கின்றது என்று சொல்ல முடியாது; காரியத்தை நடத்தும் காரணம் காரியத்திலேயே இருக்க வேண்டும். இன்னும் இப்படியே நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் எங்கெல்லாம் இயக்கமிருக்கிறதோ அங்கெல்லாம் அந்த இயக்கத்திற்கு ஆதாரமான சக்தி இருக்கின்றதென்பதை எதிலெல்லாம் இயக்கமிருக்கின்றதோ அதிலெல்லாம் அவைகளை இயக்கும் சக்தி இருக்க வேண்டுமென்பதை அறிந்து கொள்வீர்கள். பிரபஞ்சம் முழுதும் இயங்கிக் கொண்டிருக்கிறதென்பதை இப்போது எல்லோரும் அறிவார்கள். அணுக்கள் முதல் அனைத்திலும் இயக்கமிருக்கின்றது. வைரம் போன்ற கடினப் பொருள்களுக்குள்ளும் இயக்கம் (Molecularvibration) இருக்கின்றது.

பிரபஞ்சத்தில் பல்வேறு சக்திகள், பலவகைகளில் பல பொருட்களை இயக்கிக் கொண்டிருந்தாலும் எல்லாச் சக்திகளும் மூலத்தின் ஒரே சக்தியின் திரிபுகள், அலைவேக வேற்றுமைகள் என விஞ்ஞானம் தெளிவாக மெய்ப்பித்திருக்கின்றது. ஒளி,ஒலி, மின்சாரம், காந்தம், அணு சக்தி, உயிர்சக்தி, மனச்சக்தி போன்ற உண்மையில் வெவ்வேறு சக்திகளல்ல, ஒரே சக்தியின் வேக வேற்றுமைகளே. அதனால்தான் ஒரு சக்தியின் அலை வேகத்தை மாற்றுவதன் மூலம் அதை வேறு சக்தியாக செயற்படச் செய்யலாமென விஞ்ஞானம் கூறுகின்றது. இப்போது அம்மூலச் சக்தி எதுவென ஆராயும் போது அணு விஞ்ஞானி ஐன்ஸ்டின் கண்ட முடிவு இதுதான் ''உயிரினங்களில் செயல்படும் அறிவுச்சக்தி போன்றதோர் சக்தி பிரபஞ்ச முழுதும் நிறைந்திருக்கின்றது. இதனால் இதைப் பிரபஞ்ச அறிவு (Cosmic Intelligence) என்று சொல்லுகிறார்கள்.

கடவுளை ஆன்மீகர்கள் சக்தியாகத்தான் கண்டிருக்கின்றார்கள். சக்தியால்தான் பிரபஞ்சம் இயங்கிவருகின்றது. ஆகவே கடவுள் பிரபஞ்சத்தின் எந்தவொரு இடத்திலும் நிலைகொண்டிருக்கவில்லை. அவர் அங்கிங்கெனாதபடி எங்கும், எதிலும் உடலில், மனதில், அறிவில் ஆன்மாவில் அனைத்திலும் அவர் நிறைந்திருக்கின்றார். அதனால்தான் ஆன்மீகர்கள் கடவுளைத் தமக்கு வெளியிற் தேடிக் கொண்டிருக்காமல், தனக்குள்ளாகவே தேடிக் கண்டு களிக்கின்றார்கள். கடவுள் சர்வ வியாபகர் எங்கும், எதிலும் நிறைந்தவர், தனி ஒரு இடம் அவருக்குக் கிடையாது.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவும் சமூக அமைப்பும்

மனிதன் ஒரு சமூகப் பிராணியாக கருதப்படுகிறான். பல விலங்கினங்களும் சமூக வாழ்வை நடத்துகின்றன. சமூகத்தின் அமைப்பு யாது? ''மனிதன் தனக்கென எப்போதும் வாழக் கூடாது. பிறர்க்கெனவே அவன் வாழ வேண்டும் என எல்லா மத நீதி நூல்களும் கூறுகின்றன. ஏன் ஒவ்வொரு மனிதனும் பிறருடன் கலந்து வாழ்ந்து பிறருக்கு உதவும் உபதேசமும் செய்ய வேண்டும். மனிதன் தனக்கெனவே ஏன் வாழக் கூடாது? சமூகத்தில் இணைந்தபடி சமூக மக்களால் பலருக்குத் தீங்கிழைப்பதையே நோக்காகக் கொண்டிருப்பவர்கள் பலர் இல்லையா? வேதாந்திகள் எல்லா மனிதர்களும் தம் தோற்றுவாயில் வேறுபட்டவர்களல்லர். ஆகவே மற்றவரைத் தன் போலவே கருதி மனிதன் வாழவேண்டும் என்கின்றனர். இத்தகைய படிப்பனைகளின் அடிப்படையில் அமைந்துள்ள உண்மை யாது?

இவ்வுண்மையை நன்கறிந்துகொள்ள உயிரினங்களனைத்தும் முதலில் எங்கிருந்து தோன்றின என்பதற்கு விடையாக யோகியர் என்ன கூறுகின்றனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் விளக்கப்படி பல்வேறு உலோகங்களில் பல படிகளில் பரிணாமமடைந்து கொண்டிருக்கும் உயிரினங்களனைத்தும் தனிப்பட்டவையல்ல. அவையனைத்தும ஒரே அண்ட உயிரின் சிறு பகுதிகள். படைப்பின் முதலில் இருந்தது ஒரே பெரிய ஆன்மா தான். படைப்புக்காக அவ்வொன்று தன்னைப் பலதாக பகுத்துக் கொள்கிறது. ஒரு பெரிய தொட்டியிலிருக்கும் நீரை பல பாத்திரங்களில் ஊற்றினால் ஒவ்வொரு பாத்திரத்திலிருக்கும் நீரும் பாத்திரத்தின் வடிவத்தில் அடங்கியிருக்கும் பாத்திர வடிவங்களால் வெவ்வேறு வடிவங்களாகக் காணப்பட்டாலும் எல்லாப் பாத்திர நீரும் தொட்டி நீரே. ஆதுபோல் ஆன்மா உண்மையில் ஒன்றே. ஆகவே தன்னைப் பலதாகப் பகுத்துக் கொண்ட அச்சிறு பகுதிகள் தாம் வேறு வேறு என்ற கருத்துடன் இயற்கை வேகத்தில் சிக்குண்டதன் பயனாகத் தனித்தனிப் பரிணாமங்களை அடைந்து கொண்டிருக்கின்றன. இயற்கையின் கவசமே ஆன்மாக்களை வேறுபடுத்திக் காட்டுகிறது. சில நிமிடங்களுக்கு, இயற்கைக் காரணங்களனைத்தும் அழிந்து விட்டால் அவைகளுக்குள் அடங்கிக்கிடந்த ஆன்மாக்கள் எல்லாம் இணைந்து பெரும் ஆன்மாவாக மாறிவிடும்; வேற்றுமை மறைந்து விடும்.

சமூக அமைப்பு உயிரினங்களில் மட்டுமில்லை. உயிரற்றவையெனக் கருதப்படும் கல், மண், உலோக இனங்களிலும் அவ்வமைப்பு இருக்கிறது. அணுக்களெல்லாம் மின் பருக்கைகளாயிருந்தும் சில அணுக்கள் வேறு சில அணுக்களுடன் கலந்துறவாடவும் சில அணுக்கள் வேறு சிலவற்றுடன் ஒதுங்கி நிற்கவுமான சமூகத்தன்மையை அவைகளிடையே காண்கிறோம்.

எந்தவொரு ஆன்மாவும் மற்றொரு ஆன்மாவின் உதவியின்றி தன் பரிணாமத்தை நடத்த முடியாதாகையால் தான் சமூக அமைப்பு இன்றியமையாததாகிறது. முதன் முதலில் ஒரு ஆன்மா தன்னைக் கீழ்ப் பரிணாமத்துக்குட்படச் செய்துகொள்வதற்கும் வேறொரு ஆன்மாவின் உதவியை நாடியே நிற்கிறது. மற்றொரு ஆன்மாவின் உதவியின்றி எந்த ஆன்மாவும் உயரவோ தாழவோ முடியாது.

பூவுலகிலும் எந்த மனிதனும் தனித்து வாழ முடியாது. தன் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் தனியொரு மனிதன் தானே தேடிக் கொள்ள முடியாது. பலரின் ஒத்துழைப்பின் பேரில்தான் ஒரு வீடு அமையும். பலரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பால் தான் ஒரு கடை தயாராகும். ஒவ்வொரு வேலையும் முடிவடைய சிலரின் ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. உயிரற்ற பொருள்களிலும் இந்நிலையைக் காண்கிறோம். ஒரு கல் மணலாக மாற மழையின் உதவி தேவைப்படுகிறது. ஆக உயிருள்ளவை இல்லா தவை அனைத்தும் உயரவோ, தாழவோ பிறி தொன்றின் உதவியை நாடியேயாக வேண்டும் என்பது அண்டவிதி.

இவ்விதியின் ஆழத்தில் ஒரு பேருண்மை ஆழ்ந்திருக்கின்றது. அதாவது அண்டத்தில் எந்த வொரு சிறு மாறுதல் நடைபெற வேண்டுமானா லும் அதற்கு இரு காரணங்கள் வேண்டும். இவ்விரண்டையும் தனம்? என்றோ ஆண், பெண் என்றோ, ஜடம் சக்தி என்றோ, ஆற்றல் என்றோ பொருள் கொள்ளலாம். ஆதியிலிருந்தது ஒவ்வொன்றும் முத லில் தன்னை இரண்டாகப் பகுத்து நின்றது. இவ்விரண்டின் கலப்பாலேயே எண்ணற்ற பொருள்கள் தோன்றின. அநேக மதங்களில் இத்தத்துவம் கதை வடிவில் கூறப்படுகிறது. ஆதியில் ஆண், பெண் என்று இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி கூடி இவ்வண்டமனைத் தையும் பெற்றார்கள் என அக்கதைகளில் கூறப்பட்டுள்ளது. தோற்றமே இரண்டின் சேர்க்கையாகக் கொண்ட ஆன்மாக்கள் ஒரு போதும் தன்னந்தனியாய் எவ்வித பரிணாமத் தையும் அடைய முடியாது. எதற்கும் ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவின் உதவியை நாடியே நிற்கிறது.

ஒவ்வொரு ஆன்மாவும் கீழுக்கு வரும்போது ரினச் சக்தியையோ தனச் சக்தியையோ தன் னில் அதிகமாய்க் கொண்டு வருகிறது. பரிணா மம் அதிகம் கொண்ட ஆன்மா தனம் அதிகம் கொண்ட ஆன்மாவின் உதவியால்தான் எதை யும் அடைய முடியும். அப்படியே தனம் அதிகம் கொண்ட ஆன்மாவின் உதவியால் தான் எதையும் பெற முடியும். ஜட நிலையில் ரினம் அதிகம் கொண்டது பெண்ணாகவும், தனம் அதிகம் கொண்டது ஆணாகவும் பிறக் கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாண சோதி

எல்லா மதங்களிலும் ஏதாவதொரு வகையில் நெருப்பு தெய்வீகத்தன்மையுடையதாகக் கருதப் பட்டு வந்திருக்கிறது. கிறிஸ்தவ ஆலயங்களில் மெழுகுதிரி கொளுத்துதல், இஸ்லாமிய மசூதிக ளில் சாம்பிராணித் தூபமிடல், பார்சிகளில் நெருப்பு வணக்கம். ஹிந்துக்களின் வேள்விகள் யாவும் இதற்குச் சான்றுகளாகும். கடவுளை ஆதி காரணமாகப் பரம் பொருள் ஜோதி வடிவமே என்கின்றனர். வேதங்கள் இருளில் இருந்து ஒளி தோன்றியது என கூறுகின்றன. இவையனைத் தும் எதைக் குறிக்கின்றன? இதற்கு விடை காணுமுன் நாம் ஓர் விஞ்ஞான விதியை அறிந்து கொள்வோம். காணும் உலகப் பொருட்களனைத் தும் அணுக்களை மின்களாகப் பிரித்து விடலாம். அணுவைப் பிளக்கும் போது அதனுள் உறைந்தி ருக்கும் பேராற்றல் வெளிப்படுகின்றது. அணுவுக் குள் உறைந்திருந்து வெளிப்படும் இவ்வாற்றல் யாது? உலகப் பொருள்களனைத்தினையும் அணு வாக்கி அவைகளைச் சிதைத்தால் சூரியனிலும் பலகோடி மடங்கு அதிகமான ஒளியும் சூடும் வெளிப்படும்.

இப்போது நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஆன்மீகப் பார்வையில் ஆராய்வோம். ஆன்ம ஞானிகள் அணுக்களை மின்களாகப் பாவிக்கலா மென்பதை அறிந்திருத்தலன்றி அம்மின்னிகளை மேலும் நுண்பருக்களாகப் பகுக்க முடியுமென்றும் இப்படிப் பகுத்துக் கொண்டே போனால் ஒரு நுண் பருக்கை எனக் கூறுவதற்கு யாதும் இல்லா மல் ஒளிமட்டும் மிஞ்சுமென்றும் இவ்வொளி ஆகாயப் பருக்கையுமல்லவென்றும் அறிந்திருந் தார்கள். ஆகவே ஆன்ம ஞானப்படி அண்டத்தின் மூலஜோதியின் திரிபுகளே அண்டப் பொருள்கள னைத்தும் இம்மூல ஜோதியை தெய்வ ஜோதி, பரஞ்ஜோதி, நிர்வாண ஜோதி என பல பெயர்க ளால் குறித்தும் வந்தனர்.

எல்லாம் ஜோதியே, ஜோதியே எல்லாம் என்ற உண்மை மேற் சொன்ன கூற்றுகளால் நமக்கு விளங்கும். நீரும் பனிக்கட்டியும் ஒரே கணப்பொருள் அவைகளின் உபயோகம் வேறு வேறானது. இதே போல் எல்லாம் அச்சோதி யின் திரிபேயானாலும் எல்லாமும் அச்சோதியி லிருந்து மாறுபடுகின்றன. ஏழு உலகங்கள், அச்சோதியின் ஏழுவகைத் திரிபு நிலைகளே யாம்.

தற்போதைய மனிதனின் உணர்வு ஜட நிலையில் மட்டும் இயங்குவதாயிருக்கிறது. கீழ்ப்பட்ட இனங்களின் உணர்வு தாமாகவே இடத்தை இயக்கக்கூடிய நிலையில் வளர்ச்சிய டையவில்லை. அவைகளின் உணர்வு அதைக் கவர்ந்திழுக்கும் சூக்கும கவசங்களுக்குட்படக் கூடியதாயிருக்கிறது. மனிதன் சில யோகப் பயிற்சிகளால் ஜடத்தில் மட்டும் செயல்படுவ தையும் உணர்வை மற்றையசூக்குமக் கவசங் ளில் செயல்படச் செய்து கொள்ள முடியும் என்பதையும் நாமறிவோம். இந்நிலை ஒரே சமயம் தன் உணர்வை அண்டத்தில் எல்லா நிலைகளிலும் செயல்படச் செய்யப்பெறல் என்பதாகும்.

ஒருவனின் உணர்வு ஜடத்தில் செயல்படும் போது அவன் ஜடத்தின் அமைப்பு, இயக்கங் களை அறிந்து கொள்கிறான். ஆகவே ஒருவ னின் உணர்வு அண்டத்தில் எல்லா நிலைகளி லும் செயல்படும் போது அவன் அண்டம் முழுவதின் அமைப்பு செயல் முறைகளைப் பிரத்தியேகமாய் அறிந்து கொள்கிறான். இந்நி லையில் அவன் வெறும் ஞானம் பரிநிர்வாண நிலையின் அனுபவத்தை மனித மொழிகளால் விளக்க முடியாதாயினும் இக்கட்டுரையில் கூடுமானவரை அதை விளக்க முயற்சிக்கி றோம். நம் உணர்வு பிராணநிலைவரை விரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகும் போது ஜடப்பொருள்களனைத்திலும் அவைகளின் பிராண இயக்கம் காணப்படுவ தோடு பிராணநிலையின் அமைப்பையும் வாசிக ளையும் நேராகக் காண்போம். நம் உணர்வு மேலும் விரிந்து மனநிலைவரை பரவி செயல்ப டும் போது ஜடப் பொருள்களெல்லாம் கனப் பொருளாகவே இருக்கக் காண்பதன்றி, மாயை உலகங்களான சுவர்க்க தேவலோகங்களின் நேர் முக தரிசனம் உண்டாகின்றது. மேலும் உணர்வு விரிந்து நிர்வாணநிலையைத் தொடும் போது அண்டபிண்ட சராசரங்களில் மூலத்தின் நேர் தொடர்பு உண்டாகிறது. இப்போது நாம் உணர்வ தென்ன நம் அனுபவம் யாது?

நம் முன் பொருள் என்று சொல்லக்கூடிய யாதும் இல்லை. எங்கும் சார்ந்த, அருட்சோதி யைத் தான் அனுபவிக்கிறோம். உணர்கிறோம். நாமும் அவ்வானந்தக் கடலில் மூழ்கியிருக்கி றோம். நாம் சோதியைக் காண்பவராயிருந்தும் நாம் காண்பவர்களினின்றும் வேறானவர்க ளென்ற பாவனையில்லை. நாமே அச்சோதியாக வும் அதைக் காண்பவராகவும் இருக்கக் காண் கிறோம். நாமே அச்சோதி, அச்சோதியே நாம் அச்சோதியின் பிரகாசத்தன்மையை கூறவோ நினைக்கவோ முடியாது உபநிடதம் இப்படி கூறிவிட்டது. சூரியன் அதன் முன் பிரகாசிக் காது. சந்திரனும், நட்சத்திரங்களும் அதன் முன் ஒளியிழக்கும் மின்னலும் இடியும் அதற்கு நிகரில்லாதனவாகும். ஜடவொளியைப் பற்றி என்னவென்பது?


நிர்வாண ஜோதி பரம் பொருளின் கிரணம். ஆகவே அதுபரமனின் மனித கிரணத்தைத் தொட்டால் அவனுடைய உத்வேகங்கள் நினைப்புகள் அனைத்தையும் நம்முடையவை யவை போல் உணர்வோம். இதே போல் நிர்வாண சோதியைத் தொடும்போது இறைவ னின் தன்மை குணங்கள் அனைத்தும் இனி நம்மில் நாமாக இருக்க உணரப் பெறுவோம். அவனே நான்; நானே அவன்! யோக சாதனை யால் இப்பிறவியிலேயே அப்பேரானந்தத்தை அனுபவிக்கலாம்.

சுபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா



ஸப்த ரிஷிகளில் ஒருவரால் ஆட்கொள்ளப்பட்டு, காயத்ரி தீக்ஷை ஏற்று, சித்தாஸ்ரமத்தில் (ஹிமாலயா) பல்லாண்டு காலம் காயத்ரீ சாதனை செய்து, அன்னை காயத்ரி தேவியின் தரிசனம் பெற்ற ஞானி. காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகள் இம்மகானிடம் நேர் தொடர்பு கொண்டு ஆசி பெற்றவர்.

ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ்



ஆந்திர பிரதேசத்தில் 12 வயது முதல் 12 வருடங்கள் கடும் தவமியற்றியவர். புனித நர்மதா நதியில் தனக்குக் கிடைத்த ஜோதிர் லிங்கத்தை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் 1978ம் ஆண்டு பிரதிஷ்டை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரிஷி தயானந்தர்

(ஆர்ய சமாஜத்தின் தலைவர்)

காயத்ரி மகா சக்திவாய்ந்தது, காயத்ரியை ஜபிப்பவன் மனித உடலில் நடமாடும் மானிட தெய்வமாவான்.



ஸ்ரீ அரவிந்தர்

வேத்த தாயாகிய காயத்ரியை ஜபித்து சித்தி பெற்றவன், உலகத்தையே படைக்கும் ஆற்றலைப் பெறுவான்.



சுவாமி சிவானந்தர்

சூர்ய சக்தியாம் ஸ்ரீ காயத்ரியை ஜெபிப்பவன் சூர்யனைப் போன்று சக்தியும், பிரகாசமுடையவனாகி மனித உருவில் நடமாடும் மானிட தெய்வமாவான். ஸ்ரீ காயத்ரி பீடத்திற்கு பரிபூர்ண ஆசியை வழங்கியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை ஞானத் திறவுகோல்

சமய நெறியின் மயக்கத்திலே மயங்கி கிடக்கும் மக்களில் எப்படியோ தவறான பல நம்பிக்கைகள் வேரூன்றியிருக்கின்றன. அவைகளில் ஒன்றைப் பற்றி மட்டும் ஆராய்வோம். "இதோ முருகன் இதோ கண்ணன்" என்று கடவுளைப் பகுத்த றிந்து கொள்வது போல் "இதோ மகான், இதோ யோகி இவர்தான் சாது, அவர்தான் சந்நியாசி" என்று பகுத்தறியும் வழிகளைக் கண்டு பிடித்தி ருந்தார்கள் சமயவாதிகள். உண்மையை உணரு முன் நானும் இப்படித்தான் பெரியோர்களைக் கண்டுவந்தேன்

சாது, சந்நியாசி, பக்தன், யோகி என்பவர்கள் உடையாலோ, உண்ணல் முதலிய வாழ்க்கை முறைகளாலோ, மற்றவர்களைவிட மாறுபட்டு இருக்க வேண்டியது இல்லை, இருக்கவும் கூடாது. பாரத நாட்டில் வாழ்ந்த யோகிகளும், சித்தர்களும் எந்த வகையிலும் மற்ற மக்களை விட மாறுபட்டு இருக்கவில்லை. என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்ற. சமய நெறி தோன்றுவ தற்கு முன்பாக இவ்வுலகில் வாழ்ந்த பக்தர்களும், பெரியோர்களும் சதாரண மக்களைப் போல் தான் வாழ்ந்தார்கள் என்பதையாரும் மறுக்க முடியாது, சமய நெறிகள் வளர்ந்த பின்தான் ஒவ்வொருவ ரும் தன்னுடைய சமயத்தைக் காட்டச் சமயச் சின்னங்களை அணியலானார்கள். அதைத் தொடர்ந்து தான் எண்ணற்ற வேஷங்கள் வெளி யாயின.

### உடலுள் உறையும் ஆன்மா

பக்தி, சோகம், தவம் மனித உடலின் உள் உறையும் ஆன்மாவைக் கவர்ந்திழுக்கும் அறி யாமை அழுக்கை அகற்றவும், அணுவான ஆண் டவனின் அழுக்கை அகற்றவும், அணுவான ஆண்டவனின் அருளைப் பெறவும்தான் செய்யப் படுகின்றன. அறிவை அறியாமையில் இருத்திச் செயல்படுவது உடல். உடல் அநித்தியம், சாதனைகள் நித்தியத்தை நாடிச் செய்யப்படு பவை. யோகம் முதலான் சாதனைகள் உடல். உடல் அநித்தியம், சாதனைகள் நித்தியத்தை நாடிச் செய்யப்படுபவை. யோகம் முதலான சாதனைகள் உடலால் செய்யப்படுபவை யல்ல. அவை உள்ளத்தால் செய்யப்படுபவை. உடலை மறந்து உணர்வை உள்முகப்படுத்தும் சாதனையைச் செய்யும் ஒரு சாதகனின் நினைவு உடலை அலங்காரப்படுத்துவதில் எப்படி ஈடுபட முடியும்?

உடலில் சாதுத்தன்மை இருக்க முடியாது. உள்ளத்தில் தான் சாதுத்தன்மை வளரவேண் டும். உடலில் பக்தி வராது. உள்ளத்தில் தான் பக்தி வர வேண்டும். ஆயினும் ஆரோக்கியமா கவும் பலமாகவும் நீண்ட நாள் இளமையோடு இருக்கக் கூடியதாகச் செய்து கொள்ளலாம். ஆனால் இதனால் எல்லாம் உள்ளத்தில் பற்றி யிருக்கும் மாயை ஓர் இம்மியளவாவது அகன்று விடாது.

### காவி ஆடையின் பயன்

ஒருவன் விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து பத்து விரல்களில் மோதிரங்களையும் கழுத்தில் பெரிய பொன் சங்கிலியையும் போட் டுக் கொண்டு எல்லோர் முன்னிலையிலும் திரிகிறான் என்றால் என்ன பொருள்? அவன் தன் செல்வச் செருக்கை எல்லோருக்கும் விளம்பரப்படுத்துகிறான் என்பதுதானே பொருள்! ஒரு காவலனின் உடை அவன் பொறுப்பைக் காட்டுகிறது. ஒரு வழக்கறிஞ னின் உடை அவன் தொழிலைக் காட்டுகிறது. நான் கேட்கிறன், சாதுக்களும் சந்நியாசிகளும் இதுபோல் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டுமா? உடையால் ஒருவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கறிஞன் என்று தெரிந்து கொண்டு ஒரு வழக்கை ஒப்படைக்கலாம். காவல்காரன் என்று தெரிந்து கொண்டு பாதுகாப்பைக் கேட்கலாம். காவியாடைகளைக் கண்டதும் ஆன்மரகசியத்தைக் கேட்கலாமா? காவியாடை தரித்தவர்கள் எல்லோரும் இறையின்பத்தைத் தொட்டு அனுபவித்தவர்களா? அவர்களால் அருட்தாகம் கொண்ட பக்தர்களை வழிநடத்தி, ஆன்ம இன்பம் பெறச் செய்ய முடியுமா? காவியாடைகள் செய்யும் திருவிளையாடல்களைப் பற்றி அடிக்கடி நாம் பத்திரிகைகளில் படிக்கவில்லையா?

ஆகவே, பக்தி, யோகம் போன்ற சாதனைகளுக்கும் உடல் வேஷங்களுக்கும் ஒரு பொருத்தமும் இல்லை. வேடங்களைக் கொண்டும் நடிப்பைக் கொண்டும் ஒரு பக்தனை அறிய முற்படுபவர்கள் தவறாமல் ஏமாந்து போய் விடுவார்கள். பக்தி, யோகம், எல்லாம் உணர்வால் செய்யப்படுபவை. அதற்கு உடலில் எந்த மாறுதல்களையும் செய்யத் தேவையில்லை. உடையால், வேஷத்தால் நடிப்பால் தன்னைப் பெரியவன் என்று காட்டுபவன் மக்களை ஏமாற்றுபவன்.

## உள்ளத்துறவு வாழ்க்கை

அக்காலத்தில் வாழ்ந்த மகரிஷிகள், மனைவி மக்களுடன், தூய வெண்ணிற ஆடையணிந்து மக்கள் மத்தியில் பர்ணசாலைகளில் தான் வாழ்ந்தார்கள். இந்திரனையே சபிக்கும் தவ ஆற்றலைப் பெற்றிருந்தும் கூட அவர்கள் தங்களை வேஷத் தாலோ நடிப்பாலோ உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்ளவில்லை.உள்ளத்துறவு பூண்டு வாழ்ந்தார்கள். உடையைத் துறந்து உள்ளத்தில் உலக இன்பங்களை நினைத்து வாழவில்லை. இதுதான் பழைய மரபு. இதுதான் யோகிகளின் ரிஷிகளின் வாழ்க்கை முறை. ரிஷி பாரம் பரியத்தைப் பின்பற்றி, மனித அறிவுக்கும் சிந்தனைகளுக்கும் எட்டாத விஞ்ஞானிகளும் புரிந்து கொள்ள முடியாத தவ ஆற்றலை பெற்ற மகான்கள் இன்னும் உலகின் பலபாகங்களில் மக்கள் மத்தியில் தாமரையிலைத் தண்ணீர் போல் வாழ்ந்தும், அதில் ஒட்டாதபடி வாழ்ந்து தம்மை நாடிவரும் பக்தர்களுக்கு ஆன்ம வித்தையைப் புகட்டியும் வருகிறார்கள். இவர்களைக் குப்த யோகிகள் என்று சொல்லாம்.

பக்தர்களே! அடைய வேண்டிய பொருள் ஒன்று உண்டு. அது ஆண்டவனின் திருவடி, அதை அடைய வேண்டும் என்ற உண்மை ஆர்வம் உங்கள் உள்ளத்தில் உதயமானால் அதை அடைய வழி காட்டும், குப்த யோகிகளின் தொடர்பு உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். தட்டுங்கள்! அவர்களின் ஞானக்கதவு திறக்கப்படும். கேளுங்கள்! உண்மை ஞானத் திறவுகோல் உங்களுக்குக் கொடுக்கப்படும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுன இரகசியம்

அனைத்துயிர்களையும் படைத்த ஆண்டவன் அவைகளை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவைகளாகப் படைக்கவில்லை. காட்டில் வாழும் பாம்புகளுக்கும் கொடிய விலங்குகளுக்கும் நாட்டில் வாழும் மனிதருக்கும் வாழ்க்கையில் தொடர்பிருக்கிறது. மனிதன் அசுத்தப்படுத்தும் விஷமிக்கச் செய்யும் வாயு மண்டலத்தை விஷப்பாம்புகளின், விஷ ஆவி, கொடிய விலங்குகளின் மூச்சு சுத்தம் செய்கிறது. தாவரங்கள் மனிதனுக்கும், மற்ற உயிர்களுக்கும் உணவாக ஆவதுமட்டுமின்றி உயிர்கள் வெளிவிடும் கெட்ட ஆவியை ஏற்றுக் கொண்டு, அவைகளுக்குத் தேவையான நல்ல ஆவியை வெளிவிடுகின்றன என்பதை அனைவரும் அறிவோம். மலைகள், கடல்கள், போன்ற அசேதனப் பொருள்களும் பருவ மாறுதல்களின் வழியாக உயிர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றன. வானத்தின் மிக உயரத்திலிருக்கும் கிரகங்களும், நட்சத்திரங்களும் மண்ணுலக உயிர்களின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டே இருக்கின்றன. மனிதர்களால் மற்ற உயிர்களும், மற்ற உயிர்களால் மனிதர்களும், சேதனங்களால் அசேதனங்களும், அசேதனங்களால் சேதனங்களும் பாதிக்கப்படக்கூடிய நிலையில்தான் சிருஷ்டியமைந்திருக்கிறது. மனிதன் தனக்கும், பிற உயிர்கட்கும் துன்பத்தை விளைவிக்கும் காரியங்களைச் செய்யும்போது, மற்ற உயிர்களும் தாவரங்களும் அப்படிச் செய்ய வேண்டாமெனச் சொல்லித் தடுக்கத் தம்மாலான முயற்சியைச் செய்யுமல்லவா? இதுவே சகுனத்தின் பீடிகைத் தத்துவம்.

மனிதனை விட சில பறவைகளும், விலங்குகளும் அதிகமான ஆன்ம அறிவைப் பெற்றிருக்கின்றன. பருந்து வெகு உயரத்தில் பறந்தபடியே பூமியிலுள்ள சிறு பொருளையும் நன்றாகப் பார்க்கும். அதன் பார்வைக்கு எந்தப் பூதக் கண்ணாடியும் நிகராகாது. ஒரு சிறு குருவி கட்டும் கூட்டைப்போல் மனிதன் கட்ட வேண்டுமானால் அவனுக்கு மூன்று வருடங்கள் பயிற்சி தேவைப்படும். நாயின் மோப்பம் பிடிக்கும் சக்தியை அறியாதவர்கள் யார்? ஒரு முறை நாய் ஒரு பாதையில் சென்றால் மறு முறை அதை மறக்கவே மறக்காது. எஜமானனின் விரலசைவில் குரங்குகள் எப்படியெல்லாம் நடிக்கின்றன. போர்களத்தில் பகைவர்கள் வருவதை குதிரைகள் எஜமானருக்கு ஜாடைகளால் அறிவிக்கின்றன! தன்னைப் பிடிக்க வருபவனையே ஏமாற்ற நரி இறந்தது போல் விழுந்து கிடந்து அவன் விட்டுச் சென்றதும் எழுந்து ஓடுகிறது. கிளிகள் மனிதன் கற்றுக்கொடுப்பதை அப்படியே சொல்கின்றன. புறாக்கள் குறித்த இடத்தை நோக்கி திசை தவறாமல் பறந்து செல்கின்றன. ஒரு இடத்தில் பசு போன்ற ஒரு ஜீவன் இறந்து கிடந்தால் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள காகங்கள் அதைத் தெரிந்து கொண்டு பறந்து வந்து உணவாகக் கொள்கின்றன. குயில் தன் முட்டைகளை காக்கையின் கூட்டில் வைத்து குஞ்சுகளாக்கிக் கொள்கின்றது. சூரியன் உதிக்கப்போவதை மயில்கள் தோகை விரித்தாடித் தெரிவிக்கின்றன. இது போல் இன்னும் பல நூற்றுக்கணக்கான உதாரணங்களால் பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் மனிதனுக்கு இல்லாத ஆன்ம அறிவு இருக்கிறதென்பதை நிரூபிக்கலாம்.

தாவரங்களிலும் இப்படிப் பல்வேறு சக்திகள் உறைந்திருக்கின்றன. சில தாவரங்களைத் தொட்டதும் உடலில் நோய் வரும். காஞ்சோன்றியைத் தொட்டதும் நமைச்சல் எடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா. சிறியாநங்கை போன்ற சில மூலி கைகளின் ரசத்தைக் கையில் தடவிக் கொண்டு எந்த விஷக்கிருமிகளையும் கையால் பற்றலாம். இந்தக் கையால் தடவிக் கொடுக்க விஷக்கடிகள் குணமாகும். அரசமர மும், ஆலமரமும் சேர்ந்திருக்குமிடத்தில் வெளியாகும் ஆவி மலட்டுத் தனத்தைக் குணப்படுத்தும். விரலால் தொட்ட மாத்திரத் தில் இலைகளை மூடி வாடியது போல் காணப்படும் தொட்டாச்சிணுங்கி, உயிரினங்க ளின் நிழல் பட்டவுடன் வாடியது போலாகிவி டும் நிழல்வாடி. நீரில் கையை வைத்தால் தூரத்திலிருந்து சோர்வடையும் நீரால்வாடி எப் போதும் நீரைச்சிந்தி அழுதபடியே இருக்கும் ருதந்தி (அழுகண்ணி) மனிதனைப் பார்த்தவு டன் பூமிக்கடியில் பதுங்கிக் கொள்ளும் நிலம்பு றண்டி, கீழே வைத்தால்மரத்தின் மேலே ஏறிக் கொள்ளும், ஏரழிஞ்சில் காய்கள் தனக்குள் வரும் உயிரினங்களின் இரத்தத்தைக் குடித்து, மாமிசத்தை உண்டு எலும்பை எறிந்து விடும். ஆட்கொல்லி, சகல விஷங்களையும் முறிக் கும் நஞ்சு முறித்தான், கரைந்துபோன சதையை வளரவைக்கும் மாரம்சரோகிணி. போதையை உண்டாக்கும் தர்ப்பை. மனத் தைக் கெடுக்கும் ஊமத்தை. துளசி முதலிய தெய்வதருக்களை வீட்டில் வைத்து வணங்கி வருபவர்கள் இதன்மூலம் நமக்கு எதிர்பாராமல் வரப்போகும் நல்லது, கெட்டதை

அறிந்து கொள்ளலாம். திடுமென இவை காரணம் தெரியாமல் நன்றாகச் செழித்து பசுமையுடன் காணப்பட்டால் வீட்டிலுள்ளவர் களுக்கு எதிர்பாரா நன்மை வரும். திடுமென சோர்ந்து விட்டால் எதிர்பாராத தீமை வருவது நிச்சயம். இந்த அடிப்படையில் தான் கண்ண கியை இடைச்சி வீட்டில் விட்டுச் சென்ற கோவலன் மாங்காய், மல்லிகை முதலியவைக ளைச் சாட்சியாக வைத்துவிட்டுப் போனான். இதுபோன்ற கதைகள் உலகின் பல மதங்களி லும் காணக் கூடியதாக இருக்கிறது.

மேற்சொன்ன உண்மைகளால் நாம் புரிந்து கொள்ள வேண்டியது தாவரங்களுக்கும், பற வைகளுக்கும், விலங்குகளுக்கும், ஒருவகை ஆன்ம சக்தியிருக்கிறது. இவைகளுக்கும், மனி தனுக்கும் வாழ்க்கைத் தொடர்பு இருப்பதால், தம்மை நெருங்கிய மனிதர்களுக்கு வரப்போ கும் நன்மை தீமைகளை இவை முன்கூட்டியே அறிந்து கொண்டு, தத்தமக்குரிய ஷேட்டை கள் மூலம் அதை மனிதருக்கு அறிவிக்கின் றன. இதுவே சகுனம். சகுனங்களில் உண்மை உண்டென்பதை மேற்சொன்னவை நிரூபிக் கும். பூனை ஒரு வீட்டில் குட்டிகள் போட்டி ருந்து திடுமென அது தன்குட்டிகளை அவசர அவசரமாக வேறிடத்துக்கு கொண்டு போய் விட்டால், விரைவில் அந்த வீடு விழும். ஒரு கிராமத்தில் திடுமென நரிவட்டமிட்டால் விரைவில் அங்கு யாரோ பிணமாவது திண் ணம். நாய்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு திடுமென அடிக்கடி கத்தினால் அக்கிராமத்தில் திருடர்கள் புகுவார்கள் அல் லது அக்னி பயம். அல்லது கொள்ளை நோய் கள் உண்டாகலாம். வீட்டிலே நுழையப்போ கும்போது எஜமானை நுழையவிடாமல் நாய் தடுத்து, கத்தி தடை செய்தால் வீடு விழுவ தையோ, உள்ளே ஆபத்தை விளைவிக்கும் ஏதோ இருப்பதையும் அறிவிக்கும். ஒருவன் தலைமேல் காகம் பறந்து வந்து உட்கார்ந்தால் அவனுக்கு மரணகாலம் நெருங்கிவிட்டது என்ற பொருள். மரிப்பதற்குப் பலநாள் முன்பே ஸ்தூலத்திலிருந்து ஆன்ம சரீரம் லேசாகப் பிரிவதும் இது காக்கையின் கண்ணுக்குப் புலனாவதுமே இதற்குக் காரணம். உண்மை மரணம் நேருவதற்குச் சிலநாள் முன்பே சரீரம் அழுகத் தொடங்க, அந்த அழுகல் வாச னையை அறிந்தே நரி அங்கே வருகிறது. திருடர் முதலானோர் தூரமாய் வரும்போதே நாய்களின் மோப்பத்துக்குத் தெரிவதால் அவை கத்துகின்றன. வீட்டிற்குள் திருடரோ ஆபத்தை விளைவிக்கும் ஜீவன்களோ இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் மோப்பத்தால் நாய்க்கு அது தெரிவதால் எஜமானைப் போகவிடாமல் தடை செய்கிறது. தன் நண்பனை நாடி ஒருவன் மற்ற ஊருக்குப் போய்க்கொண்டிருக்கும்போது அவன் நினைவெல்லாம் தான் சென்று சந்திக்கப் போகும் நண்பனையும் அவன் வீட்டையுமே நாடியிருக்குமாகையால் இந்நினைப்பினை நண்பன் வீடு வரை சென்று தாக்க இந்த மின்சக்தியை உணரும் காகம் அவன் வீட்டின்மேல் உட்கார்ந்து கத்துகிறது. காகம் வீட்டுக்கூரைமேல் உட்கார்ந்து கத்தினால் வீட்டுக்கு விருந்தாளி வருவார். ஒரு வீட்டில் குடியிருப்பவர்கள் அதைக் காலி செய்து போக நேரிட்டால் பலநாட்களாகவே அவர்களின் நினைப்பலைகள் அவ் வீட்டைக் கடந்து அலைக்கழியத் தொடங்கும். அவைகள் சூன்யமான இடத்தில் ஆந்தைகள் உட்கார்ந்து கத்தும். வெளவால் கூடுகட்டும். எந்த வீட்டின் மேலாவது ஆந்தை கத்தினால், வெளவால் கூடுகட்டினால் அவ் வீட்டிலுள்ளவர்கள் விரைவில் அதை விட்டுப் போய் விடுவார்களென்பதை அறிந்து கொள்ளலாம். சகுனங்கள் விஞ்ஞான ரூபமானவை தான் என்பதை விளக்கவே மேலே சில உதாரணங்களைக் கொடுத்தோம்.

உலகின் எல்லா பாகங்களிலும் பாட்டி கதைகளில் பழங்காலத்தில் எல்லா மிருகங்களும் பேசிக் கொண்டிருந்தன. மனிதனுக்கு வரப்போகும் நன்மை தீமைகளை அவை வாயால் சொல்லியே தெரிவித்துக் கொண்டிருந்தன என்ற விவரங்கள் காணப்படுகின்றன. இது சரியான கருத்தில் உண்மையாயிருக்க முடியாதுதான். ஆனால் மனிதர்களுக்கு வரும் நன்மை தீமைகளை அவை முன்கூட்டியே பலவகை உடலசைவுகளாலும், சப்தங்களாலும், சைகைகளாலும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன என்பதில் மட்டும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. இதையே அவைகளின் பாஷையாக அந்தக் காலத்தில் சொல்லியிருக்கலாம். மனிதனும் தன் பாஷை தெரியாத ஊருக்கு போனால் பெரும்பாலும் சைகைகளாலேயே தன் கருத்தை வெளியிடுகின்றான். இச் சைகைகளே அப்போதைய அவனின் பாஷையல்லவா? ஆக எப்போதுமே பிராணிகளும், தாவரங்களும் தமக்குச் சம்பந்தப்பட்ட மனிதர்களுக்கு வரப்போகும், நேரப்போகும் நன்மை தீமைகளை முன்கூட்டியே தம் ஆன்ம சக்தியால் அறிந்து அதைப் பல வகை சரீர அசைவுகளாலும், சப்தங்களாலும் அவர்களுக்குத் தெரிவிக்கின்றன. இவைகளே சகுனங்கள். அதனால் தாவரங்களில் ஏற்படும் மாறுதல்களையும், பறவை, விலங்குகளின் உடலசைவுகள் சப்தங்களின் கருத்துக்களையும் அறிந்து கொள்ளக்கூடியவர்கள் தமக்கு ஏற்படப் போகும் நன்மை தீமைகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். இதைப்பற்றி விளக்குவதே சகுண சாஸ்திரம். இதை அறிந்து கொள்வதே சகுன ஞானம்.

எல்லா பறவைகளிலும் விலங்குகளிலும் எப்போதும் நல்லவைகளையோ, கெட்டவைகளையோ முன்னறிந்து தெரிவிப்பதில்லை. சில பறவைகளும், விலங்குகளும் எப்போதும் கெட்டவைகளையே அறிந்து தெரிவிக்கும். சில எப்போதும் நல்லவைகளையே அறிந்து தெரிவிக்கும். வேறுசில இரண்டையும் முன்கூட்டிய றிந்து, சில விஷே சேஷ்டைகளால் வெளியிடும். இவைகளையெல்லாம் விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் விரிவான சகுன சாஸ்திரங்களைப் பார்க்க வேண்டும். சில சகுனங்களின் நன்மை தீமைகள் சில மணி நேரத்தில் நடக்கும். சில, சில நாட்களில் நடைபெறும். சில, சில ஆண்டுகளுக்குப்பின் நடைபெறும். இவைகளையும் விரிவான சகுன சாஸ்திரங்களை நிதானமாய்க் கற்றறிவதன் மூலம் தான் அறிந்து கொள்ள முடியும். கீழே சகுனங்களின் சுபாவங்களை அறிந்து கொள்வதற்கான சில பொது விதிகளை மட்டும் விளக்குகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நீங்கள் ஏதாவது ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் போது நாய், பசு, குதிரை போன்றவை அடிக்கடி உம்மைப் பார்த்து ஏதோ சொல்ல விரும்பினால் அதன் சேஷ்டையைக் கவனியுங்கள். தன் இடதுபக்க அவயவங்களை அசைத்து தலையைத் தொங்கவிட்டு, கழுத்தை அசைத்து உட்துணியைப்பிடித்து பின்புறம் இழுத்தல். உங்கள் காரியம் வெற்றியடையாது. அதனால் உமக்குத் தீங்கோ, ஆபத்தோ நேரலாமென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இதற்கு மாறாகத் தம் வலது பக்க அவயவங்களை அசைத்து தலையை மேலும் மேலும் ஆட்டி நீங்கள் செல்லும் பக்கமாய்ப் போகும்படி முட்டித் தள்ளினால் நீங்கள் மேற்கொண்ட காரியத்தில் எதிர்பாரா நன்மைகள் கிடைக்குமென அறியுங்கள்.

2. குள்ளநரி, பெண்புறா, மூஞ்சூறு, பெண் கோட்டான், பல்லி, பெண்பன்றி, குயில் இவை இடது பக்கமாகப் போனால் நல்லதைக் குறிக்கும்.

3. குரங்கு, மான், பருந்து முதலியவை வலப்பக்கம் சென்றால் நல்லது.

4. போகும்போது எதிரில் வால்நீண்ட குருவி, ஆடு, மயில் இவைகள் எதிரில் வந்தாலும், சப்தித்தாலும் நல்லது. ஓணான் வந்தால் கெட்டது.

5. பாம்பு, கீரி, பன்றி, பூனை இவை வலப்பக்கமிருந்து இடதுபக்கம் போனால் நல்லது.

6. குதிரை, வெண்ணிற வஸ்துக்கள் இவை கிழக்கில் காணப்பட்டால் சுபம், பிணம் மாமிசம் இவை தெற்கில் காணப்பட்டால் சுபம், கன்னிப்பெண், தயிர் கூடை மேற்கில் காணப்பட்டால் சுபம், பசு, பிராமணன், சாதுக்கள் வடக்கில் தெரிந்தால் சுபம்.

7. கழுதை இடது பக்கத்தில் அசையாது நின்றால் சுபம். சாந்தமாகச் சப்தித்தாலும் சுபம்.

8. பூனை கத்தினால் எப்போதும் அசுபம்.

9. பசு தும்மினால் மரணபயமே நேரலாம்.

10. நாய், குதிரை, யானை என்பன குடம், கடிவாளச் சேணம், பாலுள்ளமரம், கற்கள் கும்பலாயிருக்குமிடம், குடை, படுக்கை, ஆகாரம், உரல், புல்தரை, இவைகளில் மூத்திரம் பெய்து விட்டு எதிரில் ஓடினால் போகும் காரியம் வெற்றியடையும். முள்மரம், கட்டை சுடுகாட்டில் மாத்திரம் பெய்து எதிரில் ஓடினால் போகும் காரியம் தோல்வியுறும். செருப்பைக் கவ்விக் கொண்டு வந்தால் பாதிவெற்றி கிடைக்கும். நிறைய மாமிசத்தை எலும்பைக் கவ்வி வந்தால் நன்மை கிடைக்கும். கொள்ளிக் கட்டையைக் கவ்வி வந்தால் கஷ்டமுண்டாகும். கிழிந்த துணி மரப்பட்டையைக் கவ்வி வந்தால் ஆபத்து வரும்.

11. நாய்கள் அதிகாலை சூரியனுக்கெதிரில் நின்று ஊளையிட்டால் அத்தேசத் தலைவனில் மாறுதலுண்டாகும். தென்கிழக்கிலிருந்து ஊளையிட்டால் திருடர், நெருப்பு முதலியவைகளால் ஆபத்து நேரும். மாலையில் இப்படி ஊளையிட்டால் இரத்தப்பெருக்கு கலகத்தைக் குறிக்கும். வீட்டின் சுவற்றை நகங்களால் விராண்டினால் கன்னம்வைப்பர் பயமுண்டு. சாப்பிடாமல் கண்ணீர் விட்டால் வீட்டிலுள்ளோருக்கு ஆபத்தைக் குறிக்கும். இதேபோல் குதிரை, யானை, காக்கை முதலியவைகளின் சேஷ்டைகளைக் கொண்டு அறியக் கூடிய பலன்களை விரிவான சகுனசாஸ்திரங்களில் காணலாம். தூரத்திலுள்ள உறவினர்கள், நண்பர்கள் இவர்களுக்கு ஏதேனும் எதிர்பாராத நல்ல கெட்ட சம்பவங்கள் நடக்குமானால், அப்போதவர்கள் நம்மையே நினைத்திருக்க அந்நினைப்பலைகள் அவர்களின் நல்ல கெட்ட நிலைகளை விளக்கும் சில சகுனங்கள் நம் வீட்டில் நடைபெறலாம். திடுமென ஏதாவது நெருப்பு பற்றியெரிதல், ஆண்களுக்கு இடக்கண், இடதுபுஜம், பெண்களுக்கு வலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண், வலதுபுஜம் துடித்தல், வைத்திருக்கும், சாமான்கள் திடுமெனக் கீழே விழல் இவை கெட்டதைக் காட்டும். ஆண்களுக்கு வலக் கண், வலது புஜம், பெண்களுக்கு இடதுகண், இடது புஜம் துடித்தல், வீட்டில் திடுமென நறுமணம் வீசல் நல்லவர்கள் சுமங்கலிகள் வருகை இவை சுபத்தைக் காட்டும்.

வீட்டுத் தோட்டங்களிலுள்ள மரங்களும் பல முன்னறிவிப்புகள் செய்யும். திடுமென சோர்ந்து இலைகள் வாடி வசம்பாய் தொங்கி போதல் அசுபத்தைக் காட்டும். இலைகள் துளிர்ந்து மேலுயர்ந்து செழித்தல் இவை சுபம் வருவதைக் காட்டும்.

மனிதனுக்கு வரும் எல்லா நன்மைகளும், தீமைகளும் மரணமுட்பட்ட அவனுக்குச் சகுனங்களின் வழியாக முன்பே அறிவிக்கப்படுகின்றன. முன்னறிவிப்பில்லாமல் மனிதனுக்கு எந்த நல்லதும் கெட்டதும் வருவதில்லை. ஆனால் மனிதன் இப்படி தனக்கு அறிவிக்கப்படும் சகுனங்களின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாததால் அதைப் பயன்படுத்திக் கொள்கிறானில்லை.

சகுன சாஸ்திர இரகசியங்களை நல்ல முறையில் அறிந்து கொள்பவன் தனக்கு வரும் நன்மை தீமைகளை முன்கூட்டியே அறிந்து கொண்டு தகுந்த எச்சரிக்கையுடன் இருந்து வாழ்க்கையை இன்பமாய் நடத்திக் கொண்டு போவான்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமணங்களின் இரகசியம்

மனித சரித்திரத்தின் ஆதிகாலம் முதல், மனிதர்கள் தெய்வ வழிபாட்டிலும், மற்றும் பல சமயங்களிலும், நறுமணப் பொருள்களை உபயோகித்து வந்த வரலாறு காணப்படுகிறது. வேள்விகளில் ஓமத்திரவம் அல்லது சாமக்ரி எனும் பெயரால், குறித்த காரிய சித்திக்கான வேள்விகளில், குறித்த சில நறுமணத்திரவியங்களை உபயோகித்து வந்தனர். பாரதத்தில் மலர் கொண்டு வணங்காத தெய்வமே இல்லை. ஒவ்வொரு தெய்வத்திற்கும், இன்ன இன்ன மலர்கள் சாற்ற வேண்டும். இன்ன மலர்களால் அர்ச்சிக்க வேண்டும் என்ற விதிகள் இருக்கின்றன. தெய்வ உபாசனைகளில் உபயோகிக்கும் மலர்கள் யாவும் நறுமணமலர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். தெய்வ அபிஷேகங்களில், வாசனை நீர் அபிஷேகம், தூபம், கற்பூரம் முதலியவையும், நறுமணம் பிராதாஸ்யம் கொண்டவையே. பழங்கால மனிதர்கள் வாசனைச் சென்டுகளை பெருந்தன்மையாகப் பாவித்தனர். "யசோதா" கண்ணனுக்கு "அரகஜா" - நறுமணம் பூசிக்குளிப்பாட்டியதாக, "பாகவதம்" கூறுகிறது.

மேல் சொல்லப்பட்ட உண்மைகளால், நறுமணத்திற்கு ஏதோ சக்தியிருக்கிறது என்று நாம் அறியலாம். பூண்டு வெங்காய வாசனைகள் பாம்பை மயங்கச் செய்யலாம். "குளோரோபாம்" எனும் மருந்தை மணந்தால் உணர்வு மயங்கிவிடும். மிளகா போன்றவற்றின் வாசனையால் தும்மலும், இருமலும் உண்டாகும். மஞ்சள் சுட்ட வாசனையால் ஜளி மாறும். ஊமத்த இலையைப் புகைப்பதால் ஆஸ்த்துமா குணமாகும். ஜளிப்புக்காக இன்று முகர்ப்பு உப்புகள் (Smelling salt) விற்கப்படுகிறது. அம்பைக் கிழங்கு, சொக்குப் பாக்கு இவற்றை முகர்ந்தால் மனக்கலக்கம் உண்டாகும். பழங்காலத்தில் இவற்றில்தான் சொக்குப் பொடி தயார் செய்தனர். (நறுமணங்கள் ஒவ்வொன்றும் மனித உடலிலும் உள்ளத்திலும் ஒருவகை மாறுதலைச் செய்யவல்லன)

மருத்துவத்தில் மூலிகைகளை ஆராய்ந்தது போலவே, நறுமணங்களின் பிரபாவங்களையும் ஆராய்ந்தனர். அதனால் மண்ணுலகில் எளிதில் கிடைக்கும், நறுமண பொருள்களைக் கொண்டு அரியபல காரியங்களைச் சாதிக்கும் வழியைக் கண்டனர். இவ்வுண்மைகளைத் தீயோர் அறியின் பலருக்குக் கேடுவிளைவிக்கக் கூடும் எனும் கருத்தால், அவற்றைப் பொது மக்கள் அறியாது, தம் சீடர்களுக்கு மட்டும் வெளியிட்டனர். ஆயினும் மக்கள் இதில் இருந்து வஞ்சிக்கப்படாது இருக்க, இரகசியத்தை வெளியிடாது நறுமணங்களின் நன்மையைப் பெறுவதற்காக, பலவழிகளை பூடகமாகச் சொல்லி வைத்தனர். இவைகளில் சிறந்தது வேள்வி, சாமக்கிரியைகள், வெயிற் காலத்தில் இன்ன இன்ன, சாமான்களைச் சேர்த்து ஓமம் செய், குளிர் காலத்தில், இவைகளைச் சேர்த்து ஹவம்செய், புத்திர வேள்வியில் இதைச்சேர், ரோக நிவாரணவேள்வியில் அதைச் சேர் என்று வகுத்துள்ளனர்.

நறுமணங்களின் இரகசிய நன்மைகளைப் பலவழிகளில் பெறலாம். அவைகளில் முக்கியமானது அக்கினியில் அவைகளையிட்டுப் புகைத்து அப்புகையைச் சுவாசிப்பது, ஊதுவத்தி கொளுத்தல், தூபமிடல், கர்ப்பூரம் கொளுத்தல், மலர்சூடல், இவ்வகையில் நறுமணங்களின் சக்தியைப் பெறும் சாதனையே. இரண்டாவது முக்கிய வழி நறுமணங்களின் மணத்தை நீரில் ஏற்றி, அதை உட்கொள்ளல் மூலம் மனச்சக்தியை உடல்மனங்களில் பரவச் செய்தல். மூன்றாவது வழி, நேருக்கு நேராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுமணப் பொருள்களில் இருந்து வெளிவரும் ஆவியைச் சுவாசித்தல், கர்ப்பதோஷம் நீங்க அரச வேப்பமரங்களைச் சுற்றிவரல், துளசி பூஜை, நறுமணமலர்கள் சூடல், மாலை போடல், முதலியவையாகும்.

நறுமணப் பிரபாவங்களைக் கொண்டு நோய்க ளைப் போக்கலாம். மனக்கோளாறுகளை மாற் றலாம். உடலில் பலத்தை உண்டாக்கலாம். இதயத்துடிப்பைச் சமன் படுத்தலாம். உடலில் நல்ல பிராண சக்தியை நிரப்பலாம். விஷக் கிருமிகளை, உடலுக்குத் தீங்கின்றிக் கொன்று விடலாம்.

நறுமணத்தால் காற்றைச் சுத்தப்படுத்தலாம். காற்றில் உள்ள விஷக்கிருமிகளைநாசம் செய் யலாம். இன்னும் எத்தனையோ, சாதனைக ளைச் செய்யலாம்.

நறுமணங்களுக்கு இவ்வளவு சக்தியுண் டென்பதற்கு சில பரீட்சைகளைக் கூறுகி றோம். வீட்டில் ஒருவர் ஜுரமாய் இருக்கும் போது. துளசியிலை (உலர்ந்தது) துளசிக் கட்டை, நிலவேம்பு, இவைகளைக் கலந்து புகையுங்கள். மலேரியா ஜுரம் இருக்கும் போது, செஞ்சந்தனம், வேப்பங் கொழுந்து, நாயுருவி இவைகளைக் கலந்து புகை யுங்கள். கண்ணோய் எனில், கர்ப்பூரம், லவங்கம், செந்சந்தனம், மஞ்சள், வெள்ளி, யோத்திரம், பட்டைகளைக் கலந்து புகையுங்கள்.

புகையை நோயாளி நேராக மூக்கில் உறிஞ்ச வேண்டியதில்லை. புகைபரவும் அறையில் நோயாளி இருப்பின் சுவாசிக்கலாம். தினசரி இருமுறை இப்படிச் செய்ய நோய் குணம் அடையும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபவாச மகிமை

மஹாத்மா காந்தி - ''அறிவைப் பெறவும், சிக்கல்களைப் போக்கவும் உபவாசம் ஒரு பழைய முறை நான் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களிலும் இதைப்பற்றிய விளக்கத்தைக் கண்டேன்''

ஹென்றிரீடர் :- இங்கே ''மகோதரம்'' தலை வலி இரைப்பை, குடல்வலி, ஆஸ்த்மா முத லிய நோய்கள் 45.42.18 நாள் உபவாசத்தில் குணமாகியது.

ஸ்டெலா எவ்குன்ஜேல் :- என் வலது அவய வம் பாரிசவாதம் கொண்டது. எத்தனை மருந்து உண்டும் குணமாகவில்லை. டாக்டர் ''ட்ரூஎஸ்பாரிஸ்'' இவரது மேற்பார்வையில் 45 நாள் உபவாசம் மேற்கொண்டதால், குணம் அடைந்தேன்.

எஸ்.டி.பீடர் :- எனக்கு 25 வயதில் ஆஸ்த்மா 40 நாள் உபவாசத்தில் பூரண குணமாகியது.

டாக்டர் ஆப்டன்சின்க்னேர் :-யௌனத்தை நெடுங்காலம் காப்பாற்றுவது உபவாசம் நிலை யான ஆரோக்கியத்திற்கு மிக நல்ல சாதனம்.

ப்யுரிங்டன் :- நீர், ஆரோக்கியம் யௌவனம், வாழ்க்கை இன்பம், சக்தி இவற்றைப் பெற வேண்டின், உபவாசம் மேற்கொள்ளவும்.

உபவாச தத்துவத்தை அறிந்து கொள்ள சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள வேண் டும். நாம் உண்ணும் உணவில், சிலபகுதிகள் தான் இரத்தம் மஜ்ஜை, மாமிசம் முதலிய உடற்பொருளாகிப் பரிமாற்றம் அடைகிறது. மற்றைய பொருட்கள் சரீரத்துக்குத் தேவையற் றவை. அது மலமாக வெளியேறுகிறது. இவ் வுண்மையை அனைவரும் அறிவார்கள். மலச லம் கழியாது உடலில் தேங்கினால், உடலியக் கத்தைப் பாதித்து, பல நோய்கள் உண்டாகும் என்பது உண்மை. ஆனால் இதனால் மட்டும் உடல் பூரண சுத்தியாகி, பூரண ஆரோக்கியத் துடன் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது.

உண்ணும் உணவில் இருந்து சேகரிக்கப் பட்ட இரத்தத்துடன் கலந்து ஓடும் உணவின் சத்துப் பொருள்களுடன், சில நுண்ணிய பொருள்களும் சேர்ந்து இரத்தத்தில் பரவுகிறது இரத்தம், தசை, நுரையீரல், இதயம் போன்ற உறுப்பெங்கும் தேங்கிவருகின்றன. மலசலக்க ழிவுகள் நன்றாகவிருந்தும், திடுமெனச் சில ருக்கு அசாத்திய ரோகங்கள் உண்டாக, இப்ப டித் தேங்கும் அசுத்தப் பொருள்களின் அதிக ரிப்பே காரணம். மலசலத்தைச் சுத்தமாய் வெளிப்படுத்தும், இரைப்பை, குடல்களிலும், இத்தகைய சூக்குமக் கிருமிகள் படிந்து வர லாம். இப்படி அதிகரிப்பின் 'குன்மவலி'' ''குடல்வலி'' முதலிய நோய்கள் உண்டாக லாம். நுரையீரலில் இப்படிவு அதிகமானால் ஆஸ்துமா, கசம் போன்றன உண்டாகும். இருதயத்தில் இப்படிவு அதிகமானால் இருத யம் பலவீனம் அடையும்.

நகர்ப்புறங்களைச் சுற்றி, சிகரெட்புகை, மோட்டார் புகை, தொழிற்சாலையின் சிமினிப் புகை, தெருவின் குப்பைகள் போன்ற பல அழுக்குகள் சூக்குமமாயிருந்து நம் சுவாசத்தில் உட்புகுகிறது. இதனாலும் நோய்கள் பரவ வாய்ப்பு ஏற்படுகிறது.

உணவு, சுவாசம் இவற்றின் வழியாக உட லில் சேரும் அசுத்தப் பொருளை விட அதிக விஷத்தன்மை கொண்ட பொருள்கள், மனித னின் கெட்ட எண்ணத்தாலும் உத்வேக உணர் வாலும் (Emotions) சேர்கிறது. அதிக கோபமு டைய ஒருவனது இரத்தத்தின், சில துளிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவில் கலந்து கொடுத்தால் எலி போன்ற ஜீவன்கள் உடனே இறந்து விடும். அதிகமாய்ப் பயந்தவனின் முகமும், உடலும் கறுப்பாய், நீலமாய் மாறிப் போகக் காணலாம். எனவே மனிதன் கெட்ட எண்ணங்களை எண்ணாமல் உத்வேகங்களுக்கு இடம் அளிக்காது வாழ்ந்தால் உடலின் இரத்தத்தில் விஷம் சேர மாட்டாது.

கண்ட உணவுகளை, கண்ட வேளைகளில் சாப்பிட்டல், அசுத்தக் காற்றைச் சுவாசித்தல், கெட்ட நினைவுகளை நினைத்தல் உத்வேகங்களுக்கு வசமாதல், இதனால், மனிதன் தன் உடலில் விஷத் தன்மையை உற்பத்தி செய்து கொள்கிறான். இப்படி உடலில் சேமிக்கப்படும் விஷப்பொருளை உடலில் இருந்து வெளியேற்றக் கண்டுபிடித்த வழிகளில் சிறந்தது உபவாசம். அக்கால மக்கள் நோன்பு, விரதம், உபவாசம் முதலியவற்றை தெய்வத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் நம்பினர், கடைப்பிடித்தனர். இதனால் அவ்வப்போது தன்உடலில் சேரும் விஷப் பொருள்களை அகற்றி, உடலைச் சுத்தப்படுத்திக் கொண்டே வந்தனர். இதனால் தான் அக்காலத்தவர்கள் நீண்ட ஆயுள் பலத்துடன் வாழ்ந்தனர்.

உபவாசத்தால் ஏற்படும் நன்மை:- இரைப்பை, குடல் என்பன ஓய்வு பெறுகின்றன. இரண்டாவது உபவாச காலம்வரை உணவுவழி, நியமப்படி மனதின் வழி விஷத் தன்மை சேர்வது தடைப்படுகிறது. நரம்புக் கூட்டங்களுக்கும் ஓய்வு கிடைக்கிறது. உபவாச காலத்தில் உணவு கிடைக்கப் பெறாதபடியால், உடலுள் சேமிக்கப்பட்டுள்ள பொருள்களை உடல், சீரண நிலைக்குக் கொண்டு வருகிறது. உடலில் சேகரிக்கப்பட்ட விஷப் பொருளும் வெளிக் கொணரப்பட்டு, சுவாசம், தோல் மூலமாக, உடலைவிட்டு வெளியேற்றி விடுகிறது. உபவாசத்தால் தாபம் அதிகரிக்கும். விஷப் பொருள்கள் எரிக்கப்படுகின்றன. இரத்தம் சுத்தமாகி சிவப்பு நிறம் அடைகிறது. இப்படியான உபவாசத்தால் உடல் உட்சத்தும் அடைகிறது.

உடலில் சுத்தத்துக்கும், மனதின் இயக்கத்திற்கும் சம்பந்தமுண்டு "ஆகார சுத்தென சத்வ சுத்தி" - உணவுச் சுத்தத்தால் அறிவு சுத்தமாகும். உணவு சுத்தமில்லாவிடில், மனப்பலம் இருக்காது. காமகுரோதம் கெட்ட குணம்தான் ஆட்கொள்ளும். உபவாசத்தால் உடல் அழுக்கு வெளிப்பட்டு நல்லறிவும், சுத்த எண்ணமும் உண்டாகும். பெரிய காரியத்தைத் தொடங்கு முன் "மகாத்மாகாந்தி" உபவாசத்தை முதலில் மேற் கொண்டதன் இரகசியம் இதுவே.

## உபவாசத்தால் குணப்படுத்தக் கூடிய சில நோய்கள் :-

பசியின்மை, மலச்சிக்கல், மூலம், குன்மம் சகலவித ஜுரங்கள், வாதம், பேதி பித்தாதிக்யம், ஆஸ்த்மா, கிருமி ரோகங்கள், பாரிசவாதம் முதலியன.

## சிலதின உபவாசத்தால் குணப்படும் நோய்கள் :-

கபம், மலச்சிக்கல், தலைவலி, சூலை, நரம்புத்துடிப்பு (Neuritis) பற்களில் இரத்தம் வடிதல், (Pyorrhoea) கிருமிகள் (Worms) டிஸ்தீரியா, முதலியன.

## விதி :

உபவாசகாலத்தில், தகுந்ததொரு வைத்தியரை நாட வேண்டும். உபவாசத்தில் ஏற்படும் கோளாறுகளை அவர் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளச் சம்மதித்தல் வேண்டும். உபவாச காலத்தில், முன் அல்லது பின், வைத்தியரின் உத்தரவின்றி எந்த மருந்தும் சாப்பிடக்கூடாது உபவாசம் தொடங்க முன்பு நல்ல, பால், பழம், முட்டை அதிகமாய் உண்டுவர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபவாசத்தில் ஏற்படக் கடிய சில கோளாறுகள்:

சோர்வு, பலவீனம், தலை கிறுகிறுப்பு, மயக்கம், மூர்ச்சை, வயிற்றுவலி, பேதியாதல், தூக்கம் வராமை, மலக்கட்டு, வாந்தியாதல் முதலிய பல கோளாறுகள் உண்டாகலாம். தகுந்த வைத்தியரிடம் பரிகாரம் செய்ய வேண்டும். உபவாசம் முடியும்வரை மனதைத் தைரியமாயும், சந்தோஷமாயும், ஜெபங்களில் ஈடுபடுத்தியும், இருக்க வேண்டும். அனாவசியமான பேச்சு, சிந்தனைக்கு இடம் அளிக்கலாகாது. உபவாசத்தின் இடையில், பழரசங்கள் இளநீர் பானங்கள், பால் முதலியன அருந்தலாம். உபவாசம் முடிந்தவுடன் உணவில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். உடனே கடின உணவை உட்கொள்ளாது, மெதுவான உணவு உட்கொண்டு பின்புதான் படிப்படியாக கடின உணவு உண்ணல் வேண்டும். உபவாச நேரத்தில் சோம்பலாய் இராது நீரினால் உடலை நனைத்து சுத்தம் செய்து அவ்வப்போது வாய், முகங்களைக் கழுவி இறைவனையும் தியானித்தல் நலம். வளர்பிறையில் உபவாசம் தொடங்குவது நன்று. தேவையற்ற பேச்சு, ஜனக்கூட்டத்தில் இருத்தல் தவிர்க்கப்பட்டு, சுத்தமான இடத்தில் இருந்து ஜெபித்தல் நலம். பலன் கிடைக்கும்.

## ஆன்மீக இரகசியம்

மனமும், அறிவும், மூளையும் செயல்படவேண்டிய இடத்தில் விஷத்தன்மையிருப்பின் அவையெப்படிச் செயல்படும்? எனவேதான் சகல வழிபாடுகளிலும் உபவாசத்தைக் கட்டாயமாக்கியுள்ளனர். மனதைச் சலனிக்கும் விஷத் தன்மைகள் அழிவதோடு, மனம் எளிதில் பரிசுத்தமாக்கப்படுகிறது. ஆன்மசாதனை, தெய்வசாதனை, யோகசாதனை, முதலியவற்றில் ஈடுபடுவோர், முன்பே ஒன்றிரண்டு நாள் உபவாசம் இருந்து ஈடுபடில் தம் சாதனையின் பயனை அடைவர். உடலையும், உள்ளத்தையும் சுத்தப்படுத்திப் பெரு வாழ்வுக்குப் பக்குவமாகி வருவீராக.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யந்திரங்களின் சக்திக் கிரணங்கள்

ஒரு துண்டு வெள்ளைக் காகிதத்தில் ஒரு புலியின் உருவை வரைந்து, யாரையாவது கூப்பிட்டு இது என்னவென்று கேட்டால் புலி என்று சொல்வார்கள். புலிக்குப் பதில் வேறு உருவை வரைந்து கேட்டால் அந்தந்த வடிவத் துக்குரிய பொருளின் பெயரைச் சொல்வார் கள். வரைந்த உருவத்துக்கும், அதைப் பார்த் துச் சொல்லும் நபருக்குமிடையில் 2 மீட்டர் இடைவெளியிருக்கிறது. வரைந்த உருவத்திலி ருந்து எதுவும் இரண்டு மீட்டரைக் கடந்து பார்ப்பவர் கண்கள் வரை வந்திருக்கா விட் டால் 2 மீட்டர் தூரத்திலிருக்கும் அதை இன்னதென்று எப்படிச் சொல்ல முடியும். ''பார்த்தல்'' என்றால் என்ன பொருள்? பார்க் கப்படும் பொருள்களின் மேல் படும் ஒளிக்க திர்கள் அந்தப் பொருளின் வடிவத்தை ஒளிக்கி ரணங்களில் தாங்கி, பார்ப்பவர் கண்ணில் புகுகின்றன. பிறகு அந்த உருவக் கதிர்கள் கண் நரம்புகள் வழி மூளையை அடைய மனம் அதை பிரதிபலித்து அறிகிறது. ஒவ்வொரு பொருளும் தன் மேல் படும் ஒளியில் தன் உருவை கலக்கச் செய்கிறது.

இப்படி பொருளின் உருவைத் தாங்கி வரும் ஒளிக்கதிர்கள் பொருள்களின் உருவை, மட் டும் தாங்கி வரவில்லை. அதன் குணத்தையும் தாங்கி வருகின்றன. யோக சாதனையில் ''திராடகம்'' என்றொரு அரிய சாதனை இருக் கிறது. திராடகம் என்றால் ஒரு பொருளை பல நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருத்தல் என்று பொருள். இப்படிப் பார்த்துக் கொண்டி ருப்பதால் அந்தப் பொருளின் உருவம் நன்றாக மனதில் பதிவது மட்டுமல்ல. அப்பொருளின் தன்மையும் மனம் வழி உடலில் பரவுகிறது. உதாரணமாக ஓர் எலுமிச்சம் பழத்தை ஒருவர் விடாமல் மணிக் கணக்கில் பார்த்தல் எலுமிச் சம் பழத்தின் உருவ ஞானம் மட்டும் உண்டா வதில்லை. எலுமிச்சம் பழத்தின் புளிப்புத் தன்மை உடலில் உண்டாகிறது. எட்டிக்காயை பல மணி நேரம் விடாமல் பார்த்தால் வாயிலும், உடலிலும் கசப்புத் தட்டும். ''நல்லாரைக் காண்பதுவும் நன்றே'' ''தீயாரைக் காண்பது வும் தீதே'' என்ற அரிய மனத்தத்துவ பழமொ ழியைப் படிப்பவர்கள் ''பார்த்தால் என்ன ஆகிவிடும்? என்று கேட்கிறார். ஆபாச சினிமா காட்சிகளைப் பார்க்கக் கூடாது என்று ''பார்த்தால் நாம் அப்படிச் செய்வோமா? என்று கேட்கிறார்கள். இன்று அப்படிச் செய்ப வர்களெல்லாம் ஆபாசப் படங்களை பலமுறை பார்த்தவர்கள் நல்லாரைக் காணும்போது அவர் களின் நல்ல குணம் அவர்மேல் பிரதிபலிக்கும் ஒளிக்கதிர்களில் வருகிறது. அக்கதிர்கள் அடிக் கடி பட்டுவந்தால் நல்ல குணமும் நம்மில் படத் தொடங்கும். தீயாரைக் காணும்போது அவர்களின் குணங்கள் நம்மில் உண்டாக வழிகோலும்.

பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் தம் குணங்களை தம் வடிவம். நிறங்களில்தான் கொண்டிருக்கின்றன. வட்டமாயிருக்கும் ஒரு பொருளுக்கும், முக்கோணமாயிருக்கும் ஒரு பொருளுக்கும், சதுரமாயிருக்கும் ஒரு பொரு ளுக்கும் அவைகளின் தன்மையில் மாறுதல் இருக்கும். வட்டமான ஒன்றை முக்கோணமாக அமைத்துவிட்டால் அதன் தன்மையும் செய லும் மாறிப் போகும். நாம் முன்பு சொன்ன திராடக அடிப்படையில் ஓர் வட்டமான உரு வம் நம்மில் உண்டாக்கும் மாறுதலுக்கும், ஓர் முக்கோணம் நம்மில் உண்டாக்கும் மாறுதலுக் கும் வேற்றுமையுண்டு. அறுகோணம், முக் கோணம், ஐங்கோணம் முதலில் வடிவங்கள் மனிதனில் வெவ்வேறு தன்மைகளை உண் டாக்குகின்றன என்று மனோதத்துவ வல்லுனர் கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி வடிவங்களுக்கு இப்படித் தனித்தன்மை உண்டென்றால் எழுதப்படும் எழுத்து வடிவங்க ளுக்குத் தனித்தன்மை உண்டென்று சொல்ல வேண்டுமா? அ என்ற வடிவத்துக்கும், உ என்ப தற்கும், மா என்பதற்கும் தனித்தன்மை உண் டென்று சொல்லவும் வேண்டுமா? பழங்கால மகரிஷிகள் "அக்ஷர விஞ்ஞானம்" என்ற பெய ரில் ஒவ்வொரு எழுத்தும் என்ன தன்மையைக் கொண்டதென ஆராய்ந்திருக்கிறார்கள். அதே உண்மை இன்று மொழி நூல் வல்லுநர்களும் கண்டறிந்திருக்கிறார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், முதலிய மொழிக ளைத் தாய் மொழியாகக் கொண்டவர்களின் உருவ அமைப்பிலும், நடை, உடை பாவனைக ளிலும் வேற்றுமை உண்டென்று கண்டறிந்தி ருக்கிறார்கள்.

இரண்டு வரிவடிவங்கள் ஒன்றாகச் சேரும் போது அதிலிருந்து வெளிப்படும் ஒளிக்கிர ணங்கள் இந்த இரண்டின் கலப்புத் தன்மை யைக் கொண்டிருக்கும். இரண்டு எழுத்துக்கள் சேரும்போது அதன் ஒளிக்கதிர்களில் அவைக ளின் கூட்டுத் தன்மை இருக்கும். இந்த ஒவ் வொரு கலப்பும் மனிதனின் வெவ்வேறு மாறு தல்களைச் செய்யும். மனிதன் கண்களால் பார்க் கும்போது தான் உருவங்களின் குணங்கள் அவ னில் புகுகின்றன என்பதில்லை. அவன் பார்க்கா விட்டாலும் பொருள்களிலிருந்து வெளிப்படும் ஒளிக் கிரணங்கள் அவன் உடல் மேல் படத்தானே செய்யும். இப்படி விடாமல் பட்டால் அந்தப் பொருளின் தன்மை அவனில் உண்டாகியே தீரும். வீட்டுச் சுவற்றில் பூசி இருக்கும் மஞ்சள், பச்சை, சிவப்புப் பூச்சுகளை நாம் பார்க்காவிட்டாலும் அவைகளின் ஒளிக்க திர்கள் நம்மேல் பட்டுக் கொண்டுதானே இருக் கும். அதன் பயனாய் "நிற விஞ்ஞானத்தில்" நாம் அறியும் குணங்கள் நம்மில் உண்டாகிக் கொண்டுதான் இருக்கும். நம் வீட்டிலுள்ள ஒவ் வொரு பொருளும் தத்தமக்குரிய தன்மைகளை நம்மில் பரப்பிக் கொண்டேயிருக்கின்றன.

மற்றொரு பெரிய உண்மையை அறிய வேண்டும். பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் தம் பொருண்மையை மிக நுண்ணிய கதிர் வடிவமாக தம்மைச் சுற்றிலும் பரப்பிக் கொண்டேயிருக்கின்றன. மல்லிகை மலர் தம் நறுமணத்தை சுற்றும் பரப்பிக் கொண்டேயிருந்து, அதனால் வாடிப் போகி றது. சட்டை தன் நுண்கதிர்களை பரப்பிக் கொண்டேயிருப்பதால் தான் உறுத்துப் போகி றது. ஒரு துணி தன் நுண்கதிர்களை பரப்பிக் கொண்டேயிருப்பதால் தான் தன் வலிமையை இழந்து, கிழிந்து போகிறது. கடினப் பொருள் கள் பல வருடங்கள் தன் கிரணங்களைப் பரப்பிக் கொண்டிருப்பதால் அப்பொருளின் சிதைவை நாம் உடனுக்குடன் காணமுடிவ தில்லை. இப்படி பொருள்களிலிருந்து பரவும் நுண் கதிர்களில் அப்பொருளின் தன்மை இருக்குமெனச் சொல்லவும் வேண்டுமா? ஒரு வைரக் கல்லை மோதிரமாகச் செய்து நாம் அணிந்து கொண்டால் நம்மில் படச் செய்து கொண்டிருக்கும். இப்படியே ஒவ்வொரு இரத் தினமும் நுண்கதிர்கள் வழி நம் உடலிலும் மூளை வழி மனதிலும் தகுந்த மாறுதலைச் செய்து கொண்டேயிருக்கும். இதன் அடிப்ப டையில் தான் இரத்தின விஞ்ஞானம் கண்டுபி டிக்கப்பட்டது. பிறரின் உடற்கூறுக்கு சில இரத்தினங்கள் நன்மை செய்யாது. ஒவ்வொரு இரத்தினமும் மனதில் செய்யும் மாறுதலுக்குத் தக்க வாழ்க்கையில் வெற்றி தோல்வியும் உண்டாகும்.

இப்போது "யந்தரம் எப்படி வேலை செய்து பயனளிக்கிறது" என்பதை அறிந்து கொண்டி ருப்பீர்களென்று நம்புகிறோம். யந்திரத்தின் அடிப்படைத் தத்துவம் அவன் தேவைக்கு தகுந்த தன்மைகளை கதிர் வீசும் வடிவங்கள். எழுத்துகள் எவையென்பதை அறிந்து செம்பு, வெள்ளி, அல்லது தங்க ரேக்குகளில் அந்த வடிவங்களையும், எழுத்துக்களையும் எழுதி னால் அவைகளில் கலப்புக் கதிர்வீச்சுகள் அதை அணியும் மனிதனின் உடலிலும், மனதி லும் தகுந்த மாறுதலை உண்டாக்கி, அவன் தேவையையும் பூர்த்தி செய்கிறது. யந்திரம் எழுதப்படும் ரேக்குகள் எப்போதும் கதிர் வீசிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றன அல்லவா? அந்தக்கதிர் வீச்சு அதில் எழுதப்படும் வடிவ, அட்சரத்தன் மைகளைக் கொண்டு வெளிப்படுவதால் அதனைப் பயன்படுத்தும் நபரின் தேவைகள் பூர்த்தியாகின்றன. உதாரணமாக ஓர் தாமிர, வெள்ளி அல்லது தங்க ரேக்கில் ஐங்கோணமெழுதி அதில் ஓம் ஹௌம் ஓம் ஜூம் ஸ என்ற வகு மிருத்யுஞ் ஜெய மந்திரத்தை எழுதி நோயாளியின் கையிலோ, கழுத்திலோ கட்டி வைத்தால் அந்த கலப்புக் கதிர் வீச்சு அவன் உடலின் அணுவில் புகுந்து, நோயை விரட்டியடிக்கிறது. இப்படி வரி வடிவத்தையும், எழுத்துக்களையும் தகடுகளில் அடைப்பதுடன் யந்திர சாதனையை முடித்துவிடுவதில்லை. அந்த யந்திரத்தில் நல்லவிதமான பிராணக் கதிர்கள் சேர்ப்பிக்கப்படுகின்றன. இதற்கு பொதுவாக "பிராணப்ரதிஷ்டை' என்று பெயர். பிராணன் இயக்கச் சக்தி, அதை யந்திரத்தில் சேர்ப்பிக்கும் போது அதன் கதிர் வீச்சும் பலப்பட்டு, வேகமாய் வீசத் தொடங்குவதால் யந்திரத்தின் பயன் விரைவில் கிடைக்கிறது. பிராணனைப்பற்றியும், அதை பொருள்களில் சேர்ப்பிப்பது பற்றியும் எமது நேர்முகப் பிராணயாம வகுப்பில் கற்றறியலாம்.

லக்ஷ்மீ பீஜமாகிய ஸ்ரீம் என்ற அட்சரத்தை தகுந்த வரி வடிவ அமைப்பில் அமைத்து, அதற்குப் பிராண சக்தியும் ஊட்டப் பெற்றால் அந்த வரிவடி அட்சரக் கலப்புக் கதிர் வீச்சுகள் மனிதனின் மனதில் செல்வம் பெறுவதற்கான வழிமுறைகளை எண்ணங்களாக உண்டாக்கி அவ்வழி செயல்படும் மனிதன்தான் எதிர்பார்த்திராத வழிகளில் செல்வம் சேமித்து சீமானாக விளங்குகிறான். இப்படியே ஒவ்வொரு காரிய வெற்றிக்கான வடிவங்களையும், எழுத்துக்களையும் தகுந்த முறையில் அமைத்து பிராண சக்தியை ஊட்டுவதுதான் யந்திர சாதனைகளின் ரகசியம்.

தொழிலே நடக்காத இடங்களில் "வியாபார விருத்தி" யந்திரங்களைச் செய்து வைத்ததின் பயனாக எதிர்பாராத அளவு தொழில் விருத்தியாகி செல்வம் சேர்த்தவர்கள் உண்டு. சில வருடங்கள் மருத்துவமனைகளில் படுத்திருந்து, சிகிச்சை பெற்றும் பயன்காணாத நோயாளிகளுக்கு தகுந்த யந்திரங்களைக் கட்டி குணப்படுத்திய சான்றுகள் உண்டு.

மந்திர சக்தியும், யந்திர சக்தியும் செயல்பட்டால் ஆகாத காரியமொன்றிருக்காது. பெற முடியாத நன்மையொன்றிருக்க முடியாது. தேவையானவர்கள் போதுமான தபால்களை அனுப்பி எமது மந்திரப் பட்டியல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்த்ர சாதனைகள்

சூரிய சந்திரர்களைப் போன்ற கோளங்கள் இமயமலை போன்ற பாறைகள் முதல் சூக்ஷ்ம மான அணுக்கள் வரை எல்லாமே எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை எல் லோரும் அறிவார்கள். அப்படியானால் அந்த இயக்கத்துக்கு ஆதாரமான ஒரு சக்தி அனைத் திலும் இருக்க வேண்டுமல்லவா? ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகளும் இதை நேர்முகமாக நிருபித்துள்ளார்கள்.

மனிதன் தனக்குள்ளும், தன்னைச் சுற்றி யுள்ள எல்லாப் பொருள்களுக்குள்ளும் அவன் நினைப்பில், அவன் உணர்வில், அவன் உட லில் அணுஅணுவில் நிறைந்திருக்கும் அந்தச் சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில், அதை அறிய முடியாமல் வாழ்கி றான். இதனால் தான் அவன் கவலைகள், துன்பங்கள், நோய்களில் சிக்குண்டு தவித்து, சீக்கிரம் மறைந்து போகிறான். எங்கும் பரவி யுள்ள அந்த சக்தியை மனிதன் பயன்படுத்தத் தெரிந்து கொண்டால் அவன் இம்மண்ணுல கில் விண்ணுலக இன்ப வாழ்க்கையை நடத்து வான். மனிதனையும், அவன் வாழும் உலகை யும் ஆராய்ந்த பௌதிக விஞ்ஞானிகளின் அனுபவமும் இதுவாகும். மனிதன் அப்பிர பஞ்ச சக்தியை வசப்படுத்தி, தன் சித்தத்தில் உறையும் பாபங்களைப் போக்கி, தான் விரும் பியவாறு வாழ்க்கை நடத்தக் கூடிய முறை களை இன்று உலகின் பல்வேறு துறைகளில் மக்களுக்கு கற்பித்து வருகிறான். அவைகளை முறையாகப் பயின்ற ஆண், பெண் பலர் சிறிதும் துன்பம் கலவாத பேரின்ப வாழ்க்கை யில் வாழ்ந்து வருகிறார்கள்.

எங்கும், எதிலும் பரவியுள்ள அந்த மகாசக் தியை, எல்லாம் வல்ல பராசக்தியை விழிப்பித் துச் செயல்படுத்தி, தனக்குகந்தவாறு பயன்ப டுத்திக் கொள்ளும் முறையைத்தான் தந்த்ர சாஸ்திரம் விளக்குகிறது. கல்லில், உலோகங்க ளில், காற்றில் மற்றும் எல்லாப் பொருள்களில் உறையும் உணர்வுச் சக்தியை விழிப்பித்து, செயல்படுத்தி, வசப்படுத்தி தனக்குகந்த காரிய சாதனைகளுக்கு பயன்படுத்திக்கொள் ளும் முறையைத்தான் தந்த்ர சாஸ்திரம் விளக் குகிறது.

கற்களில், உலோகங்களில் பல உருவங் களை அமைத்து, உலோகத்தகடுகளில் பல யந்திரங்களைக் கீறி, பூஜை என்னும் இரசாய ணக் கிரியைகளைச் செய்து, ஜபம் எனும் சப்த அலையைத்தாக்கி, தியானம் எனும் மானச அலையை மோதி அவைகளில் உறையும் தெய்வசக்தியை செயல் நிலைக்குக் கொணர் வதுதான் தந்த்ர சாஸ்திரத்தின் குறிக்கோள். இதன் விஞ்ஞான முறைகளை இந்தக் கட்டு ரையில் நாம் விளக்கிச் சொல்ல முடியாது. இந்த நூலில் நாம் கூறும் தந்த்ர சாதனைகளில் ஏதாவதொன்றை முறையுடன், அக்கறையுடன் செய்பவர்கள் தந்த்ர சாதனைகளில் உண்மை உண்டு என்பதை அனுபவத்தில் கண்டுகொள் வார்கள். ஆகவே, தந்த்ர சாஸ்திரத்தின் முறை யான தத்துவத்தை விட்டு, தந்த்ர சாதனைக ளில் சிலதை மட்டும் நாம் இதில் விளக்குகி றோம்.

## சாதனைகள்

தந்த்ர சாதனைகளில் பலவிதம். அவைக ளில் முக்கியமானவை ஈஸ்வர சாதனை, வனஸ்பதி சாதனை, கிரகபீடா நிவாரண சாதனை, ஒற்றைக்கண் தேய்காய் சாதனை, ரத்தின சாதனை, அபிசார சாதனை, திலக சாதனை, புஷ்ப சாதனை, பழசாதனை, தூபசா தனை, தீப சாதனை, பஞ்ச கர்ம சாதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பல வகைப்படும். இந்த ஒவ்வொரு சாதனையிலும் ஒன்றிரண்டு சாதனைகளை விளக்குவதானாலும் புத்தகம் மிகப் பெரியதாகி விடும். ஆகவே முக்கிய சாதனைகளை மட்டும் இதில் விளக்குகிறோம்.

## ஈஸ்வர சாதனை

தந்த்ர சாஸ்திரத்தின் வியாபகம் கோவில் வழிபாடுகளிலும், உபாசனைகளிலும், பூஜைகளிலும் அதிகமாய்ப் பரவியிருப்பதால் அதன் கருத்தை விளக்கும் முறையில் ஒரு சாதனையைச் சொல்வோம். இந்தச் சாதனையின் கருத்து, எங்கும் பரவியுள்ள பராசக்தியை ஏதாவது ஒரு பொருள் மூலம் செயல்நிலைக்குக் கொணர்ந்து இலேசான ஜடத்தன்மையை உண்டாக்கி அதைக் கொண்டு காரிய சித்திகளைப் பெறுவதாகும். பல உருவக்கடவுளைக் கண்டதாகச் சொல்லும்; கடவுளைக் காணாமலே அவர் அருளால் காரிய சித்திகளைச் சாதித்துக் கொண்டதாகச் சொல்லும் பக்தர்களின் வரலாறுகளும், சம்பவங்களும் இந்த அடிப்படையில் தான் நடக்கின்றன.

முதலில் நீங்கள் கடவுளை ஒரு தனிப்பட்ட உருவத்தில் காண வேண்டுமா? அல்லது காணாமலே அவரை வேண்டி காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டுமா? என்பதை முடிவு செய்து கொள்ளுங்கள். பிறகு ஏதாவதொரு குறித்த உருவத்தின் வடிவில் தான் நீங்கள் கடவுளைத் தொடர்பு கொள்ள முடியுமானால் உங்களுக்கு விருப்பமான கடவுளின் உருவை பஞ்சலோகம் அல்லது சப்தலோக கலவையில் செய்து கொள்ளுங்கள். பார்க்கத் தேவையில்லையானால் அந்தக் குறித்த கடவுளுக்கென தந்த்ர சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள யந்திரத்தை தங்க, வெள்ளி, செப்புத்தகடுகளிலொன்றில் எழுதிக் கொள்ளுங்கள். பிறகு சாதனைக்காக உம்மைப் பயன்படுத்திக் கொள்ள அந்தந்த தெய்வத்துக்குரிய, தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல நாளைக்கு இரண்டு நாள் முன்னதாக பஞ்சகவ்ய ப்ராசனம், தஸஸ்னானம், காயத்ரீ ஜபம் முதலியவைகளைச் செய்து விடுங்கள். மறுநாளும் அதேபோல் காயத்ரீ தர்ப்பனம். குருவந்தனை, ஸ்வப்ன சாதனை முதலியவைகளை செய்து விட்டு, அடுத்தநாள் சாதனைக்கெனத் தனியாக ஏற்பாடு செய்த அறையில் சென்று பிம்பத்தையோ, யந்திரத்தையோ தகுந்த இடத்தில் வைத்து, வைதிக சந்த்யா, தாந்த்ரிக சந்த்யா, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரந்யாசங்கள் செய்து உங்கள் உடலில் அந்தசக்தி விழிப்படைவதற்காக "ஸ்வதேக ப்ராண ப்ரதிஷ்டை" செய்து, அபிஷேகங்கள் செய்து, சோடஸோபசாரங்கள் செய்து, அந்த மூர்த்தியின் தியான மந்திரங்கள் சொல்லி, அதன் மூல மந்திரத்தைக் குறித்த அளவு ஜெபித்து, பிறகு தியான சாதனை செய்யுங்கள்.

இதுவரை சொல்லிய எல்லா முறைகளையும் காயத்ரீ பீடத்தில் அவ்வப்போது நடக்கும் சாதனைகளின் போது பூஜைகளின் போது நேரில் வந்து பார்க்கலாம் அல்லது புத்திகளைக் கேட்டுப் பெறலாம். இனி முக்கிய சாதனையை விளக்குவோம். உருவத்தில் கடவுளைப் பார்ப்பது உங்கள் விருப்பமானால் சாதனையறையில் மிகவும் மந்தமான வெளிச்சத்தை வைத்துக்கொண்டு பிம்பத்தைப் பார்த்தபடி, உங்கள் மனச்சக்தியைக் குவித்து, உங்கள் இஷ்ட தெய்வத்தின் பெயரை மனதில் சொல்லி "நான் உன்னைக் காண வேண்டும்" என்று வேண்டி, வேறு எண்ணமில்லாமல் அதே உருவ பாவனையுடன் இருங்கள். உங்கள் தியானம் நன்றாகக் கைகூடும்போது திடுமென முதலில் உங்கள் சாதனையறையில் தெய்வீக நறுமணம் கமழும். பிறகு மந்த ஒளியில் நிழல்படம் போல் உங்கள் இஷ்ட தெய்வத்தின் உருவம் தெரியும். மேலும் சில நாட்கள் தொடர்ந்து ஆழ்ந்த தியானத்தில் இருந்து வருவீரானால் அந்த உருவம் இன்னும் தெளிவாக உங்கள் கண்களுக்குத் தெரியும். இதற்கு மேலும் உடலில், உலகில் செல்லாதபடி உங்கள் உணர்வு அந்த உருவத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து நின்றால் அது பேசும் சப்தமும் உங்க ளுக்குக் கேட்கும்.

உருவத்தைக் காண்பது உங்கள் குறிக்கோள் அல்லவானால் தியான நிலையில் கடவுள் அருளால் உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டுமோ அதை ஆக்கித்தரும்படி முழு உணர்வையும் ஒன்றுபடுத்தி, மனதில் பிரார்த் தனை செய்து வாருங்கள். உங்கள் பிரார்த்த னைக்குத்தக்க சில நாட்களில் நீங்கள் விரும் பிய அசாத்தியமான காரியமும் ஆச்சரியமான முறையில் நடந்தேறும்.

## மூலிகா சாதனை

இந்த முறையைத் தொடங்குமுன் இதில் சித்திபெற்ற ஒருவரிடமிருந்து முறையான தீக்ஷை பெற்றுக்கொண்டு செய்ய வேண்டும். அப்போதுதான் இதில் வெற்றியடையும் சக்தி யுண்டாகும்.

சில மூலிகைகள் மிக எளிதில் மனிதனின் மனச்சக்தியைக் கொண்டு தெய்வ சக்தியை விழிப்பிக்கச் செய்யும் தன்மை படைத்தவை. சகதேவீ, பிரம்மதண்டி, புனர்நவா, விஷ்ணுகி ராந்தி, துளசி, கொள்ளுக்காய்வேலை, தொட் டாற்சிறுங்கி, வட்டத்திருப்பி, நாயுருவி, வல் லாரை, மஞ்சள் முதலியவை இத்தகையவை. பொதுவாக இந்த மூலிகைகளை மருந்துகளுக் குப் பயன்படுத்துவதுண்டு. தந்த்ர சாஸ்திரத் தில் குறித்த நக்ஷத்திரத்தில் இந்த மூலிகைக ளுக்கு ஆராதனை செய்து, காப்புக்கட்டிப் பிடுங் கிவந்து, இதையே உயிர்கொண்ட கடவுள் சக்தி யாக நினைத்து, மனம் ஒன்றி பிரார்த்தனை செய்தால் அவை காரிய சித்திகளைச் செய்து வைக்கும். பிரார்த்தனை செய்யாமல் மூலி கையை முறையாக சேகரித்து வைத்துக் கொண் டாலே பல அரிய நன்மைகள் உண்டாகும். ஒரு சிறு மூலிகைச் சாதனையை விளக்குவோம். எங்கும் கிடைக்கும் நொச்சி மரத்தின் பக்கத்தில் ஒருநாள் நடு இரவில் சென்று தூப, தீப ஆரா தனை செய்து, கீழ்வரும் மந்திரத்தை 21 தட வை சொல்லி, 21 தடவை அதைச் சுற்றவும்.

மந்திரம் : ஓம் நமோ கணபதயே குபேராய சுதந் தாய பட் ஸ்வாஹா

இப்படி 7 நாள் தொடர்ந்து செய்தபின் அதன் பட்டையை எடுத்து வந்து சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும். இதை வாயி லிட்டு அடக்கிக்கொண்டு நடந்தால் அடியில் உலோகம் இருப்பது தெரியவரும். யாருக்கா வது பலநாள் தணியாத சுரம் இருந்தால் அவர்களுக்கு இதில் ஒரு சிட்டிகை அளவு மூன்று வேளை தர தணியாத சுரம் தணியும். இதைத்தொடர்ந்து பலநாள் உண்டுவர உட லில் அபாரபலம் உண்டாகும்.

இனி கிரக பீடைகளை விளக்கும் ஒரு முறையை விளக்குவோம். தந்த்ர சாஸ்திரங்க ளில் ஒவ்வொரு கிரக சக்தியை கவர்வதற்கும், எதிர்ப்பதற்குமான பல மூலிகைகள் சொல்லப் பட்டுள்ளன. கிரக சக்தியைக் கவரும் மூலிகை யின் அடிப்படையில்தான் சித்தர்களின் "நவக் கிரக மருந்துகள்" செய்யப்பட்டுள்ளன.

ஒருவருக்கு ஒரு கிரக திசையோ, அந்தக்கிர கத்தின் கோசாரமோ, அல்லது பொதுவாக ஜாதக அமைப்பில் அந்தக்கிரகம் அசுபமாக வோயிருந்தால் அதன் தோஷத்தை விலக்க அதற்குரிய சில மூலிகைகளை இரவில் நீரில் ஊறவைத்து, காலையில் அந்த நீரால் குளித் தால் கிரக பீடைகள் சாந்தமாகும். உதாரண மாக, சூரிய கிரக பீடை விலக, அலரி, கோரைக்கிழங்கு, தேவதாரு, தாமரைத்தண்டு களை உபயோகிக்கலாம். சந்த்ர பீடை விலக, அல்லிமலர், பஞ்சகவ்யம் பயன்படும். செவ் வாய் பீடைக்கு சந்தனம், இலந்தையிலை பயன்படும். புதனுக்கு கடுக்காய், நெல்லிக் காய், கோரோசனை பயன்தரும். குருவுக்கு இலுப்பைப்பூ;, வெண்கடுகு, மல்லிகை நல் லது. சுக்கிரனுக்கு திரிபலை, ஏலக்காய், கரிசி லாங்கண்ணி நலம் தரும். சனிக்கு ரசாஞ்சனம், கருப்பு எள், தொட்டாற் சிறுங்கி பயன்தரும். ராகுவுக்கு சித்தரத்தை, வசம்பு, சீந்தில் பயன்ப டும். கேதுவுக்கு கோரைக் கிழங்கு, ஞாழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ, நெய் சட்டிக் கீரை முதலியவை பயன்படும்.

மற்றும் பல விபரங்களுக்கு பீடத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## தூப சாதனை

எல்லா பூசைகளிலும் தூப, தீப, நைவேத்ய ஆராதனைகள் செய்யப்படுகின்றன என்பதை அறிவோம். நெருப்பிலிட அதன் உதவியால் சூக்ஷ்மப்பருக்கைகளாகப் பிரிந்து ஆகாயத்தில் பரவும் பொருள்கள் தம் சூக்ஷ்ம சக்தியால் பல அரிய சாதனைகளைச் செய்வது தான் தூப, சாதனைகளின் இரகசியம். காற்றை சுத்தி செய்ய குங்கிலிய தூபம், சிறந்தது. காந்த சக்தியை வளர்த்து, தெய்வ சக்தியைக் கவர சாம்பிராணி தூபம் சிறந்தது. நோய்களைப் போக்க வில்வம், துளசி இலைகளின் தூபம் சிறந்தது. பூத சேஷ்டைகளை விலக்க, தொத்து நோய்கள் அகற்ற வேப்பிலை தூபம் சிறந்தது. மனக்கோளாறுகளைச் சமப்படுத்த பிராம்பி தூபம் சிறந்தது. வேள்விகளில் சாமக்ரி யைகளைப் போடுவது தூப சாதனையின் பகுதிதான்.

எமது பீடத்தில் தேவதூபம், மானசத்தூபம், பூதஹரதூபம், க்ஷயநாசனத்தூபம், கிருமி நாச னத்தூபம் முதலிய பல தூபங்கள் தயாரிக்கப்ப டுகின்றன.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பிறவியை அறியும் முறை!

மனிதன் தன் பரிணாமக் குறிக்கோளைப் பெற்று முடிக்குமுன் பல பிறவிகளை எடுத்தாக வேண்டும் என்ற நம்பிக்கை உலகின் எல்லா மதங்களிலும் இருந்து வந்திருக்கிறது. அநேக விஞ்ஞானிகளும் கவிகளும் மறுபிறவியில் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவ்வப்பொழுது உலகின் பல பகுதிகளில் தம் முற்பிறவிகளில் செய்ததைப் பற்றிப் பலர் கூறியதும் பல ஆராய்ச்சியாளர்கள் அவ்வுண்மையைப் பல துறைகளில் ஆராய்ந்து சரியே எனக் கண்டதுமான விவரங்கள் பத்திரிகைகளில் வெளிப்படுகின்றன. ஆழ்ந்த ஹிப்னாடிச நிலையில் எவரும் தம் முற்பிறவியின் வாழ்க்கையை வெளிப்படுத்த முடிகிறது என்பது பரீட்சித்தறிந்த உண்மை. இவ்வளவிருந்தும் இன்னும் முற்பிறவியை நம்பாத சிலர் உலகில் இருக்கத் தான் செய்கிறார்கள்.

## சித்தமே காரணம்

மனிதனின் இயற்கை / சுபாவத்தன்மைகளுக்கு அவன் சித்தமே முக்கிய காரணமாகும். அநேக மானச விஞ்ஞானிகள் மனிதனது சித்தத்தின் தன்மையைப் பற்றிப் பல நீண்ட ஆழ்ந்த ஆராய்ச்சிகளைச் செய்து சித்தத்தில் மனிதனின் முற்பிறவிகளின் ஞாபகம் சமஸ்காரங்களின் வடிவில் இருப்பதைக் கண்டிருக்கிறார்கள். மனிதனின் ஒவ்வொரு மன நினைப்பும் வீணாவதில்லை. ஆனால் சித்தத்தில் அவை சூக்கும மனப்பான்மைக்கு ஆதாரம் என்பதை மானச விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். ஆன்மிக நோக்குடன் இக்கருத்தை நாம் காண்போமானால் சித்தத்தில் மனிதனின் இப்போதைய பிறவியின் வரலாறு படிந்திருப்பதுடன் அவனின் பழம் பிறவிகளின் வரலாறுகளும் படிந்திருக்கின்றன என்பதை அறிவோம். சித்தம் மனிதனின் ஒவ்வோர் உடல், மனச் செயலையும் சூக்குமமான சமஸ்கார வடிவில் தன்னில் பதித்து கொள்ளும் தன்மையன என யோகியர்கள் கண்டிருக்கின்றனர். ஆன்ம பரிணாமம் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை அது அனுபவித்த அனுபவங்கள் அனைத்தும் அதன் சித்தத்தில் சமஸ்கார வடிவில் இருக்கின்றன என அவர்கள் கூறுகின்றார்கள். சில யோகசாதனைகள் மூலம் சித்தத்திலுள்ள சமஸ்காரங்களை மனதில் வெளிப்படுத்தி அறியும் முறையை அவர்கள் கையாண்டிருந்தனர்.

சித்தத்தில் தன் பழம் பிறவிகளின் சமஸ்காரங்கள் இருக்கப் பெற்றவர்கள் யாருமில்லை. ஆனால் கடவுள் மனிதனின் தன்சுய முயற்சியுடன் விரும்பி முயன்றாலன்றி அவன் பழம் சமஸ்காரங்கள் அவன் நினைவுக்கு வராதபடி மனிதனின் சித்தத்தைப் படைத்திருக்கின்றார். ஏனெனில் மனிதனுக்குத் தன் முற்பிறவியின் நாடகம் தெளிவாக இருந்தால் அவன் அப்பிறவியில் தாம் சம்பாதித்து வைத்தவைகளைத் தேடியும் அப்போதைய தன் உற்றார் உறவினர்களை நாடிக் கவலைப்பட்டுத் தன் தற்போதைய பிறவியில் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றாமல் போய் எளிதில் அழிந்து விடுவான். அதனாலேயே இயற்கையில் மனிதன் தன் முற்பிறவிகளின் ஞாபகத்தை அறிய முடியாதபடி படைக்கப் பட்டிருக்கிறான். சில யோக சாதனைகள் மூலமாகவே நினைவுக்குக் கொண்டுவரப்பட முடியும். யோக சாதனையால் தம் பழம் பிறவிகள் அனைத்தையும் கண்டறிந்தவர்கள் உலகில் பலர் இருந்திருக்கிறார்கள். சிலருக்குச் சில வகையான மூளைக் கோளாறுகளின் பலனாக இத்தகைய அனுபவம் ஏற்படுவதுண்டு.

இதில் நான் உங்களுக்குக் கூறப்போகும் பரீட்சா முறையில் நீங்கள் உங்கள் பழம் பிறவியின் வாழ்க்கை வரலாறுகள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் உங்கள் முற்பிறவியில் உம்முடன் சம்பந்தப் பட்ட சில மனிதரது பொருள்களின் தோற்றத்தை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரான யோக சாதனைகளை இதில் விளக்கப் போவதில்லை. ஆனால் முற்பிறவி இருந்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கை உங்களில் உண்டாவதற்கான ஒரு சில முற்பிறவி சம்பந்தத் தோற்றங்கள் காணும் வழியையே இதில் கூறப்போகின்றேன். நீங்கள் தகுந்த பக்குவம் பெறும் போது சரியான யோகமுறை உங்களுக்குக் கற்பிக்கப்படும். நம்மாணவர்களில் சிலர் இம்முறையைப் பயின்று தம் முற்பிறவியின் வரலாறு முழுவதையும் அறிந்து பரீட்சித்து உண்மையெனக் கண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்

## மனம் என்ன செய்கிறது ?

நான் கூறப்போகும் சாதனையில் நீங்கள் காணப் போகும் காட்சிகள் முற்பிறவி சம்பந்தப்பட்டவைதான் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள முதலில் மனதைப் பற்றியும் ஒரு பேருண்மையை நீங்கள் செவ்வனே தெரிந்து கொள்ள வேண்டும். மனம் என்ன செய்கிறது ? நினைக்கிறது ? எதை நினைக்கிறது ? கண், காது, வாய், மூக்கு, சர்மம் முதலான ஐம்புலன்களால் பெற்றவைகளைப் பற்றியும் அதன் பயனால் ஆன்மாவில் உண்டான அனுபவங்களைப் பற்றியும் தான் மனம் நினைக்கிறது. ஐம்புலன்களால் அறிந்திராத எதைப்பற்றியும் மனம் நினைக்காது. கற்பனை என்பது கண்ட இரண்டை ஒன்று சேர்த்து அறிவதன்றிப் புதுமையானதல்ல. கனவின் தோற்றங்களையும் இப்படியே கூறலாம். சில கனவுகள் மட்டும் உண்மையான பலன்களால் அறியப்பட்டிராத காட்சிகளைக் கண்டதாயிருக்கலாம். அதைப் பற்றி நாம் இப்போது பேச முடியாது. முடிவாக நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டியது மனிதன் பல மணி நேரங்கள் நிம்மதியாய் நினைத்துக் கொண்டிருந்தாலும் தன் ஐம்புலன்களால் அறியப்பட்டவைகளையே நினைத்துக் கொண்டிருப்பானன்றிப் புதுமையான ஒன்றை மனக் கண்ணில் காண மாட்டான் என்பதுதான். ஆனால் இதே ஆழ்ந்த தொடர்ந்த ஏகாக்கிரகப்பட்ட நிலையில் பழைமையைக் காண வேண்டும் என்ற கருத்துடன் நினைக்கத் தொடங்கினால் அப்போது இது வரை புலன்களாலறிந்திராத ஆனால் சித்தத்தில் குடி கொண்டிருக்கும் பல சம்பவங்கள் சித்தத்திலிருந்து மனதுக்கு வரலாம். அது புதிய காட்சி போல அவனுக்குத் தென்படலாம். ஆகவே, ஒருவன் ஆழ்ந்து எதைப்பற்றியாவது நினைத்துக் கொண்டிருக்கும்போது அவன் இதுவரையில் கண்டிராத ஏதாவதொரு காட்சி அவன் மனதில் தோன்றினால் அது தன் முற்பிறவியில் சம்பந்தப்பட்டதே என்று தெரிந்து கொள்ளலாம். சித்தத்திலிருந்து மனதுக்கு வரும் புதிய காட்சி முற்பிறவி சம்பந்தப்பட்டதே என அறிந்து கொள்ள வேண்டும்.

## சாதனை செய்யும் முறை

ஏகாந்தமான ஓர் இடத்தில் உட்காருங்கள். கண்களை மூடுங்கள். ஏகாக்கிரக தியான சாதனைகளுக்கு உடலைத் தளர்த்துவது போல் தளர்த்துங்கள். பிராணாயாமம் தெரிந்தவர்கள் மூவகைப் பிராணாயாமங்களையும் செய்யுங்கள். மனதை மெதுவாய்ச் சாந்தப்படுத்துங்கள். மனதைக் குறுக்கிடாமல் அதன் விருப்பப்படி எண்ணவிட்டு அவ்வெண்ணங்களில் கவனம் வைத்திருங்கள். எண்ணங்களை நீர் குறுக்கிட்டு மாற்றக்கூடாது. வெறுமனே அவைகளைப் பார்த்தபடி மட்டும் இருக்க வேண்டும். மெதுமெதுவாய் எண்ணங்கள் தோன்றும் வேகம் குறையும். மேலும் தொடரத் தொடர மனம் குவிந்து சித்தத்தின் பக்கம் திரும்பும். இப்போது மனதுக்கும், சித்தத்துக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டுப் போகும். இந்நிலையில் சித்த மனதுக்கு எண்ணங்கள் அனுப்பத்தொடங்கும். இந்த எண்ணங்களை நீங்கள் புதுக் கருத்துக்களாகவும் நூலக உருவங்களாகவும் மனதில் கொள்வீர்கள். இக்காட்சிகளில் புது ஆட்களின் உருவமோ புது இடங்களின் தோற்றமோ புதுப் பொருள்களின் தெரிவோ உண்டாகலாம். இவ்வுருவங்களை இப்பிறவியில் எங்காவது நீங்கள் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டா என்று யோசித்து முடிவு கட்ட வேண்டும். அவைகளை என்றும் இப்பிறவியில் நீங்கள் கண்டதில்லை என்றால் அவை உம் முற்பிறவியுடன் தொடர்பு கொண்டவையே என்பதையே உறுதியாக நம்பலாம்.

## முற்பிறவித் தொடர்புகள்

இச்சாதனையை நியமமாகச் சில தினங்கள் பழகி வந்தீர்களானால் உங்கள் முற்பிறவியில் சம்பந்தப்பட்ட ஆட்கள், இடங்கள், பொருள்களை உங்கள் மனக் கண்முன் தோன்றக் காண்பீர்கள். நீங்கள் இப்படிக் காணும் உருவினுடைய ஒருவனோ ஓர் இடமோ ஒரு பொருளோ முன்பு எங்காவது இருந்ததா என்று விசாரித்துப் பார்த்தால் சில ஆண்டுகளுக்கு முன் அப்படி இருந்ததாக நீங்கள் கேள்விப்படலாம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர் மனம் அறிதல்

உலகின் எல்லா மதக் கதைகளிலும், ஒரு வன் வரும்போதே அவன் என்ன விஷயம் பேசவருகிறான் என்பதை முன்கூட்டி அறிந்து கொண்ட மகான்களது வரலாறுகள் காணப்ப டுகின்றன. பாரத நாட்டில் சில யக்ஷனி உபாசகர்கள், ஒருவன் வந்து உட்கார்ந்ததும் அவன் இன்னதை நினைத்து வந்திருக்கிறான் என்பதைச் சொல்லி விடுகிறார்கள். ''நானும் அதைத்தான் சொல்ல நினைத்தேன்'' என்று நாம் சொல்லப்போவதை நண்பர்கள் சொல்வ தைப் பலர் கதைகளில், பிறர் மனதில் நினைக் கும் நினைப்புக்களை அப்படியே அறிந்து கொள்வதான சம்பவங்கள் நூற்றுக்கணக்கில் உண்டு.

ஒருவனின் தந்தை நிறையப் பணம் சேமித்து, தன் பிள்ளைக்குத் தெரியாமல் மறைத்து வைத்து இருந்தார். திடீரென இறந்து விட்டார். தந்தையிடம் பணம் நிறைய இருந் தும், இருக்குமிடம் தெரியாதபடியால் பிள்ளை வறுமையில் வாடினான். ஆனாலும், தன் தந்தை எங்கோ நிறையப் பணம் வைத்திருக்கி றார் என்பது மட்டும் அவனுக்கு நன்கு தெரியும். ''அப்பா எங்கு வைத்து விட்டுச் சென்றாய்?'' என்று தினமும் தன் இறந்த தகப்பனைப் பார்த்து, ஆவியைப் பார்த்து பிள்ளை கேட்டபடியே இருந்தான்.

ஒரு நாள் இரவில் அவன் பாதி உறக்கநிலை யில் இருந்தபோது அவன் மனதில், தந்தை சொல்வதுபோல் ''பணம் எங்கு அவரிடம் இருக்கிறது'' என்றுகேட்டது. காலையில் கண் விழித்ததும், நேராக அந்த இடம் சென்று தந்தையின் செல்வத்தைப் பெற்றான். இது கற்பனைக் கதையல்ல. நம் நாட்டில் திருநெல் வேலியில் ஒரு சமயம் உண்மையாகவே நடந்த கதை இது. இதுபோல இறந்தவர்கள் செய்திகளைச் சொல்லும் சம்பவம் பல, இன்று பத்திரிகைகளில் செய்திகள் அடிக்கடி வெளிவ ருகின்றன. பக்தர்களின் வாழ்க்கையில் தெய் வங்கள் அவ்வப்போது வழிகாட்டிய விஷயங் கள் பற்றிய கதைகளைக் காணலாம். மேற் சொன்னவைகளில் இருந்து பிறர் மனதில் எழும் எண்ணங்களை நாம் அறிந்து கொள்ள முடியும் என்பதை வாசகர்கள் அறிந்து கொள் ளலாம். இது எப்படி நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ள மூளை, மனம், பிராணன், நரம்புகள், ஆகாயம், ஆகியவை பற்றிய பல தத்துவங்களை அறிய வேண்டும். எமது பயிற் சிப் பாடங்கள் பலவற்றில் இவ்வுண்மைகள் படிப்படியாகச் சோதனைகளுடன் கற்பிக்கப்ப டுகின்றன. இங்கு இதன் தத்துவத்தைச் சுருக்க மாய் விளக்குகிறோம். இது யோகியர் கண்ட உண்மை;

மனித உடல் முழுவதும், மிக நுண்ணிய கண்ணுக்கு புலப்படாத ''செல்கள்'' எனும் சிறு உயிர்ப் பொருள்களால் ஆனது, ஜடப் பொருள் கள், அணுக்களால் ஆனவைபோல், உயிர்க ளின் உடல் செல்களால் ஆனவை. அணுக்க ளில் பலவகையிருப்பதுபோல் செல்களிலும் பலவகையுண்டு. பலவகை அணுக்களின் கூட் டால் பலவகைப் புதிய பொருள்கள் ஆவது போல், பலவகை செல்களின் கூட்டால், உட லின் மஜ்ஜை, மாமிசம், தோல், நரம்பு, எலும்பு போன்ற பொருள்கள் ஆகியிருக்கின்றன. மூளையும் இப்படித் தனிப்பட்டதோர் ''செல்'' (Cell) இனக்கூட்டால் ஆனது. நரம்புகளும் இதே இனச் ''செல்''களால் ஆனவைதான், உடல் இயக்கம், உடல் செல்களின் இறுக்க விளைவுகளால் நடைபெறுவதுபோல், மூளை யின் இயக்கம் அல்லது மன இயக்கம், மூளை யின் செல்களின் இறுக்க விரிவால் ஆகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வகையெண்ணமும், மூளையின் ஒவ்வொரு பகுதிச் "செல்களின் இயக்கத்தால் ஆகிறது. ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்பும் மூளையின் தனியொரு செல் இயக்கத்தால் ஆகிறது. மனதுக்கும், மூளைக்கும் உள்ள தொடர்பை மனச்சலனத்துக்கும், மூளைச் சல னத்துக்கும் உள்ள தொடர்பைப் பலவகைக ளில் விளக்கலாம். ஒவ்வொரு விளக்கமும், இரகசிய வித்தையின், யோக வித்தையின் ஒவ்வொரு இரகசிய விளக்கமாக இருக்கும். ஆனால் நாம் இங்கு இப்போது விளக்க எடுத்த விஷயத்துக்குச் சம்பந்தப்பட்ட ஒரு சம்பந் தத்தை மட்டும் விளக்குவோம்.

எப்போதும் நம் மூளையின் எல்லாப் பகுதிக ளும் இயங்கிக் கொண்டிருப்பதில்லை. ஒவ் வொரு நினைப்பும் மூளையின் தனியொரு பகுதியில் உதிக்கிறதெனக் கண்டோம் அல் லவா? அப்போது அப்பகுதி தவிர, மற்றப் பகுதிகள் இயக்கமற்று இருக்கும் இயக்கமில் லாதபோது மூளைச் "செல்கள்" ஒன்றை யொன்று இடைவெளி இருக்கும்படி விலகியி ருக்கின்றன. இடைவெளியென்று பொருள் அல்ல. மிகமிகச் சிறிய, பூதக் கண்ணாடிக்கும் சாதாரணமாகத் தெரியாத மிகச் சிறிய இடை வெளிதான் இருக்கும். ஒன்றுக்கொன்று சேர்த் துப் பிடித்திருக்கும் பிடிப்புத் தன்மை சற்றுத் தளர்ந்திருக்கும் என்று சொன்னாலும் பொருந் தும், ஆனால் விஷயத்தைப் புரிந்து கொள்வ தற்காக, நாம் இடைவெளியெனக் கூறுகி றோம். அப்படியே சித்தரித்தும் காட்டுகிறோம். இப்படி இடைவெளியிருக்கப் பிரிந்து இருக் கும் மூளைச் "செல்கள்" மனதில் அப்பகுதிக் குரிய, நினைவு எழும்போது இடைவெளி மறைய, ஒன்றையொன்று நெருங்கி வருகின் றன. பிடியை இறுக்குகின்றன என்று சொன் னாலும் பொருந்தும்.

நினைவலை எழாதபோது, மூளைச் செல் கள் பிரிந்தும், பிடிப்புத் தளர்ந்தும், நினைவ லைகள் எழும்போது இணைந்தும், பிடிப்பு இறுக்கியும் இயங்குகின்றன. நினைவுகள் மாறி மாறி யெழ மூளையின் பல்வேறு செல் கள் வேகமாக இப்படி இணைந்தும் பிரிந்தும் இயங்குகின்றன. இதில் முக்கியமாகக் கவ னிக்க வேண்டியதொன்றுண்டு. பலத்த எண் ணங்களின் போது குறைவாகவும் இருக்கிறது.

நாமாக ஒன்றைப்பற்றி நினைக்கும்போது அதற்குரிய மூளைப்பகுதியின் "செல்கள்" வேகமாயும், பலமாயும் இணைந்து, இணைந்து விரிய வேறு சில பகுதிகளின் செல்கள், அதேசமயம், இலேசாக இணைந்து விரிந்து இயங்குகின்றன. இதன் காரணம், ஒன்றைப்பற்றி நினைக்கும்போது அதன் சம் பந்தப்பட்ட வேறு நினைப்புகளும், கூடவே உண்டாகிக் கொணடுள்ளன.

ஆனால் நம் கவனம், நம் நினைப்பிலேயே இருப்பதால் அவைகளை நாம் அறிந்து கொள் வதில்லை. நாம் பலமாக எதிலும் கவனம் வைத்து நினைக்காதபோது, நம்மனதில் ஏதேதோ எண்ணங்கள் தாமாக வந்து கொண் டிருக்கின்றன. இது அந்தந்த மூளைப்பகுதி யின் செல்கள், இயங்குவதால் ஏற்படுகிறது.

உயிருடைய மூளையின் செல்களில் பல எப்போதும், நாம் நினைக்கும் போதும், நினைக்காத போதும், இயங்கிக்கொண்டேயி ருக்கின்றன. அவைகளில் நாம் கவனம் வைத் தால் ஏதோ பல எண்ணங்கள் உதிப்பதாகக் காண்கிறோம். அவைகளில் கவனம் வைக்காத போது, அவைகளைப்பற்றி நாம் யாதும் அறி வது இல்லை. நாமாக நினைக்காதபோது, மூளையின் செயல்களில் இயக்கம் ஏனிருக்கி றது, அதாவது இலேசான எண்ணங்கள் மன தில் உதிக்கின்றன.

நாம் ரேடியோவை இயக்கிவிட்டாலும், இயக்காவிட்டாலும், ரேடியோ அலைகள் நம் வீட்டுக்கு உள்ளும், புறமும் அலைக்கழித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கொண்டுதான் இருக்கின்றன. ரேடியோவைத் திருப்புவதன் மூலம், அலைகளில் ஒன்றை நம் சப்த அலைகளாக மாற்றிக்கேட்கிறோம். எப்படி ரேடியோ அலைகள் யார் கேட்டாலும், கேட்காவிடிலும் எங்கும் அலைக் கழித்துச் செல்கின்றனவோ, அப்படி மனிதர் நினைக்கும் பல அலைகளும் ஆகாயத்தில் எப்போதும் அலைக்கழித்துச் சென்று கொண்டேயிருக்கின்றன. திறந்து வைத்துவிட்டரேடியோப் பெட்டியில் எத்தனையோ அலைகள் தொட்டுத், தொட்டுப் பலவகைச் சப்தங்களை உண்டாக்கிச் செல்வது போல் உயிரோடிருக்கும் மூளை எல்லாம், நினைப்பவைகளைப் பிரதிபலித்துக் கொண்டேயிருக்கிறது. கவனம், ஊன்றல் என்ற ரீயூனிங் செய்தால், மூளையைத்தாக்கும், அந்த அலைகளின் எண்ண உருவங்களை நாம் அறிந்து கொள்ள முடியும்.

வாசகரே! நீர் ஓர் பெரிய அதிஷ்டசாலியென்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் யோகியரின் இரகசிய வித்தையில் ஒன்றை நீர் இப்போது அறிந்து கொண்டீர், இதைமேலும் சிந்தித்து அறிந்து கொண்டால், யோகியரின் சித்துகள் பலவற்றின் செயல்முறைத் தத்துவங்களை நீர் நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

இதுவரை கூறிவந்த உண்மையின் சாராம்சத்தை மறுபடி சுருக்கமாய் கூறிவிட்டு பிறர்மனம் அறிவதற்கான சாதனையை நினைக்கும் நினப்புகள், செயல்களில் இயக்கத்தை உண்டாக்கிக் கொண்டேயிருக்கின்றன. இச் செயல் இயக்கத்தில் நாம் கவனத்தை ஊன்றினால் பிறர் எண்ணங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். நம் கவன ஊன்றுதலில் ஒருதத்துவம் உண்டு. நம் ரேடியோவில் எல்லா ஸ்டேசன்களின் அலைகளும், அலைக் கழித்துக் கொண்டிருப்பினும் நாம் எந்த ஸ்டேஷனுக்கு ''ரியூன்'' செய்கிறோமோ அந்த ஸ்டேஷனின் அலையை மட்டும் சப்தமாய் கேட்பதுபோல், நம் மூளையில் பல மனிதர்களின் எண்ணங்கள் அலைக்கழிந்து கொண்டிருப்பினும் நாம் யாரின் ஞாபகத்தில் கவனத்தை செலுத்துகிறோமோ அவற்றை அறிந்து கொள்ள முடியும்.

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன விஞ்ஞானம்

கடவுள் என்பதன் விளக்கம் யாது? என்று வினாவிய போது உபநிடதம் சொன்னபதில் இது:-

"மௌனம் து தஸ்ய வியாசக்கியானம்" - மௌனமே அதன் விளக்கம். மௌனமாய் இருப்பவர்களே கடவுளை உணரமுடியும் என்பது கருத்தாகும். "பாரத நாட்டில்' எத்தனையோ சாமியார்கள் மௌனமாய், வாய்திறந்து எதையும் பேசாது இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் கடவுளை உணர்ந்து கொண்டுள்ளார்கள் எனப் பலர் நினைக்கிறார்கள். மௌனம் என்றால் வாயால் ஒன்றும் பேசாமலிருப்பதானால், கடவுளை அடைய உலகமக்கள் கஷ்டப்படத் தேவையில்லை. ஒரு நாள் இரு நாள் எதையும் பேசாதிருந்து சகலருமே கடவுளை அறிந்து விடலாமே! மௌன சித்தி பெற்றவரைத்தான் முனிவர் என்கிறோம். பேசாமல் இருப்பவரெல்லாம் முனிவரா?

பிரபஞ்சம் என்ற சொல்லில் என்னவெல்லாமோ அடங்குமோ, அவையெல்லாம் ஓயாது கவனித்துக் கொண்டிருப்பவை, வைரம் போன்ற சாதாரணமான நியமப் பொருள் என்று கருதப்படுபவையும், உண்மையில் தம்முள் அணுஅசைவைக் கொண்டிருக்கின்றன. பொருள்கள் என்பவை வேறொன்றும் அல்ல. சக்திகளின் சலனமென இன்றைய விஞ்ஞானம் நிரூபித்து ஆடல் என்றோ இடம் பெயர்ந்து போதல் என்றோ, பொருள் அல்ல. பொருள்களின் உள்ளேயே நடந்து கொண்டிருக்கும், இடம் மாறாத துடிப்புகள் (molecular vibration) அணுமுதல், பிரமாண்டமான,சூர்ய சந்திரர் முதல் சகலமும் சலனித்துக் கொண்டேயிருப்பவைதான்.

மனித உடலில் சகல உறுப்பும் எப்போதும் சலனித்துக் கொண்டே இருக்கின்றன. இருதயத்துடைய இயக்கங்களை அல்ல, இங்கு குறிப்பிடுகிறோம். அசையாதவையான நகம், மயிர், தோல், எலும்பு முதலிய சகலமும் சலனித்துக் கொண்டேயிருக்கிறதென்பதைப் பலரும் அறிவர். தூங்கும் போதும் சலனித்துக் கொண்டே இருக்கிறது. இதைப்பற்றித் "தூக்க விஞ்ஞானம்" எனும் ஆன்மீகப்பாடத்தில் படித்து அறியலாம். மனிதனின் மற்றைய சூஷ்மக் கருவிகளான புத்தி, சித்தம் அகங்காரம் எனும் அந்தகரணங்களும் ஓயாமல் சலனித்துக் கொண்டே இருப்பவை.

அலைகளால் வேகமாய் சலனித்துக் கொண்டிருக்கும் நிலையில் தன்முகத்தைப் பார்ப்பவன் என்ன காண்பான்! தெளிவாக அவன் முகம் தெரியாது, அன்றித்தன் முகமும் சலனித்துக் கொண்டிருப்பதாகவே அவனுக்குத் தெரியும். மேலே அலைகளால் சலனித்துக் கொண்டிருக்கும் ஒரு குளத்தின் அடியில் உள்ள பொருள், அதன் உண்மை வடிவாகத் தெரியாது. அதுவும் அசைவதுபோல், உருமாறித் தெரியும். அசைந்து கொண்டேயிருக்கும் மனித உடல், மனம் புத்தி, சித்தம், அகங்காரத்துக்கப்பால், அசையாத ஓர் "ஜீவான்மா" இருக்கிறது, அசைந்து கொண்டேயிருக்கும் பிரபஞ்சத்துக்கப்பால் அசைவற்ற ஓர் பரமாத்மா சக்தி இருக்கிறது. மனிதனின் உடல், மனம் ஆகியவற்றை சலனிக்கச் செய்து கொண்டிருக்கும் சக்தி பரமாத்மாவே. ஜீவான்மா - பரமாத்மா இரண்டும். சலனமற்றவையாய் இருந்து, தாம் தாம் சலனிக்காமலே, உடல் மன மாதிகளையும் பிரபஞ்சத்தையும் சலனிக்கச் செய்து கொண்டிருக்கின்றது. இதை உபநிடதம் இப்படிக் கூறுகிறது. "ததேஜதி தன்னை ஜதி" அது சலனிக்கிறது அது சலனிப்பதில்லை.

குளத்தின் அடியில் இருக்கும் பொருளும், மேலேயிருந்து பார்க்கும் முகமும் உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனமில்லாதவையாயிருந்தும், சலனிக்கும் நீரின் வழிபார்த்தால், அவையும் சலனித்துக் கொண்டிருப்பதாய்த் தெரிவது போல், உடல் மனமாதிகளைச் சலனிக்கச் செய்யும் ஜீவான்மா சலனித்துக் கொண்டிருப்பதாயும், பிரபஞ்சத்தைச் சலனிக்கச் செய்து கொண்டி ருக்கும் பரமாத்மா சலனித்துக் கொண்டிருப்ப தாயும் தெரிகிறது. மின்சக்தியால் மின்சார இரயில் ஓடுகிறது. மின்சாரம் ஓடவில்லை. ஓடாமல் இருந்து கொண்டே மின்சாரம் இயந் திரத்தை ஓட்டுகிறது. மின் சக்தி சுழல்வதல்ல. ஆனால் மின் விசிறியை அதுவே சுழலச் செய்கிறது இதுபோல், ஜீவ, பரமான்மாக்கள் சலனமற்றதாயிருந்தும் மற்றவைகளைச் சல னிக்கச் செய்து கொண்டே இருக்கின்றன.

கடலுக்கு அடியில் உள்ள பொருளையும் மேல் தெரியும் முகத்தையும் உள்ளது உள்ளப டியாகப் பார்த்து அறிய வேண்டுமானால் கடலின் அலையை ஏதாவது ஒரு சாதனத்தால் நிறுத்தியாக வேண்டும். குளத்தின் சலனம் ஓயாதவரை அதில் தெரியும் பொருளின் காட் சியும் இயங்குவதாகத் தெரியும் தோற்றமும் உண்மையல்ல. இதைப்போல் உண்மையான தன்னுடைய - ஜீவான்மாவின் வடிவத்தைத் தெரிந்து கொள்ள ஒருவன் விரும்பினால், அதன் சக்தியால் சலனித்துக் கொண்டிருக்கும் உடல், மனம், புத்திகளின் சலனத்தை நிறுத்தி யாக வேண்டும் ''உடல் மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களின் சலனத்தை நிறுத்தி நிற்கும் நிலையே மௌனம்.

இதனால் அவன் நிஜவடிவத்தை ஆத்ம சாஷாத்காரத்தை அறிகிறான். பிரபஞ்ச சல னத்தை நிறுத்தினால் இறைவன் அறியப்படு வான் என்பது இதனால் விளங்கும். ஆனால் இறைவனை அறிந்தவர்கள் எல்லோரும் பிர பஞ்ச சலனத்தை நிறுத்தி விட்டார்களா? எனக் கேள்வி எழும். இதற்கு விடைகாணுமுன் உடல், மன, புத்தி முதலியவைகளின் சலனத் தையெப்படி நிறுத்தமுடியும் என்பதைக் காண் போம்.

இவைகளையெல்லாம் தன்னில் சலனமே இல்லாதிருக்கும் ஜீவான்மாதான் சலனிக்கச் செய்து கொண்டிருப்பதாய் முன்பு கண்டோம். ஆன்ம சக்திதான் இவற்றைச் சலனிக்கச் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே ஆன்மா தன் சக்தியை வெளிப்படுத்தாமல், தனக்குள் ளேயே அடங்கிக் கொண்டு விட்டால் இவைக ளின் சலனம் நின்று விடும். மின் சக்தியைக் கம்பியின் வழிபாயாமல் தடுத்தால் இயந்திரம் நின்று விடும். யோகசாஸ்த்திரத்தின் முதல் இரு சுலோகங்கள் இதே உண்மையை விளக்கு கின்றன. அதாவது:- ''யோகச் சித்த விருத்தி நிரோதம்'' ததா த்ரஷ்கு ஸ்வரூபே அவஸ்தா னம்''

யோகம் என்பது சித்தத்தின் சலனத்தை நிறுத்தல் அப்போது ஆன்மா நிஜ ரூபத்தை உணரும். யோக சாதனையின் இரகசியம் இதுவே. ஆன்ம சக்தியைக் கொஞ்சம் கொஞ்ச மாய் உடலில் இருந்தும், மனதில் இருந்தும், புத்தி சித்த அகங்காரங்களில் இருந்தும், பிரித்து ஆன்மாவிலேயே இருக்கச் செய்தல். ஆன்மா, அதன் சக்தி இவ்விரண்டைப் பற்றிய விளக்கங்களை ''ஆன்ம விஞ்ஞானம்'' (11) உணர்வு விஞ்ஞானம் என்ற ஆன்மீகப்பாடங்க ளில் படித்து அறியலாம். இதைச் சாதிக்கும் முறைகளை ''யோகவித்யா'' பயிற்சியில் பயின்று அறியலாம்.

பரமான்மா பிரபஞ்ச சக்தியாகையால், அது ஜீவான்மாவிலும், அதன் காரணங்களிலும் பர வியுள்ளது. ஜீவான்மா தன் சக்தியைச் சிதறாது தன்னில் நிலைப்படுத்தும்போது தனக்குள், தன் சக்தி சலனத்துக்காதாரமான இறை சக்தி யின் சலனத்தையும் நிலைபெறச் செய்து விடுகிறது. அதனால் தன்னையுணரும் ஜீவான்மா அதே சமயம் தன் தலைவனான பரமான்மாவையும் தன் சக்தியை அடக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தன்வரை வியாபித்துள்ள அப்பரமான்மா சக்திசெயலடங்கி நிற்க அதன் நிஜஸ்வரூபத் தைக் கண்டு களிக்கிறான். இதனால் சல னத்தை அடக்கி, இறைவனைக் காண்பவர் கள், இதற்காகப்பிரபஞ்ச சலனத்தைஅடக்குவ தில்லை. தம் சலனத்தையடக்கும் போதே, தமக்குள் இருக்கும் இறைசக்தியின் சலனத் தையும் அடக்கி விடுகிறான். ஆகையால் அங்கு உண்மையான இறைவனின் தோற்றத் தைக் கண்டுகளிக்கிறார்கள்.

"மௌனம் என்பது தன்னையும் இறைவ னையும் காணும் அளவுக்கு, தன் உடல், மனம் ஆதிகளின் சலனத்தை அடக்கித் தனக்குள் தானாக நிலைபெறல் என்று பொருள்."

இந்நிலை பெற்றவர்களின் உடல், மன இயக்கங்கள் அவைகளின் சுபாவத் தன்மை யால் இயங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் இதை ஆன்ம வசத்தவர்கள் அறிய மாட்டார் கள். அவர்கள் தன்னில் தானாக லயித்து இருக்க அவர்களின் உடல், மனங்கள் தம்மிச் சையாய் இயங்கிக் கொண்டுமிருக்கலாம். அத னால் நிலையடைந்தோர் வாய் பேசாதவர் என்று அர்த்தம் இல்லை.

வாயால் பேசிக் கொண்டிருக்கும் பலரும் உண்மையாய் உள் மௌனம் அடைந்தோராய், ஆன்மசக்தியை வெளிப்படுத்தாது இருந்து வரலாம். அதனால் மௌனத்துக்கும் வாய் பேசாமைக்கும் தொடர்பில்லை. கண்ணன் கீதையில் சொல்கிறான். பேசிக் கொண்டும், உண்டு கொண்டும், பார்த்துக் கொண்டும் சகல காரியங்களைச் செய்து கொண்டும் ஒருவன் மௌனமாய் இருக்கலாம்.

மௌனிகள் தாமரையிலைத் தண்ணீர் போல் ஜகத்தொடும் கூடி வாழ்வார்.

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய பிரமிதங்கள்

உலகத்தின் அதிசயங்களுள் ஒன்று எகிப்திய பிரமிதங்கள். அதில் வைக்கப்பட்ட பிணங்கள் பலகாலம் அழியாமல் இருப்பதையும், அதனுள் வைக்கப்பட்ட காய்கறிகள் பலகாலம் வாடாமல், அழுகாமல் இருப்பதையும் இன்று அனைவரும் அறிவார்கள். அதன் தத்துவத்தை ஆராய்ந்தறிந்த அறிஞர்கள், மனிதன் இருக்க, படுக்கக் கூடிய அளவு பிரமிதங்களைச் செய்து அதில் நோயாளிகளை இருக்க வைத்தல் சில நாட்களில் அவர்கள் முற்றும் குணமடைகிறார்கள் என்பதை அறிந்து, உலகின் சில பகுதிகளில் இத்தகைய பிரமிதங்கள் அமைத்து கொடிய நோயாளிகளை குணப்படுத்தி வருகிறார்கள். எமது சித்தயோக பாடத் தொகுப்பின் 16-வது பாடத்தில் ''பிரமிதங்களின் பெரும் சக்தி'' என்ற தலைப்பில் எழுதிய விளக்கத்தைப்படித்து, பலர் அதன்படி வீட்டில் செய்து வைத்துப் பயனடைந்து வருகிறார்கள்.

பொதுவாக மேலைய நாட்டுப் பிரமித நூல்களில் காணப்படாத பல தத்துவங்களை நாம் அந்தப் பாடத்தில் விளக்கினோம். ஏனென்றால் பிரமித ரகசியம் எகிப்தில் தான் முதல் முதலில் கண்டு பிடிக்கப்பட்டதென்று பலர் நம்புகின்றார்கள். ஆனால் நமது பழைய கோயில்களில் கட்டியுள்ள கோபுரங்கள் பிரமிதங்களின் அடிப்படையில் தான் கட்டப்பட்டவை. ஏனெனில் அதனுள் மூலிகை ரசங்களால் வரையப்பட்ட சித்திரங்கள் பல நூறு ஆண்டுகளாகியும் புத்தம் புதியவையாகக் காணப்படுகின்றன. எப்படி பிரமித அமைப்புக்கு இப்படிப்பட்ட அரிய சக்தி உண்டாகிறதென்பதை இந்தப் பாடத்தில் விளக்குவதல்லாமல் மிகச் சிறிய அளவில் பல பிரமிதங்களைச் செய்து பல வகையில் உபயோகப்படுத்தும் முறைகளையும் விளக்குகிறேன்.

பிரமிதங்கள் உண்மையில் ஒன்றுமில்லாதவை. அதன் சக்தி அதன் அமைப்பில்தான் இருக்கிறது. அதன் அமைப்பில் எப்படி சக்தி உண்டாகிறதென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஹிந்து நாகரீகத்தில் செய்யப்படும் சந்த்யாவந்தனத்தில் மானச பரிக்மா என்றொரு சடங்கு வருகிறது. எட்டுத் திசைகளையும் மேல் கீழ் திசைகளையும் சொல்லி, அத் திசைகளில் என்னென்ன சக்திகள் செயல்படுகின்றன அதன் பயன் யாது என்பதை மந்திரங்களைச் சொல்லி, அந்தந்த பக்கம் மனதை வைத்து இறைவனை வழிபடுவது இந்தச் சடங்கு. அஷ்டதிக் பாலகர்கள், அஷ்ட திக்கஜங்கள் என்பவை போன்ற சங்கேத மொழிகளில் பூமியின் எட்டுத் திசைகளில் செயல்படும் சக்திகள் விளக்கப்படுகின்றன. முதலில் இதைப் பற்றிய ஓர் சிறு விஞ்ஞான விளக்கத்தைக் காண்போம்.

பூமியின் எந்தப் பகுதியில் நாம் நின்றாலும் சூரியன் உதிக்கும் பக்கம் கிழக்கு. மறையும் பக்கம் மேற்கு. சூரியனைப் பார்த்து நின்றால் வலது பக்கம். தெற்கு, இடதுகைப் பக்கம் வடக்கு என அறிவதுடன் இந்த இரண்டு முக்கிய திக்குகளுக்கும் நடுவிலுள்ளதை முறையே தென்கிழக்கு, தென்மேற்கு, வட மேற்கு, வட கிழக்கு என்றும் சொல்வோம். தொன்று தொட்டு ஒரு இடத்தின் இந்த 8 திசைகளும் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டவை என அறிந்திருந்தார்கள். ஒரு வீடு கட்டுவதென்றால் அதன் அக்கினி மூலையில் தென் கிழக்கு மூலையில் சமையலறை சொஸ்ய மூலையில் தென் கிழக்கு மூலையில் பூசை, சாதனை அறை, வடக்கில் குபேர திக்கில் பணம் வைக்கும் அலமாரி இப்படி வைக்க வேண்டுமென்று மனையடி சாத்திரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் சொல்லப்பட்டுள்ளது. பழங்கால சிறு பெருங் கட்டிடங்களெல்லாம் இந்த கணக்குப் படி தான் கட்டப்பட்டு வந்தன. இந்த தத்துவம் நமக்கு ஒரு பெரிய உண்மையை விளக்கு கிறது.

பூமியின் எட்டுத் திசைகளிலிருந்து எட்டு வித சக்திகள் பாய்ந்து கொண்டேயிருக்கின் றன. பூமியின் எந்தவொரு சிறு பகுதியை எடுத்தாலும் அங்கு எட்டு வித சக்திகள் பாய்ந்து கொண்டேயிருக்கின்றன. பூமியின் வடக்கில் தனகாந்த சக்தி, தெற்கில் ரின காந்த சக்தியிருப்பதை அனைவரும் அறிவார்கள். இதேபோல் கிழக்கு, மேற்குகளிலிருந்தும், கோணங்களிலிருந்தும் சில சக்திகள் பாய்ந்து கொண்டேயிருக்கும். பூமியின் எந்தவொரு நூறு புள்ளியிடத்திலும் இந்த எட்டு சக்திகள் பாய்ந்து கொண்டே இருக்கும். இவைகளைத் தான் அஷ்டதிக் பாலகர்கள், அஷ்டதிக் கஜங் கள் என்று புராணத்தில் வருணிக்கப்பட்டுள் ளது. பூமியின் கிழக்கிலிருந்து பாயும் சக்தி மனச் சக்தியை வளர்க்கும். மனதில் சஞ்சலத் தைக் கட்டுப்படுத்தும். மேற்கிலிருந்து பாயும் சக்தி உடலாரோக்கியத்தையும், பலத்தையும் தரும். வடக்கிலிருந்து பாயும் சக்தி செல்வம் முதலிய உலக சுகங்களுக்கு வேண்டிய பொருள்களை உண்டாக்கும். தெற்கிலிருந்து பாயும் சக்தி ஆயுளை வளர்க்கும். அது மரணத் தைத் தவிர்க்கும். தென்கிழக்கு மூலையிலி ருந்து பாயும் சக்தி ஆபத்துக்களிலிருந்து காப் பாற்றும். வடமேற்கிலிருந்து பாயும் சக்தி, பேர், புகழ் கீர்த்திகளை உண்டாக்கும். வட கிழக்கி லிருந்து பாயும் சக்தி பக்தி, தெய்வ சாதனை, தெய்வ அருள் உண்டாக்கும். இந்த சக்திகளை எப்படிப்பயன்படுத்திக் கொள்ள வேண்டு மென்று விளக்குவது இந்தப் பாடத்தின் குறிக் கோள் அல்ல.

பிரமிதம் என்பது நான்கு பக்கங்களை முக் கோணவடிவில் கொண்டது. இந்த நான்கு முக்கோணங்களும் மேற்புறம் ஒன்றாகச் சேர்கி றது. நான்கு முக்கோணங்கள் இணையும் இடங்கள் நான்கு மூலைகள். ஆக பிரமிதம் என்பது பூமியின் எட்டுவகைச் சக்திகளை ஒரு சிறிய இடத்தில் செயல்படச் செய்வதாகும். அட்டை, மரம், கல் முதலிய எதில் பிரமிதம் செய்தாலும் பூமியின் எட்டுத் திசைகளிலி ருந்து பாயும் சக்திகள் தடைப்படுவதில்லை. ரேடியோ, அலைகள் பெரும் கட்டிடங்களை யும் ஊடுருவிச் செல்லவில்லையா? அதனி லும் நுண்ணியதான பூமியின் சக்திகள் எதனா லானது, தடைச் செய்யப்படுமா? பிரமிதத்தின் நடுவில் பூமியின் எட்டு சக்திகளும் மையம் கொண்டு பின் தாண்டிப் பாய்ந்து செல்கின் றன. பிரமிதத்தின் நான்கு உட்புறங்களிலும் பூமியின் நான்கு சக்திகளும், மூலைகளில் நான்கு சக்திகளும், எப்போதும் அலைக்கழித் துக் கொண்டிருக்கும். இதுதான் பிரமிதத்தின் சக்திச் செயல் தத்துவம். ஒரு பிரமிதத்தைக் கொண்டு முன் சொன்ன எட்டு சக்திகளில் தேவையானதைப் பயன்படுத்தி தேவையான நலன்களைப் பெறலாம்.

பிரமிதங்களை நாங்கள் எப்படி செய்ய முடியும் என்று அன்பர்களுக்கு மிக எளிதான முறையில், சிறிய பிரமிதங்களைச் செய்து பயன்படுத்தும் முறையை இதில் விளக்குகி றேன். சுமாரான தடிப்புள்ள அட்டை, லேசான மரப்பலகை எதிலாகிலும், எந்த அளவிலோ சரிசமமான சதுரமான ஒன்றை தயார் செய்யுங் கள். இதை மூலைக்கு மூலையாக வெட்டி னால் நான்கு முக்கோணத் துண்டுகள் உண் டாகும். இந்த நான்கையும் சேர்த்து ஏதாவது கம்பைக் கொண்டு ஒட்டி விடுங்கள். நான்கின் கூர்ப் பகுதிகளும் மேற்பக்கம் நன்றாகச் சேர்ந் திருக்க வேண்டும். இதையும் கம்பு கொண்டு அசையாதபடி ஒட்டி விடுங்கள். சாதாரண பிரமிதம் தயார். சற்று தடித்த அட்டையில் வேண்டுமானால் 2,3 பிரமிதங்களை இப்படிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டு, பிறகு நான்கு கோணங்களும் நன்றாகப் பொருந்தும் வண்ணம் ஓர் சதுர அட்டை அல்லது பலகையைத் தயார் செய்து, அதன் மேல் இதை வைக்க வேண்டும். ஒட்டக் கூடாது. வேண்டுமான போது பிரமிதத்தை இந்த அடித் தட்டிலிருந்து எடுத்துவிடவும். வேண்டுமானபோது பொருந்தவும் செய்ய வேண்டும். இப்படித் தயார் செய்த பிரமிதத்தை வீட்டின் ஒரு பக்கத்தில் நிலையாக வைக்க வேண்டும். அடிக்கடி இடத்தை மாற்றக் கூடாது. இப்படி வைத்தபின் ஓர் திசைகாட்டும் கம்பாசை, இந்த அடித்தட்டின் நடுவில் வைத்து எது காட்டும் வடக்குத் திசையை என்று குறிக்கவும். இதிலிருந்து மற்றவைகளையும் குறிக்கவும். எப்போதும் அடித்தட்டின் வடக்குப் பக்கம், பூமியின் வடக்குப் பக்கமாகவே இருக்கும்படி நிலையாக வைக்க வேண்டும். இதன் மேல் பிரமிதத்தை எப்படி வேண்டுமானாலும் பொருத்தலாம்.

இப்படி தேவையான பிரமிதங்களைச் செய்த பின் எமது குறித்த பாடத்தில் சொல்லியுள்ள படி செய்து அதில் சொன்ன பயன்களைப் பெறலாம். அத்துடன் இந்தப் பாடத்தில் விளக்கிய சக்தித் தன்மைகளின் படி இதைப் பயன்படுத்தும் சில முறைகளைச் சொல்கிறேன். நீங்கள் எப்போதும் உம்முடன் வைத்திருக்கும் பேனா, அல்லது வேறு பொருள், ஒன்றுமில்லாவிட்டால் ஓர் சிறிய செப்புத்தகடு, அல்லது வெள்ளித் தகடு, முதலியதையும், நீங்கள் பக்தராயிருந்தால் விபூதியையும், பெண்கள் நல்ல குங்குமத்தையும் இப்படி அவரவர்கள் தம்முடன் வைத்திருக்கக் கூடிய, உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களை பயன்களுக்குத் தகுந்த பிரமிதத் தட்டின் திக்கில் வைத்து பிரமிதத்தை மூடிவிட வேண்டும். 3, 4 நாள் கழிந்த பின் அதை எடுத்து உபயோகிக்க அந்தந்த பயன் ஏற்படும்.

மனச்சக்தி வளர, சஞ்சலம் குறைய — கிழக்கு
உடல்பலம் ஆரோக்கியம் பெற — மேற்கு
செல்வம் சம்பத்துக்கள் பெற — வடக்கு
ஆயுள் வளர, மரண பயம் தவிர்க்க — தெற்கு
தொழிலில் புதுமைகளை உண்டாக்க — தென்கிழக்கு
ஆபத்து, பயங்களிலிருந்து மீள — தென்மேற்கு
பேரும், புகழும் பெற — வடமேற்கு
பக்தி, சாதனைகளில் வெற்றி பெற — வடகிழக்கு

தேவையானதை அறிந்து கூடுமான பொருளை பிரமிதத்தில் அந்தந்தப் பக்கத்தில் வைத்து 3, 4 நாள் கழித்து எடுத்து உபயோகிக்கவும். அடிக்கடியும் மறுபடி பிரமிதத்தில் வைத்து உபயோகித்து வரலாம். இவையன்றி நாம் முன் குறிப்பிட்ட பாடத்தில் சொல்லியுள்ள படியும் இந்தப் பிரமிதங்களை உபயோகப்படுத்தி வரலாம்.

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய சிகிச்சை

நீங்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவரானாலும், கடவுளை எந்தப் பெயரில், எந்த உருவில் வழிபடுபவராயினும், நாம் சொல்லும் பேருண்மையை மறுக்க முடியாது. அதாவது கடவுள் என்ற பெயரில் இதுவரை தோன்றிய சமயங்கள், நாகரீகங்கள் எப்படி, எப்படி நம்பி வந்திருந்தாலும் அவையெல்லாம் சூரியனையே மறைமுகமாகக் குறிக்கும். நம் மண்ணுலகை பொறுத்தவரை உயிர்களை உண்டாக்கி, வளர்த்து முடிவில் அழிப்பது சூரிய சக்தியே. பரலோகம் மோஷ லோகம் எங்கிருக்கிறதோ, அங்கு எந்த கடவுள் இருக்கிறாரோ, அவர் மண்ணுலகத்தில் எதையாவது செய்ய வேண்டுமானால் சூரியன் வழியாகத்தான் செய்தாக வேண்டும். சூரியன் இல்லாவிட்டால், மண், கல் முதற்கொண்ட பூமியோ, புல் பூண்டு, முதலிய தாவரங்களோ பட்சி, மிருக மனிதர்களோ, கடலோ, கடலில் வாழும் உயிர்களோ எதுவும் இருக்காது.

மனிதன் தன் உடலை செயல்படுத்துவதற்கும், மனதால் எண்ணுவதற்கும் சூரிய சக்தியே காரணம் தாவரங்கள் மற்ற உயிர்களிலும் சூரிய சக்தி செயல்படுகிறது. அணுவின் ஆக்கம், செயல் அணுசக்தி, அனைத்தும் சூரிய சக்தியின் திரிபுகளே. பன்னெடுங்கால் பாரத மக்கள் போற்றி வழிபட்டு வரும் காயத்திரியின் உருவமும், மந்திரமும் சூரிய சக்தியைக் குறிப்பனவே. மற்றொரு உண்மை பெரும்பாலானவர்கள் அறிய மாட்டார்கள். ஒருவனில் சூரிய சக்தி எந்த அளவு செயல்படுகிறதோ அந்தந்த அளவுதான் அவன் அறிவும் இருக்கும். காயத்ரீ மந்திரம் ''அறிவை நமக்குக் கொடுக்கும் சூரியனை தியானிப்போமாக'' என்று சொல்கிறது. சூரியனின் சூடல்ல, வெளிச்சமல்ல அதன் சக்தி ஒருவனில் செயல்படும் அளவுதான் அவனுக்கு அறிவு இருக்கும். இந்து தெய்வத்தை எதையெடுத்துக் கொண்டாலும் அதன் உருவ அமைப்பு சூரியனையே குறிக்கும். ''நல்ல அறிவு வேண்டுபவன் சூரிய மந்திரத்தை ஜெபம் செய்ய வேண்டுமென்பது ஓர் முறை''.

சூரியனை அடிப்படையாகக் கொண்டுதான் நாம் காலத்தைக் கணிப்பிடுகிறோம். வருடம், மாதம், தேதியெல்லாம் சூரியனை பூமி சுற்றி வரும் கணக்கைத்தான் குறிப்பிடுகின்றது. அடுப்புக்கரி, நிலக்கரி, கிரோசின, பெட்ரோல், விறகு முதலியவைகளிலிருந்து வெளிப்படும் அக்னி சூரியனால் அவைகளில் சேமிக்கப்பட்டவையே என்பதை இன்று விஞ்ஞானம் மெய்ப்பித்திருக்கிறது. பூமியும் மற்ற கிரகங்களும் சூரிய சக்தியைக் கொண்டுதான் தாமாகச் சுற்றுவதுடன் சூரியனை வலம் வருகின்றன. சூரியனின் சக்திதான் பிராணவாயுவாக மனிதன் உடலை இயக்கிக் கொண்டிருக்கிறது. சூரியனுடை வெள்ளை ஒளியில் 7 நிறங்கள் இருக்கின்றன என்றறிவோம். இதன் ஒவ்வொரு நிறத்தையும் பிரித்து யேற்று சுழல்வது தான் 7 கிரகங்கள். பரமண்டலத்தில் ஆண்டவன் சன்னிதானத்தில் இருக்கும் 7 தூதர்கள் சூரியனின் இந்த 7 நிறங்களைத்தான் குறிப்பிடுகின்றன.

அந்த பரமண்டலம், கைலாயம், வைகுண்டம் பிரம்மலோகம் முதலியவையே வேறு எதுவும் அல்ல. சூரியமண்டலத்தையே குறிக்கின்றன இன்னும் சூரியனைப் பற்றி தத்துவங்களை எத்தனையோ விதமாக விளக்கலாம். ஆனால் இந்தப் பாடத்தின் குறிக்கோள் அதுவல்ல. இத்தகைய சர்வ வல்லமை பொருந்திய சூரிய சக்தியை நாம் எப்படி பயன்படுத்தலாம் என்பதை விளக்குவதே இந்தப் பாடத்தின் குறிக்கோள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தெரிந்தோ, தெரியாமலோ சூரிய சக்தியைத் தான் பிராண சக்தியாக நம் உடல் மனச் சக்தியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமென்பதை தெரிந்து கொள்ளல் வேண்டும். பொதுவாக நல்ல முறையில் பிராணயாமம் செய்பவர்கள், சாதாரண அளவை விட சற்று கூடுதலான சூரிய சக்தியைக் கவர்ந்து, அதன் பயனாய் நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள், உறுதியான நினைவு, முதலியவைகளை அனுபவிக்கிறார்கள் என்று தெரியும். சூரிய சக்தியாகிய பிராண சக்தியை அதிக அளவில் கவர்ந்து அரிய பல சாதனைகளை புரியும் முறைகளை முடிந்தவர்கள் எமது நேர்முகப் பரீட்சையில் அதைக் கற்றறிந்து பலன்களை அனுபவிக்கலாம்.

அதல்லாமல் இந்தப் பாடத்தில் சூரிய சக்தியைக் கவர்ந்து பல அரிய நன்மைகளைப் பெறும் சில முறைகளை விளக்குகிறோம். ''நிற சிகிச்சைக் கண்ணாடிக் குப்பிகள்'' விற்கப்படுகின்றன. இவைகளில் நீர் ஊற்றி சூரிய ஒளியில் வைத்து, அந்தந்த சூரிய நிறத்தைப் பிரித்து ஏற்று, அதைக் கொண்டு சிகிச்சை செய்யும் முறை இன்று பல நாடுகளில் கையாளப்படுகிறது.

சிலர் சூரியனின் வெயிலைக் கண்டு அஞ்சுகின்றார்கள். எப்போதும் நிழற் பகுதியிலே இருக்க விரும்புகிறார்கள். அங்கும் சூரிய ஒளிக்கிரணங்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதிகாலை சூரியன் அடிவானத்துக்கு மிக உயரத்தில் வருமுன் கூடுமானவரை உடலில் ஆடைகளில் எல்லாம் சூரிய வெயில் படும்படி, கண்ணால் சூரியனைப் பார்க்கக் கூடாது. கூடுமான நேரம் இருங்கள். உடலில் சில கோளாறுகள் இருப்பவர்களுக்கு உடனே அதிக வியர்வை பிடிக்கும். இதைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. இதனால் உடலின் அழுக்குகள் வெளியேறி உடல் சுத்தமாகும். வெய்யில் சற்று உறைக்கும் வரை இப்படியிருந்து பின் சென்று குளியுங்கள். இதை சூரிய ஸ்நானம்'' என்று சொல்வார்கள். மாலை சந்தியா நேரத்திலும் மேற்கு முகம் பார்த்து நின்று இப்படி சூரியஸ்நானம் செய்யலாம். எத்தகைய சர்ம நோய்களும் இதனால் குணமாகும். உடலிலுள்ள அழுக்குகள் வெளியாகி உடல் சுத்தமாகும். நோய்கள் வரா. ஆயுள் வளரும், அறிவு கூர்மையாகும். தெரிந்தவர்கள் இந்த நிலையில் சூரிய நமஸ்கார பயிற்சியைச் செய்யலாம். நல்லதொரு தைலத்தை, நெல்லிக்காய் தைலம் போன்றதை உடல் முழுவதும் லேசாகப் பூசி சூரிய ஸ்நானம் செய்பவர்கள் தேஜஸ் உடையவர்களாய், நீண்ட ஆயுள், நிலையான ஆரோக்கியம், கூர்மையான புத்தி, களங்கமற்ற மனத்துடன் வாழ்வார்கள்.

சுத்தமான ஒரு தாமிர பாத்திரத்தில் சுத்தமான நீர் கொண்டு அதில் சில துளசியிலைகளைப் போட்டு சூரியவொளியில் ஒன்றிரண்டு மணி நேரம் வைத்திருந்த பின் தீர்த்தமாக, மருந்தாக பயன்படுத்துங்கள். அடிக்கடி காய்ச்சல் வரும் தன்மையுடையவர்கள் குணப்படுவார்கள். மற்றும் பல நோய்கள் குணமாகி வரும். வெறும் துளசிக்குப் பதில் எமது மூலிகை சஞ்சீவியை இப்படிப்பயன்படுத்தினால் சர்வரோக நிவாரண சஞ்சீவியாக பயன்படுவதல்லாமல் தெய்வ அருளைக் கவரும் தன்மையும் உண்டாகும். சூரியவொளிக்கு கிருமி நாசன சக்தியுண்டென்று அனைவரும் அறிவர். பூச்சான் படரும் நிலையிலுள்ள கிருமிகளெல்லாம் மடிந்துவிடும். நோயாளிகளின் துணிகளை வெய்யிலில் போட்டால்தான் சுத்தமாகுமென்பதை அனைவரும் அறிவார்கள். இதன்படி நீங்கள் சமைக்க விருக்கும் காய்கறிகளை, தின்பண்டங்களை சற்று நேரம் வெய்யிலில் வைத்தெடுத்து உபயோகியுங்கள். இதனால் அவைகளில் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் நுண்கிருமிகள் அழிவது மட்டுமல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளில் வைட்டமின்கள், புரோடின் முத லியவை சேரும். இதனால் அவை உடலுக்கு அதிக நன்மை தரும்.

ஞாயிற்றுக் கிழமை சூரியன் நாள். அன்று சூரியனுக்குகந்த தானியமாகிய கோதுமையை களியாகக் கிண்டி, சூரிய வெய்யிலில் வைத்து, பிரசாதம் போல் அனைவரும் உண்டு வரலாம். சூரிய நாராயணனின் அருள் கிடைக்கும்.

சுத்தமான நெய்யை நல்ல சூரிய வெய்யி லில் வைத்து உருக்கி, உருகிய பிறகும் நன்றாக வெய்யிலில் வைத்தெடுத்து, உணவு டன் கொஞ்சமாய்ச் சேர்த்துவர எல்லா தாதுப் பொருள்களும் உடலில் நிறையும். இந்த நெய்யில் செய்த பலகாரங்கள் பல நாட்கள் கெடாமலிருக்கும்.

குளிக்கும் நீரை சூரிய வெய்யிலில் காய வைத்துக் குளிக்க அது எல்லா தீர்த்தங்களிலி ருந்தும் திரட்டி நீராக உடலழுக்கை மட்டு மல்ல, பாபங்களையும் போக்கும். சூரிய கிர ணங்களில் எல்லா தீர்த்தங்களில் ஆவியாயி ருப்பதால் நீரில் சூரிய கிரணங்களைப் படச் செய்யும்போது அவைகளிலிருக்கும் தீர்த்த ஆவிகளும் கலப்பதால் அது சர்வ தீர்த்தக் கலப்பாக அமைகிறது. இந்த நீரில் சூரிய சமிதையான எருக்கம் சுள்ளிகளைப் போட்டு இப்படிச் செய்தால் கோசாரப்படி, தசாபுக்திரி யின்படி கெடுதல் செய்வதாயிருக்கும் சூரிய னின் தோஷங்கள் விலகும்.

கை, கால், தலை, உடல் வலி இருப்பவர் களை படுக்கவைத்து, உங்கள் இரு உள்ளங்க ளையும் மேல்பக்கம் திருப்பி, சூரிய வெய்யி லில் சூடு படுத்தி நோயின்பக்கம் தேய்த்து விடுங்கள். சில தடவைகளில் எத்தகையவலி யும், தணியும். விளக்கைக் கொளுத்த பயன்படுத்தும் விளக்கெண்ணை போன்ற எண்ணெய்களை சில நாள் வெய்யிலில் காய்ச்சி வைத்துக் கொண்டு உபயோகித்தால் விளக்கின் சுடர் அதிக பிரகாசமாய் எரிவதுடன் கொஞ்சம் எண்ணெய் நெடுநேரம் நின்றெரி யும். கண்களுக்கும், சூரியனுக்கும் தொடர் புண்டு. சூரியன் முகம்பார்த்தமர்ந்து, சூரிய னைப் பார்க்காமல் நிமிர்ந்து உட்கார்ந்து கண் களை மூடி, இமைகளின் வழியாக சூரிய வொளி புகும்படி சில நிமிடங்கள் உட்கார்ந்தி ருந்தபின் கண்களைத் திறந்து இரு உள்ளங் கைகளையும் கண்ணின் மேல் மூடியபடி சற்று நேரம் இருங்கள். இதனால் பார்வை நாளுக்கு நாள் தெளிவடையும்.

உங்கள் கைகளால் எந்த நோயாளியைத் தொட்டாலும் அவன் குணமடைவான். யாரை கையால் ஆசீர்வாதம் செய்தாலும் அவர்கள் நன்மையடைவார்கள். வாடிப்போகும் செடி யைத் தொட்டாலும் அது துளிர்க்கத் தொடங்கி விடும். இப்படிப்பட்ட அரிய சக்திமானாக நீங்கள் ஆவதற்கான ஓர் யோகியரின் ரகசிய முறையைச் சொல்கின்றேன். அதிகாலையும், மாலையும் சூரியன் பக்கம் பார்த்து நின்று, இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி உள்ளங்கைகளில் நேராக சூரிய கிரணங்கள் படும்படி திருப்பி வைத்து கும்பகப் பிராணயா மம் செய்தபடி பாதங்களை உயர்த்தி, அதே கை விரல்களை மடக்கி, மடக்கிவிட்டு, ரேசகத் தில் சமநிலைக்கு வரவும். இப்படிச் செய்யும் போது சூரிய சக்தி கைவழி அதிக அளவில் உள்ளே புகுகிறது. கைகள் எப்போதும் சூரிய சக்தியை கதிர் வீசுவதாக இருக்கும்.

வாசகர்கள் செய்து பயனடைவார்களென நம்புகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அரிய சக்தி

அன்பைப் பற்றி பேசாத சொற்பொழிவாளர்கள் இல்லை. எழுதாத ஆசிரியர்கள் இல்லை. உபதேசிக்காத சமயத்தலைவர்கள் இல்லை. ஆனால் பெரும்பாலான இவர்கள் ''அன்பு'' என்ற சொல்லை உபயோகிக்கும்போது அதன் பொருளை அறிந்து உபயோகிக்கிறார்களென்று சொல்லமுடியாது. எத்தனையோ சொற்களை நாம் பொருளறியாமல், பழக்கத்தின் பேரில் உபயோகிக்கின்றோம். கேட்பவர்களும் பொருளை அறிந்து கொண்டது போல் நினைக்கிறார்களே தவிர உண்மையில் பொருளை அறிந்து கொள்வதில்லை.

''அன்பு'' என்ற சொல்லின் உண்மைப் பொருளையும் அதன் பயனையும் சரியாக அறிந்து கொண்டால் அன்பைப் பயன்படுத்தாதவர்கள் இருக்க மாட்டார்கள். ஏனென்றால் யோக நூல் அன்பை பெரிய சக்தியாகச் சொல்லியிருக்கிறது. யோகிகள் தம்மைச் சுற்றியிருக்கும் கொடிய மிருகங்களை வசப்படுத்தி வைப்பதும், தம் பார்வையால் விஷப்பாம்புகளையும் தம்பிக்கச் செய்வதுமான அருஞ்செயல்களை அன்பால்தான் செய்கிறார்கள். ஆன்றோர்கள் கண்ட பேருண்மை ''பெருங்கொடியவர்களையும் அன்பால் நல்லவர்களாக்கி விடலாம்'' என்பது.

அன்பால் சாதிக்ககூடிய அரும் நன்மைகளைப் பற்றிஆராயத் தொடங்குமுன் ''அன்பு' என்பதென்ன என்பதைச் சிறிது ஆராய்வோம். கோபம், ஆத்திரம், பொறாமை, சந்தோஷம், இரக்கம், தயை போன்றவைகளைப் போல் அன்பும் ஓர் உத்வேகமாகும். உத்வேகம் அல்லது உணர்ச்சிவசம் ஒருவருக்கு உண்டாகும்போது அவர் தன்னை அறியாமலேயே பல காரியங்களைச் செய்து விடுவார். கோபத்துக்குள்ளானவன் என்ன செய்வான் என்பதை அனைவரும் அறிவோம். மட்டற்ற மகிழ்ச்சிக்கு உள்ளானவர்கள் பலர் தம்மை அறியாமலே பல காரியங்களைச் செய்வதையும் நாம் பார்க்கலாம். அதே போல் ஒருவருக்கு அன்பு உணர்ச்சி செயல் நிலைப்பாட்டால் அவரும் பல அரிய காரியங்களைச் செய்து விடுவார். கோபப்பட்டவன் என்ன செய்வான். ஆத்திரப்பட்டவன் என்ன செய்வான். அதிகமான சந்தோஷத்துக்குள்ளானவன் என்ன செய்வான் என்பதை நாம் அறிவோம். அன்பு செயல்பட்ட ஒருவன் என்னசெய்வான் என்பதைச் சற்று ஆராய்வோம்.

ஒரு தாயாருக்கு ஒரு குழந்தையிடம் அன்பிருந்தால் அந்தத்தாய், மூன்று நாட்கள் பட்டினியிருந்தும் தனக்குக் கிடைக்கப்பெறும் சிறு உணவை தன் குழந்தைக்குக் கொடுத்து அதன் திருப்தியை ஆற்றிக் கொள்வாள். தன் தந்தையிடம் அன்பாயிருக்கும் ஒரு பிள்ளை தன் ஆசை மனைவி, உற்றார் உறவினர் இவர்கள் எல்லாரும் வற்புறுத்தினாலும் செவிசாய்க்காமல் தன் சிறிய வருவாயைக் கொண்டு முதலில் தன் தந்தையை திருப்தி செய்ய முற்படுவான். ஒரு கணவனிடம் மனைவி அன்பாயிருந்தால்தான் தன் பெற்றோர் வீட்டில போட்ட நகைகள், கொடுத்த சீதனங்கள் அனைத்தையும் தன் கணவனின் துன்பத்துக்காக கொடுத்துதவி ஓட்டாண்டி ஆவதில் பெருமகிழ்ச்சி பெறுவாள். ஒரு மனைவியிடம் கணவன் அன்பாயிருந்தால் அவன் தான் சம்பாதிக்கும் பணத்தில் தனக்கென எதையும் செய்து கொள்ளாமல் தன் மனைவியின் இன்பத்துக்காகவே எல்லாவற்றையும் செலவழித்து அதில் இன்பம் காண்பான். ஒரு நண்பனிடத்தில் இன்னொரு நண்பன் அன்பாயிருந்தால் தன் மனைவி மக்கள் திண்டாடுவதைப் பொருட்படுத்தாமல் தன் மாதச் சம்பளத்தை கஷ்டப்படும் நண்பனுக்கு கொடுத்துதவி அதில் இன்பம் காண்பான். தெய்வத்தினிடத்தில் ஒருவன் அன்பு செலுத்துவானேயானால் அவன் உலக இன்பங்கள் எதிலும் இன்புறாமல் தன் இஷ்ட தெய்வத்தை நினைப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில், துதிப்பதில் பேரின்பம் காண்பான். இப்படி அன்பு செலுத்துபவர்கள் தன் நலனுக்காக அன்பு செலுத்தப்படுபவர்களிடமிருந்து எந்த வித கைமாறையும் எதிர்பார்ப்பதில்லை. கருது வதில்லை. பிரதி பலனை எதிர்பார்த்து காட்டும் அன்பு உண்மை அன்பல்ல. உண்மை அன்பு தியாகத்தின் அடிப்படையில் செயல்படுவ தாகும்.

இப்படி கைமாறு கருதாமல் பிறரிடம் உண் மையான அன்பைக் காட்டுபவன் என்ன நன்மை அடைவான்? ஏழைக்கு நிறைய பணம் கிடைத்தால் எப்படி சந்தோஷப்படு வானோ; பல ஆண்டுகள் நோயால் வருந்துப வன் அதிலிருந்து விடுபட்டால் எவ்வளவு நிம்மதியைப் பெறுவானோ அவ்வளவு நிம்மதி யையும், இன்பத்தையும் அன்பு செலுத்துபவன் பெறுகிறான். இது பொதுக் கருத்து. ஆன்மீகக் கருத்து "உண்மை அன்புக்கு உலகமெல்லாம் தம்வசப்படுத்தும் சக்தியுண்டு" என்பதாகும். இதை நீங்கள் கீழ்வருமாறு நேராகப் பரீட்சை செய்து பார்க்கலாம். உங்கள் வீட்டிலோ, பக் கத்து வீட்டிலோ இருக்கும் ஒரு பூனை, நாய் அல்லது கோழி முதலிய எந்தப் பிராணியையா வது நீங்கள் பார்க்கும்போது உங்கள் உள்ளத் திலே உண்மையான அன்பு பாவனையை உண்டாக்கிக் கொண்டு உங்கள் கண்களில் அன்புக் கதிர்கள் வீசும்படி அதைப் பாருங்கள். அதற்குப் பிரியமான உணவைநிறைய கொடுப்பீரானால் அது எப்படி உம்மிடம் குழை யுமோ அப்படி நீங்கள் உணவு ஒன்றும்கொடுக் காமலே உங்கள் உண்மை அன்பைக் கொடுக் கும் போது குழைவதைக் காணலாம்.

யோகியர் தம் ஆஸ்ரமங்களுக்கு சுற்றுப்புறங் களிலே வாழும் துஷ்ட மிருகங்களை கட்டுப்ப டுத்தி வைத்திருப்பது மந்திரங்களாலல்ல. சித் திகளாலல்ல. அவர்களின் அன்புப் பார்வை யால்தான். அன்பு உணர்ச்சியை கண்கள் வழியாக வெளிப்படுத்தும்போது கொடிய மிரு கங்கள் மயங்கி தம் கொடுமைத் தன்மையை விட்டு சாந்தமாக மாறிப் போகும். யோ நூலில் அகிம்சையின் இலக்கணத்தை கூறும் போது, "அகிம்சையாளனின் முன்னால் பகை மைகள் செயல்படா" அதாவது ஒரு புலியும் பசுவும் அவர்களின் பார்வை மண்டலத்திற்கு புலி பசுவைக் கொல்லாது. சண்டை போட்டுக் கொள்ளும் இருவர் அவர்களின் பார்வை மண்டலத்துக்குள் வந்தால் சமாதானம் ஆகிவி டுவார்கள். கீரியும், பாம்பும் அவர்கள் முன் கொஞ்சி விளையாடும். இந்தத் தன்மை அவர் கள் யோக சித்தியால் விளைவதல்ல. அவர்க ளின் அகிம்சையின் அடிப்படையாலாகும். அன்புச் சக்தியால் விளைவதாகும்.

சொல் கேளாத மனைவி, குழந்தை, நண் பன் இவர்களிடம் நமக்குப் பகைமை வரும், கோபம் வரும், ஆத்திரம் வரும், இதன்பயன் அவர்களுக்கும் நமக்கும் தீராத போராட்டம். இதற்குப் பதிலாக நம் உள்ளத்திலே அவர்கள் பால் உண்மையான அன்பை செயல்படுத்தி வந்தோமானால் நாளாவட்டத்தில் அவர்கள் திருந்தி, நம்சொல்லுக்குட்பட்டு, மந்திரத்தால் மயக்குண்டவர்கள் போல் நம்மைப் பின்பற்றத் தொடங்கி விடுவார்கள். பழக்கமில்லாதவர்க ளுக்கு இது முடியாததாகவும் நடக்கக் கூடாதத தாகவும் தென்படும். ஆனால் ஓரிரு முறை பரீட்சை செய்து பார்ப்பார்களேயானால் உலகத் தையெல்லாம் வசம் செய்யும் ஓர் அரிய ரகசியத்தை அனுபவமாகத் தெரிந்து கொள் வார்கள்.

மாணவரே! இன்று முதல் உங்களை வெறுப் பவர்கள், உங்கள் சொல் கேளாதவர்கள், உங் கள் மனம்போல் நடவாதவர்களிடம் உண்மை யான அன்பை செலுத்தி முயற்சி செய்து வாருங் கள். எந்த மந்திரத்தாலும் தந்திரத்தாலும் சாதிக்க முடியாதபடி அவர்களைத் திருத்தி, நல்வழிப்ப டுத்தி உங்கள் வசப்படுத்தி உங்களுக்காக எதை யும் செய்யக்கூடிய மனப்பான்மை கொண்டவர் களாக மாறிப் போவார்கள். அன்பின் பெரிய சக்தி இது. அனுபவித்து வாழ்க்கையை இன்பம யமாக்கிக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன ஆகாயத்தின் மாமர்மம்

## ஆகாய மனம் உண்டு

''மனிதன்'' என்ற சொல் பொதுவாக தனிப் பட்ட மனதைத்தான் குறிக்கும். மனிதனைப் பற்றி என்னவெல்லாம் சொல்கிறோமோ அவையெல்லாம் அவன் மனதைப் பற்றிய விளக்கங்களேயாகும். அவன் நல்லவன், கெட் டவன், படித்தவன், மூடன், கோபக்காரன், குடிகாரன், சம்சாரி, சன்யாசி, பக்தன், நாத்தி கன், அரசன், ஆண்டி இப்படி மனிதனைப் பற்றி என்னவெல்லாம் சொல்வோமோ அவை யெல்லாம் அவனவன் மனதைப் பற்றிய விளக் கங்களே, மனதைச் செயல்படாமல் செய்து விட்டால் மனிதன் இறந்துவிட்டான் என்று பொருளல்ல. நாள்தோறும் இரவில் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது மனிதன் இறந்து விட்டான் என்போமா? அந்த நிலையில் அவ னைப் பற்றிய ஏதும் செயல்படுவதில்லை. அவ்வளவே, ஆனால் மறுபடி மனதுடன் தொடர்புகொண்டு மனிதன் விழிக்கிறான். உடனே அவன் குணங்கள் செயல்படத் தொடங்குகின்றன. இதிலிருந்து ஓர் உண்மை யைத் தெரிந்துகொள்ள வேண்டும். மனிதன் மனதில் தொடர்பு அற்று இருக்கும்போது அவன் குணங்கள் ஏதும் செயல்படுவதில்லை. மனதுடன் தொடர்பு கொள்ளும்போதுதான் செயல்படத் தொடங்குகிறது. ஏனென்றால் அக்குணங்கள் மனதில் தான் இருக்கின்றன. அவனில் இல்லை. மயக்க மருந்து கொடுத்து மனதைச் செயல்படாமல் செய்யும் போதும் மனித குணங்கள் செயல்படுவதில்லை. மயக் கம் தெளிந்து மனம் செயல்படும்போது தான் அவன் குணங்கள் செயல்படுகின்றன. இன் னும் இவை பற்றிய அநேக உண்மைகளை எமது ''மானச யோகம்'' என்ற நூலில் படித்தறி யலாம். ஆக மனம் தான் மனித குணங்களுக் கும், நன்மை, தீமைகளுக்கும், வெற்றி தோல் விகளுக்கும் அடிப்படை என்பதை இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதனை மனிதனாக வாழச் செய்யும் மனம் உடலில் மூளையில் இருப்பதாகக் கருது வதும் தவறு. அப்படியானால் தூக்கம், மயக் கம், என்ற நிலைகள் இருக்கா. எப்போதும் மன இயக்கம் இருக்கும். இசைக்கருவியை இயக்கும் கலைஞன் வேண்டிய போது அக்கரு வியை இயக்கி, வேண்டிய பாட்டை உண்டாக் குவது போல் மனம் விழிப்பு நிலையில் மூளையை இயக்கிச் செயல்படுகிறது. தூக்கத் தில் மூளையின் தொடர்பை விட்டுவிடுகிறது. ஆனாலும் உள்மனமும், உடலுணர்வு மனமும் எப்போதும் இயங்கிக் கொண்டுதானிருக்கிறது. வெளிமனம் தான் விழிப்பு, கனவு தூக்க நிலைகளில் மூளையைப் பற்றியும் படாமலும் செயல்படுகிறது. இவை பற்றிய முழு விளக் கங்களை எமது ''மும்மனம்'' என்ற பாடத்தில் படித்தறியலாம்.

நினைப்புகளாக எண்ணங்களாகச் செயல்ப டும் வெளி மனத்தை நாம் சில சமயங்களில் தான் செயல்படுத்துகிறோம். மற்றும் விழிப்பு நிலையில் அது தானாகப் பல எண்ணங்களை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறது. தன் னிச்சையாக மனம் இயங்குவதை ''மன சல னம்'' என்கிறோம். இந்த சலனத்தைக் கட்டுப் படுத்துவது அரிதிலும் அரிது என அனைவரும் அறிவர். இதன் தன்னிச்சையான சலனத்தைக் கட்டுப்படுத்தி ஒருவழிப்படுத்தினால் அதன் புத்தியால் பல அரும்பெரும் காரியங்களைச் சாதிக்கலாம் என்பதை இன்று அனைவரும் அறிவார்கள். நாம் வெளியிட நினைத்திருக் கும் ''மனப் பயிற்சிகளும், சாதனைகளும்'' என்ற பாடத் தொகுப்பில் இரண்டு நொடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சலனத்தைக் கட்டுப்படுத்தினாலும், இரண்டு நொடிகள் ஒரே எண்ணத்தை எண் ணச் செய்தாலும், அதனாலேயே பல நன்மை கள் கிடைக்கும் என்பதிலிருந்து உயரிய தாரணை, தியான சமாதிப் பயிற்சிகள் வரை பெறக்கூடிய தன்மைகளை விளக்குவோம். ஆக இங்கு மனம் சலனத்தன்மை படைத்தது என்பதை தெளிவாக அறிந்துகொண்டால் போதும்.

மனச்சலனம், மனதில் எண்ணங்கள் எத னால் எப்படி எழுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மன எண்ணங்களுக்கு முதற்காரணம் ஐம்பொறிகள், கண்ணில் படும் பொருள்களைப் பற்றி, காதால் கேட்கும் ஒலிக ளைப் பற்றி முகரும் வாசனைகள், ருசிக்கும் சுவைகள், தொட்டறியும் வெப்ப தட்பங்களை, பற்றித்தான் விழிப்பு நிலையில் உலகச் செயல் களில் ஈடுபட்டிருக்கும் போது எண்ணங்கள் உண்டாகின்றன. நினைப்புகளில் ஏறத்தாழ 80 சதம் இத்தகையவையே. இரண்டாவது நாம் சிறப்பாக எந்தப் பொறியோடு இணைந்திருக் காத நிலையில் தானாகப் பல எண்ணங்கள் தோன்றுகின்றன. அவைகளில் சில நம் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும். நாம் சும்மா இருக்கும்போது நேற்று நடந்த ஒரு துன்பச் சம்பவத்தை மனம் வெளிப்படுகிறது. அப் போது அந்த நிலை நமக்குத் தேவையில்லாதி ருந்தும், துன்ப உணர்ச்சியை உணரத் தொடங் குகிறோம். இதே நிலையில் அங்கே போக லாம். இதைச் செய்யலாம் என்ற எண்ணங்கள் உண்டாகின்றன. எண்ணங்கள் வசமாய் செயல்படும் நாம் உடனே அந்த எண்ணத் துக்கு உட்பட்டு செல்லவோ செய்யவோ செய்கிறோம். இதனால் ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம். அல்லது எதிர்பாராத ஒரு நன்மை யும் உண்டாகலாம். எதிர்பாராத துன்பங்களை யும், ஆபத்துக்களையும், நல்லவைகளையும், அதிர்ஷ்டத்தையும் உண்டாக்குவது இத்த கைய தானாக எழும் எண்ணங்களே, இதைச் சமஸ்காரம் இயக்கம் அதாவது சித்தத்தின் தூண்டுதலின்படி மனம் செயல்படுதல் என்று சொல்லுவோம்.

மேற்சொன்ன இரண்டு வகை இயக்கங்க ளல்லாமல் வேறொருவகையிலும் மனம் இயங் கும், நாமாக திடுமென தூரத்திலிருக்கும் நம்மை நெருங்கிய உறவினர்களைப் பற்றிய நினைப்பு உண்டாகிறது. பல காலத்துக்குப் பிறகு திடுமென அவர்கள் நினைப்பு நமக்கு ஏன் உண்டாகிறது என்று ஆராய்ந்தால் அதே சமயம் அந்த உறவினர் அல்லது நண்பர் நம்மைப்பற்றி நினைத்தாரென்று தெரியவரும். சில சமயங்களில் அப்படிப்பட்ட நினைவுகள் சம்பந்தமில்லாமல் நம்மில் பயத்தையோ, தூக் கத்தையோ உண்டாக்கும். இதன் காரணத்தை ஆராய்ந்தால் யாருடைய எதிர்பாரா நினைப்பு, தானாக உதித்து நம்மில் உணர்ச்சியைத் தூண் டியதோ, அவர் ஏதோ ஒரு துன்பத்தில் வேத னைப்பட்டு நம்மை நினைத்தார் என்பது தெரியவரும். ஒருவருடைய தாயார் வேற்றா ரில் இருந்து திடுமென ஏதாவது துன்பத்தை அனுபவிக்க நேர்ந்து, தன் மகனை ஆழ்ந்து சிந்தித்தால் அப்போது மகன் சும்மாயிருந்தால் அவன் மனதில் தன் தாயைப் பற்றிய நினைப் பும், கூடவே ஏதோ நேர்ந்துவிட்டது போன்ற உணர்ச்சியும் உண்டாகும். ஒவ்வொருவரு டைய வாழ்க்கையிலும் இப்படிப் பல அனுப வங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் இது ஏன் ஏற்பட்டது என்பதை தெரிந்து கொள்ள யாரும் முன்நிற்பதில்லை. அதாவது தூரத்திலிருக்கும் ஒருவர் நம்மைப் பற்றி நினைக்கும்போது நமக்கு அவரின் நினைப்பு வருகிறது. அவர் ஏதோ பெரிய துன்பத்திலிருந்து அதை நினைப்பதாக நம்மைக் குறிவைத்தால், அவை பற்றிய நினைப்பு வருவதுடன், அவருக்கு ஏதோ துன்பம் வந்திருப்பதான உணர்ச்சியும் உண்டாகிறது. இதேபோல் நாம் யாரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியாவது ஆழ்ந்து நினைத்தால் அவருக்கு அந்த நினைப்பு உண்டாகிறது.

இதில் இன்னும் ஒரு பெரிய முறை. ஒரு தகப்பனாருக்கு மூன்று பிள்ளைகள், மூவரும் வெவ்வேறு ஊர்களில் வசிக்கிறார்கள். திடுமென தகப்பனாருக்கு ஏதோ துன்பம் உண்டாகிறது. அவர் தன் மூன்று பிள்ளைகளையும் மாறி மாறி ஆழ்ந்து துன்பம் கலந்த எண்ணங்களால் எண்ணுகிறார். அப்போது மூன்று பிள்ளைகளின் மனதிலும் தன் தந்தைக்கு ஏதோ துன்பம் உண்டாகிறது. மனோ தத்துவ நூல்களில், பத்திரிகைகளில் இதுபற்றி நூற்றுக்கணக்கான அனுபவ செய்திகளைக் காணலாம்.

ஒருவர் மற்றொருவரைப் பற்றி நினைக்கும் அதே நேரத்தில் மற்றவர் மனதில் அவரைப் பற்றிய நினைப்பு எப்படி வந்தது? ஒருவர் துன்பம் அனுபவிக்கும் போது இவர் துன்பம் அனுபவிக்கிறார் என்ற உணர்ச்சி கலந்த எண்ணம் மற்றவர் மனதில் எப்படி உண்டாயிற்று? இத்தகைய கேள்விகளுக்கு இக்காலத்தில் விளக்கம் பெறுவது கடினமல்ல. ஏனென்றால், ''மானதத் தந்தி'' என்ற சாதனை மூலம் இந்த உண்மை உலகமெல்லாம் அறியப்பட்டிருக்கிறது. அதாவது எப்படி அமெரிக்காவிலே ஒருவர் பாடும் பாட்டை உடனுக்குடன் இந்தியாவிலுள்ளவர்கள் கேட்க முடிகிறதோ, எப்படி தூரத்தில் நடைபெறும் நாட்டியங்களை உடனுக்குடன் டெலிவிஷன் மூலம் அறிகிறோமோ, அதே தத்துவத்தில் தான் ஒருவரின் எண்ணம் பிறர் மனதில் உதிக்கிறது. ஒலி ஒளியலைகள் ஆகாயப்பரப்பில் பரவித்தான் பிற மனங்களில் பிரதிபலிக்கின்றன. ஒலி, ஒளியலைகளை ஏற்றுப் பரவச் செய்ய வானப் பரப்பில் ஒலி, ஒளி நுண்பரப்புகள் இருக்கின்றன. இதேபோல் எண்ணங்களை பரப்ப வானம் முழுவதும், ''மன ஆகாயம் மனவெளி '' இருக்கிறதென ஆன்றோர்கள் கண்டார்கள், வெட்டவெளி என்று நாம் பார்க்கும் வானப்பரப்பில் ஒலி, ஒளியலைகளைப் பரப்பும் ஆகாயம் இருப்பதுபோலவே எண்ணங்களைப் பரப்பும் ''மன ஆகாயம்'' இருக்கிறது. வானப்பரப்பில் மனிதரின் நல்ல கெட்ட எண்ணங்களை ஏற்றுப் பரப்பும் ''மன ஆகாயம்'' இருக்கிறதென்பதை கண்களால் பார்த்தறிய முடியாது. ஒலிகளைப் பரப்பும் ஆகாயத்தை அதன் செயல் மூலமாக அறிந்து கொள்வதைப்போல மன ஆகாயத்தையும், அதன் செயல் மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் நினைக்கும் நினைவலைகள் பிறரின் மனதில் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் உண்டாக்குகின்றன என்று நாம் முன்பு சொன்ன விளக்கங்களே மன ஆகாயம் இருப்பதற்கு முக்கிய சான்றாகும்.

நாம் சுவாசிக்கும் காற்று நம்மைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்திலிருந்து பெறப்படுகிறது. நம் உடலை இயக்கும் பிராணன் நம்மைச் சுற்றியுள்ள பிராண மண்டலத்திலிருந்து உடனுக்குடன் வருகிறது. பொருள்களின் அமைப்பை வெளியிலிருந்து வந்து கண் வழி புகும் ஒளிகளால் அறிகிறோம். வெளியிலிருந்து செவி வழி புகும் ஒலிகளைக் கொண்டு சப்தங்களை அறிகிறோம். வெளியிலிருந்து கிடைக்கும் காய்கறிகளைக் கொண்டு உடலுக்கான அனைத்தையும் பெறுகிறோம். இதே போல் மனிதனின் மனம் மன ஆகாயத்திலிருந்து செயல்படுகிறது. காற்று மண்டலத்திலிருந்து ஏற்கும் பிராணனை உடலியக்கத்துக்குப் பயன்படுத்துகிறோம். உணவுப் பொருள்களை உண்டு உடல் தாதுக்களாக மாற்றுவோம். இதேபோல் மன ஆகாயத்திலிருந்து நமக்கெனச் செயல்படும் மனத்தில் நம் எண்ணங்களை செயல்படுத்துகிறோம். மனிதன் தன்னை சுற்றியுள்ள இயற்கையால் உருவானவன், அவ்வியற்கையால் இயங்குபவன், மன ஆகாயம் இருப்பதால் தான் மனிதனில் மனம் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள், இறைவன் என்ன என்று இப்போது பார்க்கத் தேவையில்லை. இதுதான் பிரபஞ்சத்தைப் படைத்தது என எல்லா சமயங்களும் ஒப்புக் கொள்கின்றன. இறைவன் எப்படி பிரபஞ்சத்தைப் படைத்தான் என்பதை விளக்கும் எல்லா சமயங்களும் நேராகவோ மறைமுகமாகவோ ஒரு மகிமையைச் சொல்கின்றன. அதாவது இறைவன் மனதால் பிரபஞ்சத்தைப் படைத்தான் என்கிறது உடநிடதம். "இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்க நினைத்தான்" என்கிறது. கிறிஸ்தவ, இஸ்லாமியச் சமயங்கள் உலகம் உண்டாகக் கடவது என்று கடவுள் நினைத்தார், உலகம் உண்டாயிற்று" என்கிறது. இவையெல்லாம் இறைவன் தன் மனதால் பிரபஞ்சத்தை படைத்தார் என்பதை வலியுறுத்துகின்றன. இறைவன் எங்கும் நிறைந்தவன், அனைத்தையும் இயக்குகிறானாகையால் அவன் மனம் எங்கும் நிறைந்திருக்கிறது என்பது தெரிகிறது. இந்த மனம்தான் ஆகாயமனம். ஏனென்றால் ஆகாயம் எங்கும் நிறைந்தது. அதன் சக்தியான மனமும் எங்கும் நிறைந்திருக்கிறது. இன்னொரு பெரிய இரகசியம் இறைவன் கடவுள் தன் மனதால் மனச் சக்தியால் தான் பிரபஞ்சத்தை ஆக்கி அமைத்து, அழிக்கிறார். மனிதன் தன் மனதால் தான் பிறப்பு, வளர்ச்சி, வாழ்க்கை மரணங்களுக்கு உள்ளாகிறான். மனதைக் கடந்தால் பிறப்புமில்லை. இறப்புமில்லை.

## 2. மனித மனமும், ஆகாய மனமும்.

நாம் வாழும் இப்பிரபஞ்சத்தில் உள்ளும் புறமும் மனிதனின் மனதுக்கு ஆதாரமான ஓர் அண்ட மனம், ஆகாயமனம் இருக்கிறதெனக் கண்டோம். அந்த ஆகாய மனத்தில் ஒரு சிறு பகுதிதான் மனிதனின் மனம் என்பதையும் பார்த்தோம். மனித மனத்துக்கும் உள்ள தொடர்பை இப்போது கண்டோம். மனிதனின் மன இயக்கத்தை எண்ணங்கள் என்று சொல்கிறோம். மின்சாரம் காந்தம் போல் அலைவடிவில் செயல்படுகின்றது. மின்சார அலைகள் அதன் உந்து சக்திக்குத் தக மந்தமாகவோ, வேகமாகவோ அலைக்கழிவதைப் போலவே எண்ண அலைகளும் மனதின் சக்திக்குத் தக மந்தமாகவோ, வேகமாகவோ ஆகாய மனத்தில் பரவுகின்றன.மின்சார அலைகள் தன்னில் கலக்கும் பாட்டுக்கள்,வசனங்களை அப்படியே பரப்புவது போல் எண்ண அலைகள் நல்லவையாகவோ, கெட்டவையாகவோ மன ஆகாயத்தில் பரவுகின்றன. மின் அலைகள் ரேடியோ, டெலிவிஷன்களில் தாங்கி வரும் ஒலி, ஒளிகளைப் பிரதிபலிக்கச் செய்வது போல் மனிதனில் நல்ல, கெட்ட எண்ண அலைகள் பிற மனங்களில் அதே போன்ற எண்ணங்களைப் பிரதி பலிக்க செய்கின்றன. ரேடியோவில், திருப்பி வைத்திருக்கும் ஸ்டேஷனின் அலைகள் மட்டும் தான் பிரதிபலிப்பது போல் நல்ல எண்ணங்கள் பிறரின் கெட்ட மனங்களிலும் தான் பிரதிபலிக்கும். ஒலியலைகள்,ரேடியோக்களில் பிரதிபலித்தாலும், இல்லாவிட்டாலும் ஒலியாகத்தில் பரவிக் கொண்டுதானிருக்கும். மன அலைகள் பிறர் மனங்களைத் தாக்கினாலும், தாக்காவிட்டாலும் மன ஆகாயத்தில் பரவிக் கொண்டுதானிருக்கின்றன. நம் மனதைத் தாக்கினாலும், தாக்காவிட்டாலும் பிறரின் பலமான எண்ணங்கள் நம்மை ஊடுருவிச் சென்று கொண்டுதானிருக்கின்றன. நம் பூமியின் ஆகாய முழுவதும் நூற்றுக்கணக்கான ஒலி,ஒளியலைகள் பரவிக்கொண்டே இருப்பதுபோல் பூமியைச் சுற்றியுள்ள மன ஆகாயத்தில் இப்போது வாழும் மக்களனைவரினதும் எண்ணங்கள் பரவிக் கொண்டிருக்கின்றன.

இரண்டு நாட்களுக்கு முன்பாக நாம் என்ன செய்தோம் என்பது நமக்கு நினைவிருக்காவிட்டாலும், மனதை அதன் சம்பந்தத்தில் ஈடுபடுத்தினால் உடனே நினைவுக்கு வருகிறது. நாம் நம் குழந்தைப் பருவத்தில் எங்கிருந்தோம்,எப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி இருந்தோம் என்பதை உடனே நாம் நினைவுபடுத்த முடியாவிட்டாலும்,மனதை அதன் சம்பந்தமாக ஒருமுகப்படுத்தினால் தெளிவாக நினைவுக்கு வருகிறது.நம் சபையில் சாதனை பயின்ற சில மாணவர்கள் மனதை அசையாமல் ஒருமுகப்படுத்தி அன்னையின் வயிற்றில் எப்படியிருந்தார்கள் என்பதையும் நினைவுபடுத்தியிருக்கிறார்கள். ஆழ்ந்த ஹிப்னாடிச நிலையில் கிடத்தும் போது ஒருவர் தன் முற்பிறவியில் எங்கிருந்தார் என்பதையும் உள்மனதாலறிந்து சொல்கிறார். இன்று இப்படி ஹிப்னாடிச நிலையில் கிடத்தி கடந்து போன இரண்டு மூன்று பிறவிகளின் அமைப்பையும் கூறக்கேட்டு ஆராய்ச்சியின் போது அவை சரியாயிருப்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். மனிதனின் கடந்த கால சம்பவங்கள் எப்படி நினைவுக்கு வருகின்றன? ஒவ்வொரு மனிதனின் கடந்த கால சம்பவங்களும் அவன் மன ஆகாயத்தில் அழியாமல் இருந்து வருகின்றன.

மனதை ஒருமுகப்படுத்தி அந்த மன ஆகாயத்தில் செலுத்தும்போது அவை அப்போது நடப்பது போல் மனதில் வெளிப்படுகின்றன. ஞாபக சக்தியை நன்றாக வளர்த்து கொண்டவர்கள் தம் கடந்த கால வாழ்க்கை அனைத்தையும் தெளிவாக இப்போது நினைவு கூர முடியும். ஞாபகப்படுத்துமுன்பாக மனதில் இருந்திராத சம்பவங்கள் அழிந்து போயிருந்தால் ஞாபகத்துக்கு எப்படி வரும்? உண்மையில் மனிதனின் நினைப்புகளும், செயல்களும் அழிந்து போவதில்லை. அவை மனிதனின் ஆகாய மனதில் சித்தத்தில் நுண்ணிய மின்வடிவில் இருக்கின்றன. அவன் முதல் முதலாகப் பரிணாமமடையத் தொடங்கியதிலிருந்து இன்றுவரை அவன் எடுத்த பிறவிகள் அவைகளில் அவன் வாழ்ந்த வாழ்க்கை முறைகள் அனைத்தும் அவன் சிதாகாசத்தில் அழியாமல் இருக்கின்றன. இதை பரிணாமவாதி டார்வினும் ஒப்புக் கொள்கிறார். அவர் சொல்லுகிறார் ''மனிதன் குரங்காய் மற்ற விலங்குகளாய் இருந்த சமஸ்காரங்கள் அவன் சித்தத்தில் அழியாமல் இருக்கின்றன. தகுந்த சூழ்நிலை ஏற்பட்டால் அந்தக் குணங்கள் அவனில் செயல்படும், ''யோக நூல் சொல்கிறது, ''சமஸ்கார சாஷாத்கரணாத் பூர்வ ஜாதி ஞானம்'' சமஸ்காரங்களை நேருக்கு நேர் கண்டால் பழைய பிறவிகளின் தன்மையெல்லாம் விளங்கும்''.யோக சாதனையால் தம் முப்பிறவிகளின் வாழ்க்கை முறையை அறிந்தவர்கள் இருக்கிறார்கள். மனித மன ஆகாயத்தில் - சிதாகாசத்தில் அவன் வாழ்ந்த வாழ்க்கை முழுவதும் அழியாமல் இருக்கிறது.

மனித மனம் ஆகாய மனத்தின் ஒரு பகுதியே எனக் கண்டோம்.அவன் சிதாகாசத்தில் வாழ்க்கை வரலாறு முழுவதும் இருக்கிறதென்றால், அச்சிதாகாசத்தின் பரப்பாகிய ஆகாய மனதில் இவை இருக்கின்றன என்றுதானே பொருள்.ஆகாய மனதில் இதுவரை மண்ணுலகிலும், மற்ற உலகங்கிலும் தோன்றிய எல்லா மனிதர்களின் வாழ்க்கை அமைப்பும் இருக்கின்றன. தனி மனிதனுடையது மட்டுமல்ல, மனித சமுதாயங்கள், நாகரீகங்கள் இருந்த முறைகள் அனைத்திலும் ஆகாய மனத்தில் இருக்கின்றன இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால், பிரபஞ்சம் தோன்றிய நாள் முதல் இன்று வரை பல அண்டங்களில் தோன்றிய உயிர்கள் அவைகளின் வாழ்க்கை முறைகள் அனைத்தும் ஆகாய மனத்தில் அழியாமல் குடிகொண்டிருக்கின்றன.

பிரபஞ்ச உயிர்களைப் பற்றிய வரலாறுகள் மட்டுமல்ல, தாவரங்கள், விலங்குகள் பறவைகள் தோன்றி வாழ்ந்த வரலாறுகளும் ஆகாய மனதில் இருக்கின்றன.

பொதுவாக தன் மனம் இன்னதென்று தெரிந்துகொள்ளாதவர்களுக்கு இந்த உண்மை நம்பமுடியாததாய், கற்பனையாய் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று ஆகாய மனதில் பிரபஞ்ச வரலாறு முழுவதும் இருக்கிறதென்பதை நேருக்குநேர் கண்டவர்கள் காணக்கூடியவர் கள் இருக்கிறார்கள், நீங்களும் முயற்சி செய் தால் இந்த உண்மையை நேருக்குநேர் கண்ட றியலாம். நம்மிடம் பயிற்சி பெற்ற மாணவர் கள் பலர் தம் முப்பிறவிகளை நேருக்கு நேர் அறிந்ததல்லாமல், இராவணன் கிருஷ்ணன் கால வாழ்க்கை வரலாறுகளை நேருக்குநேர் அறிந்திருக்கிறார்கள். இந்த சாதனையைப் பயின்ற மேலை நாட்டு மாணவர்கள் பலர் அந்நாட்டில் இருந்து மறைந்து போன நாகரீகங் களின், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு களை நேருக்கு நேர் ஆகாய மனத் தொடர்பு கொண்டு அறிந்திருக்கிறார்கள்.

ஒரு மனிதனின் எதிர்கால வாழ்க்கை அவ னது கடந்த கால, நிகழ்கால வாழ்க்கையைப் பொறுத்திருக்கிறது. இன்று தகாத உணவை உண்டு வருபவன் நாளை நோய்வாய்ப்படு வான் என்று சொல்லலாமல்லவா? நிலத்தில் நெல்லை விதைத்துவிட்டு அதற்குப் போது மான எருவும், நீரும் தராமல் இருப்பவன் அதிக மகசூலை அடைய மாட்டான் என்று சொல்ல லாமல்லவா? இன்று ஓயாமல் குடித்துக் கொண்டிருப்பவன் நாளை குடல் வெந்து அகாலத்தில் இறந்து போவான் என்று சொல்ல லாமல்லவா? திருடுவதையே தொழிலாகக் கொண்டவன் ஒரு நாளைக்கு சிறைக்குப் போவான் என்று கூறலாமல்லவா? இன்று பாபம் செய்பவன் நாளை அதற்குத் தண்ட னையை அனுபவிப்பான். இன்று புண்ணியம் செய்பவன் நாளை நல்ல வாழ்க்கையை அனுப விப்பான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இன்று துன்பப்படுபவன் நேற்று அடாது செய்தவன், இன்று இன்பவாழ்வு வாழ்பவன் நேற்று நல்ல காரியங்களைச் செய் தவன், இப்பிறவியில் ஒன்றும் செய்யாதிருந் தும் முற்பிறவியில் செய்த பாபத்தால் துன் பத்தை அனுபவிக்கிறார் என்ற கூற்றை இன்று இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் நம்புகிறார் கள்.

மனிதர்களின் செயல்கள், பதிவாகியிருக்கும் ஆகாய மனத்தின் பிரதிச் செயலாகவே பூகம் பங்கள், வெள்ளங்கள், சண்டைகள், தொற்று நோய்கள் உண்டாகின்றன.

தனி மனிதனின் சிதாகாசத்தால் இருக்கும் சமஸ்காரங்களைக் கவனித்தால் அவன் பழங் கால வாழ்க்கை தெரிவது போலவே அவன் எதிர்கால வாழ்க்கையும் தெரியவரும். பழைய வைகளைப் பற்றியிருக்கும் சிதாகாசங்களின் பிரதிபலிப்பாக எதிர்கால வாழ்க்கை அமைகி றது. இதேபோல் அண்ட ஆகாயத்தில் தன் மனதை ஒருமுகப்படுத்துபவன் பூவுலகில் எதிர்காலத்தில் என்னென்ன நடைபெறுமென் பதை அறிந்து கொள்வான். அப்படி அறிந்தவர் கள் பலர் சூசகமாக அதையெழுதி வைத்திருக் கிறார்கள். "சேதாவனி" என்ற நூலில் வருங் கால உலகில் என்னென்ன நடைபெறும் என்று எழுதப்பட்டுள்ளது. அதில் பல இப் போது நடைமுறையில் வந்திருக்கிறது. இந் தியா - பாரதம் துண்டாடப்படும் என்பது மிகப் பழைய நூலான பாகவதத்தில் எழுதப்பட்டிருக் கிறது. எமது மாணவர் ஆண்ட்ரூ தோமாஸ், மேல்நாட்டில் குறிபார்க்க உபயோகப்படுத்தும் டேரோட்கார்டில் உலகத்தின் எதிர்காலம் விளக்கப்பட்டிருப்பதை விளக்கியிருக்கிறார். அண்ட ஆகாயத்தில் இம்மண்ணுலகில் நடை பெறப் போகும் சம்பவங்கள் அனைத்தும் தீட்டப்பட்டிருக்கின்றன. அவ்வாகாயத்தில் மனதை ஒருமுகப்படுத்தினால் இவ்வுண்மை நேருக்கு நேர் தெரியவரும். இப்படித் தெரிந்த வர்கள் சிலர் இன்றும் உலகில் இருக்கிறார்கள். ஆன்மீகக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு அதை அவர்கள் யாருக்கும் வெளியிடுவதில்லை. ஆகாய மனத்துடன் தொடர்பு கொண்டு வருங் கால பிரபஞ்ச வரலாறுகளை முன்கூட்டி அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதெப்படி என்பதை அடுத்த பாடத்தில் அறியலாம்.

## 3. முக்கால நிகழ்ச்சிகள்.

ஆகாய மனத்திலிருக்கும் பிரபஞ்ச வருங் கால நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதெப்படி? இதற்கு முதலில் நம் மனதை நல்லமுறையில் ஒருமுக - ஏகாக்ரப் படுத்த வேண்டும். ஊசி முனையை மனம் நினைத்தால் சிறிதும் ஒளிக் கதிர்கள் அசைவற்று மனக்கதிர்கள் முழுவதும் அவ்வூசி முனையிலேயே படவேண்டும். சூரிய ஒளிக்கதிர்கள் எப்படி முப்பட்டைக் கண்ணாடி வழியாக ஒரு பொருளின் மேல் ஓர் ஊசி முனைப்பகுதியில் குவியுமோ அப்படி மனச்சக்தியின் கதிர்கள் ஒரு பொருளின் உருவில் அல்லது கருத்தில் ஒருமுகப்பட்டு நிலைபெற வேண்டும். இந்த நிலையை "தியானம்" என்று யோக நுல்கள் கூறும்.இன்று தியானம் என்ற பெயரால் ஏதேதோ தவறான சாதனைகள் கற்பிக்கப்படுகின்றன. தியானம் என்பது மனம் தான் குறிப்பிட்ட ஒரு பொருளின் உருவத்தில் - கருத்தில் நிலைபெற்று வேறு எண்ணங்கள் இல்லாமல் இருப்பதாகும். எண்ணச் சலனமற்று மனம் ஒரு பொருளின் உருவத்தில், சப்தத்தில், கருத்தில் முழுமையாக ஒன்றி நிற்பது தியானம். இதைப்பற்றி எமது "திறன் தரும் தியானப் பயிற்சிகள்" என்ற பாடத் தொகுப்பில் படித்தறியலாம்.

இப்படி சலனமற்ற எண்ணங்கள் ஒருமுகப் பட்டு நிற்கப் பண்பட்ட மனதில் காண விரும்பும் கடந்த கால நிகழ்ச்சிகளில் எதையாவது நினைத்து அந்த நினைப்பில் முன் சொன்ன அசையாநிலையில் மனதை ஒருமுகப்படுத்தி வைக்க வேண்டும்.இந்நிலையில் மனதின் உடலைப் பற்றிய சுற்றுப்புற நிலையைப் பற்றிய உணர்வு ஏதும் இருக்காது. அந்த நிலையில் எந்த நிகழ்ச்சியைப் பற்றிமனம் குவிந்ததோ அந்த நிகழ்ச்சிகள் கனவுக் காட்சிகள் அப்போதைக்கு உண்மை போலவே இருக்கும். பலருக்கு நல்ல கனவுகள் உண்டானாலும் கனவு கலைந்ததும் அவை நினைவுக்கு வராதது போல் குவிந்த மனம் காணும் காட்சிகள் மனம் இயங்கு நிலைக்கு வந்த போது சரியாக நினைவுக்கு வராமல் "ஏதோ கண்டோம்"என்ற அளவில் இருக்கும்.ஆனால் நாளாவட்டத்தில் மெதுமெதுவாக மனம் திரும்பியபின் அதில் குறித்த நிலையில் கண்ட காட்சிகள் தெளிவாக நினைவுக்கு வரும்.உதாரணமாக இராமாயண நிகழ்ச்சிகளைக் காண ஒருவர் தன் மனதை அந்தக் கருத்தில் தியான நிலைப்படுத்தினார் என்று வைத்துக்கொள்வோம்.இராமர் இலட்சுமணனுடன் விசுவாமித்திரர் பின் சென்று,தாடகையைக் கொன்று,அகலிகையைப் பெண்ணுருவாக்கி, சீதையை மணந்து வந்து பின் சீதையுடன் காட்டுக்குச் சென்று இராவணனின் குலமுழுதும் கொன்று, அயோத்தியடைந்து பட்டாபிஷேகம் செய்து கொண்டு அமர்ந்த காட்சி வரை அப்போதே நடப்பது போல் மனத்திரையில் தெரியும். மனதில் கூட இத்தகைய காட்சிகளைக் காண வேண்டுமானால் அதற்குப் பல மணி நேரங்கள் ஆகுமே, அத்தனை நேரம் மனதை தியான நிலையில் இருத்த வேண்டுமல்லவா? என்று கேட்பவர்களுக்கு ஒரு விளக்கம்.

கனவில் சில சமயம் நாம் காணும் காட்சிகள் நனவில் நடந்தேற வேண்டுமானால் பலமணி நேரங்கள் ஆகும்.அவ்வளவு காட்சிகளை சில நிமிடங்களில் கனவில் கண்டு விடுகிறோம். பௌதிக வாழ்க்கையில் மந்த வேகத்தில் மனம் தன் வேகத்தில் கண்டறியுமானால் சில நிமிடங்களில் கண்டுவிடும். இரண்டு கிலோ மீட்டர் தூரத்தை மெதுவாக நடந்து செல்லும் ஒருவன் ஒரு மணி நேரத்தில் கடப்பானானால், வேகமாக ஓடிச்செல்பவன் அதை ஐந்து நிமிடங்களில் கடந்து விடுவான். இதனால் அவன் எதையோ விட்டு விட்டானென்று பொருளல்ல. மெதுவாக சென்றவன் எதை எதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து சென்றானோ,அவ்வனைத்தையும் ஓடு பவன் கடந்து செல்கிறான். இது போல் ஒரு நீண்ட நிகழ்ச்சி பல ஆண்டுகளில் நடந்ததா னால் அதை மனம் வேகமாய் இயங்கி சில மணி நேரத்தில் கண்டுவிடும். எதுவும் விடுபட் டுப் போகாது. இப்படி உலகில் நடந்து போன எந்த நிகழ்ச்சியையும் தியான மனத்தால் சில நிமிடங்களில் அறிந்துகொள்ளலாம்.

கடந்தகால நிகழ்ச்சிகளை அறிந்து கொள் வது போலவே உலகில் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்ளலாம். இதற்கு மனதை இங்கு அல்லது உலகில் என்ன நடக்கும் என்ற கருத்தை மனதில் இருத்தி அதை முன் சொன்ன குவிப்பு நிலைக் குக் கொண்டு சென்றால் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் அப்போதே நடைபெறுவது போல் மனக் கண்ணில் தெரியும். இதிலும் முன் சொன்னது போல் காலத்தை வரையறுக்க முடியாது. பத்து ஆண்டுகளில் ஒரு இடத்தில் அல்லது உலகில் நடைபெறப்போகும் நிகழ்ச்சி கள் தியான மனதில் பத்து நிமிடங்களில் நடைபெறக் காணலாம்.

<u>மனச்சக்தி காலம், இடங்களைக் கடந்தது.</u> அதாவது நம் வீட்டில் அமர்ந்து கொண்டே வானுலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காணலாம். அமெரிக்காவில் என்ன நடக்கு மென்பதை இலங்கையிலிருந்தபடியே அறிந்து கொள்ளலாம் அதே போல் நம்மிடத்திலிருந்தே இராவணன் ஆட்சிக்கால இலங்கையை அனு மான் எப்படி சுற்றிப்பார்த்தான் என்பதை இப்போதுதான் சுற்றிப் பார்ப்பதுபோல் பார்த்த றியலாம்.

## ஆகாய மனதைப் பயன்படுத்தல்

ஆகாய மனதின் மற்றோர் பெரிய ரகசியம், ஆகாய மனம் அறிவுத் தன்மையைக் கொண் டது. ஓர் ஏழை, இரக்க குணம் படைத்த ஒரு செல்வ சீமானை உதவி வேண்டி புகழ்ந்து, வணங்கினால், அச்செல்வந்தன் ஏழைக்கு உத விசெய்வான். ஒரு கல்விஅறிவில்லாதவன் ஒரு பெரிய வித்வானை அணுகி தனக்குக் கல்வி கற்பிக்கும்படி மன்றாடினால் அப்பல சாலி அவனைத் துன்புறுத்த வந்த கயவனை விரட்டி சரணடைந்தவனைக் காப்பாற்றுவான்.

கடவுளை வழிபட்டு, துதித்து, பிரார்த்தித்து கொடிய நோய்களிலிருந்து விடுபட்டவர்கள், கொடிய துன்பங்களிலிருந்து மீண்டவர்கள், தமக்கு வேண்டிய உலக நன்மைகளைப் பெற் றவர்கள் வரலாறுகள் எல்லா சமயங்களிலும், கிடைக்கின்றன. கடவுள் தான் பக்தர்களுக்கு அருள் செய்கிறாரானாலும், அவர் எதன் வழி பக்தர்களின் குறைகளைப் போக்கி, வேண்டுவ தைத் தருகிறாரென்று பார்த்தால், ஆகாய மனத்தின் வழிதான் அவர் அதை சாதிக்கிறார், என்பது விளங்கும். மனிதனுக்கு ஓர் மனம் இருப்பதுபோல் இறைவனுக்கு ஆகாய மனம் இருக்கிறது, மனிதன் தன் மனதால் நினைத் துத்தான் எதையும் செய்கிறான். அதேபோல் இறைவன் தன் அண்டமனத்தால் நினைத்துத் தான் எதையும் செய்கிறான். மனிதனின் உடலை இயக்கி பல்வேறு காரியங்களைச் செய்விக்கும் மனம் போல் இறைவன் தன் ஆகாய மனதை இயக்கி,செயல்படுத்தி ஆக்க அமைப்பு அழிவுகளைச் செய்கிறான். "கட வுளே எனக்குச் செல்வம் கொடு" என்று வேண்டினால் கடவுள் ஆகாய மனதுக்கு தன் பக்தனுக்குச் செல்வம் தரும்படி உத்தரவிட அந்த மனம் எந்த வழியில் அந்த பக்தனுக்குச் செல்வம் தரலாம் என்பதைக் கண்டறிந்து, அந்த வழியில் அவனுக்குச் செல்வத்தைக் கொடுத்தருள்கிறது. அருளையும், தண்டனை யையும் ஆண்டவன் தன் செயல்சக்தியான மனத்தின் மூலமாகத்தான் நிறைவேற்றுகிறான்.

இந்தத் தத்துவத்திலிருந்து மனோதத்துவ வல்லுனர்கள் ஓர் பெரிய சாதனையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடித்தார்கள், அதாவது "ஒருவன் ஆகாய மனதில் தனக்கு வேண்டிய கருத்தை பதிப்பிப்பானானால் அது எவ்வழியிலாவது அவன் வேண்டுகோளை நிறைவேற்றும் என்பதுதான். பிரபஞ்சத்தையெல்லாம் ஆக்கிய அண்ட மனத்துக்கு மனிதனின் சிறிய வேண்டுகோளை எவ்வகையிலாவது நிறைவேற்றுவது முடியாத காரியமா? இராம லட்சுமணர்களைக் காட்டுக்கழைத்துச் சென்ற விசுவாமித்திரரைப் பற்றிக் கூறும் போது நான்முகனையும் படைப்பேனீண்டெனத் தொடங்கிய முனிவன் " என்று கூறப்படுகிறது.அதாவது, "வேறு பிரம்மாவையும், வேறு பிரபஞ்சத்தையும் படைப்பேன் என்று செயல்படுத்தத் தொடங்கிய முனிவன் என்பது கருத்து. இங்கு இந்த செயலாற்றலுக்கு முனிவர் அண்ட ஆகாயத்தைத் தான் துணை கொண்டார் என்பது அறியத் தகுந்தது. அதாவது ஆகாய மனத்தைக் கொண்டு எதையும் உண்டாக்கலாம் என்பது கருத்து. விளக்கம் இதுதான் "மனிதன் ஆகாய மனத்தில் தன் விருப்பத்தைப் பதிப்பானானால் எவ்வழியிலாவது அவன் விருப்பம் நிறைவேறும்.

அனைத்தையும் செயல்படுத்தவல்ல ஆகாய மனதில் மனிதன் தன் கருத்தை, விருப்பத்தைப் பதிப்பிப்பதெப்படி என்பதை ஆன்றோர்கள் இரகசியமாக வைத்திருந்து தன்னைச் சரணடைந்த சீடர்களுக்கு மட்டும் வெளியிட்டு வந்தார்கள், ஏனென்றால் கயவர்களுக்கு அவ்வழி தெரிந்தால் அவர்கள் பிறருக்குத் தீமை செய்வதற்குப் பயன்படுத்துவார்கள். ஆகாய மனதில் அசுரத் தன்மையைப் பதிப்பித்து அசுர ஆற்றலை பெறலாம். தெய்வத் தன்மையைப் பதிப்பித்து தெய்வ ஆற்றலைப் பெறலாம். களிமண்ணால் எந்த உருவையும் செய்யக்கூடியது போல் அண்ட மனதைக் கொண்டு மனிதன் எதையும் சாதிக்கலாம்." யார் தலையில் கைவைத்தாலும் அவர்கள் எரிந்துபோக வேண்டுமென்று அசுரன் தெய்வத்திடம் வரம் பெறவில்லையா? சூரபத்மன் முதலானோர் தவங்களைச் செய்து அழிக்கும் சக்தியைப் பெறவில்லையா? ஆகாய மனதுக்கு நல்லது கெட்டது தெரியாது.

யார் எதை வேண்டித் தன்னை செயல்படுத்துகிறார்களோ அதை அப்படியே நிறைவேற்றும் என் வாசகர்களில் யாரும் கொடியவர்களாயிருக்க முடியாதென எனக்கு நம்பிக்கையுண்டு. அத்தகையவர்களுக்கு என் எந்த ஆதிக்கமும் கிடைக்காது. கிடைத்தாலும் அதைப் புரிந்துகொண்டு அவர்களால் செயல்படுத்த முடியாது. நான் சொல்வதைச் செயல்படுத்த நல்லவித மனச்சாதனை பயின்றவர்களுக்கல்லாது மற்றவர்களுக்கு இயலாது. அத்தகைய சாதனைகளைப் பயிலும் யாரும் தீயவர்களாயிருக்க முடியாது. இந்த உறுதியான நம்பிக்கையுடன் ஆகாய மனதில் கருத்தைப் பதிப்பித்து தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வழியை இப்பாடத் தொகுப்பில் வெளியிடுகிறேன்.

ஆகாய மனதில் உங்கள் விருப்பத்தைப் பதிப்பிப்பதற்காக நீங்கள் ராக்கெட்டிலோ, மற்ற எதிலோ ஏறி, உயர - உயர வானத்தில் பறக்கவேண்டுமென்று நினைத்து விடாதீர்கள், இதற்காக நீங்கள் இருக்குமிடத்தை விட்டு ஒரு அங்குலம் கூட நகர வேண்டியதில்லை. ஏனென்றால் ஆகாய மனம் உங்கள் உடல், சுற்றுப்புறம், அனைத்திலும் ஊடுவியிருக்கிறது. அதன் ஒரு பகுதிதானே மனம். அதிலிருந்து பெற்ற உங்கள் மனதை நீங்கள் எப்போதும் உடலிலும் பௌதிக உலகிலும் தான் உபயோகப்படுத்தி வருகிறீர்கள். இப்படியல்லாமல் உங்கள் மனதைக், கவ்வியிருக்கும் ஆகாய மனதில் உங்கள் மனதை, உங்கள் விருப்பக் கருத்துடன் சேர்பித்தீரரானால் தொடர்பு முடிந்தது. இதற்கு முன் சொன்ன தியானம் தான் நேர்முக சாதனை. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் தியானம் பயின்று நேர்முகமாக ஆகாய மனதில் விருப்பத்தைப் பதிப்பிக்க முடியாதல்லவா? அதனால் ஆகாயமனதுடன் சற்று தொடர்பு கொண்டு, சிறு விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள பலவழிகள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளும் ஒன்று சித்தப் பதிவு-ஆட்டோ சஜ்ஜஷன். சுருக்கமாக இதைப் பற்றி சொல்கிறோம்.

முதலில் உங்களுக்கு ஆகாயமனம் என்ன செய்யவேண்டுமென்பதை மூன்று கருத்து வாக்கியங்களாக அமைத்துக் கொள்ளுங்கள். முதல் வாக்கியம் உங்கள் காரியம் நிறைவேற வேண்டும் என்றும், இரண்டாவது வாக்கியம் அந்த விருப்பம் நிறைவேறத் தொடங்கி விட்ட தென்றும், மூன்றாவது வாக்கியம் அது நிறை வேறிவிட்டதாகவும் அமைய வேண்டும். பணம் பெற வேண்டி விருப்பமானால் முதல் வாக்கியம் "நான் விரைவில் பணக்காரனா வேன்" என்றும், இரண்டாவது வாக்கியம் "நான் பணக்காரனாகிக் கொண்டிருக்கிறேன்" என்றும், மூன்றாவது வாக்கியம், "நான் பணக் காரனாகி விட்டேன்" என்றும் அமைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் தினம் இரவு படுக்கப்போகும்போது ஒரு மனதுடன் இந்த மூன்று வாக்கியங்களையும் 21 தடவை மாறிச் சொல்ல வேண்டும். பிறகு படுத்துக்கொண்டு ஏகாக்ர மனதுடன் இம்மூன்று வாக்கியங்களை யும் மனதில் சொல்வதோடு, அது அப்படியே ஆவதாக, பணம் வந்ததாக பணக்காரனாகி விட்டதாக பாவித்தபடி தூக்கத்திற்கு போக வேண்டும். ஏகாக்ரத்துடன் இது செய்யப்பட் டால் உன்னை பணக்காரனாக்க வேண்டு மென்று ஆகாய மனத்துக்குத் தெரிந்துவிடும். உனக்குத் தெரியாத வழிகளில் அது செயல் பட்டு விரைவில் உன்னை பணக்காரனாக்கி விடும்.

இரண்டாவது வழி "சுய சம்போகனம்" - சுய இப்னாடிசம் முன்போல் உங்கள் விருப்பத்தை மனதில் ஏகாக்ரமாகப் பிடித்து, அப்படியே மயக்க நிலைக்குப் போவீர்களானால் உங்கள் கருத்து ஆகாய மனதில் பதிந்து விடும். விரை வில் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

தனியாக உட்கார்ந்து, கண்களை மூடி, ஏகாக்ரமாக மனதில் உங்கள் விருப்பம் நிறை வேறுவதாக பாவியுங்கள். இதில் வாக்கியங்க ளுக்கு இடமில்லை. அப்படியே செல்வம் கொஞ்சம் கொஞ்சமாகத் திரண்டு வருவதாகப் பாவிக்க வேண்டும். பாவனை ஆகாய மனதில் கருத்துக்களைப் பதிக்க சிறந்த வழி.

முடிவாக தியானம் நேராக உங்கள் மனதை ஆகாய மனதுடன் கலக்கச் செய்யும் சாதனமா கும். உங்கள் விருப்பத்தை மனதில் நிலைப்ப டுத்தி தியான நிலைக்கு சென்றால் நாள் கணக்கில் உங்கள் விருப்பம் முற்றும் நிறை வேறும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சம் இன்பமயம்

அழகாக, மேடு பள்ளமில்லாமல் செப்பனிடப்பட்ட பாதை; வண்டியில் அமர்ந்து அப்பாதையில் செல்லும்போது, பாதையில் மேடு பள்ளமில்லாததால் சிறிதும் ஆட்டமின்றி வண்டி செல்லும்போது, வண்டி போகிறதா என்று ஐயுறும் வண்ணம் அசையாது செல்கிறது. இத்தகைய நல்ல பாதையில் நடந்து செல்லும் ஓர் பாதசாரி எதையோ நினைத்தபடி கால்களைச் சரியாக எடுத்து வைக்காமல் நடந்ததால் பெருவிரல் பாதையில் மடிபட்டுத் தடுக்கிக் கீழே விழுகிறான். உடனே "பாதையைச் செப்பனிட்டவர்கள் சரியாகச் செப்பனிடவில்லை" என்று குறை கூறுகிறான். குறை எங்கே இருக்கிறது?

விலை உயர்ந்த காஞ்சீவரம் பட்டுப்புடவையை பொங்கல் பரிசாகத் தன் மகளுக்குப் பெற்றோர்கள் வாங்கிக் கொடுத்தார்கள். பொங்கல் விழாவுக்காக தூரத்திலிருந்து வந்து, தன்னைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கும் மணாளனைப் பார்க்கப் போகும் ஆர்வத்தில் புதுப்புடவையைச் சுற்றிக் கொண்டு வேகமாய்ச் சென்றவள் மணாளனருகில் சென்றதும் புடவை தடுக்கிக் கீழே விழுகிறாள். வெட்கத்துடன் எழுந்ததும் "பட்டுப் புடவைகளே இப்படித்தான்" என்று புடவையை வைகிறாள். வசவு எதில் இருக்கிறது?

மாதம் முன்னூறு ரூபாய் சம்பளம், கணவன், மனைவி இருவர்தான் குடும்பத்தில். சம்பளம் வந்ததும் 15 நாட்களுக்கு விடாமல் இருவரும் தினசரி சினிமா காட்சி, வழியில் ஓட்டல் பலகாரப் பட்சணம், இப்படிச் செய்து வருவதால் மாதக் கடைசியில் கடன் வாங்க வேண்டிய நிலை. இப்படிப் பல மாதங்கள் நடந்தால் கடன் முடை அதிகமாக, அதைத் தீர்க்க வழியறியாது, விஷ மருந்தைச் சாப்பிட்டு இருவரும் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பார்த்தவர்களெல்லோரும் "என்ன உலகமடா இது, இப்படி விலைவாசி உயர்ந்து கொண்டு போனால் யார்தான் கடனில்லாமல் வாழ முடியும்?" என்று பரிதாபப்படுகிறார்கள். எது பரிதாபத்துக்குரியது?

தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டுப் பலகாரங்கள் சுவையா யிருந்ததென்று அளவு மீறி, வயிறு புடைக்கத் தின்றதன் பயனாக வயிறு வீங்கி, வேதனைப்பட்டுப் பேதியும், வாந்தியுமாவதைக் கண்டு "என்ன உடல் மனித உடல், கொஞ்சம் சாப்பிட்டாலும் கோளாறு செய்கிறதே!" என்று அங்கலாய்க்கிறார்கள். அங்கலாய்ப்புக்குரியது எது?

ஒருவர் சொல்கிறார் "மாம்பழம் இனியது. சத்து நிறைந்தது, பயன் தருவது, இந்த ஆண்டு நான் நிறையச் சாப்பிடப் போகிறேன்" என்று வேறோருவர் சொல்கிறார் "மாம்பழம் சீதபேதிப் பழம், சாப்பிட்டால் சூடாகி, சீதபேதி வரும்; அதனால் இந்த ஆண்டு நான் ஒரு பழம் கூடச் சாப்பிடப் போவதில்லை" என்று.

"இனிப்பு உடம்புக்கு நல்லது, தினசரி ஒரு இனிப்பாவது சாப்பிட்டு வந்தால் டானிக்குகளோ, வைட்டமின் மாத்திரைகளோ சாப்பிட வேண்டிய தேவையிருக்காது" என்கிறார் ஒருவர்; மற்றொருவர் "இனிப்பு உடம்புக்கு மிகவும் கெட்டது இனிப்பால்தான் நீரிழிவு நோய் வருகிறது. இனிப்பைச் சாப்பிடவே கூடாது" என்கிறார்.

"கடவுள் படைப்பில் துன்பம் தவிர வேறென்ன இருக்கிறது?" என்கிறார் ஒருவர்; "கடவுள் அன்பு வடிவானரானதால் அவர் படைத்த உலகில் அன்பும், இன்பமும் தானிருக்கிறது" என்கிறார் மற்றொருவர், பல ஆண்டுகளாகக் கடவுளை வழிபட்டு வந்தேன், நாளுக்கு நாள் துன்பமே அடைந்தேனன்றி இன்பம் பெறவில்லை. கடவுளுக்குக் கண்ணில்லை" என்று கதறியழுகிறார் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பத்து நாட்களாகக் கடவுளை பய பக்தியுடன் வழிபட்டேன், என் துன்பமெல்லாம் பறந்தோடி விட்டது'' என்று பலத்த சந்தோஷத்துடன் பகர்கிறார் மற்றொருவர்.

இப்படிப்பட்ட கடுமையான எதிர்மறை யனுபவங்களைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள் பலர் கடவுள் படைப்பிலேயே நல்லதும், கெட்டதும்; நோயும், ஆரோக்கியமும்; இன்பமும்; துன்பமும்; உயர்வும், தாழ்வும் இருக்கிறது; அவர் படைப்பில் இரவும், பகலும் மாறி மாறி வருவது இதற்குச் சான்று; கடலும், கரையும், மலையும், தாழ்நிலமும், மேடும், பள்ளமும் அவர் படைத்த உலகில் இருப்பது இந்த உண்மையை வலியுறுத்துவதாகும்'' என்று உறுதியாக உபதேசம் செய்கிறார்கள். இந்த உபதேசம் செய்பவர்கள் பெரிய படிப்பாளிகள், பாகவதர்களாகையால் பாமரமக்கள் இதைச் சரியென நம்பி, ''கடவுளே தான் நல்லது, கெட்டது படைத்தார், ஆதலால் இரண்டையும் மாறி மாறி மனிதன் அனுபவித்துத்தானாக வேண்டும். ஒன்றையே அனுபவமாகக் கொண்டு வாழ முடியாது'' என்று நம்பி, துன்பங்களை உண்டாக்கிக் கொண்டு, அதைப் போக்கியருளும்படி அதைப் படைத்த ஆண்டவனைப் பல வழிகளில் வழிபடுகிறார்கள். இவ்வழிபாட்டால் துன்பம் விலகப் பெறுகிறார்களா இல்லையா என்பது நமக்குத் தேவையில்லாதது. இக்கூற்று உண்மைதானா! என்பதுதான் நமது ஆராய்ச்சி.

''பிரபஞ்சமென்பதென்ன, அது எப்படி உண்டாயிற்று. எப்படி இயங்குகிறது?'' என்பவைகளை ஆராய்ந்து அறிந்தவர்கள் பிரபஞ்சத்தில் நோயும், தீமையும், அலங்கோலமும் இருப்பதாகக் காணவில்லை. அப்படியிருந்திருந்தால் இதுவரை பிரபஞ்சம் நிலைத்திருக்காது என்பது அவர்களின் துணிவு. ஒழுங்கு, நேர்மை, நல்லமைப்புகள் இருப்பதால்தான் பிரபஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது என்பது அவர்கள் கண்ட முடிவு.

பிரபஞ்சத்தை ஆக்கிய ஓர் கடவுள் உண்டு என்று சொல்லும் வேதம் முதல் எந்த நூலில் அவர் நல்லதும், கெட்டதும் கலந்தவர்; அன்பும், துன்பமும் உருவானவர்; பலமும், பலகீனமுமானவர் என்று சொல்லவில்லை. அவர் கருணை வடிவானவர். அன்புமயமானவர், ஆனந்த நிறைவானவர், இன்ப உருவினர் என்றுதான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கடவுளை அறியும் பெருநெறியில் சென்று வெற்றி கண்டவர்கள் ''கடவுளை நெருங்கியதும் நாங்கள் சிறிதும் துன்பப்பட்டோம், சிறிது களிப்படைந்தோம்'' என்று சொல்லவில்லை. இம்மியளவும் துன்பம் கலவாத பேரின்பப்பெரு வாழ்வையே பெற்றதாகத்தான் கூறியுள்ளார்கள். அதனால்தான் அவனருளைப் பெறுவதற்காக அனைத்து போகங்களையும் துறந்து சென்றார்கள் பலர். அதனால் சிலர் நினைப்பதுபோல் ''கடவுள் இருமைத்தன்மை கொண்டவர், அதனால் அவர் படைத்த உலகில் இருமை அனுபவங்கள் இருக்கின்றன'' என்று சொல்லுவது முற்றும் தவறு என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

''அப்படியானால் அன்புமயமான, ஆனந்தமயமான, பலவானான ஆண்டவன் படைத்த உலகில் துன்பமும், கவலையும், நோயும் எங்கிருந்து வந்தது? அது மக்கள் அனுபவத்துக்கு எப்படி வருகிறது?'' என்று கேள்வி எழும். இதற்குச் சில சமயவாதிகள் ''கடவுளைப் போலவே சக்தி படைத்த சைத்தான், மாயை, அசுரன் ஒன்றுண்டு; அது கடவுள் நல்லதைப் படைக்கும்போது கூடவே கெட்டதைப் படைத்துக் கொண்டு வந்தது, அதனால் தான் உலகில் கெடுதல் இருக்கிறது'' என விடை கூறுகிறார்கள். உலகில் உண்மையில் துன்பமென்பதில்லை என்பது மெய்ப்பிக்கப்பட்டு விட்டால் இப்படித் தனியொரு தீமைச் சாமியை நம்ப வேண்டிய தேவையிருக்காது. இவ்வளவு கூற்றுகளும் மனிதன் தன்னையும், தலைவனையும் அறிந்து கொள்ள முயற்சி செய்யாததால் எழுந்தவையாகும்.

முதலில் உலகில், ஆண்டவன் படைப்பில் தீமையில்லை. இருக்கமுடியா தென்பதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்வோம். சூரியன் தீங்கு செய்பவனாயிருந்தால் இம்மண்ணுலகமும், இதிலுள்ள பொருள்களும் என்றோ மறைந்து போயிருக்கும். சந்திரன் தீமை செய்பவனாயிருந்தால் மண்ணுலகப் பொருள்களெல்லாம் என்றோ நீராகிப் போயிருக்கும். காற்று தீங்கு செய்வதாயிருந்தால் மனிதன் வாழக் கட்டிய ஒரு கட்டிடமோ, அவனுக்கு உணவையும், நிழலையும், காற்றுத் தூய்மையையும் தரும் ஒரு மரமோ உலகத்தில் இருந்திருக்காது. மழை தீங்கு செய்வதாயிருந்தால் உலகம் முழுவதும் என்றோ நீரில் கரைந்து போயிருக்கும். அணுக்கள் தீமை செய்வதாயிருந்தால் பொருள் என்று ஒன்று உண்டாகியே இருக்காது. மனித உடல் தீமை நிறைந்ததாயிருக்குமானால் ஒரு மனிதனும் வாழ்ந்திரு க்க முடியாது. ஆண்டவன் கொடியவனனால் உலகத்தை என்றோ எரித்துச் சாம்பலாக்கியிருப்பான். இப்போது சொல்லுங்கள், கடவுளோ, பிரபஞ்சமோ துன்பம் நிறைந்ததா எங்குமே துன்பமில்லை, துயரமில்லை, நோயில்லை; இன்பமும், களிப்பும், ஆரோக்கியமும் இருந்து வருகிறது.

''மழை பயிர்களை அழித்து வருகிறதே, புயல் பல ஊர்களை அழித்து விடுகிறதே, வெய்யிலால் பலர் மடிந்து போகிறார்களே, குளிரால் பலர் உறைந்து போகிறார்களே, பூகம்பங்களால் பல நகரங்கள், அதில் வாழும் மக்களுடன் அழிந்து போகின்றனவே, மனிதனுக்குக் கண்டு பிடிக்க முடியாத பல நோய்கள் வருகின்றனவே, இதனால் நீண்டு வாழ வேண்டிய மனிதன் அகாலத்தில் மடிந்து போகிறானே, பசுவின் பால் இருக்கும் உலகில் பாம்பின் விஷம் இருக்கிறதே; அப்படியிருக்க உலகில் தீமையில்லை, துன்பமில்லை என்று எப்படிச் சொல்லலாம்?'' என்று கேட்பீர்களல்லவா? இதற்கு நாம் சொல்லும் விடையின் உண்மையைத் தெரிந்து கொண்டால் உலகில் இனிமேல் பிரளயங்களும், பூகம்பங்களும் நடக்கா. மனிதன் நோய்களால் வாடி, அற்ப ஆயுளில் மடிந்துபோக மாட்டான். அதுதான் இந்தச் சிறு நூலின் குறிக்கோள்.

முதலில் சொன்ன சில உதாரணங்களை மறுபடியும் படித்து விடை சொல்லிப் பாருங்கள், கால்தடுக்கி விழுந்தது பாதையின் குற்றமா? புடவை தடுக்கி விழுந்தது புடவையின் குற்றமா? தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது 300 ரூபாய் சம்பளத்தாலா? வயிறு வீங்கியது பலகாரத்தாலா? இல்லையென்று சிறு குழந்தைகளும் சொல்லும். அப்படியானால் குற்றம் யாருடையது? உபயோகப்படுத்தியவர்கள் சரியாக, முறைப்படி உபயோகப்படுத்தியிருந்தால் இடர்களுக்கு உள்ளாயிருக்க மாட்டார்கள்.

நல்ல வெய்யில் காய்வது பூமிக்கு உரம் உண்டாக்குவதற்காக ஆனால் மனிதன் அந்த வெய்யில் நேரத்தில் வெற்றுடம்புடன் கண்ட இடம் அலைந்து திரிந்து, தாபமடைந்து, மயங்கி விழுகிறான். இதற்கு வெய்யில் என்ன செய்யும்? வறண்டுபோன ஏரி, குளமெல்லாம் நிரப்புவதற்காக அடைமழை பெய்கிறது. அதில் வேண்டுமென்றே ''என்னை என்ன செய்துவிடும்''? என்ற வீராப்புக்காக நனைந்து, சலதோஷம் பிடிக்கச் செய்து கொண்டால் இதற்கு மழை என்ன செய்யும்? உறுதியாக வீடுகளைக் கட்டாமல், பணக்குறைவால் கடைக்கால் பலமில்லாத வீடுகளைக் கட்டி வைத்து, வானத்தைச் சுத்தம் செய்ய மோதும் காற்றால் அது விழுந்து விட்டால் இதில் காற்றின் குற்றமென்ன இருக்கிறது? நீர் தேங்கும் இடங்களில் குடிசைகளைக் கட்டிக் கொண்டு, மழைக்காலத்தில் நீர் தேங்குவதால் குடிசைகள் சாய்ந்து விட்டால் மழை யென் செய்யும்? உலகின் நடுநிலையைக் காக்கவிருக்கும் கடலில் விழுந்து மனிதன் தற்கொலை செய்து கொண்டால் அது கடலின் குற்றமா? ஒருவன் இவ்வளவுதான் உண்ணலாமென்று விதியிருக்க அளவு மீறி உண்டு, அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுவலி வரப்பெற்றால் அது வயிற்றின் குற்றமாகுமா? அறிவை உபயோகிக்காமல் பிறரைக் கண்டு, ஆடம்பரத்துக்காகப் புகைக் குடியைப் பழகி, நுரையீரலைக் கெடுத்துக் கொண்டு புற்று, க்ஷயத்துக்குள்ளாவது யாருடைய சாபம்?

மனிதன் இவ்வுலகில் உடலாலும், மனதாலும் படும் துன்பங்கள் எதுவும் உலகில் இருப்பவையல்ல. உலகை, உலகிலிருக்கும் அவனுக்கு நன்மை பயப்பவைகளை அவன் முறை தவறி உபயோகப்படுத்துவதால்தான் அவன் துன்பத்துக்குள்ளாகிறான். மாம்பழம் இனிக்கிறதென அளவு மீறி உண்பதால் நோய்ப்படுகிறான். இந்நோய் முன்பு எங்கேயாவது இருந்ததா? இல்லவேயில்லை; அதிக மாம்பழம் சாப்பிட்டதால் அப்போதுதான், அதுவும் அவன் வரைதான் அந்த நோய் வந்தது. சினிமா பார்ப்பதற்காக ஒருவாரம் இரவெல்லாம் கண் விழித்ததன் பயனாக, உடல் சூடாகி உடல் முழுதும் கட்டிகள் வந்தால், உலகில் கட்டிகள் இருக்கிறது எனலாமா? உண்மையில் கட்டிகள் எங்குமில்லை. மனிதன் சுகாதாரவிதியை மீறுவதால் தனக்குத்தானே உண்டாக்கிக் கொள்வதுதான் கட்டி, இதற்கு யாரும் பொறுப்பாளிகளல்ல .

"பஞ்சம், வெள்ளம், பூகம்பரங்கள் வருகின்றனவே, அவை கடவுளின் கோபத்தால்தானே உண்டாகின்றன?" என்பதற்கு விடை பார்ப்போம். அடங்காத பேராசை கொண்ட வியாபாரி உலகமெல்லாம் அழிந்தாலும் தான் சுகமாயிருந்தால் போதுமென்ற கருத்துடன் கிடைக்கும் அரிசியை எல்லாம் வாங்கி மறைவில் சேமித்து வைத்துக் கொண்டால் நாட்டில் பஞ்சம் வராமல் என்ன செய்யும்? இது ஆண்டவனின் சீற்றமா? பூமியின் இறுக்கத்துக்காக இருக்கும் பாறைகளை எல்லாம் குடைந்து, நிலத்தை ஓட்டைப் பந்தாக்கினால் அங்கு ஏற்படும் நிலைகுலையால் பூகம்பங்கள் வராமல் என்ன செய்யும்? இது பராசக்தியின் ஆத்திரமா? கண்டபடி குப்பைக் கூளங்களை வீடுகளின் அருகில் கொட்டிவைத்து, அவை அழுகி, அதில் விஷக் கிருமிகள் உண்டாக, அது காற்றிலே பறந்து, பலர் உணவு வழியோ, மூச்சு வழியோ உட்சென்று தொற்று நோய்களை உண்டாக்கினால் இது மாரியம்மனின் வயிற்றெரிச்சலா? வரவுக்குத்தக்க செலவு செய்யாமல், தேவையற்ற, பொருளற்ற, பயனற்ற சாமி பூஜைகளில், நோன்புகளில், கலியாண, கருமாதி சடங்குகளில் பணத்தைச் சிலவழித்துவிட்டு, கடன் பட்டு, தீர்க்க வழியறியாமல் திண்டாடி, ரயிலில் தலை கொடுத்து மடிவது லக்ஷ்மி தேவியின் அருள் இல்லாமையாலா?

மேற்சொன்னவைகளிலிருந்து ஒன்றை புரிந்து கொள்ளலாமல்லவா? மனிதன் படும் துன்பங்களுக்கு அவனைத் தவிர வேறு யாரும் காரணமில்லை. அவை உலகில் இருந்திருக்கவில்லை. உலகில் இருக்கும் நன்மையை நல்லவிதமாய், நியமறிந்து பயன் படுத்தாமல் தன் அறியாமையால் தவறாகப் பயன்படுத்துவதால் தனக்குத்தானே உண்டாக்கிக் கொள்பவைதான் துன்பங்கள். வீடு கட்டியவன் அதைச் சரியாக பராமரிக்காமல், கண்ட இடங்களில் துளைகள் செய்து வைக்க அவைகளில் கண்ட பூச்சிபுழுக்கள் குடியிருந்து, அவன் உண்ணும் உணவில் விழுந்து அவனுக்கு நோயை உண்டாக்கினால்; ல்; சுவர்களின் அடிப்பகுதியைத் தோண்டி வைத்து, அதனால் சுவர் இடிந்து விழுந்து, அவன் உயிரையே கொள்ளை கொண்டால் அது எப்படி யாருடைய குற்றமுமல்லவோ அப்படியே மனிதன் ஆணவம் பிடித்துத், தன்னை மறந்து, வாழ்க்கையின் குறிக்கோளைத் தெரிந்து கொள்ளாது. தான் வாழ வேண்டிய உலகை அற்ப சந்தோஷத்துக்காக குழிகள் வெட்டி, நிலை குலையச் செய்யும் அவனுடைய அறிவீனத்தால்தான் பிரளயங்கள், பூகம்பங்கள் உண்டாகின்றன. விஷப்புகைகளைக் கக்கும் வாகனங்களையும், தொழிற்சாலைகளையும் கண்டு வாயுமண்டலத்தை விஷமாக்கி, அவ்விஷ வாயுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசித்து, கொடிய நோய்களுக்குள்ளாகிறான். உடலின் நடைமுறையறிந்து, ஆரோக்கிய விதிகளைத் தெரிந்து, நாக்குக்கு அடிமையாகாமல், காலமறிந்து, அளவறிந்து அளவுடன் உண்ண வேண்டியவைகளை அறிந்துண்பவன் ஒருநாளும் உடற் கோளாறைப் பெறமாட்டான். இதற்கு மாறாக நடப்பவன் கொடிய நோய்களுக்கு உள்ளாகிக்கொண்டு தானிருப்பான்.

புராணங்களில் பல அசுரர்களின் கதைகளைப் படிப்பவர்கள் உண்மையாகவே அப்படி நூற்றுக்கணக்கான அசுரர்கள் இருந்ததாகவும், கடுமையான தவங்களைச் செய்து, வரங்களைப் பெற்று, வரங்களைக் கொடுத்த தேவர்கள் முதற்கொண்டு எல்லோரையும் துன்புறுத்தியதாகவும், முடிவில் தேவர்கள் அந்த அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டியதாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். ஒன்றிரண்டு அசுரர்களின் கதை, ஒரு சமயம் உண்மையாய் நடைபெற்ற சம்பவங்களாய் இருக்கலாம், ஆனால் பெரும்பாலும் இத்தகைய கதைகள் நன்மை தீமைகளின் போராட்டங்களையே குறிக்கும். இதே கருத்தை விளக்க உலகின் பல சமயங்களிலும் கதைகள் இருக்கின்றன. இந்தக் கதைகளைப் படிப்பவர்கள் அதிலுள்ள ஒரு பெரிய ரகசியத்தை அறிந்து கொள்கிறார்களில்லை. தேவர்களைத் துன்புறுத்தும் ஆற்றல் அசுரர்களுக்கு எப்படி வந்தது? தவமாகிய புண்ணிய காரியத்தைச் செய்துதானே! இதிலிருந்து என்ன தெரிந்துகொள்ள வேண்டும்? பாபத்துக்கும் கூட புண்ணியச் செயலால்தான் பலம் கிடைக்கிறது என்ற உண்மை விளங்குகிறதல்லவா?

திருடர்கள் திருட்டாகிய பாபத்தைச் செய்வதற்குமுன் திருடுவதில் தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும், யாருக்கும் பிடிபடக் கூடாது என்று கடவுளை வேண்டிக் கொள்ளுகிறார்கள். நியாயாலயத்தில் ஒருவர் மேல் பொய் வழக்குத் தொடுப்பவன் தன் வழக்கு வெற்றியடைய வேண்டுமென்று விரும்புபவன் ''ஆண்டவனே! எப்படியாவது அவனை அழித்துவிடு, உனக்குத் தேங்காய் உடைக்கிறேன்'' என்று வேண்டிக் கொள்கிறான். பிறருக்கு ஏவல், பில்லி, சூனியங்களை வைப்பவர்கள் குட்டிச்சாத்தான், முனியாண்டி போன்ற குடிகார தெய்வங்களை கள், சாராயம் படைத்து வேண்டிக் கொள்கிறார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? பாவியும் கூட தன் பாபத்துக்கான பலத்தை தெய்வப் புண்ணியத்திலிருநுது தேடிக் கொள்கிறான் என்று விளங்குகிறதல்லவா?

அரிய பல காரியங்களுக்கு உபயோகப்படும் மின் சக்தியை தவறான காரியங்களுக்கும் மனிதன் பயன்படுத்தலாம். அதன் விளைவுகள் பயன்படுத்தவபவனுக்கும், மற்றவர்களுக்கும் துன்பத்தையும் , ஆபத்தையும் விளைவிக்கலாம். இதனால் மின்சக்திபொல்லாதது என்று சொல்லலாமா? மனிதன் உண்பதற்கென்று காய்க்கும் ஒரு மாங்காயைப் பறித்து ஒருவன் எதிரியின் தலைமேல் எறிந்து காயப்படுத்தலாம். காயைப் பறிக்கத் தெரியாமல் கீழிருந்து மேலே கல்லெறிந்து பறிக்க முயற்சித்து அது அவன் தலைமேலேயே விழுந்து காயத்தை உண்டாக்கலாம். இதற்கு எந்த அறிவாளியாவது மாங்காயின் பேரில் பழி சொல்வானா?

மனிதர்கள் மாயையில் உழன்று, பாபங்களைச் செய்து தமக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தை விளைவித்துக் கொள்ள ஆண்டவனை வழிபடுகிறான். ஆண்டவனெனும் அன்புச் சக்தியைக் கவர்ந்து அதை பிறருக்கு துன்பம் செய்வதில் பயன்படுத்துகிறான். இதற்கு ஆண்டவன் மேல் என்ன குற்றம்? எந்த சக்தியையும் மனிதன் நன்மைக்கும், தீமைக்கும் பயன்படுத்திக் கொள்ளக் கூடுமானதைப் போல் இறை சக்தியையும் அவன் நன்மைக்கோ, தீமைக்கோ பயன்படுத்திக் கொள்ள முடியும். அதனால் இறைசக்தி தீமையானது என்று சொல்லலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ஆராய்ச்சியாளர்கள் கண்ட ஓர் பேருண்மை: முதன்முதலாக மனிதன் உலகிலே தோன்றிய நாள் முதல் தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும், சமுதாயத்துக்கும் இனத்துக்கும் நேர்ந்த தீங்குகளில் ஒன்றுகூட கடவுளின் சீற்றத்தால் ஏற்பட்டதல்ல. பெரிய பெரிய வல்லரசுகள் அடியோடு அழிந்து போனதற்கும், உயரிய நாகரிகங்கள் மண்ணிலே புதையுண்டு போனதற்கும் கடவுளின் கோபம் சிறிதும் காரணமல்ல. அவை மனிதர்கள் தாங்களாகவே செய்து செயல்களின் விளைவுகள் தான்.

இந்தப் பேருண்மையை இன்றைய மனிதன் கொஞ்சமாவது புரிந்து கொண்டானானால் அழியப் போகும் உலகம் காப்பாற்றப்படலாம். உலகில் மனிதன் படும் வேதனைகளை போக்கப் பெரும் பெரும் தலைவர்கள் என்னென்னமோ திட்டங்களைத் தீட்டுகிறார்கள். ஆனால் ஒருவராவது அதற்கான மூலகாரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கட்சிகளின் பெயரால், ஜாதிகளின் பெயரால் தலைவர்கள் மக்களை வன்முறையிலே தூண்டிவிட்டு, குரங்குகள் காலத்து நாகரீகப்படி கற்களை எறிய பழக்கப்படுத்தி விட்டு; எப்பொழுதும் இவ்வுலகிலே நல்லபடி வாழ வேண்டிய மனிதன் சொல்லவேண்டிய வாழ்க! வாழ்க! என்பதைச் சொல்ல விடாமல், ஒழிக, ஒழிக என்று சொல்லப் பழகி விட்டு "மனிதர்கள் அமைதியாய் வாழ வேண்டும். அன்போடு வாழ வேண்டும்" என்று சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது? இன்றைய உலகில் மக்கள் இனத்தை உயர்வடையச் செய்வதாகவும், உய்விப்பதாகவும் பறைசாற்றிக் கொள்ளும் அரசியல் மேதைகளின் உள்ளங்களை சூக்ஷ்ம நோக்கால் காணும் ஆன்மீகர்கள் மனிதன் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதிலே உச்சகட்டத்தை அடைந்து விட்டான். கள்ளம் கபடமென்பது இன்று அவனுக்குச்சீரிய குணங்களாய் அமைந்துவிட்டன என்பதை அறிந்து இவ்வுலகின் அழிவை யாராலும், எதனாலும் தடுக்க முடியாது என்பதைத் தெரிந்துகொண்டு, அங்கும், இங்கும் தூய சிந்தனையோடு வாழும் சிலரை நோக்கி வாருங்கள்! "நல்லோர்களே! நலம் பெற வாருங்கள்! நாசத்தின் பிடியிலே இருந்து தப்பித்துக் கொள்ளும் வழியிலே நடந்து முன்னேற வாருங்கள்!" என்று வருந்தி அழைக்கிறார்கள்.

மனித இனத்தைப் பற்றிக் கவலைப்படாவிட்டாலும் தனி மனிதனுக்கு நாம் சொல்கிறோம்: அன்பனே! சமயவாதிகள் தேடும் சுவர்க்கமும், பரமண்டலமும் எங்கேயும் இல்லையப்பா, அது உனக்குள்தான் இருக்கிறது. நீ செத்த பிற்பாடு தான் சுவர்க்கலோகத்திற்குப் போய் அங்குள்ள இன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்று கருதாதே. இந்த மண்ணுலகில், மண்ணாலான இந்த மனித உடலில் இருந்து கொண்ட அந்த சுகங்களை நீ அனுபவிக்கலாம். அதற்காக நீ வீடு, வாசலைத் துறந்து, காடு, மலைகளுக்குச் சென்று, கண்மூடி மௌனியாகி, கடுந்தவம் செய்ய வேண்டியதில்லை அன்ன ஆகாரமில்லாமல், ஆண்டுகள் பல தலைகீழாய் சீர்சாசனத்தில் இருக்க வேண்டியதில்லை; கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை கடவுளுக்கென சில வழித்து விட்டு ஆண்டிப்பண்டாரம் ஆக வேண்டியதில்லை; நோன்புகளின் பெயரால், வழிபாடுகளின் பெயரால், உண்ணாமல், உறங்காமல் இருந்து உடலை வாட்டிக் கொள்ளத் தேவையில்லை; மற்றவர்கள் பயமுறுத்துவதைப் போல மண்ணுலகில் விண்ணுலக இன்பங்களை அனுபவிப்பது அவ்வளவு கஷ்டமல்ல. அதை மிகவும் எளிதாக, சிறிதும் துன்பமில்லாமல் பெறலாம்; அதற்கு வேண்டியதெல்லாம் உனக்கு ஒரு நம்பிக்கை உறுதியாக வளர்த்துக் கொள்வதுதான். அது உலகையெல்லாம் படைத்த கடவுள் அன்புமயமானவர், இன்ப வடிவானவர் அவரில் இம்மிளவும் தீமையில்லை என்று உறுதியாக நம்பி, பார்க்குமிடமெங்கும் நீக்கமற இன்பமே நிறைந்திருப்பதாகப் பாவித்து, சொல்லால், நினைப்பால், செயலால் எப்போதும் நன்மையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி, நினைத்து, பேசி வந்தால் போதும் இங்கே உனக்கு தேவர்கள் அனுபவிக்கும் சுவர்க்க இன்பம் கிடைக்கும். இனம் இனத்தைத் தான் அறியும் என்பதுபோல் இப்படி மண்ணுல கில் சுவர்க்க சுகத்துடன் வாழ்பவர்கள் பல இருக் கத்தான் செய்கிறார்கள். எடுத்ததெற்கெல்லாம் தீமையை நினைக்கும் இக்காலத்து மக்கள் அவர்களை தெரிந்து கொள்ள முடிவதில்லை. அதற்கு மற்றொர் காரணம், அவர்கள் நடை, உடை, பாவனைகளில் தனிமையானவர்களா கத் தம்மைக் காட்டிக் கொள்வதில்லை. சாதார ணமானவர்களைப் போலவே அவர்களும் இருப்பதால் பிறரால் அவர்கள் புரிந்துக் கொள் ளப்படுவதில்லை.

மனிதன் நினைப்பு தலையுடன் அடங்கி விடுகிறதெனத் தவறாகக் கருதிய மனிதன் எப்போதும் மனதால் பிறருக்குத் தீமைக ளையே நினைக்க, அந்நினைப்புகள் ஆகா யத்தை முட்டித் திரும்பி வந்து அவனைத் தாக்கி, குறிப்பிட்ட தீமைகளை அவனுக்கு உண்டாக்கி விடுகிறது. இன்றைய பெரும்பா லான மனிதர்களின் மனங்களில் எப்போதும் வஞ்சனை, பொறாமை, கோபம், ஏமாற்றம் முதலிய குணங்களே செயல்பட்டுக் கொண்டி ருக்கின்றன என்பதை எந்தப் பொது நோக்கு டையவரும் மறுக்க மாட்டார். இந்த கெட்ட எண்ணங்களை வானப் பரப்பு முழுதும் பரவி, மனிதன் சுவாசிக்கும் காற்றையும் அது கெடுத்து, அக்காற்றைச் சுவாசிக்கும் அனைவ ரிலும் அக்கெட்ட குணங்களை விழிப்பித்து, அதற்கான தண்டனையை நோய்கள், அகால மரணம், கொலை முதலிய வடிவங்களில் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. மனிதன் மனத்தாலும், உடலாலும் செய்துவரும் தீமை கள் தாம் பயங்கர உருவெடுத்து, அவன் இனத்தையே அழிக்கும் அனுகுண்டு யுத்தத் துக்கு அவனைத் தயார் செய்து கொண்டு வருகிறது.

வாயில் பேசுவதுபோல், புத்தகங்களில் எழு துவது போல், மனிதன், மற்ற மனிதரைத் தன் இனமாக ஆண்டவனின் குழந்தைகளாகக் கரு துவதும், மனிதனுக்கு மனிதன் உதவவேண் டும் என்று புலம்புவதும் உண்மையாயிருந் தால் அணுகுண்டுகள் ஏன் கண்டுபிடிக்கப்பட வேண்டும்? நாளை ஒருவனுக்கொருவன் அணுகுண்டுகளைப் போட்டு மனித இனத் தையே அழித்து விட்டால் அது ஆண்டவனின் சீற்றம் என்று ஆத்திகன் சமாதானம் செய்து கொள்ளலாம், ஆனால் அறிவுடையவன் இது மனிதனின் ஆணவத்தால் விளைந்த விளைவு என்று தெரிந்து கொள்வான்.

இப்போது மிகவும் சரியாகப் புரிந்து கொள்ள லாமல்லவா? பிரபஞ்சத்தில், உலகில் நோயோ, தீமையோ, துன்பமோ இல்லவே இல்லை; பிரபஞ்ச முழுவதும் அன்பும், இன்ப மும், ஆரோக்கியமும், ஆனந்தமும்தான் நிறைந்திருக்கிறது. மனிதன் தன் அறியாமை யால், ஆணவத்தால் அன்பான உலகைத் துன்பமானதாகச் செய்து கொள்கிறான். சாந்த மான உலகை அல்லோலகல்லோலமாக்கி விடு கிறான். சத்தியமான உலகை அசத்தியமாக்கி விடுகிறான். ஆரோக்கியமும், பலமும், தெய்வ சக்தியும் நிறைந்த உடலை நரகக் குழியாக, நோய்ப் பாண்டமாக ஆக்கிக் கொண்டு அவத் தையுறுகிறான். அன்புமயமான, ஆனந்தமய மான ஆண்டவனின் நியமத்தை அறிந்து, ஒழுகி, ஆனந்தப் பெருவாழ்வு பெறாமல் ஆறாத்துயர்க் கடலில் அழுந்தி அவத்தைப்படு கிறான்.

மனிதன் விரும்பினால் இவ்வுலகை சுவர்க்க மாக ஆக்கிவிடமுடியும்; மனிதன் விரும்பி னால் அவன் மாமிச உடலை தெய்வசக்தி நிறைந்த, அழியாத பொன்னுடலாக ஆக்கி விட முடியும். இவ்வளவு ஆற்றல் படைத்த மனிதன் நேர்மாறாக ஒழுகி அரிய பிறவியை அவலப் பிறவியாக அழித்துக் கொள்கிறான்.

எப்போதும் நல்லதையே நினைத்து, நல்லா ரோடிணங்கி, நலமே செய்யும் நோக்குடன் வாழும் நல்லவர்களுக்கு உலகெங்ஙனும் நன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையே காணப்படுமன்றி, தீமையெங்கும் காணப்படாது. புண்ணியவானுக்கு உலகில் புண்ணியமன்றி வேறு இருக்காது. எங்கும் எதிலும் ஆண்டவனைக்கான விழைபவர்க ளுக்கு எங்கும் சத்தியம், சிவம், சுந்தரமே.

எப்போதும் ஆரோக்கியம், பலம், செல்வம், அன்பையே நினைத்து வாருங்கள்; இப்போ தையே நிலை எதுவாயினும் விரைவில் துன்பம் கலவா இன்பம் வாழ்க்கையில் வந்தடையும்.

மனிதா! கண் விழி! உன்னையறி; உலகை அறி, உற்றதை அறிந்து, நற்றதைப் புரிந்து அழிவற்றப் பேரின்பத்தை அனுபவித்து, நீ வாழும் உலகை ஆண்டவன் வாழும் பரமண்ட லமாக, வைகுண்ட, கைலாச, பிரம்மலோகமாக ஆக்கி ஆனந்தப்படு!!!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மக்களுக்கோர் இன்பச் செய்தி

பாரதப் பழம் பெரும் ரிஷிகளின் மரபைப் பின்பற்றி, ரிஷி பரம்பரையினரான மகரிஷி ஒருவரின் கண்காணிப்பில் பல்லாண்டு காலம் ஆன்ம சாதனை பயின்று குருநாதரின் பணியை மேற்கொண்டு, உலக மக்களுக்கு ஆன்ம தெய்வ சாதனைகளை கற்பித்து வரும் காயத்ரீ உபாசனா சித்தி பெற்ற ஸ்ரீ ஆர்.கே. முருகேசு சுவாமிகளையண்டி ஆன்ம இரகசியங்களைப் பெற்று ஆன்ம இன்பம் அடைவார்களாக.

**1. ஆத்வைத விஞ்ஞானம் :–** அனைத்தும் ஆண்டவன் மயமே " நீ அவனாயிருக்கிறாய் " என்ற மகாவாக்கியங்களின் உண்மையை தற்கால அணு பௌதீக ரசாயன, விஞ்ஞான ஆதாரங்கள் கொண்டு விளக்கப்படும். உலகனைத்தும் ஒரே பரம்பொருள் வியாபகமாய் இருப்பதை நேர்முகமாய் கண்டறியும் விளக்கம் விளக்கப்படும்.

**2. ஜீவன் முக்தி விஞ்ஞானம் :–** மனிதன் அடைய வேண்டிய ஓர் பேரின்ப பெருநிலையுண்டு, அதை அடையவே மனிதன் பல முறை, பல உடல்களில் பல கோளங்களில் பிறந்திறந்து செல்கிறான். அந்நிலையாது? அதனால் என்ன பயன்? உடலில் உள்ளபடியே அந்நிலையடைவதெப்படி? உடலுக்கப்பால் முக்த ஜீவன் என்னாகும்? என்ற விபரங்கள் விஞ்ஞான விளக்கங்களுடன் விளக்கப்படும்.

**3. மனோ விஞ்ஞானம் :–** மனமென்பதென்ன? அது எப்படி இயங்குகின்றது மனதின் கூறுபாடுகள் யாவை? மனதுக்கும் உடலுக்கும் என்ன தொடர்பு? முதலான மனோ விஞ்ஞான தத்துவங்களின் அரிய விளக்கம். மனதை அறிந்தவன் மனிதன். மனமே இன்ப துன்ப காரணம்.

## மந்திரயோக விஞ்ஞானம்

**4. சுவாமிகளின் மந்திரங்களின் ஷக்தியைப் பற்றி விஞ்ஞான விளக்கம் :–** 1. சப்தமென்பதென்ன 2. ஷப்த வாகினி 3. ரேடியோவும் அலைகளும் 4. சினிமாவும் ஷப்த அலைகளும் 5. ஷப்தமும் குரலும் 6. சப்தமும் மொழியும் 7. சப்தத்திற்கு வடிவமுண்டு 8. ஷப்தமும் உடலும் 9. ஷப்தமும் மனமும் 10. படைப்பின் முதலில் 11. நாத விந்து 12. காரண சப்த பிரணவம் 13. ஷப்த சக்தி 14. மந்திரமென்பதென்ன 15. மந்திர தேவதை 16. மந்திரமும் சக்தியும் 17. ஜெபமென்பதென்ன 18. வாக்ஜெபம் 19. ஜெபமும் மனோசக்தியும் 20. ஜெபத்தின் உபயோகம் 21. பீஜ மந்திரமென்பதென்ன 22. மந்திரமும் மனோதத்துவமும்.

**5. ஆன்ம விஞ்ஞானம் :–** உயிரினங்களின் உடலில், உடல், மனம் அறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆன்மா உண்டு என்பதை விஞ்ஞான விளக்கங்களுடன் விளக்கப்படும் அனுபவ சான்றுகளும் காட்டப்படும்.

**6. கடவுள் விஞ்ஞானம் :–** இயங்கை வாதம், அணு வாதம், மாயாவாதம் சூன்ய வாதம், ஜடவாதம் முதலான எல்லா நாத்திகக் கொள்கைகளையும், பரிசீலித்து உலகத்திற்கோர் ஞானமயக் கடவுள் இருக்கிறார் என்பதின் அனுபவ விஞ்ஞான விளக்கம்.

**7. யமன் பேசுகிறார் :–** மரண கர்த்தாவான நசிகேதனுக்கு " மரணத்தின் பின் மனிதர்கள் என்ன ஆகிறார்கள் " என்ற மரண இரகசியத்தை விபரமாகக் கூறும் " கடோப நிஷத் " விஞ்ஞான விளக்கங்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. யந்திர சக்தியின் இரகசிய விஞ்ஞானம் தமது தியானத்தில் கண்டறிந்த யந்திர சக்தியின் விஞ்ஞான விளக்கம்.

9. இலங்கையில் முதல் முறை குண்டலினியெனும் ஞான சக்தியின் முழு விளக்க விஞ்ஞான விரிவுரை :-

ஒவ்வொரு மனிதனிலும் உறங்கி கிடக்கும் பராஸக்தியின் இரகசியத்தை அறிய இதுவோர் நற்றருணம்.

10. அருமைத்தமிழில் அணுசக்தி விளக்கம் அணுகுண்டு, அணுசக்திபற்றிய அருந்தமிழ் பேருரை அணுவை அறிந்து அணுவுக்கு அணுவான ஆண்டவனை அறியலாம்.

11. மரண லோக விஞ்ஞானம்:

மரணம், அதன்பின் நிலைகளைப் பற்றிய அனுபவ விஞ்ஞான விளக்க விரிவுரை (1) மரணமென்பதென்ன. (2) கீழேழு மேலேழு லோகங்கள். (3) மனிதனின் தினச்சாவு (4) மரணநிலை வர்ணனை (5) சூக்ஷ்ம உடல் வெளிப்படும் முறை (6) பாசக்கயிறு (7) தற்கொலை மரணம் (8) அகால மரணம்.

மரணத்தின் பின் :

(1) ஜீவ நித்திரை (2) மரணலோக விழிப்பு (3) சூக்ஷ்ம உடல் விளக்கம் (4) சூக்ஷ்ம உடலின் முடிவு (5) மரண லோக வாழ்க்கையாரம்பம் (6) நரகலோகமென்ன சுவர்க்க லோக வர்ணனை (7) தேவலோகங்கள் (8) யமலோகமும் தண்டனையும் (9) மரண லோக வாழ்க்கை முறை (10) நாத்திகரின் ஜீவகதி (11) உலகை சுற்றும் ஜீவர்கள் (12) பேய் பிசாசுகள் உண்டா (13) தற்போதேன் அதிக பேய்களில்லை (15) மரண உலக பூவுலக தொடர்பு (16) ஜீவனின் ஜன்ம யாத்திரை (17) மறுபடி ஏன் பிறக்கிறான் எங்கே பிறப்பான் (18) மேலுலக யாத்திரை (19) தேவரும் மனிதரும் (20) பிறவாப் பேரின்பம்.

12. ஆன்ம ஞானத் திருவிழா :- வேதாந்தமும், விஞ்ஞானமும் இணைத்தெழுந்த விளக்கங்கள்.

13. பக்தி விஞ்ஞானம் :- சர்வ வியாபகனான இறைவனை சகுனத்தில் காணமுடியுமா? பக்தியென்பது என்ன? பக்தி எத்தனை வகை? பக்தியால் என்ன பயன்என்பவைகளை தற்கால மனோ விஞ்ஞான ஆதாரத்துடன் அனுபவச் சான்றுகளுடன் விளக்கப்படும்.

14. இன்ப துன்ப விஞ்ஞானம் :- மனிதனுக்கு இன்பமும் துன்பமும் ஏன் உண்டாகிறது. இன்பமென்பதென்ன? துன்பமில்லாத இன்பநிலையில் வாழமுடியாதா இன்பம் எதனால் கிட்டும் என்பன போன்ற விளக்கங்களுடன் இன்பமாய் வாழும் சாதனா விளக்கமும் விளக்கப்படும்.

15. ஏகாக்ர விஞ்ஞானம் :- சமாதி ஞானத்தின் ஆரம்பப்படியாகிய ஏகாக்ர நிலை என்பதென்ன? ஏகாக்ரத்தில் மனம் எப்படி இருக்கும்? அந்நிலையில் மனதுக்கு என்ன திறமை உண்டாகிறது என்ற விளக்கங்களுடன் ஏகாக்ர நிலையை அடையும் பல சாதனா முறை விளக்கப்படும்.

16. ஜோதிட விஞ்ஞானம் :- சூரியனைச் சுற்றும் கிரகங்களுக்கும் பூவுலகக்கும் தொடர்புண்டு கிரக மாறுதல், உலகின் அனைத்திலும் மனிதன் அறிவிலும் மாறுதலாக்கும் கிரகங்கள் மனிதனின் விதியை ஆள்கின்றன. ஜாதகத்தின் தத்துவம். ஜோதிடப் பலன்களின் விளக்கம் முதலிய விஷயங்கள் விஞ்ஞான அனுபவ ஆதாரங்களுடன் விளக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. கோவில் வழிபாட்டு இரகசியம் :-

கோவில் ஏன் தோன்றியது? அதன் அமைப்பில் கருத்து வழிபாட்டின் தத்துவம், இவ்விபரங்கள் முதன் முறையாக சூக்ஷ்ம திருஷ்டியால் கண்டறிந்தவை.

மற்றும் மத சித்தாந்தங்களின் மறைமுக தத்துவங்கள், யோக இரகசியங்கள், தெய்வங்களின் இரகசிய விஞ்ஞான விளக்கம், மந்திர சாஸ்திரங்களின் மர்மங்கள், சூக்ஷ்ம திருஷ்டி விஞ்ஞானம், இன்னும் இதுவரை தமிழுலகம் கேட்டிராத, சிந்தனைக்கெட்டாத பேருண்மைகள் பற்றிய இரகசிய வகுப்புகளும் நடத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையான துறவி யார்?

காசியில் ஒரு சந்நியாசி இருந்தார். அவர் ஒரு மஹாதிதிக்ஷு. அவரால் உஷ்ணம் குளிர் ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ள முடியும். கோடையில் அவர் வெயிலில் சில மணி நேரம் நிற்பது வழக்கம். குளிர் காலத்தில் கங்கையில் சில மணி நேரம் நிற்பது வழக்கம். அவர் புல்லின்மேல்தான் படுப்பது வழக்கம். அவர் மரக்கட்டில்களை ஒதுக்கிவிட்டார்.

ஒரு சமயம் அவருடைய அன்பர்களில் ஒருவரான ஸ்ரீராம் அவரை முசௌரிக்கு அழைத்துச் சென்றார். ஸ்ரீராம் அவருக்குப் படுத்துக் கொள்வதற்காக ஒரு கட்டில் ஏற்பாடு செய்து கொடுத்தார். சந்நியாசி அந்தக் கட்டிலில் படுத்துறங்க மறுத்துவிட்டார். அவர் அந்த நண்பரிடம் தனக்குப் புல் படுக்கைக்கு ஏற்பாடு செய்து தரும்படி கேட்டார். அன்று பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. அப்பொழுது அவரால் புல் சேகரித்து வருவதற்கு மிகவும் சிரமமாகி விட்டது.

ஸ்ரீராம் அவரைப் பார்த்து சுவாமிஜி, இங்கு புல் கிடைப்பது மிகவும் கடினம். மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து இன்று இந்தக் கட்டிலைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இது உங்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. தாங்கள் ஒரு பக்குவப்பட்ட சந்நியாசி. இந்த சரீரம் புல் படுக்கையிலோ அல்லது கட்டிலின் மீதோ படுப்பதனால் தங்களுக்கென்ன சுவாமிஜி? என்று வினவ, அதற்குச் சுவாமிஜி, "முடியாது, முடியாது எனக்கு என்னுடைய வழக்கமான புல் படுக்கைதான் வேண்டும், நீங்கள் எப்படியாவது அதைக் கொணர்ந்துதான் தீர வேண்டும்", என்று கூறினார்.

வைராக்கியத்தில் அபிமானம் வைத்திருப்பது அபிமானத்தைப் போலவே அவ்வளவு தீங்கு பயப்பதாகும். வைராக்கியம் ஆத்ம ஞானத்தை அடைவதற்கு ஒரு மார்க்கமாகும். அதுவே லட்சியமல்ல. ஒரு ஜீவன் முக்தருக்கு ராகமோ அல்லது வைராக்கியமோ இல்லை. நீங்கள் அவருக்கு ஒரு சிறிதளவு வரட்டு ரொட்டியை மட்டும் கொடுத்தாலும் அவர் பூரண திருப்தியடைவார். அவர் முணுமுணுக்க மாட்டார். நீங்கள் அவருக்கு மிகச் சிறந்த தித்திப்புப் பலகாரங்களையும், பால், பழம் முதலியவற்றையும் கொடுத்தால் அவர் அவற்றை மறுக்கவும் மாட்டார். ஆனால் அவர் சுவையான உண்டியினால் பூரிப்படைந்து விட மாட்டார்.

அவர் எப்பொழுதும் தன்னுடைய சொந்த ஆத்மாவிலிருந்துதான் ஆனந்தத்தைப் பெறுகின்றாரேயொழிய, புறப் பொருள்களிலிருந்து அல்ல. ஒருவன் அனுபூதி அடைந்து விட்டானா இல்லையா என்று கண்டுபிடிக்க இதுவே சோதனையாகும். ஒரு உலக மனிதனுக்கு தான் மிகவும் விரும்பி உண்கிற உணவு வகை கிடைக்காவிடில் அவன் மிகவும் அவஸ்தைக் குள்ளாகிறான். சுவையான உண்டி கள் சீரான மனோநிலை உண்டு. அவர் விருப்பு வெறுப்பு களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கிறார்.

சுகதேவர் ஜனக ராஜாவால் சோதிக்கப்பட்டார். அவர் சில நாட்கள் ஆகாரமின்றி வாயிலில் காத்துக் கிடந்தார். அவர் பூரண சாந்தியுடன் இருந்தார். பிறகு அவர் அந்தப்புரத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். ராணிகள் அவருக்குப் பணிவிடை புரிந்து மிக நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்பண்டங்களைக் கொடுத்தனர் அவர் பாதிக்கப் படாமலேயே இருந்தார். இதுதான் ஞானம்.

முசௌளியில் புல் படுக்கை கேட்ட அந்த சுவாமி சீரான மனோநிலையையும், ஆத்மானு பூதியையும் அடையவில்லை என்பது தெளிவு. பல ஆண்டுகள் ஆன்மீகப் பயிற்சி பெற்றபிறகும் அவர் வைராக்கியத்தில் பற்றுக் கொண்டிருந்தார். அவர் சகலவிதமான பற்றுதல்களினின்றும் பூரணமாக விடுதலை பெற்றிருக்கவில்லை. ஏனெனில் அவர் வைராக்கியத்தில் பற்று வைத்திருந்தார். அவர் சகஜ அவஸ்தை அல்லது இயற்கை நிலையை அடையவில்லை. அந்நிலையில் ஒரு முனிவர் சகலவிதமான வஸ்துக்களிடமும் பற்றற்றுத் திகழ்கின்றார். அந்நிலையில் அவர் புல் படுக்கையின் மீதோ அல்லது மெத்தை, தலையணையுடன் கூடிய அழகிய மஞ்சத்தின் மீதோ ஒரே மாதிரியான பாவத்துடன் தான் படுத்து உறங்குவார்.

வஸ்துக்களிடம் சமமான மனோநிலை யுடையவன் எவனோ அவன் மஹா தியாகி அல்லது மஹாபோகி என்று யோகவாசிஷ்டத்தில் அழைக்கப்படுகிறான். வைராக்கியத்தை அப்பியஸிப்பது சுலபம். ஆனால் மனத்தை சீரான நிலையில் வைத்திருப்பது மிக மிகக் கடினம்.

சில சந்நியாசிகள் பிரதிஷ்டை அல்லது புகழையும் மரியாதையையும் பெறுவதற்காக வைராக்கியத்தை அப்பியசிக்கின்றனர். ஆனால் கடவுள் எல்லோருடைய உள்ளக்கருத்தையும் அறிவார். ஏனெனில் அவர் எல்லோருள்ளும் அந்தர்யாமியாக இருக்கிறார் நீங்கள் அவரை ஏமாற்ற முடியாது.

ஒருவன் ஏகாந்தமாக இருக்கும்பொழுது, அங்கு தூண்டுதல் எதுவும் இல்லாதிருக்கும் பொழுது வைராக்கியத்தின் பலம் எங்கே இருக்கிறது? ஒருவன் எதையுமே துறக்காத பொழுது, துறப்பதற்கு அவனிடம் ஒன்றுமே இல்லாதபொழுது, உலக விஷயங்களை அவன் அனுபவித்திராத பொழுது, உலக விஷயங் களிடத்து மனத்தில் எந்தவிதக் கவர்ச்சியுமில்லாத பொழுது, ஒரு கோணிப்பையை மேலே போர்த்திக் கொண்டோ அல்லது ஒரு சிறு திருவோட்டை மட்டும் கையிலேந்திக் கொண்டோ தான் ஒரு பெரிய விரக்தன் அல்லது வைராகி என்று வெளிக்கு மட்டிலும் காட்டிக் கொண்டிருந்த போதிலும் அவனிடத்து வைராக்கியத்தின் பலம் எங்கே இருக்கிறது?

ஜனகராஜா அரச வைபோகங்களுக்கிடையே வாழ்ந்து வந்தார். மிதிலை நகரம் தீப்பற்றிக் கொண்டது என்று மக்கள் அவரிடம் கூறினார்கள். இருந்தபோதிலும் அவர் ஒரு சிறிதும் அதனால் பாதிக்கப்படவில்லை. அது உண்மையான வைராக்கியம். அவரைத்தான் ஒரு உண்மையான மஹா விரக்தர் என்று கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிசங்கரர் வழி

காலடியிலே பிறந்து இமயம்வரை நடந்து இந்து தர்மம் காத்தவர் பகவத்பாதர். அவர் காலத்தில் பிரிந்து கிடந்த நமது தர்மத்தை ஒன்று சேர்த்துவைத்தார். அறிவுத் தெளிவில்லாத மூட நம்பிக்கைகளைத் தகர்த்து எறிந்தார்.

இந்து மதத்திற்கு உயிரும் உடம்பும் தந்தவர் சங்கரர். சங்கரர் தோன்றவில்லையென்றால் நமது ஹிந்து தர்மமும், மதமும், இந்த உருவில் இருக்காது. எல்லாவிதமான ஆசைகளையும் விட்டவர் அவர். அவருக்கு தேச பேதமோ, தெய்வ பேதமோ, எதுவும் கிடையாது. கணபதியைத் துதிக்கத் துவங்கி கால பைரவர் வரை எல்லா மூர்த்தங்களையும் அவர் துதித்துள்ளார். சங்கரர் தோத்திரங்களின் தெளிவான சிறப்பு அவர் ஒரு மூர்த்தியைத் துதிக்கும்போது அவ்வழியில் இருந்து பிறழ மாட்டார்.

அதனால்தான் பஜகோவிந்தம் படிக்கும் போது அவர் வைஷ்ணவராகவும், சிவானந்தலஹரியில் சைவராகவும், ஸௌந்தர்யலஹரியில் சாக்தராகவும், சுப்பிரமண்ய புஜங்கத்தில் கௌமார சமயத்தவராகவும் அவர் காட்சியளிக்கிறார்.

பொருள் அறியப்படாமல் இருந்த பிரும்ம சூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுதிப் பண்டிதர்களுக்கு உதவிய பெருமை அவருடையது. தனக்குப் பிறகு தோன்ற இருந்த மத குருமார்களுக்கு வழிகாட்டி மரமாக – நேர்ப் பாதையாக அவர் விளங்கினார்.

அவர் கைப்பட்ட தலங்கள் தெய்வ ஒளி பெற்று நிற்கின்றன. தந்திர சாஸ்த்திரத்தில் அவர் பெற்ற வெற்றிகள் இன்றும் நிற்கின்றன. அவர் ஸ்தாபித்த யந்திரங்கள் மூலமூர்த்தங்களும் இன்னும் நம்முடன் பேசுகின்றன. காஞ்சியில் அவர் பதித்த ஸ்ரீசக்கரம் எல்லாச் சக்கரங்களுக்கும் தாயாகி நிற்கிறது. திருவானைக்காவில் தாடங்கம் பதித்தகரம் அவருடையது. ஸ்ரீ ரங்கத்திலும், திருப்பதியிலும் அவருடைய கால்பட்ட மஹிமையும், கரம் தந்த பெருமையும் இன்று பேசுகின்றன.

அவர் நினைவால் நம்முடைய தெய்வசக்தி பெருகும். சங்கரருடைய கோத்திர மொழியால் தெய்வத்தோடும் பேசலாம் – தெய்வத்துடனும் கலந்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மம் குன்றி அதர்மம் ஓங்கும் பொழுதெல்லாம் நான் தோன்றி, அதர்மத்தை யழித்து, தர்மத்தைக் காப்பேன் என்ற கண்ணன் வாக்குப்படி, உலகில் அவதார புருஷர்கள் தோன்றி, அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காத்து வருவது அனைவரும் அறிந்த உண்மை.

இம்மண்ணுலகை சப்தரிஷிகள், இன்னும் சிரஞ்சீவிகளாக வாழ்ந்து, மறைமுகமாய் ஆண்டு, வழிநடத்தி வருவதை பலர் அறிய மாட்டார்கள். உலகை ஏழாகப் பிரித்து, ஏழு ரிஷிகளும், அவர்களின் ஆன்மீக அருளாட்சியை நடத்தி வருகிறார்கள் என்பது உண்மை. உலகம் ஏழாக பிரிந்துள்ளது என்பதை 7 கடல்கள், (Seven seas) 7 நாட்கள், ஸப்த ஸ்வரங்கள், 7 கிரகங்கள், ஸப்த தாதுக்கள், ஸப்த வர்ணங்கள் என்பதைக் கொண்டு புரிந்து கொள்ளலாம். இந்த ஏழு ஸப்த ரிஷிகளே, இம்மண்ணுலகில் எறும்பு முதல் யானை ஈராக அனைத்து ஜீவராசிகளையும், தாவரங்களையும், சூரிய சந்திரர்களையும், நட்சத்திர ராசி மண்டலங்களையும் இயக்கிக் கொண்டு வருகிறார்கள். இவ்வுலகில் அவர்கள் விரும்பும் பொழுது, தகுந்தவர்களின் உடலை ஆட் கொண்டு தீவிர மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களின் காரியங்களை வெற்றிகரமாக முடித்த பின் அந்த உடலைவிட்டு பிரிந்து விடுகிறார்கள்.

அருணகிரிநாதர், பட்டினத்தார், வியாசர், வான்மீகி, ஆழ்வார்கள், நாயன்மார்கள், புத்தர் இன்னும் எத்தனையோ மஹானுபாவர்களின் வாழ்க்கை இரகசியத்தை ஆராய்ந்து பார்த்தால் இந்த ஆன்மீக பேருண்மை புலப்படும் என்பதில் சந்தேகமேயில்லை.

இன்று உலகம் அழிவுப் பாதையை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக் கிறது. இந்தப் பேரழிவில் இருந்து உலகைக் காக்க, ஸப்த ரிஷிகள், திட்டங்கள் பல வகுத்து இந்த விஞ்ஞான உலகுக்குத் தக அழிவுப் பாதையில் சென்று பட்டழிந்து போவதை தடுத்து ஆன்மீக வழியில் இட்டுச் சென்று அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள்மயமான பெருவாழ்வைப் பெற வழிகாட்டி வருகிறார்கள்.

உலகில் பேரழிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் போர் வெறி, விஞ்ஞானம் கண்டுகொள்ள முடியாத பயங்கர வியாதி, பூகம்பங்கள், மக்களில் நச்சுத்தன்மை, எங்கு பார்த்தாலும் பயம், அமைதியின்மை, மனித அறிவுக்கு எட்டாத, விஞ்ஞானிகளும் புரிந்து கொள்ள முடியாத உலகையே சூன்யமாக்கவல்ல இயற்கையின் சீற்றம், ஆக்கத்தில் இன்பம் காண வேண்டிய மனித இனம், அழிவில் இன்பத்தை, சந்தோஷத்தைக் காண விரும்பும் மனித மனம்.

ஆம்! இவைகளைக் கண்ட மகிரிஷிகள் உலகில் சாந்தியை ஏற்படுத்த முன்வந்து விட்டார்கள். உலகில் பல பாகங்களில் பலரை தேர்ந்தெடுத்து ஆட்கொண்டு அவர்கள் மூலம் உலகில் சாந்தியை ஏற்படுத்த ஸப்த ரிஷி மண்டல வாழ் மகரிஷிகள் கடந்த பல வருடங்களாக பலவிதங்களில் முயற்சி செய்து வருகிறார்கள்.

ஸப்தரிஷிகளில் ஒருவரான அகஸ்தியர் பெருமான் தமிழகத்தில் வாழ்ந்த ஸ்ரீ கண்ணையா யோகியை ஆட்கொண்டு 14 வருடங்கள் நீலகிரி, பொதிகை மலை சாரல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியளித்து, உலகம் அறிந்திராத உயர் சாதனைகளை, மகரிஷிகள் மர்மமாக வைத்திருந்த மஹா சாதனைகளை அவர் மூலம் உலகில் சாந்தி ஏற்பட வழி வகுத்தனர். இந்த மஹா யோகி, மனிதர்கள் புரிந்து கொள்ள முடியாத சாதாரண பண்டிதனாக வாழ்ந்து, மறைமுகமாய் மகரிஷிகளின் வித்தையை தகுந்த மாணவர்களுக்கு மட்டும் கற்பித்து வந்தார்.

காயத்ரீ சித்தர் சுவாமி முருகேசு அவர்களும் ஸப்தரிஷி ஒருவரால் ஆட்கொள்ளப்பட்டு நீலகிரி, பொதிகை மலைச்சாரலில், சூக்ஷ்ம ஆஸ்ரமத்தில் தீட்சைக்ஷ கொடுக்கப் பெற்று அவர் உபதேச நெறி தமிழகத்தில் வாழ்ந்த அருந்தவ யோகி ஸ்ரீ கண்ணையா அவர்களிடம் சரணமடைந்து காயத்ரீ தீக்ஷை ஏற்று பல்லாண்டு காலம் சாதனை செய்து அன்னை காயத்ரீ தேவியின் பரிபூர்ண அருளைப் பெற்று, உலகில் சாந்தி ஏற்பட காயத்ரீ மந்திரமே சிறந்தது. அதையே உலகம் முழுவதும் பரப்பி வா என்ற குரு உபதேசப்படி, நுவரெலியாவில் காயத்ரீ ஆலயம் அமைத்து, இன்று காயத்ரீ மந்திர மகிமையை உலகம் பூராவும் பரப்பி வருகிறார் சுவாமி முருகேசு அவர்கள்.

சுவாமி முருகேசு அவர்கள் ஸப்தரிஷிகளின் தொடர்பு கொண்டு காயத்ரீ உயர் சாதனை செய்து மாபெரும் தவ ஆற்றலையும், சித்திகளையும் பெற்று தன் உயர் சித்திகளை பணம், பொருள், புகழுக்காக வெளிப்படுத்தாது சாதாரண மக்களில் தானும் ஒருவராகவே வாழ்ந்து வருகிறார். அடிக்கடி பாரதம் சென்று இமயம் முதல் குமரிவரை காடு, மலைகளில் சூக்ஷ்மமாக வாழ்ந்து வரும் சித்தர் மரபினர், முனிவர்கள், மகரிஷிகள் போன்றோரை தரிசித்து ஆசி பெற்று வருவார். இந்த பேருண்மையை புரிந்து கொண்ட பலர் இவரிடம் சரணடைந்து இவரை குருவாக ஏற்று, இவரிடம் ஆன்ம இரகசிய வித்தைகளைக் கற்று சாதனை செய்து வருகிறார்கள். மேல்நாட்டவர்கள் பலர் சுவாமிகளை குருவாக ஏற்று சாதனைகள் பல புரிந்து, சித்திபெற்ற, சக்தி மனிதர்களாக வாழ்நது வருகிறார்கள்.

சில சித்த புருஷர்கள், ரிஷி மரபினர் சுவாமிகள் இருக்கும் இடம் தேடி வந்து, மரியாதையுடன் அவரோடு கலந்துரையாடல் செய்து திரும்புகிறார்கள். மாமகரிஷிகளிடம், தான் கற்ற மந்திர, தந்திர, யந்திர சாஸ்திரங்களின் மர்மங்களை பல புத்தகங்களில் வெளியிட்டுள்ளார். மகரிஷிகள் இவரை ஏற்று இரகசிய சித்த சாதனைகள், ஆன்மீக உயிர் மூலிகைகள், இரசமணி, நவபாஷாண செய்முறைகள் அனைத்தும் உலக க்ஷேமத்திற்காக இவரிடம் ஒப்படைத்துள்ளனர். இவரை அடுத்து நிற்பவர்களுக்கு இவைகளை இரகசியமாக கற்பித்து வருகிறார்.

நுவரெலியா ஸ்ரீ காயத்ரீ பீடத்திற்கு சித்தர்கள், முனிவர்கள், மகரிஷிகள் அடிக்கடி சூக்ஷ்மமாக வந்து சுவாமி முருகேசு அவர்களிடம், உபதேசித்து வருகிறார்கள்.

உலகம் அறிந்திராத உயர் சாதனை, மகரிஷிகள் மர்மமாக வைத்திருந்த மஹாசாதனைகளை, உலகில் பல பாகங்களிலும் உள்ள ஆன்மீக நாட்டம் கொண்டவர்கள், சுவாமிகளை புரிந்து கொண்டு அவரிடம் கற்று, ஆன்ம முன்னேற்றமடைந்து வருவது அனைவரும் அறிந்த உண்மை.

மகரிஷி பரம்பரையினருடன் தொடர்பு கொண்டு மனித உடலில் நடமாடும் மானிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமாக வாழ்ந்து வரும் மஹானுபாவரான சுவாமி முருகேசு அவர்களை பூர்வ புண்ணிய தவப்பயனாய் ஞான குருவாய் அடைந்து அவரின் திருப்பாதங்களை இதயத்தில் பூஜித்து இறையின்பத்தை சதா அனுபவித்து வரும் அடியேன் இந்த சிறு கட்டுரையை அவர் பாதங்களில் பலகோடி வணக்கம் செய்து சமர்ப்பிக்கிறேன்.


இக்கட்டுரையை வாசித்து, அவரை சரணடைந்து அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்பவர்கள் நிச்சயம் உயர் பேரின்பமாம் இறையின்பத்தை தொட்டு அனுபவிப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

– கோமதி

ஸ்ரீ சுப்ரமண்ய யந்திரம்



பிராணயந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

1. இறைவன் சோதிவடிவாய், பரஞ்சுடராய், ஒளிவடிவாய், இன்பக்கடலாய், இலங்குபவன். உலகத் தோற்றத்தின் முதலில்தனித்தவனாய் விளங்கியிருந்து எல்லா பூதியங்களையும் கூட்டி,உலகை ஆக்கியவன். அப்பரா ஸக்தியே இன்றும் என்றும் இப்பூவுலகை வான கோளங்களைத் தாங்கி நடத்தி வருகிறது. நல்லொழுக்கங்களாலும் நற்செயல்களாலும் நாம் அவ்வொளியை சக்தியை நமக்குள் பெறுவோமாக.

2. ஆத்ம சக்தி வளர்ந்து வன்மைபெற, இறை அருள் வேண்டும்.அதனாலேயே அறிஞர்களும் இறைவனின் போதனைகளை வழிபடுகின்றனர். இறைவனை அடைதலே இறப்பிலா நிலை. அவனை புறக்கணிப்பதாலேயே, இறப்பு பன்முறை உண்டாகிறது.ஆதலால் நாம் நல்லொழுக்கங்களாலும் நற்செயல்களாலும் இன்பவடிவான இறைவனின் அருளைப் பெறுவோமாக.

3. எப்போதும் செயல் புரிந்துகொண்டிருக்கும் உயிர்களைத் தன்னகத்துக் கொண்டியங்கும் இப்புவியை உயிர்களின் சிறப்புகளுக்குகந்த வகையில் ஆக்கி, பறவை இனங்கள், மக்கள் இனம், விலங்கினங்களைத்துக்கும் செயலுக்குத் தகுந்த பலனையளித்து, தனக்கு தனக்குவமையில்லாத ஆட்சிபுரியும் இன்ப வடிவான இறைவனை நாம் நல்லொழுக்கங்களாலும், நற்செயல்களாலும் வழிபடுவோமாக.

4. வெகுவேகமாய் சுற்றும் பூமிக்கு நிலையாய், இன்பத்திற்கும் (மோக்ஷ) வீட்டிற்கும், இருப்பிடமாய் இருந்து, வானவெளியில் எண்ணத் தொலையாத கோளங்களை இயக்கிச் சிறப்பிக்கும் இன்ப வடிவான, இறைவனை நாம் நல்லொழுக்கங்களாலும், நற்செயல்களாலும் இறைஞ்சி நிலைபெறுவோமாக.

5. இயங்கும் இயங்காப் பொருள்களைத்துக்கும் தலைவா! உன்னையன்றி வேறெதுவும் இவ்வுலகின் உள்ளும் புறமும் பரவியதில்லை. எங்கள் விருப்பங்களை நிறைவேற்ற வல்ல அருட்கடலான உம்மை யாம் வேண்டுகிறோம். நாங்கள் இன்பங்களைப்பெற்று வாழ அருள் புரிவாயாக.

6. இறைவனே எல்லா இன்பங்களின் இருப்பிடமானவன். அவனை வணங்குவதன் மூலம் நாம் அவ்வின்பங்களைப் பெறுவோமாக. அவ்வின்ப வடிவினையே எல்லா உயிர்களும் வழிபடுகின்றன; அவனே நம்மை நடத்தும் தலைவனாயிருக்கட்டும். மற்ற தீய சக்திகளை நாம் பின்பற்றாதிருப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான வேதனைகளால், நோய்களால், துன்பச் சூழல்களால் அவதிப்படும் மனிதன், அப்படி அவதிக்குள்ளாகவே, பிறந்து ஜீவனாக, வினைப்பயனால், கடவுள் சோதனையால் ஆட்டப்படும் ஓர் சூத்திரப் பாவையாய் நினைத்து, ஏற்படும் துன்பங்களையெல்லாம் அனுபவித்தேயாக வேண்டிய ஓர் அற்ப பிராணியாகத் தன்னைக் கருதி வாடுகிறான். இப்படி வாடும் மனிதன் எங்கோ, தன்னால் காண முடியாத, அடைய முடியாத கற்பனைக்கும் எட்டாத தூரத்தில் இத்தகைய துன்பங்களேயில்லாத, இன்பமே வடிவானதோர் கடவுள் இருப்பதாகவும், அவர் தனக்கு அருள் செய்தால் தன் துன்பங்களெல்லாம் மாறிப் போகுமென்றும், ஆனால் அவர் அவ்வளவு எளிதில் தனக்கு அருள் செய்ய மாட்டாரென்றும், அவரருளைப் பெறுவதற்கான முயற்சியிலும், துன்பத்தால் வாடும் தான் ஈடுபட்டு வெற்றியடைய முடியாதென்றும் கருதுகின்றான். இத்தகைய நம்பிக்கைகள் எல்லாம் மனிதனின் அறியாமையைத் தான் காட்டுகின்றன. ஏனென்றால், தன் துன்பங்களையெல்லாம் போக்கவல்ல, இன்ப வழவான அக்கடவுள் எங்கோ இருப்பதாகக் கருதுகிறானே, அது உண்மையல்ல. அந்தக் கடவுள் மனிதனிலேயே இருக்கிறார். அது மட்டுமல்ல. மனிதன் அக்கடவுளின் அம்சமே.

" கடவுள் தன்னைப் போல் மனிதனைப் படைத்தார் " என்ற பைபிளின் வாக்கியத்தில் ஆழ்ந்த உண்மை இருக்கிறது.

மனிதனின் உண்மை வடிவே இன்பம்தான். அவன் தேடியலையும் இன்பத்தை அவன் வேறெங்கிருந்தும் பெற வேண்டிய தேவையேயில்லை அது அவனியிலேயே இருக்கிறது அவனே அதுவாக இருக்கிறான்.

அப்படியானால் அவன் தன்னை அற்ப ஜீவனாக துன்பங்களால் அவதிப்பட வேண்டியவனாக அவதிப்படுபவனாக ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்? நெருப்பின் மேல் சாம்பல் பூத்திருப்பது போல், பிரகாசமான விளக்கின்மேல் கருப்பு மூடி கவிழ்ந்திருப்பது போல், இன்ப வடிவமான மனிதன் மேல் – ஆத்மாவின் மேல் தமஸ், இருள் அழுக்கு, திரை மூடியிருக்கிறது. இதனால்தான் அவன் உண்மையனுபவம் வெளிப்படுவதில்லை. அதனால் அவன் தன் துன்பங்களையெல்லாம் போக்கிக் கொண்டு, தன் உண்மை வடிவான இன்ப வாழ்க்கையில் வாழ அவன் செய்ய வேண்டியதெல்லாம் அவனைக் கப்பியிருக்கும் தாமச இருளை தன்னிலிருந்து அகற்ற வேண்டியதுதான். எப்படி அகற்றலாம்? காற்று வீசினால் சாம்பல் பறந்து விடும். நெருப்பில் காய்ச்சினால் பொன்னின் அழுக்கு மறைந்துவிடும். அதுபோல மனிதனில் சத்துவ குணம் வளர்ச்சியடைந்தால் தாமோ குண இருள் அழுக்கு அகன்றுவிடும். இது அகன்றால் தன் உண்மையான இன்ப வடிவைக் கண்டு இன்ப வாழ்க்கையை மனிதன் அடைந்துவிடுவான். அப்படியானால் சத்துவகுணத்தை வளர்ப்பது எப்படி? இதற்கு பல்வேறு வழிகளை ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். அவைகளில் சிறந்ததும், எளிதானதும், விரைவில் நிறைய சத்துவ குணத்தை வளர்ப்பதுமான சாதனை காயத்ரீ உபாசனை. ஏனென்றால் காயத்ரீ மந்திர ஜெபத்தால் உருவாகி அலைக்கழியும் மன அலைகள் சத்துவகுண அலைவடிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்குகின்றன. அதனால் இந்த அலைகள் போதுமான பலமுடையவையாக ஆகிவிட்டால் உடனே தாமஸ்ஸை மோதி அகற்றிவிடும். மனிதன் தூய இன்ப வடிவினனாக ஆகி விடுவான்.

தகுந்த குருவைஅண்டி சாப விமோசனம் செய்வித்து தீக்ஷை பெற்று, காயத்ரீ உபாசனையை முறைப்படி செய்து வந்தால் தமஸ் விலகி விடும். மெய்ஞ்ஞானம் தோன்றும். ஆன்மாவின் நிஜ வடிவம் தெரியும். துன்பம் பற்றாத இன்ப வாழ்க்கை தொடங்கிவிடும். காயத்ரீ வேதங்களின் தாய், காயத்ரீயை விடச் சிறந்த மந்திரம், மண்ணுலகிலுமில்லை. விண்ணுலகிலுமில்லை. காயத்ரீ உபாசனை ஒன்றாலேயே மனிதன், தன்னில் உறையும் உயராத்ம சக்தியைக் கண்டானந்தம் பெற முடியும்.

## மந்திரம்

1. இறைவன் சோதிவடிவாய், பரஞ்சுடராய், ஒளி வடிவாய், இன்பக் கடலாய் விளங்குபவன் ; உலக தோற்றத்தின் முதலில் தனித்தவனாய் விளங்கியிருந்து எல்லா பூதியங்களையும் கூட்டி உலகை ஆக்கியவன்; அப்பரா ஸக்தியே இன்றும் என்றும் இப் பூவுலகை, வான கோளங்களைத் தாங்கி நடத்தி வருகிறது. நல்லொழுக்கங்களாலும் நற்செயல்களாலும், நாம் அவ்வொளியை, சக்தியை நமக்குள் பெறுவோமாக.

2. ஆத்ம சக்தி வளர்ந்து வன்மை பெற இறை அருள் வேண்டும். அதனாலேயே அறிஞர்களும் இறைவனின் போதனைகளை வழிபடுகின்றனர். இறைவனை அடைதலே இறப்பிலா நிலை ; அவனை புறக்கணிப்பதாலேயே இறப்பு பன்முறை உண்டாகிறது. ஆதலால் நாம் நல்லொழுக்கங்களாலும், நற்செயல்களாலும் இன்ப வடிவான இறைவனின் அருளைப் பெறுவோமாக.

3. எப்போதும் செயல் புரிந்து கொண்டிருக்கும் உயிர்களைத் தன்னகத்து கொண்டியங்கும் இப்புவியை உயிர்களின் சிறப்புகளுக்குகந்த வகையில் ஆக்கி, பறவை இனங்கள், மக்கள் இனம், விலங்கினங்களனைத்துக்கும் செயலுக்குத் தகுந்த பலனையளித்து, தனக்கு தனக்குவமையில்லாத ஆட்சிபுரியும் இன்பவடிவான இறைவனை நாம் நல்லொழுக்கங்களாலும், நற்செயல்களாலும் வழிபடுவோமாக.

4. வெகுவேகமாய் சுற்றும் பூமிக்கு நிலையாய், இன்பத்திற்கும், (மோக்ஷ) வீட்டிற்கும் இருப்பிடமாய் இருந்து வானவெளியில் எண்ணத் தொலையாத கோளங்களை இயக்கிச் சிறப்பிக்கும் இன்ப வடிவான, இறைவனை, நாம் நல்லொழுக்கங்களாலும் நற்செயல்களாலும் இறைஞ்சி நிலைபெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரீ கீதை

காயத்ரீ மந்த்ர எழுத்துகளில் ஒவ்வொன்றும் அரிய கருத்துக்களையும், சக்திகளையும் வெளிப்படுத்துபவை. ஒவ்வொன்றும் இக உலக சம்பந்தங்களை விளக்குகின்றன. அவைகளைப் பற்றி விளக்குவதே காயத்ரீ கீதை.

### சுலோகம் 1

வேதங்கள் யாரை ந்யாயத் தலைவன், சச்சிதானந்த வடிவினன், சர்வேஸ்வரன், பொது நோக்கு டையவன், பிரபஞ்சத்தை நடத்து விப்பவன், பிரபஞ்சத் தலைவன், உருவமற்றவன் என்று சொல்லுமோ, எது பிரபஞ்சம் முழுதும் ஆத்ம வடிவாகப் பரவியிருக்கிறதோ அப்பரம் பொருளின் எல்லாப் பெயர்களிலும் மேலான பாபம் போக்கும், பவித்திரமான, தியானம் செய்யத் தகுந்த முக்கியப் பெயர் " ஓம் ".

### சுலோகம் 2

உலகில் சகல துக்கங்களையும் போக்கக் கூடிய சக்திதான் –புவ: எனப்படுகிறது. தன் கடமையாக மட்டும் செய்யப்படும் காரியங்களே கர்மம் எனப்படும். சுகப்பலனை எதிர்பார்க்காமல் கர்மங்களைச் செய்பவர்கள் எப்போதும் சந்தோஷமாகவே இருப்பார்கள்.

### சுலோகம் 3

காயத்ரீ மந்திரத்தின் " ஸ்வ " சப்தம்மனதின் நிலைப்புத் தன்மையைக் குறிக்கிறது. சஞ்சலப்படும் மனதை நிலையாகவும், சுகத்தைப் பற்றியே நினைப்பதாகவும் வைத்திருக்க வேண்டும். சத்தியத்தில் ஆழ்ந்திரு. இந்த உபாயத்தால் ஸம்யமி புருடன் மூவகை சாந்திகளையும் பெறுகிறான்.

### சுலோகம் 5

இவ்வுலகில், தன் பிறப்பு மரண இரகசியங் களையறிந்து, பயத்தையும், ஆசையையும் வென்று, தன் வாழ்க்கை முறையைத்தானே அமைத்துக் கொள்பவனே அறிவாளி – புத்திமான் என்று " தத் " சப்தம் விளக்குகிறது.

### சுலோகம் 6

மனிதன் சூர்யனைப் போன்ற அறிவு பலம் பெற்றவனாகி, சகல விஷய ஞானத்தையும், அனுபவங்களையும் தன் ஆத்மாவிலேயே பெறக்கூடியவனாக ஆக வேண்டும் என்பதை " ஸவிது " என்ற சொல் விளக்குகிறது.

### சுலோகம் 7

" வரேண்யம் " என்ற சொல் எப்பொழுதும், எல்லோரும் மேன்மையையே காண வேண்டும், மேன்மையையே சிந்திக்க வேண்டும். மேன்மை யான காரியத்தையே செய்ய வேண்டும். இப்படிச் செய்பவர்கள் மேன்மையை அடைவார்கள்.

### சுலோகம் 8

பாபத்தில், பாப நாசத்தில் ஈடுபட்டு பாபத்தால் விளையக்கூடிய தீமைகளில் கவனம் வைத்து, பாபங்களைப் போக்குவதில் போரிட்டபடி வாழும் நல்லோர்களுக்கு இவ்வுலகமே ஸ்வர்கமாக அமையும் என்பதை " பர்க்க " என்ற சொல் விளக்குகிறது.

### சுலோகம் 9

தவிர்க்க முடியாதபடி மரணத்துக்குள்ளாக வேண்டிய மனிதனும் தேவனாக முடியும். தேவர்களுக்குச் சமமான சுத்தமான பார்வை, உயிரினங்களுக்குச் சேவை, மேலான காரியங் களைச் செய்தல், பலமில்லாதவர்களுக்கு உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவைகளைச் செய்பவர்களின் உள்ளும், புறமும் தேவலோகம் உண்டாகும்.

### சுலோகம் 10

" தீமஹி " என்ற சொல்லின் பொருள் : நாமனைவரும் இருதயத்தில் எல்லாவிதமான பவித்ர சக்திகளை தரிப்போமாக! இதைத் தவிர மனிதன் சுகத்தையும், சாந்தியையும் பெற வேறு வழியில்லையென வேதம் சொல்கிறது.

### சுலோகம் 11

" தியோ " என்ற சொல் கூறுவதாவது – அறிவாளி, வேதாதி சாஸ்திரங்களை சுத்த அறிவால் கடைந்து, அவைகளிலிருந்து வெண்ணைபோல் உயரிய தத்துவத்தை அறியட்டும். ஏனென்றால் சுத்த அறிவால்தான் உண்மையை அறியலாம்.

### சுலோகம் 12

" யோந: " என்ற சொல்லின் பொருள்:– நம்மிடம் உள்ள சக்தி, சாதனங்களில் நம் ஜீவனத்துக்கு எவ்வளவுவரை போதுமோ, அவ்வளவு வரை மட்டும் நமக்காக உபயோகித்துக் கொண்டு, மற்றவைகளை அவைகள் இல்லாத, குறைந்தவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும்.

### சுலோகம் 13

தன்னையும், பிறரையும் சத்திய நெறியில் செல்லத் தூண்ட வேண்டும். இத்தகைய தூண்டுதலால் செய்யப்படும் சகல காரியங்களும் தர்மம் எனப்படும்.

### சுலோகம் 14

இந்த காயத்ரீ கீதையை நல்ல முறையில் எவன் அறிந்து கொள்வானோ, அவன் சகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு, இன்பத்தில் ஆழ்ந்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி ஸ்மிருதி

'ஓம்' பூர் புவ சுவஹ என்பவை மூன்று உலகங்கள்: இம்மூவுலகங்களிலும் 'ஓம்' எனும் பிரம்மா வியாபித்துள்ளது: எந்த அறிவாளி இந்த பிரம்மத்தை அறிவானோ அவனே ஞானி ஆவான்.

'தத்' உண்மையை அறிந்து, வித்வானான பிராமணன் தன் தபச் செய்கையால் அஞ்ஞானத்தால் உண்டான இருளை விலக்க வேண்டும். பிராமணன் என்றால் உண்மையை அறிந்தவன். பேரின்பம் பெறுவதற்கான உண்மையை அறிந்தவன். உண்மையை அறியாத, வித்தையை அறியாத, பல கலைகளையும் கற்றவன் பிராமணன் ஆக மாட்டான். இத்தகைய வித்வான் பிராமணன் தன் சொந்த தவத்தால் நல்லொழுக்கங்களால் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருக்கும் மக்களின் அறியாமை இருளைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைப் போதிக்க முயற்சி செய்யக் கடவன்.

'ஸவ' சத்திய சந்தர்களும், வீரர்களும், லோக ரக்ஷகர்களுமான க்ஷத்திரியர்கள் அநியாயத்தாலும் அசத்தியத்தாலும் உண்டாகும் ஆபத்துகளை நாசம் செய்வார்களாக.

'து' நல்ல ஆன்மீகன் பயங்கர பிரளய சமயத்திலும் தன் முயற்சியைச் செய்து கொண்டேயிருப்பான். உழைப்பின் முயற்சியின் புகழும், மகிமையும் எல்லையற்றது.

'வ' மனித சந்ததிகளை உண்டாக்குபவள் பெண்ணல்லது வேறு யார் எனச்சொல். அதனால் பெண்கள் தம் ஆக்கத் திறமையை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.

'ரே' அறிவாளிகள் பெண்களையே மண்ணுலகில் பிரத்யக்ஷ லக்ஷ்மிகளாகக் கண்டிருப்பதால் நல்லோர்கள் எப்போதும நர்மதா நதியைப் போல் பெண்களை மதித்தொழுக வேண்டும்.

'ண்ய' இயற்கையின் – ப்ரக்ருதியின் – உத்திரவுப் படி தம் பாதங்களை இயக்குபவர்கள் – நடப்பவர்கள் – அனுசரிப்பவர்கள் ஆரோக்கியவான்களாயிருந்து, எல்லா நோய்களிலிருந்தும் நிச்சயமாய் விடுபடுவார்கள்.

'ப' மனதின் ஆவேசத்தையும், இருதயத்தின் உத்வேகத்தையும் விலக்கு: எல்லா நிலைகளிலும் மனதை அமைதியாகவும், நடுநிலையாகவும் வைத்துக் கொள்.

'கோ' மனோபாவங்களை மறைக்க முயற்சிக்காதே! சகிப்புத் தன்மை இல்லாமல் இருக்காதே! பிறர்நிலைகண்டு அதற்குத் தக அவர்களுடன் ஒழுகு.

'தே' மனிதர்கள் தம் எல்லா இந்திரியங்களையும் தம் வசப்படுத்தி வைக்க வேண்டும். கட்டுப்படாத இந்த இந்திரியங்கள் தலைவனைத் தின்றுவிடக் கூடியவை.

'வ' மனிதர்கள் உள்ளும் புறமும் பவித்ரமாணவர்களாய் வசிக்க வேண்டும். இந்த பவித்ரத் தன்மையால் தான் சந்தோஷம் உண்டாகும்.

'ஸ்ய' 'மற்றவர்களுக்கு உபயோக மாகக் கூடிய காரியங்களைச் செய்வது பரமார்த்தமாகும்' என்பது அறிவாளிகள் கருத்து: பிறருக்கு சுகத்தையளிக்கும் விசார சீலனின் துன்பங்கள் தானாக அழிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

· தீ · அறிவாளி, தன் வாழ்க்கையில் ஒரேவித முன்னேற்றத்தை, மேன்மையை மட்டும் நாடி நிற்கக் கூடாது. பலதரப்பட்ட விஷயங்களிலும் முன்னேற்றமடைய முயல வேண்டும்.

· ம · இறைவனின் நியாயமான நியமங்களைத் தெரிந்து கொண்டு, அந்நியமாதிகாரியான இறைவன் இருக்கும் உண்மையைப் புரிந்து கொண்டு, தகுந்த முறையில் அவனை உபாசித்து வா!

· ஹி · தன்னில் உதிக்கும் நல்லறிவுத்தான் தனக்கு உண்மையான வழிகாட்டியென்பதை உணர்ந்து, அதைப் பின்பற்றி நட: எப்போதும் யாருடைய வழியையும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றாதே.

· தி · மரணத்தைப் பற்றி எப்போதும் நினைவிருத்தியபடி, வாழ்க்கையின் மர்மத்தை அறிய முயற்சித்தவாறு, தன் குறிக்கோளின் மார்க்கத்தில் எப்போதும் நட.

· யோ · எந்த தர்மம் இப்பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக உள்ளதோ, அந்த தர்மத்தை நீ கடைபிடி: இதை அசட்டை செய்யாதே, ஏனென்றால் இது ஒன்றுதான் உன் வழிக்கு உண்மையான உறுதுணையாயிருக்க வல்லது.

* · யோ · கவலைகளிலிருந்து யோசனை தூரம் விலகியிரு. அவை மனிதரின் பகைமைகள், பல ஒன்று சேர்ந்து சமயம் பார்த்து மனிதனை அழித்துவிடும்.

· ந · எம்முடைய இந்த வார்த்தையைக் கேள்! எப்போதும் விழிப்புடனிரு: ஏனென்றால் தூங்குபவனை பகைவன் வென்றுவிடுவான்.

· ப்ர · இயற்கையாகவே உதாரமாயிரு: எப்போதும் உதாரமில்லாமல் இருக்காதே: உதார நோக்குடனேயே எதையும் விசாரி, இப்படிச் செய்தால் சித்தம் சுத்தியாகும்.

* " சோ, த " ஆத்மாவை கண்டு, ஆத்ம கௌரவத்தைத் தெரிந்து கொள்: அதைத் தெரிந்து, ஆத்மாவை முழு முன்னேற்றத்தின் பாதையில் நடத்திச் செல்.

· யா · ஒரு தந்தை, தன் பின் வாரிசான மகனிடம் வாழ்க்கையை ஒப்புவித்துவிட்டு நிம்மதியாய் தன் நாட்களைக் கழிக்க வேண்டும். தந்தையைக் காப்பாற்றாத தநயன் பாபியாவது போலவே, தநயனிடம் வாழ்க்கையை ஒப்படைக்காத தந்தையும் பாபியாவர்.

· த் · ஒவ்வொருவரும், தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவாரோ, எதிர் பார்ப்பாரோ அப்படி பிறரிடம் நடந்து கொள்ள வேண்டும். தாழ்மை, பெருமை, நன்றி, உண்மை இவைகளை யாரும், யாரிடமும் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றி

உலக மகா தேவி அன்னை ஸ்ரீ காயத்ரீ தேவியின் அருள் மழை பொழிந்திட அனைவ ரும் உளமுருக பிரார்த்திப்போமாக.

ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய வட்டத்ததில் எழுந்தருளியுள்ள அன்னை ஸ்ரீ காயத்ரீ தேவி யின் மகா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு ஆலய அறங்காவலர் சபை எடுத்திட்ட ஒவ் வொரு வேலைத் திட்டத்திற்கும், நடவடிக்கை களுக்கும், உளமுவந்து ஒத்தழைப்பும், உதவி யும் நல்கிய அன்பர்கள் ஆதரவாளர்கள் எல் லோருக்கும் இந்தப் புனிதமான வேளையில் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்ற இச் சந்தர்ப்பத்தில், எதிர்பாராத வகையில் இவ்வாலயத்தின் உயர் விற்கும் சிறப்பிற்கும். தனிப்பட்ட ரீதியில் சரீர உழைப்பினாலும் நிதியாலும் பொருளாலும் உதவிய நல்லோர் எல்லோரையும் எம் உள்ளத் தில் வைத்து நன்றி நவில்கின்றோம்.

தனிப்பட்ட வகையில் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டுக் கூற இயலாத அளவிற்கு ஆயிர மாயிரமானோர் எமது மனக் கண்ணில் தோன் றிக் கொண்டிருப்பதால், எல்லோரையுமே எமது மனதில் பதிய வைத்து நன்றியை முன் வைக்கின்றோம். எனவே குறை நினையாது எம்மை மன்னிக்கும்படியும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த ஆலயம் சிறப்புற இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய, மக்கள் அனைவருமே இதயக்கதவுகளைத் திறந்த வண்ணம் ஒற்று மையுடனும், சகோதரத்துவ போக்குடனும் ஒன் றுபட்டு இயங்குவது எமக்கு மட்டற்ற மகிழ்ச் சியை அளிக்கின்றது. தொடர்ந்து இதே வண் ணம் எல்லோரும் இணைந்து மேலும் ஆலயத் திற்குச் சிறப்புச் செய்வதுடன் நாட்டில் சாந்தம், சமாதானம், ஐக்கியம் நிலவிட ஒவ்வொருவ ரும் கைகோர்த்த வண்ணம் முன்செல்லத்திட சங்கற்பம் கொள்வோம்.

எம்மையெல்லாம், வாழ்த்தும் நெஞ்சத்து டன், தோளோடு தோள் நின்று சமயப்பணி செய்யும் நல்லவர்கள் எல்லோருக்கும், இச் சந்தர்ப்பத்தில் எமது இதயம் கனிந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஜகன் மாதா அன்னை காயத்ரீ தேவியின் பேரருளும் ஸத்குரு சுவாமி அவர்களின் அருளாசியும் அனைவருக்கும் கிடைப்பதாக.

இவ்வண்ணம்
அறங்காவலர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணுலக சக்திகள் மண்ணுலகுக்கு வருகின்றன

உலகின் பேருண்மை, உயிர், அறிவுகளுக்கு ஆதாரமான சூரிய சக்தியின் செயல் விளக்கமான

காயத்ரீ பூஜை

மந்திரங்களின் நடுநாயகமாய் அதிக சக்தியுடைய காயத்ரீ மந்திரத்தைச் சொல்லுந்தோறும், நினைக்குந்தோறும், பார்க்குந்தோறும், படிக்குந்தோறும், அரிய நற்பலன்களை அள்ளிக் கொடுக்கும். பெருந்தேவியான காயத்ரீ பூஜை பிரதி மாத பௌர்ணமியன்று காலை 7.30 மணி முதல் நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில், காயத்ரீ சித்தர் ஸ்ரீ ஆர். கே. முருகேசு சுவாமி அவர்களால் பூஜையும், வேள்வியும் நடத்தப்படுகிறது.

காயத்ரீ தேவியின் விஞ்ஞான தத்துவம், காயத்ரீ மந்திரார்த்த விஞ்ஞான விளக்கம், காயத்ரீ இரகசிய சாதனா முறை, காயத்திரியின் பல்வேறு சக்திகள், காயத்ரீ கீதை, காயத்ரீ ராமாயணம், காயத்ரீ உபநிஷதம் போன்ற அரிய பல தத்துவ விளக்கங்கள் கொடுக்கப்படும்.

இதில் தொடர்ந்து பங்கு கொண்டு வருபவர்களின் இன்னல்கள் அனைத்தும் விலகி, எதிர்பாராமலே பல நன்மைகள் நடந்து வரும். அறிவு சிறக்கும், ஆற்றல் பெருகும், பிணிகள் அகலும், சிக்கல்கள் அறும், சிந்தனை உயரும். தெய்வ கடாக்ஷம் வாழ்க்கையில் சிறந்து வரும். அணிமா, மகிமா போன்ற அஷ்டசித்திகள் உண்டாகும். உலக மாயை அறுந்து, உண்மை ஞானம் மலர்ந்து, இதயத்தில் ஈஸ்வர ஜோதி பிரகாசிக்கும்.

முறையாக வீட்டில் காயத்ரீ உபாசனை செய்து வீட்டையே பராசக்தியின் வாஸஸ்தல மாகச் செய்து பேரின்ப வாழ்க்கை வாழ விரும்புவர்களுக்கு காயத்ரீ சாப விமோசனம் செய்வித்து, உபாசனா தீக்ஷை யளிக்கப்படும். இதற்கு பயன்பட காயத்ரீ பிம்பம், யந்திரம். படத்தை பிராண பிரதிஷ்டை செய்து தரப்படும்.

பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி சாதனைகளும், பரிணாம பிராண சாதனை, பிரம்மாலயத் தியானம், ஆறாதார விழிப்பு, சாதனை, பஞ்சமுக சாதனை, யோக நித்திரை, மனச்சக்தி, செயல் பயிற்சி முதலிய பயிற்சிகள் கற்றுத் தரப்படும்.

சுபம்

ARCHIVES
UNIVERSITY OF JAFFNA
UNIVERSITY OF JAFFNA LIBRARY
University of Jaffna
161538
Library
161538
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
161538
Main Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org